# தமிழரசு

திங்கள்இருமுறை பிப் 1 1972 35காசு




அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்!
இதோ இன்னொரு சாதனை!
தமிழக அரசின் ஆக்கப் பணிகளுக்கு அடித்தளம்!
நாளையத் தலைமுறையின் "நல்வாழ்வுக்குப் புதியபாதை!"
தமிழ் நாட்டில் உருவாகிறது!
தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள பூத்துறை என்ற சிற்றூர் குடும்ப நலத்திட்டப் பணியில் எடுத்துக் காட்டாக விளங்கும் சிற்றூர்!
குடும்ப நலத்திட்ட முனைப்பு இயக்கத்தில் தமிழ்நாடு முன்னணியில் நிற்கிறது!
பூத்துறை போன்று பல ஊர்களைத் தமிழகத்தில் உருவாக்குவோம்!
தென்னார்க்காடு மாவட்டம்
பூத்துறை
இரண்டுக்கு மேல் எப்போதும் வேண்டாம்!!
தமிழரசு
குடும்பநலத்துறை

மலர் 2] 1-2-1972 [இதழ் 15


நினைவு (கவிதை)

தியாகத்தை மறவாது தமிழக அரசு

இதோ உலகப் பெருஞ் சாதனை

அனுபவம் புதுமை

திராட்சையும் திருமணமும்

எழுநிலை மாடம்

ஏன் இந்தக் காதல்? (தொடர் கதை)

ஆராய்ச்சிப் பணியில் அரசின் சாதனை

வெண்பாப் போட்டி

ஆளுநர் உரை


தமிழாய்ந்த உள்ளம்
பெறுகின்ற பெருமை

முகப்பில்

சென்னை நகரில் நடைபெற்ற
குடியரசு நாள் அணிவகுப்பும்
சென்னை நகரின் தோற்றமும்









கனவுலகில் சஞ்சரிக்கக் கருத்துக் கொண்டு
கண்ணயர்ந்தேன் ; ஒருகணந்தான் ! எனினும் துன்ப
நினைவலைகள் தொடர்ந்துவந்து தாக்கக் கண்டேன் !
நீர்சொரியும் விழிகளொரு கோடி ; நீங்கா
மனவூசல் ; மாளாத சோக வெள்ளம் ;
வங்கத்துக் கடலோடு போட்டி போடும்
சனவரிசை ஊர்வலத்தில் மிதந்து சென்று
சந்தனத்துப் பேழையிலே நெடிய தூக்கம் !

நீயில்லை எனநினைக்க இந்தப் பாழும்
நெஞ்சுக்குத் துணிவில்லை ; அறிவை யூட்டுந்
தாயில்லை ;அறுசுவையும் ததும்பு கின்ற
சத்துணவு தருவார்யார் ? ஆத ரிக்கச்
சேயில்லை எனும்நிலையை வைக்க வில்லை !
சிந்தையெலாம் நீநிறையப், பக்கு வத்தில்
காயில்லை கனியேதான் எனத்த குந்த
கண்மணியாம் எச்சத்தைத் தந்தே போனாய்!

அவர்பேச்சில் நின்குழைவைக் கேட்டும், என்றும்
அவர்செயலில் நின்நிதானங் கண்டும், ஏழை
அவர்மூச்சில் காற்றுதல் உணர்ந்தும், நாளும்
அடித்தளத்தார் ஏற்றமுறும் படிகள் ஆகி
எவர்ஏச்சும் தடைபடுத்தா உறுதி வாய்ந்த
எஃகுளமும் பலகாலும் பார்த்துப் பார்த்தும்-
இவர்பாய்ச்சல் வேகத்தின் முன்னே எந்த
இடையூறும் பொடியாகும் எனத்து ணிந்தோம் !

வழிகாட்டுந் தமிழகத்தில் வளர்ச்சித் திட்டம்
வகைவகையாய் ஏராளம் ! அனைத்து நாடும்
ஒழியாத பலதொல்லை தவிர்ப்ப தற்கே
உறுதுணையாய் நம்கொள்கை ஒப்பு கின்றார்.
அழியாத பேரறிவின் சின்ன மாகி
அவ்வழியில் நடைபோடும் அரசைக் கண்டாய் !
பழிநீட்டுங் காலத்தில் உனையே எண்ணிப்
பகைவிலக்கி அறவழியில் வாழ்வோம் அண்ணா !









மதிப்பிற்குரிய சட்ட மன்ற உறுப்பினர்களே!

சட்ட மன்றத்தின் இக்கூட்ட வைக்கு உங்கள் அனைவரையும் வரவேற்பதில் பெருமகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறேன். உங்கள் அனைவரையும் கூட்டவையில் ஒருசேரக் காணும் வாய்ப்பு இப்போதுதான் எனக்கு முதன் முதலாகக் கிடைத்துள்ளது. நான் உங்களை உளமார வரவேற்பதுடன், தமிழ்நாட்டு மக்களுக்குப் பணி புரிவதில் உங்களுக்கு உறுதுணையாய் இருப்பேன் என உறுதி கூறுகிறேன்.

ஜனநாயகக் கொள்கையைக் கட்டிக் காப்போம் என்று நாம் அளித்த வாக்குறுதியினை நிறைவேற்றியுள்ளோம். நமது முப்படையினரின் வீர தீரத்தாலும், நமது தலைமை அமைச்சர் அவர்களின் ஒப்புவமையற்ற, பதட்டமடையாத, தகைசால் தலைமை காரணமாகவும், நமது வாக்குறுதியை நாம் நிறைவேற்ற முடிந்தது.

நம்நாட்டின் மீது மாற்ருன் படையெடுத்து வந்தபோது, மக்களனைவரும் என்றும் காணாத வகையில் ஒற்றுமையுடன் ஓரணியாகத் திரண்டிருந்தது வரலாற்றின் போக்கையே மாற்றியுள்ளது. பொருளாதாரத்தை மேம்படுத்துவதிலும், நாட்டு வளத்தைப் பெருக்குவதிலும் இதே ஒற்றுமை பெரும்பங்கு வகிக்கும் என்பதில் எனக்கு ஐயமில்லை. அமைதிக் காலப் பிரச்சினைகள் மேலும் முக்கியமானவை. இதே ஒற்றுமை உணர்வுடன் நாம் இப்பிரச்சினைகளை 'விரைந்து தீர்த்தாக வேண்டும். வறுமையின் மீது நாம் தொடுக்கும் இந்தப் போரில், இந்த அரசும் இந்திய அரசும் அதே ஈடுபாட்டுடனும், செயல் பொறுப்பு உறுதியுடனும் செயல்படும் என நான் உறுதியாகக் கருதுகிறேன். இந்த அரசின் நோக்கமே ஏழை எளியவரான பாமர மக்களின் விருப்பம் எல்லாம் நிறைவேற வேண்டும் என்பதுதான். பொதுமக்களின் விருப்பங்களைப் படம் பிடித்துக் காட்டும் கண்ணாடியாக இருக்கவே இந்த அரசு விரும்புகிறது. பொதுவாகப் பாமர மக்களின், குறிப்பாக இன்னலுறும் ஏழை எளியவரின் வாழ்க்கையில் ஏற்றம் ஏற்படுவதற்கு, அவல வாழ்வு ஆனந்த வாழ்வு ஆவதற்குத் தன்னால் ஆனதையெல்லாம் செய்ய இந்த அரசு மீண்டும் தன்னை அர்ப்பணித்துக் கொள்கிறது.

கடந்து முடிந்த ஆண்டில், இம்மாநிலம் வேளாண்மைத் துறையில் பொதுவாக நல்ல வளர்ச்சியைக் கண்டது. சென்னை, செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, திருச்சிராப்பள்ளி, நீலகிரி ஆகியவற்றின் ஒரு சில பகுதிகள் நீங்கலாக, தென் மேற்குப் பருவமழைக் காலத்தில் மொத்தத்தில் இயல்பான அளவுக்கு மழை பெய்தது. வட கிழக்குப் பருவ மழைக் காலத்தில், பெரும்பாலும் எல்லா மாவட்டங்களிலுமே போதுமான அளவுக்கு மழை பெய்யவில்லை. எனினும், உரிய காலத்திற்கு முன்பே மழை பெய்ததாலும், சில மாவட்டங்களில் பின்னர் பெய்த மழை பரவலாக இருந்ததாலும், குறிப்பாக நமது புன்செய் நிலப் பகுதிகள் பயனுற்றன.

நமது உணவு தானிய உற்பத்தி 73 இலட்சம் டன் என்ற குறிக்கோள் அளவை எய்தும் என்று நாம் மதிப்பிட்டுள்ளோம். அதாவது, சென்ற ஆண்டு உணவு தானிய உற்பத்தி அளவாக 70·3 இலட்சம் டன்னைவிட 3·84 சதவீதம் உயர்ந்திருக்கும் என நாம் மதிப்பிட்டுள்ளோம். 1968–69-ல் 50·6 இலட்சம் விளைந்ததை ஒப்பிட்டுப் பார்க்கும்போது உற்பத்தி இப்போது எந்த அளவு உயர்ந்துள்ளது என்பது தெரிய வரும்.

1970–71-ல் மிகு பயன் தரும் நெல்வகையின் கீழ் ஏறத்தாழ 44·93 இலட்சம் ஏக்கர் கொண்டு

வரப்பட்டது. இப்பரப்பளவு நெல் பயிரிடப்படும் பரப்பளவில் கிட்டத் தட்ட மூன்றில் இரண்டு பகுதியைக் குறிக்கிறது. நெற்பயிர் விளைவிக்கப்படும் 50 இலட்சம் ஏக்கரில் இத்திட்டத்தைச் செயல்படுத்துவது என்பது 1971—72-ல் நமது குறிக்கோள் அளவாகும்.

கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுவதை மேம்படுத்திக் குறுகிய காலக் கடன் வசதிகளையும், நீண்ட காலக் கடன் வசதிகளையும் பெருக்கவும் நாம் முயன்றுள்ளோம். குறுகிய காலக் கடன் வசதிகளைப் பொறுத்த வரையில் 1966—67-ல் ரூ. 31·41 கோடி என்றிருந்த அளவை 1971—72-ல் ரூ. 55·00 கோடியாக உயர்த்தியுள்ளோம். நீண்ட காலக் கடன் வசதிகளைப் பொறுத்த வரையில் 1966—67-ல் ரூ. 2·73 கோடி என்றிருந்த அளவை 1971—72-ல் ரூ.21·00 கோடியாக உயர்த்தி உள்ளோம். கூட்டுறவு இயக்கத்திற்குப் புத்துயிரும், புதுப்பொலிவும் அளிக்கும் முயற்சி தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பருத்தி விளைச்சலில் தன்னிறைவு பெறும் குறிக்கோளையொட்டி 2·50 இலட்சம் ஏக்கரில் நீண்டஇழைப் பருத்திவகைகளைப் பயிரிடுவதற்கான மும்முரத் திட்டத்தை நாம் மேற்கொண்டுள்ளோம். குடுமியாமலை வேளாண்மைப் பண்ணையை மேம்படுத்தியதும், கோயம்புத்தூரில் வேளாண்மைப் பல்கலைக் கழகத்தை நிறுவியதும், வேளாண்மைக் கல்வி வளர்ச்சித் தொடர்பாக நாம்மேற்கொண்ட முக்கிய நடவடிக்கைகளாகும்.

நமது நாட்டுப்புறப் பகுதிகளில் தற்கால வசதிகளைச் செய்து கொடுப்பதில் கிராம மின் வசதித் திட்டம் முக்கியமான பங்கு வகிக்கிறது, என்பதை அனைவரும் அறிவர். நிதிப் பற்றாக்குறையும், மூலப் பொருள் தட்டுப் பாடும் நிலவிய போதும், மின் வசதி அளிக்கப்பட்ட கிராமங்களில் மொத்த எண்ணிக்கையை நாம் உயர்த்தியுள்ளோம். அதாவது, 1966—67 முடிவில் மின் வசதி அளிக்கப்பட்ட கிராமங்களின் எண்ணிக்கை

**தமிழரசு**

**16—2—1972**

**இதழ்**

**இராமநாதபுர**

**மாவட்டச்**

**செய்தித் தொகுப்பாக**

**வெளிவருகிறது**

25,000 ஆக இருந்ததை 1971 டிசம்பர் முடிவில் 48,137 ஆக உயர்த்தியுள்ளோம். கிராம மின் வசதித் திட்டம் செயல்படுத்தப்படும் தற்போதைய வேகம் தொடர்ந்து பின்பற்றப்பட்டால் 1972—73 முடிவிற்குள் 58,800 கிராமங்களுக்கும், சிற்றூர்களுக்கும் மின் வசதி அளிக்கப்படும் என்று நாம் நம்புகிறோம். 1971-ஆம் ஆண்டில் இம்மாநிலத்தில் மின் இணைப்பு வழங்கப்பட்ட விசையேற்றங்களின் எண்ணிக்கை 63,416 ஆகும். இம்மாநிலத்தில் மின் இணைப்பு வழங்கப்பட்ட விசையேற்றங்களின் எண்ணிக்கை, 1966—67-ல் 2·57 லட்சமாக இருந்தது. 1971 முடிவில் 5·74 லட்சமாக உயரும். 1972 முடிவிற்குள் அந்த எண்ணிக்கை 6·34 லட்சமாகிவிடும்.

இம்மாநிலத்தில் தொழில் வளர்ச்சி பெருகுவதன் முக்கியத்துவத்தை இந்த அரசு நன்கு உணர்ந்துள்ளது. தூத்துக்குடியில் உரத் தயாரிப்புத் திட்டத்திற்கென நாப்தாவை மூலப் பொருளாகப் பயன்படுத்தலாம் என்று அனுமதித்திருப்பது நமது தொழில் வளர்ச்சியில் முக்கியமானதொரு மைல் கல் ஆகும். தூத்துக்குடி உரத் திட்டத்திற்கு ரூ. 71 கோடி செலவாகும். 3,52,000மெட்ரிக் டன் அம்மோனியாவையும் 5,12,000 மெட்ரிக் டன் யூரியா உரத்தையும் அது உற்பத்தி செய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது. சோடா-ஆஷ்-அம்மோனியம் குளோரைடு திட்டமும் இதனால் உருவாகும். இத் திட்டத்திற்குத் தோராயமாக ரூ. 10 கோடி செலவாகுமென எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம், சதர்ன் பெட்ரோ-கெமிகல் இண்டஸ்ட்ரிஸ் கார்ப்பரேஷன் இவற்றின் மூலம் இத் தொழிற்சாலை நிறுவப்படும்.

தூத்துக்குடியில் நிறைவேற்றப்பட்டு வரும் மற்றொரு திட்டம் கனநீர் திட்டமாகும்.

சேலம் உருக்காலையைப் பொறுத்த மட்டில், திட்ட ஆலோசகர்கள் தங்கள் அறிக்கையைப் பணிந்தனுப்பியுள்ளனர் என்றாலும் இத் திட்டம் பற்றி நடவடிக்கை தொடர்ந்து மெத்தனமாகவே உள்ளது என்பதை வருத்தத்துடன் கூறுகிறேன். இத்திட்டத்தைச் செயல் படுத்துவதில் இந்திய அரசு உயர் மட்டத்தில் மிகுந்த அக்கறை உள்ளதென்பது எனக்குத் தெரியும். எல்லாக் கட்டங்களின் விரைவான நடவடிக்கைகள் எடுப்பதன் வாயிலாக இந்த அக்கறை செயல்வடிவம் பெறும் என்று நம்புகிறேன்.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் இடையறாத முயற்சியினால் கடந்த சில மாதங்களாக அனுமதிக் கடிதங்கள் (Letters of Intent) பல நமக்கு வந்த வண்ணமுள்ளன. இவ் வகையில் தொழில் வளர்ச்சிக்கான மத்திய அமைச்சர் செய்த உதவிக்கும் பெரிதும் நன்றியுடையோம். நமக்கு அண்மையில் கிடைத்த அனுமதிக் கடிதம் — 2100 டன் நைலான் நூலிழை உற்பத்தி பற்றியதாகும். இதனை அரசுத் துறையின் கீழ்அமைக்க எண்ணியுள்ளோம். அனுமதிக் கடிதங்கள் வழங்கப்பெற்ற பிற இனங்கள் பின் வருமாறு:—

*மைய அரசிடமிருந்து நாம்*
*ஒவ்வொரு ஆண்டும்*
*பெறுகின்ற தொகையைவிடத்*
*திருப்பிக்கொடுக்கும் தொகை*
*அதிகமாயிருப்பதேதமிழ்நாட்டினை*
*எதிர்நோக்கியுள்ள நிதி*
*நெருக்கடிக்குத் தலையாயகாரணம்!*

B.C.T. பொடி, போராக்ஸ், போரிக் ஆஸிட், கால்சியம் கார்பைடு, பொட்டாஷியம் க்ளோரேட், சிகரெட்டுகள், சிகரெட்டுகள் வைக்கப்படும் மென் தாள். மொத்தமாக இந்த அனுமதிக் கடிதங்கள் குறித்த மொத்த முதலீடு ரூ. 21·35 கோடியாகும். கூட்டுத் துறையில் இவற்றை நிறுவுவதற்கான ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. ஏற்கெனவே நாம் அறிவித்துள்ளபடி தொழில் துறையில் நமது கொள்கை நடைமுறைக்கேற்றதும் பயன் நாட்டமுடையதும் ஆகும்.

அரசு நிர்வாகத்தின்கீழ் மீண்டும் தொடங்கப்பட்டுள்ள ''ஸதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் லிமிடெட்'', இப்போது முன்னை விடச் செவ்வையாக நடைபெறுகிறது என்பதையும் இந்த நிறுவனத்திடமிருந்து மற்றவர் கோரும் இயந்திரத் தேவைப் பட்டியல்கள் பெருகி வருகின்றன என்பதையும் எடுத்தியம்புவதில் நான் இறும்பூது எய்துகிறேன்.

அரசு மேற்கொண்ட டெக்ஸ்டூல்ஸ் லிமிடெட் நிறுவனமும் மீண்டும் நல்ல வகையில் செயல்பட்டு வருகின்றது.

தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் திறம்பட நடைபெறுகிறது. இதற்கு 1971—72-ல் ரூ. 5·2 லட்சம் ஆதாயம் கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. பஞ்சாலைகளை எடுத்து நடத்துவதற்கு இந்திய அரசிடம் இசைவு கோரியுள்ள ஆறு பஞ்சாலைகளைப் பொறுத்த மட்டில், அவர்களிடமிருந்து இசைவு இன்னும் நமக்கு வரவில்லை. கடந்த ஆண்டில் அரசு ஏற்படுத்திய சிறு தொழில் வளர்ச்சிக் கழகம், தவணைக் கொள்முதல் வசதிகள் அளிப்பதுடன், இயந்திரக் கருவிகள் தயாரிப்பதற்கு மூலப்பொருள்கள் வழங்குவதையும், தொழில் நுட்ப ஆலோசனை அளிப்பதையும் கொள்கையாகப் பின்பற்றி வருகிறது. தமிழ்நாடு அரசினர் தொழிலாக்க முயற்சிக் கழகமும் (SIPCOT) பணியாற்றத் தொடங்கியுள்ளது.

இம்மாநிலம் தொழில்துறையில் அமைதியும் நல்லுறவும் நிலை நிறுத்தும் பாதையில் விரைந்து முன்னேறுமென நான் நம்புகிறேன். தொழில் துறையில் தொழிற்சங்கங்கள் போட்டி மனப்பான்மையைத் தவிர்ப்பதன் அவசியம் குறித்து முதலமைச்சர் கூறிய கருத்துக்களை நான் வலியுறுத்த விரும்புகிறேன். ஒரு தொழிலுக்கு ஒரு தொழிற்சங்கமே இருக்க வேண்டும் என்பதே இவ்வரசின் கொள்கையெனக் கூறிக்கொள்ள விழைகிறேன். தொழிற்சங்கங்களுக்குத் தொழிலாளர்களே தலைமை தாங்கவேண்டும். தொழில் பிணக்குகளைத் தொழிலதிபர்களும், தொழிற்சங்கங்களும் ஒருவருக்கொருவர் பேசித் தீர்த்துக் கொள்ளவேண்டுமேயன்றி, சண்டை சச்சரவு மூலம் தீர்த்துக்கொள்வது சரியான முறையாகாது.

கடந்து முடிந்த ஆண்டில், வேலையில்லாப் பிரச்சினையை அரசு பல கோணங்களில் அணுகிப் பார்த்தது. இதில் மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுவது இளைஞர் அணி அமைக்கப்பட்டதாகும். இந்தச் செயல் திட்டம், நமது வினை செயல் வளத்துக்கு நல்லதோர் எடுத்துக் காட்டாக, உள்நாட்டில் மட்டுமன்றி வெளிநாட்டிலும் பல்லோராலும் போற்றி வரவேற்கப்பட்டுள்ளது.

இளைஞர் அணியில் ஏறத்தாழ 2,000 தொண்டர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டு நன்கு பயிற்சியளிக்கப் பட்டுள்ளனர். எனக்கு முதன் முதலாக வந்து கொண்டிருக்கும் தகவல்களிலிருந்து, மாநிலத்தின் சமுதாய வளர்ச்சிக்குப் பெரும் பணி ஆற்ற வல்லவர்கள் என இவர்கள் மெய்ப்பித்து வருகின்றனர் என்பதில் எனக்குப் பூரண நம்பிக்கை ஏற்படுகிறது. தொழில் பயிற்சி நிறுவனங்களில் பயிற்சி பெற்றோருக்கு ரூ. 1,000 தொழில் கடனுதவி அளிக்கும் திட்டமும் செயல்படுத்தப்பட்டுள்ளது.

படித்தவர்களிடையே நிலவி வரும் வேலையின்மையைப் போக்கும் பொருட்டு, தொழில் முனைவோர்கள் புதிய தொழில்களைத் தொடங்க, இந்திய அரசின் திட்டத்தைப் பயன்படுத்திக்கொள்ளவும் இவ்வரசு கருதுகிறது. இதற்கென ரூ. 48 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அரிசனங்களுக்கும் பின் தங்கிய வகுப்பினருக்கும் பல வசதிகளை அரசு அளித்துள்ளது என்பதை இந்த அவை அறியும். அரிசன நலனுக்கான நிதி ஒதுக்கம் பெருகியுள்ளது. இத் திட்டங்களுக்கென்றே இந்திய அரசு தனிப்பட அளித்து வந்துள்ள உதவி 1969-70-லிருந்து நிறுத்தப்பட்டுவிட்டபோதிலும், 1966-67-ல் அரிசன நலனுக்கான மாநில அரசின் நிதி ஒதுக்கம் ரூ. 3·59 கோடியாக இருக்க, 1971—72-ல் இந் நிதி ஒதுக்கம் ரூ. 5·32 கோடியாகப் பெருகியுள்ளது பெருமிதத்திற்குரியதாகும். பின்தங்கிய வகுப்பினர்களுக்காக மட்டும் 1966-67-ல் மொத்தம் ரூ.0·91 கோடி ஒதுக்கியிருக்க, 1971-72-ல் அது ரூ. 3·03 கோடியாக உயர்ந்துள்ளது உவகைக்குரியது.

தேசிய நிலையிலும் அனைத்து நாடுகள் நிலையிலும், பொருளாதார அமைப்பில் இருந்து வருகிற பல காரணங்களால் விலைவாசி விவரம் கவலை தருவதாகவே இருந்து வருகிறது. மத்திய அரசு எடுக்கும் முடிவுகளை யொட்டியே விலைவாசி விவரம் அமையும் என்பது முன்னர் நிகழ்த்தப்பட்ட உரைகளிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனை இந்த அவையும் நன்கு அறியும். இந்த நிலையில் நாம் செய்யக்கூடியதெல்லாம் ஒன்று

தான். உற்பத்தியை இயன்ற அளவு பெருக்குவோம்; அவசியம் ஏற்படின், இன்றியமையாப் பொருள்கள் விற்பனையைக் கட்டுப்படுத்தி, முறைப்படுத்தும் நடைமுறையைச் செயலுக்குக் கொண்டுவரக்கூடிய ஏற்பாட்டினை எப்பொழுதும் தயாராக வைத்திருப்போம். வணிகச் சூதாடிகளின் சூழ்ச்சியினால் விலை ஏறி மக்கள் அவதியுறாமல் காப்புடன் இருக்கும் வண்ணம், முடையிருப்புகளை ஏற்படுத்தவும் உணவு தானியங்களும் பிற பொருள்களும் போதிய அளவில் கிடைக்கவும் வகை செய்யும் பொருட்டு, உணவுப் பொருள் வழங்கல் துறையின்கீழ் தனிப்பட்ட அமைப்பொன்றை உருவாக்கவும் அரசு முடிவெடுத்துள்ளது. அதே நேரத்தில் விலை ஏற்றத்தைத் தடுத்து நிறுத்தி நிலைப்படுத்த, பருத்தி, நெட்டிழைப் பருத்தி, உருக்கு, மருந்துப் பொருள்கள் போன்ற தொழிலியல் மூலப்பொருள்களைப் போதிய அளவில் இறக்குமதி செய்ய, இந்திய அரசு உரிய காலத்தில் முடிவெடுக்க வேண்டும் என்ற கருத்தை நான், இந்த அரசின் சார்பாக வலியுறுத்த விழைகிறேன்.

நடைமுறைக்குகந்த ஊதிய-விலை அமைப்பு உருவாக்கப்படுவதற்காக, மாநிலங்களுடன் கலந்து, ஒருங்கிணைந்த விலை-ஊதிய-ஆதாயக் கொள்கை ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்று இந்த அரசு நம்புகிறது. மத்திய அரசு ஊழியர்களின் ஊதியத்தை உயர்த்தும் வகையில் எடுக்கப்படும் முடிவுகள் மாநில அரசு ஊழியர்களின் ஊதியத்தை நேரடியாகப் பாதிக்கின்றன என்பதை மத்திய அரசு எப்பொழுதும் நாட்டத்தில் இருத்திக்கொள்ள வேண்டும் என்ற இந்த அரசின் கருத்தை இத் தருணத்தில் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன். மாநில அரசின் நிதிநிலை பெருஞ் சுமைக்குள்ளாகியுள்ளது. மத்திய அரசின் நிதிநிலையைப் போல மாநில அரசின் நிதிநிலை நெகிழ்ச்சித் தன்மை பெற்றதல்ல.

இந்த மாநிலத்தின் ஐந்தாண்டுத் திட்டம் என்ன அளவினதாக இருக்க வேண்டும் என்பது குறித்து முந்தைய கூட்டங்களில், மத்தியத் திட்ட ஆணைக் குழுவும் இம் மாநில அரசும் உடன்பாடான முடிவுகளை மேற்கொள்ள இயலவில்லை எனினும், மத்தியத் திட்ட ஆணைக் குழுவுடனும் இந்திய நிதி அமைச்சருடனும் டிசம்பர் 1971—ல் முதலமைச்சர் கலந்து பேசியதன் விளைவாக, இம் மாநிலத்தின் 1972—73 ஆண்டுத் திட்டம் குறித்து உடன்பாடான சில முடிவுகளை மேற்கொள்ள முடிந்தது.

நடப்பு ஆண்டுக்கு இம் மாநிலத்தின் உடன்பாடான திட்டத்தின் அளவு ரூ. 115 கோடியாக இருக்குமென்றும் 1972—73 ஆண்டுத் திட்டம் ரூ. 117 கோடி அளவு இருக்குமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்திய அரசுக்குக் கடனைத் திருப்பிச் செலுத்துவதில் இம் மாநில அரசுக்கு இருந்துவரும் பெருத்த நிதிச் சுமையினை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். ஐந்தாண்டுக் கால அளவில் இந்திய அரசுக்கு நாம் திருப்பிக் கொடுக்க வேண்டிய தொகை ரூ 154.9 கோடியாகும். ஆனால், இக் கால அளவில் இந்திய அரசிடமிருந்து நமக்குக் கிடைக்குமென எதிர்பார்க்கிற தொகை ரூ 141 கோடிதான். இவ்வாறு நாம் பெறுகின்ற தொகையை விடத் திருப்பிக் கொடுக்கும் தொகை அதிகமாயிருப்பதே இம் மாநிலத்தை எதிர்நோக்கியுள்ள நிதி நெருக்கடிக்குத் தலையான காரணங்களில் ஒன்றாகும். 1971-72ஆம் ஆண்டினை மட்டும் எடுத்துக் கொண்டால், அசல் கணக்கில் நாம் திருப்பிக் கொடுக்கவேண்டிய தொகை ரூ 43.03 கோடியாகும். வட்டிக் கணக்கில் கொடுக்க வேண்டிய தொகை ரூ 21.83 கோடியாகும். இந்திய அரசிடமிருந்து நமக்குக் கிடைக்கும் மத்திய உதவித்தொகை ரூ 40.40 கோடியுடன் இதனை நாம் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். நமக்குக் கிடைக்கும் உதவித்தொகையைவிட நாம் திருப்பிச் செலுத்தும் தொகை அதிகமாயிருக்கிற இச் சீர்கேடான போக்கினை, முதலமைச்சர் 1971-72 இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தினைச் சட்டமன்றத்தின் முன் வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

மாநிலங்களின் கடன் சுமை ஒருங்கு தொகுக்கப்படுவதற்கும், நிதி வகையில் ஆதாயம் அளிக்காத—ஆனால் சமூக நீதி அடிப்படையில் செய்யவேண்டிய செலவுக்காக வாங்கிய கடன் தொகையை மானியமாகக் கருதிக் கணக்கிலிருந்து கழித்து விடுவதற்காகவும் அல்லது திருப்பிக் கொடுப்பதற்கு எளிதான கடன்களாக்குவதற்காகவும், அக் கடன் சுமை குறித்துத் தனி விசாரணை ஒன்றை மேற்கொள்ள மத்திய நிதி அமைச்சு ஆவன செய்யும் என்று நான் நம்புகிறேன். இந்த முதலீடுகளின் பலன்கள் மாநில அரசுகளுக்குமட்டுமன்றி நாடு முழுவதற்குமே கிடைப்பதால் இவ்வாறு செய்வது தகவும் பொருத்தமும் உடையதாகும்.

நமது மக்கள் அனைவரின் குறைந்த அளவுத் தேவைகளையேனும் நிறைவு செய்வதற்காக, நமது முன்னேற்றப் பாதையில் நாம் நெடுந் தொலைவு சென்றாக வேண்டும்.

உங்கள் அனைவருடைய கூட்டு முயற்சி மூலமாகவே இக்கடுமையான பணியை நிறைவேற்ற முடியும்.

உங்கள் நன்முயற்சிகள் வெற்றிகளைக் குவித்திடுக என்று இதயங்கலந்த நல்வாழ்த்துக்களை வழங்குகிறேன்.

**[22-1-1972 அன்று தமிழ் நாடு சட்ட மன்றக் கூட்டு அவையில் ஆளுநர் நிகழ்த்திய உரை.]**



# தமிழாய்ந்த உள்ளம் பெறுகின்ற பெருமை!

மதுரைப் பல்கலைக் கழகம் 1966-ஆம் ஆண்டு துவக்கப்பட்டு இதற்கான கட்டடங்கள் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

அந்த நல்விழாவினை முன்னாள் குடியரசுத் தலைவர் ஜாகீர் உசேன் அவர்கள், மறைந்த அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் இந்த இடத்தில் நடத்தி வைத்தபோது நானும், டாக்டர் நாவலர் அவர்களும் உடனிருந்த அந்தக் காட்சி இன்றைக்கும் என் உள்ளத்தில் பசுமையாகக் காட்சியளித்துக் கொண்டிருக்கிறது.

இன்று மதுரை மாநகரில் இந்தக் கட்டடத் திறப்பு விழாவில் தமிழக ஆளுநர் கே.கே. ஷா அவர்கள் தலைமையில் கூடியிருக்கிறோம்.

இந்த நன்னாளில் என்னுடைய அன்பு உடன்பிறப்பு—அருமைச் சகோதரர்—நாவலர் அவர்களுக்கு மதுரைப் பல்கலைக் கழகம் டாக்டர் பட்டத்தினை அளித்திருக்கின்றது.

இப்படிப்பட்ட விழாக்கள் நடைபெறுகின்ற நேரத்தில் இதைக் கண்டு களிக்கவும், வாழ்த்துக்களை மொண்டு குவிக்கவும், எங்களை எல்லாம் ஆளாக்கிய தலைவர்—பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் இல்லையே என்ற ஒரு கவலையைத் தவிர வேறு எந்தக் கவலையும் இது போன்ற நாட்களில் எங்களை வாட்டுவதில்லை.

இதே மதுரையம்பதியிலே கடந்த 15 ஆண்டுகளுக்கு முன்பு நாவலர் அவர்களும், நாங்களும் நடத்திய மாநாட்டில் எங்களுக்கேற்பட்ட விழுப் புண்களை ஆற்றிக் கொள்ள டாக்டர்கள் தேவைப்பட்டார்கள் ; இன்று அதே நாவலருக்கு மதுரை மாநகரம் டாக்டர் பட்டத்தை அளித்து மகிழ்கிறது என்பது காலத்தின் வித்தியாசம் அல்ல ; காலத்தின் மாற்றம் ; இப்படித்தான் காலம் உருவாகும் என்பதற்குச் சரியான அறிகுறியாகும்.

நாவலரின் பெயரில் இருக்கிற நெடுஞ்செழியனையும், அந்தக் காலத்து ஆரியப்படை கடந்த பாண்டியன் நெடுஞ்செழியனையும் இங்கே ஒன்றுபடுத்திக் கூறினார்கள். அன்று மதுரையை ஆண்ட நெடுஞ்செழியன் கொஞ்சம் அவசரப்பட்டு நீதி வழங்கினான். ஆனால், இன்று எங்கள் நாவலர் (நெடுஞ்செழியன்) அவர்கள் அவசரப்படாதவர் என்பதை இந்த நாடு நன்கறியும்.

அந்த நெடுஞ்செழியன் சிலப்பதிகாரத்திலே முக்கியமான இடத்தைப் பெற்றிருந்தான். அதற்குக் காரணம்....தான் தவறிழைத்து விட்டோம் என்று புரிந்து கொண்டதும், அதைத் திருத்திக் கொள்ளும் பேருள்ளம் அவனுக்கு இருந்தது.

இந்த நெடுஞ்செழியன் அப்படித் திருத்திக் கொள்ளமாட்டார் ; இவர் தவறே இழைக்காத காரணத்தால் .

நமது நாவலர் அவர்களை நாடு பல ஆண்டுக் காலமாக அறியும் ; நான் பல ஆண்டுக் காலமாக அறிவேன் ; நீங்களும் பல ஆண்டுக் காலமாக நன்கு அறிவீர்கள்!

பல ஆண்டுக் காலம்—பல ஆண்டுக் காலம் என்று குறிப்பிடுவது அரசியலில் சிறப்புத் தன்மை படைத்ததாகும். கலை உலகில் வேண்டுமானால் என்றென்றும் இளமையொடு இருக்க வேண்டும் என்று சொல்லப்படலாம். ஆனால், அரசியல் உலகில் பல ஆண்டுக்காலம் என்பது அனுபவ முதிர்ச்சியை—பக்குவம் ஏற்பட்டு விட்டது என்பதை எடுத்துக் காட்டுவதற்கு உரிய அடையாளமாகவே கருதப்படும். முதிர்ச்சியில் தான் பல ஆண்டுக் கால அரசியல் கூறுகளை—அனுபவக் கீறல்களைக் காணமுடியும்.

இன்று அவர்கள் பெறுகின்ற இந்தப் பெருமை—நான் பெறுகின்ற பெருமையைப்போல் ; நம் நாட்டு மக்கள் அனைவரும் பெறுகின்ற பெருமையைப் போலத் — தமிழாய்ந்த உள்ளமெல்லாம் பெறுகின்ற பெருமையைப் போல—என்று சொன்னால் அது மிகையாகாது!

# தியாகத்தை மறவாத தமிழக அரசு

தியாகம் என்பது தமிழகத்தின் நீண்ட நாளையப் பயிர். ஆயிரங் காலத்துப் பயிர் என்று திருமணத்தைச் சொல்லி வருவதைப் போல—தியாக வரலாற்றையும் குறிப்பிடலாம்.

தியாகத்தையும் தியாகிகளையும் மறவாத அரசு-மதித்துப் போற்றி வரும் அரசு தமிழக அரசு !

பேரறிஞர் அண்ணா அவர்கள் முதல்வராகிய போது இந்த உண்மை தெளிவாகிவிட்டது. ஆட்சியை ஏற்றவுடன் அவர் செய்த அருந் தொண்டுகளில் முதன்மையானது— விடுதலைப் போராட்டத்தில் கலந்துகொண்டு தனது இன்னுயிரை ஈந்த வாஞ்சி நாத அய்யரின் மனைவியாரின் கோரிக்கையை ஏற்று, அந்த அம்மையாருக்குத் தியாகிகள் பென்ஷன் கொடுத்த நிகழ்ச்சியைக் குறிப்பிடலாம்.

சீன நாட்டார் படையெடுத்து வந்த போது, நிபந்தனையின்றி மத்திய அரசுடன் ஒத்துழைத்து பாதுகாப்பு நிதி தேடித் தந்தவர் அண்ணா அவர்கள்.

அண்ணா அவர்கள் விட்டுச் சென்ற பணியைத் தொடர்வதற்குத் தமிழகத்துக்குக் கிடைத்துள்ள தமிழக முதல்வர் கலைஞர் அவர்களும், தியாகிகளை மதிப்பதில் முன்னணியில் இருந்து வருகிறார்.

தியாகிகள் பென்ஷனுக்காக மனுச் செய்வதற்கு ஏற்கெனவே ஒருநாள் குறிப்பிடப்பட்டிருந்தும், அந்த நாளுக்குள் பெரும்பான்மையான தியாகிகள் தங்கள் பெயர்களைப் பட்டியலில் தரவில்லை என்பதால் காலவரையறையை நீட்டித்துத் தந்தார் தமிழக முதல்வர் என்பதிலிருந்து தியாகத்திற்கு அவரது இதயம் பெருமதிப்புக் கொடுத்திருக்கிறது என்பது விளங்கும்.

கடந்த 9—1—1972 அன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற தமிழகச் சுதந்தரப் போராட்ட வீரர்களின் 4-வது மாநில மாநாட்டில், தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றியிருக்கும் செய்தி, தியாகிகளிடம் முதல்வருக்குள்ள பற்றினை—பாசத்தினை — மதிப்பினை எடுத்துக் காட்டுகிறது.

முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் திரு. டி. ஜி. கிருஷ்ணமூர்த்தி வரவேற்புரையாற்றினார். அவரதுபேச்சின் ஒருசில பகுதி:—

'' ஆயிரம் ஆயிரம் தியாகிகளுக்கு உதவிப் பணம் வழங்கிய காலஞ் சென்ற தமிழக முதல்வர் அறிஞர் அண்ணா அவர்களைச் சுதந்திரப்போராட்ட வீரர்களின் சார்பில் பாராட்டுகிறேன்.

'' நம்முடனே இருந்து தியாகங்கள் பல செய்து நம் கஷ்ட நஷ்டங்களை எல்லாம் அறிந்த நம்மவர்களாலும் நம் இன்னல்கள் தீரவில்லை.

'' தியாகிகளிடம் மிகவும் பரிவு காட்டும் முதல்வர் டாக்டர் கருணாநிதி அவர்கள் தனது ஆட்சிக் காலத்தில் ஏராளமான தியாகிகளுக்கு உதவிப் பணம் வழங்குகிறார்.

''மாநாட்டில் கலந்துகொள்ள இன்முகத்துடன் இசைவு தந்து, தமிழக முதல்வர் நம்மைக் கௌரவித்திருக்கிறார். தமிழக சுதந்திரப் போராட்ட வீரர்களின் பால் அவர் காட்டும் அன்புக்கும் மரியாதைக்கும் நாம் அவரைப் பாராட்டுகிறோம்.''

—இவ்வாறு குறிப்பிட்ட திரு. டி. ஜி. கிருஷ்ணமூர்த்தி அவர்களின் பேச்சில் தமிழக அரசு, தியாகிகளிடம் வைத்துள்ள அளவற்ற அன்பு தெளிவாகியது.

துவக்க உரையாற்றிய திரு. சோமயாஜுலு அவர்களின் உரை—டி. ஜி. கிருஷ்ணமூர்த்தி அவர்களின், வரவேற்புரையின் வழிமொழிதலாகவே காணப்பட்டது.

''இந்தநாடு விடுதலை அடைந்து விட்டது. விடுதலை அடைந்ததும் எங்கள் குறைகள் நீங்குமென்று நினைத்தோம். அரசிடம் எடுத்துரைத்தோம். எதிர்பார்த்த அந்த அரசு எங்கள் குறைகளைக் கவனிக்கவில்லை. ஆனால், கலைஞரின் அரசு தியாகிகளின் குறைகளைப் போக்கி அவர்களது வாழ்வை வளம் பெறச் செய்து வருகிறது.

'' இந்த அரசைப் பாட்டாளி மக்கள் - ஏழைகள் - உழைப்பாளி மக்கள் - நெசவாளிகள் ஆதரிக்கிறார்கள். இவர்களின் நம்பிக்கையைக் கலைஞர் பெற்றிருக்கிறார். இந்த அரசு பல ஆண்டுகள் நீடிக்க வேண்டுமென்று மக்கள் விரும்புகிறார்கள். ஏழைமக்களின் நம்பிக்கையைக் கலைஞர் பெற்றிருக்கிறார். அவர் எதையும் தைரியமாகப் பேசுவார். அவரிடம் ஒளிவு மறைவு கிடையாது. அவர் எதிர்ப்பில் வளர்ந்தவர்.

'' கலைஞரைத் தேசபக்தியுடையவர் என்று கூறுகிறோம். காரணம் என்ன ? அவர்

நாட்டுக்காக - மொழிக்காகப் பல தியாகங்களை - இன்னல்களைப்பெற்றிருக்கிறார். அவரைத் தியாகிகள் மதிக்கிறார்கள்—பெருமைப்படுத்துகிறார்கள். அவரை நம்புகிறார்கள். அவரால் தான் தங்கள் குறைகள் நீங்குமென்று நம்புகிறார்கள். அதனால் தான் மாநாட்டிற்கு அவரை அழைத்துக் குறைகளைக் கூறுகிறோம்.''

—இவ்வாறு குறிப்பிட்டார் திரு. ந. சோமயாஜுலு.

தலைமை உரையாற்றிய திரு. கிருஷ்ணசாமி பாரதி அவர்கள் குறிப்பிட்டார் :—

''1967-ல் இந்த அரசு பதவி ஏற்றபின்னர் இதுவரை விடுதலைப் போர் வீரர்கள் சுமார் 7,200 பேருக்கு மேற்பட்டவர்களுக்கு உதவிப் பணம் வழங்க உத்தரவு பிறப்பித்துள்ளதாக அறிகிறேன். தங்கள் கட்சியில் சேராதவர்களாக இருந்தாலும் நம்முடைய தியாகத்தை மதிக்கும் வகையில் பெருந் தன்மையுடனும் தாராள மனப்பான்மையுடனும் இந்த உதவிப் பணத் திட்டத்தை வெற்றிகரமாக நடத்தி வரும் இந்த அரசையும் முதல்வர் டாக்டர் கருணாநிதி அவர்களையும் பாராட்டி நன்றி செலுத்த வேண்டியது நமது நீங்காக் கடமையாகும்.

''பல்லாண்டுகளுக்கு முன்னரே மாண்புமிகு கருணாநிதி அவர்களை ' தமிழ்க் கலைஞர் அவர்களே ' என்று அன்போடு அழைத்து அப்பட்டத்தை அவருக்குச் சூட்டியவர் நாவலர் டாக்டர் சோமசுந்தர பாரதி அவர்கள்.

''மாற்றார்க்கும் மதிப்புக் காட்டிவரும் முதல்வர் அவர்களின் பெருந்தன்மையும் பெருங்குணமும் பாராட்டுக்குரியன''—என்று குறிப்பிட்டுத் தமிழக முதல்வர் மீது ஒரு பாமாலையே தொடுத்தார்.

விழாவில் சொற்பொழிவாற்றிய சுத்தானந்த பாரதி அவர்கள் ''முதல்வரின் பெயரிலேயேகருணை இருக்கிறது. அவர் கருணை மேகமாய் தியாகிகளுக்கு மழை பொழிந்து வருகிறார்'' என்று குறிப்பிட்டார்.

சுதந்தரப் போராட்ட வீரர்களின் மாநாட்டு மலரைத் தொழிலமைச்சர் திரு. மாதவன் அவர்கள் வெளியிட்டுத் தமிழக அரசின் அருந்தொண்டு பற்றிப் பேசினர்.

''இன்று நாலுகோடி தமிழ்ச் சமுதாயம்—ஐம்பது கோடி இந்தியச் சமுதாயம் எழுந்து நிற்பதைக் காண்கிறோம் என்றால் அதற்குக் காரணம் விடுதலைக்காகப் பாடுபட்ட வீரர்கள்தான் என்பதை நாடு மறக்காது.

''மாற்றுக்கட்சியாக இருந்தாலும் சுதந்திரப் போராட்ட வீரர்களைப் பற்றி அக்கறையோடு கவனப்படுத்திய பெருமை காஞ்சித் தலைவன் பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு உண்டு.

''விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு, மாநில அரசு, செய்ய வேண்டிய கடமையைச் செய்யத் தயங்காது.

''திருவாடானையில் 1942-ஆம் ஆண்டு மாபெரும் புரட்சியை நடத்தினர்கள். அப்போது நீதி மன்றங்கள் எல்லாம் நொறுக்கப்பட்டன. அப்படி நொறுக்கப்பட்டிருந்த அந்த நீதி மன்றத்திற்குப் புதிய கட்டடம் கட்டித்தர முதலமைச்சர் முடிவெடுத்திருக்கிறார்.

''சுதந்திரப் போராட்ட வீரர்களை இந்த அரசு பெருமைப்படுத்தும், அவர்களது தேவைகளை நிறைவேற்றும்''.

மாநாட்டில் சிறப்புரை ஆற்றிய முதல்வரின் உரை மாநாட்டுக்கே சிறப்புச் சேர்த்தது, முதல்வரின் சிறப்புரை:—

''இந்த அரசு தியாகிகளை மதிக்கிறது என்பதற்கு அடையாளமாகத்தான் கடந்த மூன்று ஆண்டுகளில் 7,200 விடுதலை வீரர்களுக்கு ஒரு கோடியே 44 லட்சத்து 62 ஆயிரத்து 728 ரூபாய் மான்யமாகக் கொடுத்திருக்கிறோம்.

''தஞ்சை மாவட்டத்தில் தில்லையாடி வள்ளியம்மை பெயரால் ஒரு திருநகர் அமைத்து—நாகப்பன், நாராயணசாமி ஆகியோர் பெயரால் நினைவுச் சின்னங்கள் அமைத்துத் தஞ்சை செல்வோர் தரிசித்துத் தீர வேண்டிய தியாகத் திருத்தலமாக அதை மாற்றியது இந்த அரசு.

''யாரும் செய்யாமல் நினைவு கொள்ளாமல் விட்ட பாரதியார் சிலையைக் கடற்கரையில் அமைத்தது இந்த அரசு.

''அது போன்றே. . . . . யாரும் கவனிக்காமல் விட்ட கப்பலோட்டிய தமிழன், வ. உ. சி. க்கும் துறைமுக வாயிலில் சிலை அமைத்தது இந்த அரசு.

''ஆகஸ்டு 15-ஆம் நாளாகிய விடுதலை நாளை எந்த மாநிலமும் அறிவிக்காத வகையில் அனைத்துக் கட்சியினரும் கொண்டாடும் பொது நாளாக்கி-சென்னைக் கோட்டைக் கொத்தளத்தில் கொடி மரத்தின் கீழே அனைத்துக் கட்சியினரும் பங்கேற்கும் விழாவாக மாற்றினோம்.''

''காந்தியாரை அனைவரும் போற்றிட வேண்டும் எனும் நோக்கம் காரணமாகக் காந்தியடிகள் விழாவை அரசே நடத்தி அதில் அனைத்துக் கட்சியினரும் பங்கேற்கும்படிச் செய்தோம்.

''தியாகிகளை இந்த அரசு மதிக்கிறது என்பதற்கு அடையாளமாகத்தான் பண்டித நேருவின் பிறந்த நாளை அனைவரும் கொண்டாடும் பொது விழாவாக ஆக்கினோம்.

''தியாகிகளை மதிக்கிறோம் என்பதற்கு அடையாளமாக இன்னொரு எடுத்துக்காட்டையும் கூற முடியும். கட்டபொம்மன் குடும்பத்தாருக்குக் கொடுக்கப்பட்டு வந்த அரசியல் பென்ஷன் 1952 முதல் நிறுத்தப்பட்டு இருந்தது.

---

**பேசும் புத்தகம்.**

பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெலாம் படிப்புப் பெற வழிகள் பல தோன்றுகின்றன. கண் இழந்தவர்க்குக் கல்வியில்லை என்ற நிலை பிரெயிலி எழுத்து முறையால் நீங்கியது ; எனினும் பிரெயிலி முறை சிக்கலானது. இப்போது யுக்கோஸ்லாவிய விஞ்ஞானிகள் பேசும் புத்தகம் ஒன்றைக் கண்டு பிடித்துள்ளார்கள். இப் புத்தகம் குருடர்கள் எளிதில் கல்வி பெற உதவும்.

'' நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பின்னர் 18—2—1969 முதல் (1) சுப்பிரமணிய துரை மகள் திருமதி பாஞ்சாலி அம்மாள். (2) துரைராஜ் பாண்டியன், (3) வீமராஜ் (4) துரைராஜ், (5) சோமசுந்தர கட்டபொம்மு துரை ஆகியவர்களுக்கும் இவர்களோடு 11-1-1971 முதல் (6) சுப்பிரமணிய கட்டபொம்மு துரை (7)சைவ வீரபாண்டிய துரை, ஊமைத்துரை ஆகியோரின் புதல்வர்கள் (8) சுப்பிரமணிய கட்டபொம்முதுரை, (9) ஜக வீரபாண்டிய கட்டபொம்மு துரை, (10) சின்ன பொம்மு துரை ஆகியவர்களுக்குத் தமிழக அரசு ஒய்வூதியம் வழங்கி வருகிறது.

'' நாமக்கல்லாரை நாங்கள் மறந்திடவில்லை ; பரலி நெல்லையப்பரையும் நாங்கள் மறந்திடவில்லை; அவர்களை மதித்து உதவினோம்.

'' இங்கே சுதந்தரப் போராட்ட வீரர்கள் பெருந்திரளாகக் கூடியிருக்கிறீர்கள்.

'' விடுதலைக்குப் பாடுபட்டவர்கள்—தியாகப் போர்க்களம் கண்டவர்கள்—சிறையில் வதை பட்டவர்கள் — சித்திரவதைக்கு ஆளானோர் அனைவரும் இங்குக் குழுமியிருக்கிறீர்கள்!

'' தியாகிகள் என்ற பெயரில் சிலர் கூடி ஏதோ விழா நடத்துகிறார்கள் என்றில்லாமல் .... விடுதலைக்கு உண்மையாகப் பாடுபட்டோர் — செக்கிழுத்தோர்—சிறையில் கஞ்சிக் கலயம் தூக்கினோர் — உழைப்பால் — தொண்டால் — பேச்சால்— எழுத்தால் — கவிதைகளால்— நாட்டுக்குப் பணியாற்றினோர் இங்கு வீற்றிருக்கிறீர்கள். உங்களது தியாக உணர்வைப் போற்றி வணங்குகிறேன். எனது பாராட்டுக்களை உங்களது திருவடிகளில் சமர்ப்பிக்கிறேன்.

'' விடுதலைப் போராட்டத்தின் தானைத் தலைவராகக் காந்தியடிகளும் —நேருவும்—பட்டேலும்—திலகரும் இருந்தார்கள்.

'' விடுதலைப் போருக்கு இந்த முறை சரியல்ல; வேறு முறை இருக்கிறது என்று ஆர்த்தெழுந்து போரிட்டார், நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ். அவர்களெல்லாம், வணங்கத் தகுந்த—போற்றத் தகுந்த வீரர்கள். நாம் நடக்க வேண்டிய வழியை வகுத்துத் தந்தவர்கள்.

'' அந்நியப் பகைவர் விரட்டப்பட்டதோடு விடுதலைப் போராட்டச் சரித்திரப் புத்தகம் முடிந்துவிடவில்லை. அதற்குப் பிறகு எழுத வேண்டிய பக்கங்கள் தான் நிரம்ப இருக்கின்றன.

'' சமுதாய ஆதிக்கக்காரர்களை—பொருளாதார ஆதிக்க சக்திகளை—வறுமையை —கல்லாமையை — இல்லாமையை எதிர்த்துப் போராடும் விடுதலைப் போராட்டத்தில் நாம் ஈடுபட்டு இருக்கிறோம்.

'' முன்பு நடந்த சுதந்திரப் போராட்டத்தில் நீ கலந்து கொண்டாயா?—என்று சிலர் கேட்கலாம்.

'' அது எனது தவறல்ல—சோமயாஜுலுவும், சுத்தானந்த பாரதியும்—பிறரும் பிறந்த காலத்தில் என்னைப் பெற்றுத் தராதது என் தாய் தந்தையரின் குற்றமே தவிர—எனது குற்றமல்ல!

'' குற்றம் சாட்டுபவர்களுக்குக் கூறிக் கொள்வேன்; எங்கள் பாரம்பரியம் கூட விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட பாரம்பரியம்தான்!

'' சுதந்திரப் போரின் ஓர் அங்கமான வைக்கம் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டவர் எங்கள் தலைவர் பெரியார்.

''சுதந்திரப் போரில் காந்தியாருடன் கைகோத்துப் பணியாற்றியவர் எங்கள் தலைவர் பெரியார்.

'' அந்தப் பெரியார் கூட—ஆகஸ்ட் 15-ல் வெள்ளையன் வெளியேறியபோது அது துக்கநாள் என்று அறிவித்தார். ஆனால், '' அது துக்கநாள் அல்ல ; இன்பநாள் '' என்று எழுதிப் பெரியாருடன் கருத்து வேறுபாடு கொண்டு வெளியே வந்த பேரறிஞர் அண்ணாவின் தம்பிகள் நாங்கள்.

'' ஆகவே, எங்கள் பரம்பரையில் பழுதில்லை; பாவமில்லை.

'' விடுதலைப் போரில் ஈடுபட்ட கோமதி சங்கர தீட்சிதருக்கு நாங்கள் பாராட்டு விழா எடுத்தோம். நான் பொதுப்பணி அமைச்சராக இருந்த போது அவரது அன்புக் கட்டளையையேற்றுப் பலமுறை அவரது தொகுதிக்குச் சென்றேன். அவர் எண்பது வயதடைந்ததற்காகச் சட்ட சபையிலேயே தீர்மானம் கொண்டுவந்து பாராட்டினோம். தனியாக ஒரு விழா எடுத்துப் பொன்னுடையும் போர்த்தினோம்''

முதல்வரின் உரை—தியாகத்தையும் தியாகிகளையும் மதித்துத் தமிழக அரசு செய்த அருந்தொண்டுகளைப் பட்டியல் அமைத்துக் காட்டியது. அந்தப் பட்டியல் வருங்காலத்தில் இன்னும் அதிகமாகும் என்பதை அவரது உரை உறுதிப்படுத்தியது.



# இதோ உலகப் பெருஞ் சாதனை!



ஒலக்கூர் ஊராட்சி ஒன்றிய எல்லையில் நுழைகிறோம்.

தென்னார்க்காடு மாவட்ட எல்லையில் நுழையும் போதே ஏராளமான வளைவுகள்.

ஊர்தோறும் தோரணங்கள்.

தென்னார்க்காடு மாவட்டத்தில் எந்தப் பக்கம் பார்த்தாலும் இதே காட்சிகள்.

“மாநாடு நடப்பது போன்றல்லவா ஊரெங்கும் வளைவுகள் போட்டு இருக்கிறார்கள்.” என்றார் ஒரு நண்பர்.

“சாதாரண பிரச்சாரமாக இருந்தால் வழக்கம் போல் ரிசல்ட்டு இருக்கும். இப்படிச் செய்திருப்பதால் நல்ல பயன் கிடைச்சிருக்கு”.

“சார், நம்ம கவர்ன்மென்ட் இதை மக்கள் இயக்கமாக நடத்தியிருக்கிறது. அதனால் தான் ஊரெங்கும் ஓர் எழுச்சியைப் பார்க்க முடியுது” என்று ஆர்வத்தோடு சொல்கிறார் தமிழ் நாளிதழ் ஒன்றின் செய்தியாளர்.

நான் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருக்கிறேன்.

கார்கள் வேகமாகப் போய்க் கொண்டிருக்கின்றன.

* * *

ஜனவரி முதல் வாரம்.

சென்னையிலிருந்து இரண்டு பெரிய கார்களில் இருபதுக்கு மேற்பட்டவர்கள், தென்னார்க்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை ஆகிய நான்கு மாவட்டங்களில் சுற்றுப் பயணம் செய்தார்கள்.

தமிழ்நாடு அரசு குடும்பநலத் துறை ஏற்பாடு செய்திருந்த சுற்றுப் பயணம் அது. முதலில் சென்ற இடம் தென்னார்க்காடு மாவட்டம்.

திண்டிவனம் சென்ற பிறகு, புதுச்சேரிக்குச் செல்லும் சாலையில் கார்கள் திரும்புகின்றன.

**தென்னார்க்காடு மாவட்டத்தில் நிறைவேறியுள்ள குடும்ப நலத் திட்டப் பணிகளை ‘‘ஓர் உலகச் சாதனை’’ என்று கடந்த 9-1-1972 அன்று ஒலிபரப்பப்பட்ட ‘நம்பிக்கை ஒளி’ என்ற சொற்பொழிவில் அகில இந்திய வானொலி குறிப்பிட்டது. அந்த உலகப் பெருஞ் சாதனையை நமக்குப் படம் பிடித்துக் காட்டுகிறது இந்தக் கட்டுரை.**

வானூர் ஒன்றியம் அமைந்துள்ள பகுதிக்கும் பக்கத்தில் தென்பகுதியில் போகும் சாலை வழியாக இரண்டு மைல் தொலைவு சென்றால் வரும் சிற்றூர்தான் பூத்துறை.

பூத்துறை இரண்டு மாதங்களுக்கு முன்னர் வரை யாரும் அறியாத சிற்றூராக இருந்தது. ஆனால் இன்று—

தமிழகத்தின் மற்ற சிற்றூர்களுக்கு எடுத்துக் காட்டாக விளங்கும் ஊர்.

குடும்ப நலத் திட்டத்தின் முனைப்பு இயக்கம் தமிழகத்தில் சீரிய முறையில் நடைபெற்று வருகிறது.

* * *

தருமபுரி, நீலகிரி, கன்னியாகுமரி மாவட்டங்களைத் தவிர ஏனைய மாவட்டங்களில் குடும்ப நலத் திட்ட முனைப்பு இயக்கம் நடைபெற்று முடிவடைந்து விட்டது. தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் இரண்டாவது கட்டமாகக் குடும்பநலத் திட்ட முனைப்பு இயக்கம் நடைபெற்று வருகிறது.

தென்னார்க்காடு மாவட்டத்தில் முதலாவது குடும்பநலத் திட்ட முனைப்பு இயக்கம் முடிவடையும் நேரத்தில்தான் பத்திரிகையாளர்கள் அங்குச் சென்றார்கள்.

பூத்துறை கிராம மக்கள் அனைவரும் கூடி நிற்கிறார்கள்.

வாண வேடிக்கைகளுடன் வரவேற்பு அளிக்கிறார்கள்.

பொதுக்கூட்டம் போன்று ஒரு மேடை அமைத்திருக்கிறார்கள். மேடைக்கு முன்பு ஊர் மக்கள் அமர்ந்திருக்கிறார்கள். வழக்கமான பொதுக்கூட்டமாக அல்லாமல் இது புதிய முறையில் துவங்குகிறது.

பத்திரிகையாளர்கள் ஒவ்வொருவராக அறிமுகப்படுத்தப்படுகிறார்கள். அடுத்து வழக்கம் போல் சொற்பொழிவு தொடங்கவில்லை. கூட்டத்தில் அமர்ந்திருப்பவர்களைப் பார்த்து அடுக்கடுக்காகக் கேள்வி கேட்கிறார்கள், பத்திரிகையாளர்கள்.

கூட்டத்தில் அமர்ந்திருந்த பெரியவர்களைப் பார்த்து ஒரு கேள்வி—

'' உங்களில் எத்தனை பேர் குடும்பநலத் திட்ட அறுவைச் சிகிச்சை செய்து கொண்டிருக்கிறீர்கள் ? கை தூக்குங்கள் பார்க்கலாம் ? ''

எல்லாரும் கைதூக்குகிறார்கள்.

ஆமாம்! இந்த ஊரில் உள்ள தகுதி வாய்ந்த தம்பதிகள் எல்லாரும் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டுள்ளார்கள்.

தனித்தனியாகச் சிலரை அழைத்துப் பத்திரிக்கையாளர்கள் கேள்வி கேட்கிறார்கள்.

'' உங்களைக் கட்டாயப்படுத்தி இந்த அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளச் சொன்னார்களா ? ''

'' இல்லை. நாங்களாகவே விரும்பிச் செய்துகொண்டோம்''

''உங்க ஊர் மணியக்காரரர் சொன்னார், கலெக்டர் சொன்னார் என்பதனால் செய்துகொண்டீர்களா?''.

''சொன்னார் என்பதனாலல்ல; ......குடும்ப நலத் திட்டத்தினாலே நன்மைங்கிறது புரிஞ்சதனாலேதான் '' ..... என்று சொல்லத் தொடங்கியவர் பத்திரிகையாளர்களுக்கே குடும்ப நலத் திட்டத்தின் அவசியத்தை வலியுறுத்தி விளக்கம் தரலானார்.

ஆங்கில நாளிதழ் ஒன்றின் செய்தியாளர் பெருமையுடன், '' நம் நாட்டில் கிராமப் புறங்களில் வாழும் மக்கள் மிகவும் விழிப்படைந்துவிட்டாங்க '' என்று உரக்கச் சொன்னார்.

கடைசியாகப் போகும் வழியில் ஒரு பத்திரிகைக்காரர், ஒருவரை அழைத்துத் திடீரென்று ''நீங்க எல்லாரும் இப்படி அறுவைச்சிகிச்சை செய்துகொள்ளக் காரணம் என்ன ?' என்று வினவினார்.

'' இப்ப, எல்லா வசதிகளும் செய்து தந்தாங்க ...... எல்லாரும் முனைப்பா இருந்தாங்க ...... நேரம் வந்திடுச்சு ; செஞ்சுகிட்டோம் '' என்றார்.

அவ்வூரைச்சேர்ந்தவர்கள ஒரே குரலில் சொன்ன செய்தி இந்தக் குடும்ப நலச் சிகிச்சைக்கு எங்களுக்கு வழிகாட்டியாகஇருந்தது, மணியக்காரர் தானுங்க....

பூத்துறையின் கிராம அதிகாரியான திரு பி. கே. வைத்தியலிங்கம் குடும்ப நலத் திட்டத்தில் ஆர்வமிக்கவர். அவர் துணைவியார் குடும்பநலத்திட்ட அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர். அறுவைச் சிகிச்சை செய்து கொண்டதனால் உள்ள நன்மைகளைத் தன் மனைவியிடம் ஒரு பேட்டியாகக் கேட்டு டேப் ரிகார்டில் பதிவு செய்து கொண்டார் வைத்தியலிங்கம். பதிவு செய்து கொண்ட டேப் ரிக்கார்டரை அவ்வூர் விவசாயிகளை அழைத்துப் போட்டுக் காண்பித்தார். குடும்ப நலத்திட்ட முனைப்பு இயக்கம் தொடங்கவே, வைத்தியலிங்கத்தின் முயற்சி சரியான பயன் விளைவித்தது.

இன்று பூத்துறையில் உள்ள தகுதி வாய்ந்த தம்பதிகள் அனைவரும் குடும்ப நலத்திட்ட அறுவைச் சிகிச்சைச் செய்து கொண்டுள்ளனர். எடுத்துக்காட்டாக விளங்கும் சிற்றூராயிற்று பூத்துறை !

அண்மையில் கிடைத்த தகவலின்படி பூத்துறையைப் போன்று குறிஞ்சிப்பாடி பகுதியிலும் நான்கைந்து ஊர்களில் உள்ள அனைவரும் குடும்ப நலச்



சிகிச்சை செய்து கொண்டிருக் கிறார்கள்.

• • •

அன்று மாலை விழுப்புரம் மருத்துவ மனையில் குடும்பநலத் திட்டச் சிகிச்சை செய்து கொண்டவர்கள் அனைவரையும் பத்திரிகையாளர்கள் பார்வை யிட்டனர். மருத்துவமனை முழுவதும் குடும்ப நலத் திட்டச் சிகிச்சை செய்து கொண்டவர்கள். தேர்தல் காலத்தில் வாக்குச் சாவடி அமைப்பது போலக் குடும்பநலச் சாவடிகள் அமைத்துச் சிகிச்சை செய்து கொண்டவர்களைத் தங்க வைத்திருந்தனர். அந்த அளவுக்கு ஏராளமானவர்கள் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டுள்ளார்கள்.

விழுப்புரத்தில் பல தாய்மார்களிடம் பத்திரிகையாளர்கள் கேள்வி கேட்டனர்.

'' பணத்துக்கு விரும்பி செய்து கொண்டீர்களா ?''

'' வீட்டு நன்மையையும், எங்க குழந்தைகளின் எதிர்காலத்தையும் எண்ணிச் செய்துகொண்டோம்.''

ஒரு முஸ்லிம் பெண் உருக்கமாகச் சொன்ன செய்தி, ''நான் விரும்பி என் கையில் உள்ள அஞ்சு ரூபாயை இங்கேகொடுத்து அறுவைச் சிகிச்சை செய்துக்க வந்தேன். ஆனா, அரசாங்கமே இவ்வளவு செய்யறப்போ சந்தோஷமா செய்துக்குறது நல்லது தானுங்களே ! என் குடும்ப நிலையை எண்ணி நானாகவே செஞ்சுக்க முன் வந்தேன்''.

* * * * *

மாவட்ட ஆட்சித் தலைவரைச் சந்திக்கக் கடலூருக்குப் புறப்பட்டோம்.

ஒரு காலத்தில் எள்ளி நகையாடப்பட்ட குடும்ப நலத் திட்டம், இன்று மக்களால் பெரும் வரவேற்புக்குரியதாக அமைந்து விட்டதைப் பத்திரிகையாளர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கோணத்தில் சுட்டிக் காட்டிப் பேசிக் கொண்டு வந்தனர்.

இந்தப் பேச்சுக்கு முற்றுப் புள்ளி வைப்பது போல ஒரு நண்பர் சொன்னார். '' ஆட்டுவிப்பார் ஆட்டுவித்தால் ஆடாதார் யாருமுண்டோ.''

மாவட்ட ஆட்சித் தலைவரை அவரது இல்லத்தில் சந்தித்த பொழுதும் பத்திரிகையாளர்கள் தங்களுக்குரிய ஐயத்தோடேயே கேட்டார்கள்.

'' நீங்கள் அதிக அளவில்பணம் கொடுப்பதால் தான் அதிக அளவில் மக்கள் குடும்ப நலத்திட்டச் சிகிச்சை செய்து கொண்டார்களா ?''

தென்னார்க்காடு மாவட்டத்தில் குடும்ப நலத் திட்டச் சிகிச்சை செய்து கொண்ட ஆண்களுக்கு ரூ. 75-ம், பெண்களுக்கு ரூ. 100-ம் அளிக்கப்பட்டன.

வழக்கமாக அளிக்கப்படும் ரூ. 30, அழைத்து வருபவருக்கு அளிக்கப்படும் ரூ. 10, ஆறு நாள் ஓய்வுக்காக அளிக்கப்படும் ரூ. 18, தவிர மீதித் தொகை பொது மக்களிடமே இருந்து திரட்டப்பட்டு அளிக்கப்பட்டது.

'' நீங்களே எல்லாரையும் சந்தித்திருப்பீர்களே சொல்லுங்கள்'' என்று மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டார்.

தென்னார்க்காடு மாவட்டத்தில் மட்டும் கடந்த 1–12–71 முதல் 10–1–1972 வரை மொத்தம் 40,437 பேருக்குக் குடும்ப நலத் திட்டச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தில் வேறு எந்த மாவட்டத்திலும், இந்த அளவு எண்ணிக்கையில் குடும்ப நலத் திட்டச் சிகிச்சை செய்யப்படவில்லை.



முதலை :— தோல்களிலேயே இதன் தோல் மிகவும் உறுதியானது ; விலையுயர்ந்தது. பெட்டிகள், பைகள், காலணிகள், பர்ஸ், சிகரெட் உறைகள் போன்ற சாமான்களுக்கு இது உதவுகிறது.

மறுநாள் காலையில் திடீரென்று திட்டமிடாமல், மாவட்ட ஆட்சித் தலைவருடன் குறிஞ்சிப்பாடிப் பகுதியிலுள்ள வடலூருக்குப் பத்திரிகையாளர்கள் அனைவரும் சென்றோம்.

திடீரெனச் சென்று, அறுவைச் சிகிச்சை செய்து கொள்பவர்களுக்கு அளிக்கப்படும் வசதிகள் எப்படி இருக்கும் என்று அறிந்து கொள்ள எங்களில் சிலருக்கு விருப்பம்.

ஆனால், அங்கு வழக்கம்போல் எல்லாருக்கும் செய்யப்படும் எல்லா வசதிகளும் செய்து தரப்பட்டிருந்தன. வடலூரில் ஒரு சத்திரத்தில் அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டவர்கள் தங்கியிருந்தார்கள்.

பத்திரிகையாளர்கள் வழக்கமான கேள்விகளைக் கேட்டனர். வயதுகளையும் கேட்டனர். 45 வயதுக்கு மேலான எவருக்கும் அங்கு அறுவைச் சிகிச்சை செய்யப்படவில்லை.

அடுத்து, காட்டுமன்னார் கோவிலுக்குச் சென்றோம். அந்த ஒன்றியத்தில் பெருமளவில் மக்களுக்குக் குடும்ப நலத்திட்டச் சிகிச்சை அளிக்கப்பட்டது.

காட்டுமன்னார் கோவிலில் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர்களுக்கு அளிக்கப்பட்ட ஆறு நாள் உணவை அப்பகுதிச் சீரணியினர் ஏற்றுக் கொண்டனர். அந்தப் பகுதியின் சீரணியினரின் அரும் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் சிறப்பாக எடுத்துரைத்தார்.

காட்டுமன்னார் கோவிலில், சிறப்பாகக் குடும்ப நலத் திட்டத்தினைச் செயல் படுத்துவதற்குக் காரணம் என்ன என்று அப்பகுதியைச் சேர்ந்த முக்கியமானவர்கள் அனைவரையும் பத்திரிகையாளர்கள் கேட்டனர்.

ஒருமனதாக அனைவரும் கூறிய பதில் : '' மாவட்ட ஆட்சித் தலைவர் அளித்த ஊக்கம் தான் '' என்பதாகும்.

தென்னார்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கே. ஏ.



நம்பியார் அவர்கள் குடும்பநலத் திட்ட முனைப்பு இயக்கத்தில் காட்டியுள்ள அக்கறையை நாங்கள்சென்றவிடங்களில் சந்தித்தவர்கள் அனைவரும் கூறினார்கள்.

* * * * * *

அடுத்து இரண்டாவது கட்டமாகக் குடும்ப நலத் திட்ட முனைப்பு இயக்கம் நடைபெறும் தஞ்சாவூர் மாவட்டத்துக்குச் சென்றோம்.

முதலில் சீர்காழி—

அங்கே அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர்களை, நல்வாழ்வு நிலையங்களில் அமைத்து ஆறுநாள் தங்க வைக்கின்றனர்.

ஆறு நாளும் அறுசுவை உண்டி விருந்துதான், தஞ்சைக்கே உரிய தனிச் சிறப்புகளுடன்.

அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர்களுக்கு அளிக்கப்பட்ட விருந்துகள், எங்களுடன் வந்த டெலிவிஷன் காமிராவுக்கு விருந்தாகியது.

இது மட்டுமல்ல; அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட ஒவ்வொரு அணிக்கும் பரிசுச்சீட்டு குலுக்கிப் போட்டு பீரோ, மேசை, வானொலிப் பெட்டி, கடியாரம் என்று பல பரிசுப் பொருள்களை வழங்குகிறார்கள்.

மாலையில் திரைப்படக்காட்சி, நாடகங்கள் என்ற நிகழ்ச்சிகள் வேறு.

பின்னர், மாயூரம், வலங்கைமான், அம்மாப்பேட்டை முதலிய இடங்களுக்குச்சென்று நல்வாழ்வு இல்லங்களைப்பார்வையிட்டோம். அம்மாப்பேட்டையில் அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட ஆசிரியர்களைப் பேட்டி கண்டோம்.

குடும்ப நலத்திட்டப் பணிகளுக்காக ஆசிரியர்கள் கட்டாயப்படுத்தப்படுகிறார்கள் என்று கூறப்படுவதை மறுத்தார்கள்.

தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களையும் அம்மாப்பேட்டையில் சந்தித்தோம். பின்னர் தஞ்சை மருத்துவ மனைக்குச் சென்றோம்.

அங்கு நடைபெறும் குடும்ப நலத் திட்டப் பணிகளைஅறிந்தோம். மாவட்டம் முழுவதும் நடைபெற்ற குடும்ப நலத் திட்டப் பணிகளை அறிந்து கொண்டோம்.

மறுநாள் திருச்சி மாவட்ட மருத்துவ மனையைப் பார்வையிட்டுத் திருச்சி மாவட்டத்தில் நடைபெற்று வரும் பணிகளை அறிந்து கொண்டோம். அங்கிருந்து மதுரை மாவட்டம் வடமதுரை, காந்தி கிராமம் முதலிய இடங்களுக்குச் சென்று அங்கு நடைபெற்று வரும் குடும்பநலத் திட்டப் பணிகளை அறிந்து கொண்டோம்.

மறுநாள் திரும்பிவரும் பொழுது திருச்சி மாவட்டத்திலுள்ள துவரங்குறிச்சி, விராலிமலை முதலிய இடங்களில் நடைபெற்று வரும் குடும்ப நலத்திட்டப் பிரச்சாரக் கூட்டங்களைக் கேட்டோம்.

பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவரைச் சந்தித்த பொழுது அவர், இரண்டாவது கட்டமாக நடைபெறும் குடும்பநலத் திட்டப் பணிகளை விளக்கினார்.

மொத்தத்தில், குடும்பநலத் திட்டப் பணிகள் எல்லா மாவட்டங்களிலும் சிறப்பாகநடைபெறுகின்றன என்பதை இப்பயணத்தில் கலந்து கொண்ட இதழ்த் துறையாளர்கள், அரசு அலுவலர்கள் அனைவரும் ஒப்புக் கொண்டனர்.

* * * * * *

சென்னைக்குத் திரும்பி வந்து கொண்டிருக்கிறோம்.

தென்னார்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் சொல்லியதை அகில இந்திய வானொலி நிலையத்தைச் சேர்ந்த நண்பர் நினைவு கூர்கிறார்.

‘‘தென்னார்க்காடுமாவட்டத்தில் குடும்பநலத் திட்டச் சிகிச்சை செய்து கொள்பவர்கள் எண்

ணிக்கை 75,000 எட்டிவிடலாம். ஆனால், நிதி பற்றாக் குறையும், பாதுகாப்பு நிதி திரட்டல் போன்ற ஏனைய பணிகளும் முன் நிற்பதால் உடனடியாகச் செய்ய முடியவில்லை'' என்றார் மாவட்ட ஆட்சித் தலைவர். நெருக்கடி நிலை வராவிடில் தென்னார்க்காடு மாவட்டம் இன்னும் மாபெரும் சாதனையைச் செய்திருக்கும்''.

'' உண்மைதான்! ஆனாலும் தென்னார்க்காடு மாவட்டத்தில் செய்திருப்பதுதான் உலகப் பெருஞ்சாதனை'' என்கிறார் மைய அரசு விளம்பரத் துறை அதிகாரி.

''உலகச் சாதனையா?'' விவரமாகச் சொல்லும்படி கேட்கிறேன் நான்.

மைய அரசு அதிகாரி சொன்னார் :—

''உலகத்திலேயே இந்தியாவில் மட்டும்தான் தேசிய அளவில் குடும்பநலத் திட்டம் நிறைவேற்றப்படுகிறது. அதில், தமிழ்நாடுதான் மிகச் சிறப்பாகக் குடும்பநலத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது''.

'' கேரள மாநிலத்திலுள்ள எர்ணாகுளத்தில் குடும்ப நலத் திட்டத்தைச் செயல்படுத்தியது தான் உலக ரிகார்டு என்கிறார்களே?'' என்று கேட்டேன்.

அந்தக் காரில் வந்த நண்பர்களனைவரும் பலமுனைகளிலிருந்து எனக்குப் பதில் தந்தார்கள். அவர்கள் சொல்லிய கருத்துக்கள் இதோ :

'' கேரள மாநிலம் எர்ணாகுளத்தில் நடத்திய குடும்பநல இயக்கம் மாநிலம் முழுமைக்கும் சேர்த்து 63,000 தாம். எர்ணாகுளம் மாவட்டத்தில் 13,000 பேர்கள்தானாம்.

'' அது மட்டுமல்ல; கேர் நிறுவனத்தின் உதவியுடன் அங்குக் குடும்ப நலத்திட்டம் செயல் படுத்தப்பட்டது. ஆனால், தமிழ்நாட்டில் எந்தவித அந்நிய உதவியும் பெறவில்லை.''

'' இன்னொரு முக்கியமான விஷயம், வயது வரம்பு. தென்னார்க்காடு மாவட்டத்தில் 45-க்கு உட்பட்டவர்களுக்கே அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. ஆனால், மைய அரசு குடும்பநலத் திட்ட அறுவைச் சிகிச்சைக்கு 55 வயது என்ற வரம்பு விதித்து ளது. இந்த நிலைக்கு மாறுபட் அளவிலேயே குடும்பநலத் திட் வயது வரம்பு அங்குக் கடை பிடிக்கப் பட்டிருக்கிறது.

'' கேரள மாநிலத்தவர்களுக் படிப்பறிவு அதிகம். அவ களிடம் குடும்பநலத் திட்டத் எளிதில் பிரச்சாரம் செய்துவி லாம். ஆனால், பின்தங்கியமக்க உள்ள பகுதியில் இதைச் செ திருப்பதுதான் பெரிய செய எப்படிப் பார்த்தாலும் தெ னார்க்காடு மாவட்டத்தில் குடும் நலச்சாதனை ஓர் உலக ரிகார் தான்''

இந்தப் பேச்சுக்கு முடிவு யாக நான் கூறிய சொற்றொ இதுதான் :—

'' குடும்பநலத் திட்டத்தி இந்தியாவுக்கு வழி காட்டுகிற தமிழ்நாடு.

''தமிழ் நாட்டிலுள்ள மாவ டங்களுக்கு வழி காட்டுகி தென்னார்க்காடு மாவட்டம்.''

எல்லோரும் ஒப்புக் கொ டார்கள்.

உண்மை அதுதானே!

—மாமூலன்


Phone : 133 Gram : ' COOPMET ' Post Box No. 47.

**THE KUMBAKONAM CO-OPERATIVE METAL WORKS LIMITED,**

GANDHINAGAR, KUMBAKONAM.

An Ex-serviceman Industrial Co-operative under the Control of Director of Industries and Commerce, Tamil Nadu.

Manufacturers of Steel Almirah, Steel Cot, Steel Rack, Wall Coffer, Cash Chest etc. Suppliers of Agricultural Implements and Garden Implements. Steel Roof Trusses, Window Grills, Pipe Trevis, Water Tank, etc., will be manufactured.

*SERVICING WORK WILL BE UNDERTAKEN.*

**G. CHAKRAVARTHY,**
*Secretary.*

Kodavasal **C. KRISHNAMURTHY,**
*President.*

''இந்தியாவிலேயே தொழில் அமைதி காக்கும் முதல் மாநிலமாகத் தமிழகம்' இருக்கிறது. அதற்குக் காரணம் நமது அரசின் தொழிற் கொள்கையே'' என்று முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் பெருமிதத்துடன் கூறினார்.




சென்னை ஆட்டோ-ரிக்ஷா ஓட்டுநர்கள் சங்க இரண்டாவது ஆண்டுவிழா சென்னை நுங்கம்பாக்கத்தில் சீரும் சிறப்புமாக நடைபெற்றது. ஓட்டுநர்களுக்கு ஆறு சதவிகிதம் பங்கு ஈவுத் தொகையும், ஆயுள் காப்பீட்டுச் சான்றிதழும், போனசும், வேட்டியும், ஓட்டுநரின் துணைவியருக்குப் புடவையும் வழங்கிய காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

அறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாளில் துவக்கப்பட்ட இந்தக் கூட்டுறவுச் சங்கம், உழைப்பின் மூலமாகவே உயர்வடையமுடியும் என்பதற்கு ஓர் எடுத்துக் காட்டாகும். இப்போது 125 ஆட்டோ-ரிக்ஷாக்கள் அதனை ஓட்டுபவருக்கே சொந்தமாகியிருக்கின்றன. இந்த ஆட்டோ-ரிக்ஷாக்களைத் தருவிக்கத் தமிழ்நாடு அரசு பெரு முயற்சி எடுத்ததை இங்கே குறிப்பிட வேண்டும்.

''தொழிலாளர் பிரச்சினையில் எந்த அளவு விட்டுக் கொடுக்க வேண்டுமோ அந்த அளவு விட்டுக் கொடுத்துப் பிரச்சினைகளைத் தீர்த்த ஓர் அரசு, நமது அரசுதான். இதைத் தொழிலாளப் பெருங்குடி மக்கள் உணர்ந்து திசைத் திருப்பும் முயற்சிக்கு இடம் தராமல், நாட்டின் முன்னேற்றத்திற்கான பணியில் ஊக்கம் செலுத்திட வேண்டும்.'' இப்படி உண்மை நிலையை விளக்கிக் கூறினார் முதல்வர் கலைஞர்.

'பேருந்துகளை நாட்டுடைமை ஆக்கியதுபோல் சென்னை மாநகரில் பத்து ஆண்டுகளுக்கு மேல் ஓடும் பழைய டாக்சிகளை எல்லாம் நாட்டுடைமை ஆக்க வேண்டும்' என்ற ஒரு திட்டத்தைச் சங்கத் தலைவர் திரு ஏ. வி. பி. ஆசைத்தம்பி கூறினார். இதற்கு முதல்வர் அவர்கள் பதிலளித்துப் பேசும்போது இப்படிக் குறிப்பிட்டார்.

''இந்தத் திட்டத்தைப் பற்றி நான் முதலமைச்சராக மட்டுமல்லாமல், நிதியமைச்சராகவும் இருக்கின்ற காரணத்தினால் உடனே சரி என்று கூறிட முடியவில்லை. நிதி நிலையின் கஷ்டங்களை நேரடியாகப் புரிந்து கொள்ளும் வாய்ப்பு இப்போது ஏற்பட்டிருப்பதால் உடனே 'ஏற்றுக் கொள்கிறேன்' என்று முன்பு பொதுப் பணித்துறை அமைச்சராக இருந்தபோது கூறியது போல் இப்போது கூறுவதில்லை. அதற்காகக் கோரிக்கைகள் நிறைவேறுவதில்லை என்று பொருளல்ல. சிறிது காலமெடுத்துக் கொண்டு நிதி நிலையை ஆராய்ந்து முடிவுகள் அறிவிக்கப்படுகின்றன'' என்று கூறிய கலைஞர், பாட்டாளி படும் பாட்டையும் குறிப்பிட்டு அதற்காக அரசு மேற்கொள்ளும் முயற்சிகளையும் விளக்கினார்.

''125 ஆட்டோ ரிக்ஷாக்கள் அவற்றை ஓட்டுபவர்களுக்கே சொந்தமாகி இருக்கின்றன. 125 பேரின் பிரச்சினை தீர்ந்து விட்ட காரணத்தால் தமிழ்நாட்டிலுள்ள பாட்டாளிகளின் பிரச்சினை அனைத்தும் தீர்ந்து விட்டதாகக் கூறி என்னை நானே ஏமாற்றிக் கொள்ளத் தயாராக இல்லை. இன்னும் நாட்டில் பல்லாயிரக் கணக்கான பாட்டாளிகள் வாழ்வில்—வேலையில்லாமல் அவதிப்படுவோர் வாழ்வில் ஒளியேற்றிட வேண்டும். அதற்கான திட்டங்களை இந்த அரசு தீட்டி வருகிறது.''

ஓட்டுநர் ஒருவரின் துணைவியார்க்குப் பரிசு வழங்குகிறார் முதல்வர்.



முதல்வர் குறிப்பிட்டது போல இந்தக் குடும்ப விழாவில் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களும், பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்களும், போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்களும், நகர மேயர் அவர்களும் வந்திருந்து கூட்டுறவே நாட்டுயர்வு என்பதை எடுத்துக் காட்டினார்கள்.

ஒரு தொழில் துவங்க முதலீடு தேவை. ஆனால் இந்தச் சங்கத்தின் தொண்டு காரணமாக ஆட்டோ ஓட்டுநர்கள் தங்கள் உழைப்பை, திறமையை மட்டுமே மூலதனமாக்கி அவர்களே தாங்கள் ஓட்டும் வண்டிகளுக்கு உரிமையாளர்களாக மாறிய பாங்கை யார்தான் பாராட்டாமலிருக்க முடியும்?

# மதராஸ் ரிபைனரீஸ் லிமிடெட் தனது பணியை இனியும் தொடரும் என இன்று உறுதி அளிக்கிறது



இன்றைய தினம் இந்திய மக்களுக்கும், இந்திய நாட்டிற்கும் ஒரு மகத்தான நாள்!

22 ஆண்டுகளுக்கு முன்பு நாம் ஒரு சபதம் ஏற்றோம். ஒற்றுமை உணர்வோடும், கடினமான உழைப்பு மூலமும், நமது நாட்டின் பலகோடி மக்களின் நன்மையை நாளும் மனதில் கொண்டு, நமது சுதந்திரக் குடியரசைப் பாதுகாப்போம் என்பதுதான் அந்தச் சபதம்.

1969-ம் ஆண்டு, ஜூன் மாதம், மதராஸ் ரிபைனரீஸ் லிமிடெட், தனது உற்பத்தியைத் தொடங்கியது.

தென்னகத்தில், பல துறைகளில் வளம் கொழிக்க வழி வகுத்தது.

நேஃப்தா; குடும்பத் தலைவிகளின் வீட்டு உபயோகத்திற்கு கியாஸ், மண்ணெண்ணை போன்ற எரிபொருள்கள்; பெட்ரோல், டீசல் ஆயில்கள்; ஆகாய விமானங்களுககு எரிபொருள்கள்; பர்னஸ் ஆயில்கள்; கந்தகம் போன்ற பொருள்களை மதராஸ் ரிபைனரீஸ் அதிக அளவில் தயாரிக்கிறது. இதனால் வீடுகள், கார்கள், லாரிகள், பம்பு செட்டுகள், டிராக்டர்கள், ஜெட் விமானங்கள், தொழிற்சாலைகள் ஆகிய வற்றிற்குத் தேவையான எரிபொருள்கள்; சாலைகள் அமைக்கத் தார்; லூபிரிகேட்டிங் ஆயில் மற்றும் ரசாயனப் பொருள்கள் தாராளமாகக் கிடைக்கின்றன.

நாட்டு மக்கள் அனைவரது வாழ்வும் வளம் பெறத் தனது பணியைத் தொடர்ந்து செய்யும் என மதராஸ் ரிபைனரீஸ் லிமிடெட் இந்தக் குடியரசுத் தினத்தன்று உறுதி அளிக்கிறது.



MRL

மதராஸ் ரிபைனரீஸ் லிமிடெட், சென்னை

EP-MRL-11

# 44 நூல்கள்

## 12000 பக்கங்கள்!

முப்பது திங்களில் சென்னைப் பல்கலைக்கழகம் 44 நூல்களை வெளியிட்டிருக்கிறது. இதன் வெளியீட்டு விழா, அண்மையில் சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் கல்வியமைச்சர் மாண்புமிகு நாவலர் அவர்கள் தலைமையில் அறிஞர்கள், அதிகாரிகள், பேராசிரியர்கள், மாணவர்கள், எழுத்தாளர்கள் முதலியோர் சூழ மிகவும் சிறப்பாக நடந்தது.

தமிழ், ஆங்கில, மலையாள மொழிகளில் வரலாறு, புதைபொருள், பொருளியல், கணக்கியல், காந்தீயம் போன்ற 44 ஆராய்ச்சி நூல்களை முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் வெளியிட்டார். இவற்றின் மொத்தப் பக்கங்கள் 12,000.

''ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகம் சிறந்ததாகக் கருதப்படுவதற்குக் காரணம், அது மிகச் சிறந்த நூல்களை வெளியிடுவதேயாகும். ஒரு பல்கலைக் கழகம் போற்றிப் புகழப்படுவதற்குக் காரணம் அது என்ன சாதித்தது என்பதைப் பொறுத்ததாகும். இந்த வகையில் இந்தியாவிலே சிறந்த பல்கலைக் கழகமாகச் சென்னைப் பல்கலைக் கழகம் விளங்குகிறது. ஒரு நாட்டை உருவாக்குவது—மக்களை அறிவாளியாக்குவது, பிற நாடுகளுக்கு வழி காட்டியாக விளங்குவது பல்கலைக் கழகம்தான்'' என்று நாவலர் ஒரு பல்கலைக் கழகத்தின் சிறப்பை எடுத்துக் காட்டினார்.

நூல்களை வெளியிட்டு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் இப்படிக் குறிப்பிட்டார் :

''சென்னைப் பல்கலைக் கழகத்தின் சார்பில் 44 புதிய நூல்கள் இங்கே வெளியிடப்படுகின்றன. இந்த நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொள்வதில் நான் மிகுந்த மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன்.

நாடெங்கிலும் பொங்கல் திருவிழாவைக் கொண்டாடுகின்ற இந்த நேரத்தில் இதுபோன்ற நூல்கள் வெளியிடப் படுவது சாலச் சிறந்த ஒன்றாகும்.

நூல்கள் நாட்டு மக்களின் அறிவு வளர்ச்சிக்கும், சமுதாய வளர்ச்சிக்கும் எந்த அளவுக்குப் பயன்படும் என்பதை நாம் அறிவோம். நூல்களின் பெருமையை உணர்ந்து சென்னை பல்கலைக் கழகம் இதற்கு ஏற்பாடு செய்துள்ளது. இதுவரை ரகசியமாக நடைபெற்று வந்த இந்த நூல் வெளியீட்டு விழா, பகிரங்கமாக மக்கள் மன்றத்தின் முன் வெளியிடப்படும் அளவிற்கு நந்நிலை உருவாகியிருக்கிறது. இவ்வாறு நூல்கள் வெளியீடுவதன் மூலமாக என்னென்ன நூல்கள் வெளியிடப் பட்டுள்ளன என்று தெரிந்து கொள்ள முடியும். அந்த நூல்களை நாமும் படிக்கலாம் என்று சிலருக்கு எண்ணத் தோன்றும்; இதற்கு விளம்பரம் மிகவும் அவசியம். விளம்பரம் சில நல்ல காரியங்களுக்கு மிகவும் தேவைப்படுகிறது.

எதிர்காலச் சமுதாயத்தினர் பயன் பெறத்தக்க வகையில் நூல்கள் அமைந்தால்தான் நாம் நல்ல பயனைப் பெறமுடியும்.

ஒவ்வொருவரும் நூல் படிக்கும் வழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அதாவது, படிக்க வேண்டிய நூல்களைப் படித்திட வேண்டும். அதே சமயம் எல்லாப் புத்தகங்களும் நல்ல புத்தகங்கள்தான் என்று எண்ணிட முடியாது.

மலர் என்று சொன்னால் நாம் எவ்வாறு மல்லிகை, ரோஜா என்று நல்ல மலர்களைக் குறிப்பிடுகிறோமோ அதைப்போல நல்ல புத்தகங்களையும் எண்ணிட வேண்டும்.

ஒவ்வொரு வீட்டிலும் ஒரு நூலகம் இருந்தாக வேண்டும். அந்த நூலகங்களிலும் நல்ல நூல்கள் இருந்திடல் வேண்டும்.



அத்தகைய நல்லதோர் சூழ்நிலையை ஏற்படுத்தத் தக்க கல்விப் புரட்சியை நமது நாட்டில் ஏற்படுத்த வேண்டும்.

திருக்குறள், திருவாசகம் போன்ற பழம்பெரும் நூல்கள் அனைத்திற்கும் ஆராய்ச்சிக்கு மேல் ஆராய்ச்சி நிரம்ப நடந்திருக்கிறது.

இனிமேல் எதிர்காலச் சமுதாயத்தின் சிறப்பிற்காகவும் வளர்ச்சிக்காகவும் ஆராய்ச்சியினை நாம் மேற்கொண்டாக வேண்டும்.

வெளி நாடுகளில் அரசியல் பற்றியும், அரசியல் கட்சிகள் பற்றியும் ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். அதுபோல் நம் நாட்டுப் பல்கலைக் கழகங்களிலும் அரசியலைப் பற்றிய ஆராய்ச்சிகளை நாம் நடத்திட வேண்டும்.

ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு அரசியல் அடிப்படை ஆதாரமாக விளங்குகிறது. அந்த அரசியல் பற்றிய ஆராய்ச்சி நாட்டின் முன்னேற்றத்திற்கு எவ்வளவு தூரம் பயன்படும் என்ற வகையில்தான் நான் இதை வற்புறுத்திச் சொல்கிறேன்.

இன்று இந்தியாவில் பல்வேறு மொழிகளில் மொத்தம் 600 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. இவற்றில் 270 நூல்கள் தமிழ்நாட்டில் தமிழில் வெளியிடப்பட்டுள்ளன.

இந்த ஆண்டில் தமிழ்நாட்டில் மேலும் 300 நூல்களை வெளியிட ஏற்பாடு செய்து வருகிறோம் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது தாய் மொழியாம் தமிழ்மொழியில் அதிக அளவில் நூல்கள் வெளியிடப்பட வேண்டும். அதற்கு இந்தப் பல்கலைக் கழகம் முழு முயற்சி எடுக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. நாட்டில், மேன்மேலும் மறுமலர்ச்சி ஏற்பட இந்த விழா பெரிதும் பயன்படும்.''

ஆரம்பத்தில் அனைவரையும் வரவேற்ற பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு. நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள், ''அடுத்த ஆண்டு விஞ்ஞான நூல்களையும் வெளியிட முனைந்துள்ளோம்'' என்று சொன்னதை இங்குக் குறிப்பிட வேண்டும்.


## நல்வாழ்த்துக்கள்

யுனைடெட் இந்தியா ரோலர் 'ப்ளவர்' மில்ஸ்
பிரைவேட் லிமிடெட்
1/4, சூரியநாராயண செட்டி தெரு
சென்னை-81

உயர்ந்த தரமுள்ள
''கோபுரம்'' மார்க்
மைதா, சூஜி
மற்றும்
''கப்பல்'' மார்க்
ஆட்டா
கோதுமைத் தவிடு தயாரிப்பாளர்கள்

தொலைபேசி எண் : 52670 - 52671
52672 - 52673

தந்தி : MONARCH

Sarath


## வெண்பாப் போட்டி-28

முறிப்படி :

மையை மறவாமை மாண்பு.

முடிவு நாள் : 16—2—1972

பரிசு : ஓராண்டு 'தமிழரசு' அன்பளிப்பு

வெண்பா அனுப்பவேண்டிய முகவரி:—

ஆசிரியர் (வெண்பாப் போட்டி),
''தமிழரசு'' அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை-2.

---

குறிப்பு—

நேரிசை வெண்பாக்களே அனுப்பப்படவேண்டும். அஞ்சல் அட்டையிலேயே எழுதி அனுப்புதல் வேண்டும்.

# அனுபவம் புதுமை

கல்வெட்டுக்கள் தான் ஒரு நாட்டின் வரலாற்றைத் தெரிவிக்கும் சான்றுகள். நமது பண்டைக்கால மன்னர்கள் தங்கள் சாதனைகளை முழுக்க முழுக்க எடுத்துச் சொல்லாவிட்டாலும் கூட, ஏதோ ஓரளவாவது கல்வெட்டுக்களின் வாயிலாகச் சொல்லிச் சென்றிருக்கிறார்கள். காலத்தை வென்று நிற்கும் அந்தக் கல்வெட்டுக்கள், அக்கால வரலாற்றையும், வாழ்க்கை அமைப்பையும் எடுத்துரைக்கத் தவறவில்லை.

தமிழ்நாட்டில் கோயிற் சுவர்கள், கற்பாறைகள், மலைக்குகைகள், மண்டபங்கள், படிமங்கள், நடுகற்கள் முதலியவற்றில் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இத்தகைய கல்வெட்டுக்கள் மிகப் பழங் காலத்திலிருந்தே தமிழ்நாட்டில் இருந்து வருகின்றன என்பதற்குச் சான்றுகள் மிகுந்து காணப்படுகின்றன. தமிழகத்தின் மிகப் பழம் பெரும் நூலான தொல்காப்பியத்தில் ''காட்சி, கால்கோள், நீர்ப்படை நடுகல் சீர்த்தகு சிறப்பிற் பெரும்படை வாழ்த்த லென்றிரு மூன்று வகையிற் கல்லொடு புணர'' என வருகிறது. அக்காலத்தில் போர்க்களத்தில் வென்றுபட்ட வீரர்களுக்குக் கல்லெடுத்தலும், அக்கல்லில் அவர்களது வீரச் செயல்களைப் பொறித்து நடுவதும், அதற்குக் கோயிலெடுத்து வழிபடுவதும் பற்றிய செய்திகள் கூறப்பட்டுள்ளன.



அகநானூற்றிலும், இது பற்றிய செய்தி சொல்லப்பட்டிருக்கிறது.

நல்லமர் கடந்து நானுடை மறவர்
பெயரும் பீடு மெழுதி அதர்தொறும்
பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்—
என்று வருகிறது.

புறநானூற்றில்,

மரல வகுந்து தொடுத்த செம்பூங்
கண்ணியொ
டணிமயிற் பீலி சூட்டிப் பெயர் பொறித்
தினி நட்டனரே கல்லும்—
எனவும் வருகிறது.

பன்னிரு படலம், புறப்பொருள் வெண்பா மாலை, முதலிய இலக்கண நூல்களிலும், திருக்குறள், கலிங்கத்துப்பரணி, மூவருலா, முதலிய இலக்கிய நூல்களிலும், நடுகற்கள் பற்றிய குறிப்புகள் பல காணப்படுகின்றன.

இந்த நடுகற்கள், கி.பி. 4-ஆம் நூற்றாண்டு முதல், 9-ஆம் நூற்றாண்டுவரை தமிழ்நாட்டில் வளர்ச்சியுற்றிருந்தது. பல்லவர்களும், சோழர்களும், ஏராளமான கல்வெட்டுக்களை நிறுவியிருக்கிறார்கள் என்ற செய்தி ஆராய்ச்சியின் வாயிலாகத் தெரிய வருகிறது.

வடஆர்க்காடு மாவட்டத்தில் இதுவரை 45 நடுகற்கள் கிடைத்திருக்கின்றன. இவற்றில் பெரும்பான்மை பல்லவர் காலத்தைச் சேர்ந்தவை என்று தெரிய வருகிறது.

அண்மையில் நடைபெற்ற பாகிஸ்தான் போரில் வடஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த தமிழ் வீரர்கள் பலர் வீர மரணம் எய்தியதை அறிவோம். அதற்குக் காரணம் வட ஆர்க்காடு மாவட்டம் மிகப் பழங்காலத்திலேயே மாவீரர் பலர் மலிந்த பகுதியாக இருந்திருக்கிறது என்பதைத்தான், செங்கம் பகுதியில் அண்மையில் கிடைத்த கல்வெட்டுக்கள் தெளிவாக்குகின்றன. 2,000 ஆண்டுகளுக்கு முன்பு நன்னன் என்னும் குறுநில மன்னன் ஆட்சி செய்த செங்கண்மா என்ற நகரந்தான் பிற்காலத்தில் செங்கை என்றும், பின்னர் செங்கம் என்றும் மாறியிருக்கிறது, என்றும் ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

அகழ்வாராய்ச்சித் துறையின் ஆய்வுத் துறை மாணவர் சிலர், அண்மையில் செங்கம் பகுதிக்குச் சென்று நடுகற்களைப் பற்றிய ஆய்வில் இறங்கியபோது புதிய அனுபவத்தை அடைந்திருக்கிறார்கள். அவர்களது புதுமையான அனுபவத்தை அவர்களது மொழியிலேயே இங்கே குறிப்பிடுவதுதான் பொருந்தும் என்று கருதுகிறோம்.

''செங்கம் பகுதியில் மூன்றாம் முறையாகக் கல்வெட்டுக்களின் ஆராய்ச்சிப் பணியை நாங்கள் தொடர்ந்தபோது சில புதுமையான சான்றுகளும் கிடைத்துள்ளன.

இதுவரை வடஆர்க்காடு மாவட்டத்தில் வீரர்கள் உருவம் பொறிக்கப்பட்ட நடுகற்கள் 45 கிடைத்திருக்கின்றன. அவற்றில் பெரும்பான்மையானவை பல்லவர் காலத்தைச் சேர்ந்தவை.

அவற்றை எல்லாம் தேடிக் கண்டு பிடித்து அச்சுப் பதித்து வந்திருக்கிறோம்; அந்தப் பணியில் ஈடுபட்ட நாங்கள் இம்முறை புதிய அனுபவங்களை எல்லாம் பெற்றிருக்கிறோம்.

செங்கத்தின் அருகில் ஒரு காட்டுப் பகுதி—மலை தொடரும் அங்கே உள்ளது. முட்புதர் மொய்த்திருந்தது. இங்கே தான் நன்னன் கோட்டை இருந்ததாகச் சொல்கிறார்கள். ஆராய்ச்சியில் உள்ள ஆர்வத்தின் காரணமாக, மெய்வருத்தம் பாராது அலைந்தோம்.

ஒரு பாழடைந்த கோயில் பகுதி—அங்கே கல்வெட்டு ஏதாவது இருக்கலாம் என்று சந்தேகப்பட்டோம்; அங்கிருந்த கிராமத்து மக்கள் எங்களைப் பார்த்து அதிசயப்படத் தொடங்கினார்கள். நாங்கள் அவர்களிடம் பேசத் தொடங்கினோம்.

''ஐயா............இந்த இடத்தைக் கொஞ்சம் தோண்டிப் பார்க்கலாமா?'' நாங்கள் கேட்டோம்.

உடனே ஒரு முதியவர் கொதித்தெழுந்தார்.

''அதெல்லாம் கூடாதுங்க; இந்த இடத்தைத் தோண்டிப் பார்த்தால், மிருகங்களுக்குக் கோபம் வந்துவிடும்—ஊரே அழிந்து விடும்'' என்றார்.

உடனே எங்களுக்குச் சிரிப்பு வந்து விட்டது; அடக்கிக் கொண்டோம்.

அந்தப் பகுதியை விட்டு, அடுத்த பகுதியை நாடிச் சென்றோம். வெளிச்சமே தெரியவில்லை. அடர்ந்த காடு—எங்கும் இருள் — அதைப் பொருட்படுத்தாமல் ஆராய்ச்சி ஆர்வத்துடன் முயன்றோம்—மாடுகளின் குளம்படிகள் எங்களின் கண்களில் பட்டன; அவற்றைப் பின் தொடர்ந்து சென்றோம்; ஒரு சிற்றூர் கண்ணில் பட்டது; எங்களைப் பார்த்த அந்தப் பகுதி மக்கள் காட்டிலாகா அதிகாரிகள் என்று நினைத்துக் கொண்டார்கள்.

கொட்டையூர் என்ற ஊரில் ஒரு நடுகல், மண் மூடிக்கிடந்தது. அதைத் தோண்டலாம் என்று அருகில் சென்ற போது—பச்சைப்பாம்புகள் அந்தக் கல் வெட்டின் மேல் படுத்துக் கொண்டிருந்தன.





முதலில் அதிர்ச்சியடைந்தோம்; பிறகு முயற்சி செய்து, அவற்றை விரட்டியடித்தோம்; பின்னர் இறுதியில் வெற்றி எங்களுக்கே.

அத்திப்பட்டு என்று ஓர் ஊர்; அங்கே நுழைந்தோம். தாகம் நாவை வறளச் செய்தது. அங்குள்ள மக்களிடம் தண்ணீர் கேட்டோம். யாரோ புதியவர்கள் வந்திருக்கிறார்கள் என்று நினைத்தார்களோ என்னவோ—எங்களுக்குத் தண்ணீர் தர மறுத்துவிட்டார்கள். சிறிது தொலைவு நடந்தோம். ஒரு சிற்றோடை காட்சி தந்தது. ஆனால், தண்ணீர் கையில் அள்ளிக் குடிக்க முடியாதபடி, குறைவாக இருந்தது. கையில் அள்ளினால், மணலும் சேர்ந்தே வரும் போலத் தோன்றியது. வேறு வழியின்றி 'விலங்கினத்திலிருந்து வந்தவன்தானே மனிதன்' என்ற எண்ணத்துடன் தரையிலே படுத்துக் கொண்டு விலங்குகளைப்போல, நாவினால் தண்ணீரைப் பருகினோம்.

தாழையூத்து என்ற ஊரில்—ஒரு நடுகல் மூடிக் கிடப்பதைப் பார்த்தோம். அதைத் தோண்டிப் பார்க்க முயன்றோம். எங்களது முயற்சிக்கு அந்தக்கல் சற்றும் இடம்கொடுக்க வில்லை. அந்த ஊர்ப் பொதுமக்களின் தயவை நாடினோம்; ஒருவர் முன்வந்தார்; தோண்டுவதற்கு ஒப்புக் கொண்டார். துண்டை எடுத்து உதறித் தலைப்பாகையைக் கட்டினார். வேட்டியைக் வரிந்து கட்டிக் கொண்டார். மறுவினாடி எங்களை அதிர்ச்சிக்கு ஆளாக்கிவிட்டார்.

''நான் தோண்ட மாட்டேனுங்க! தோண்டினா நான் செத்துப் போயிடுவேன்'' என்று சொல்லியபடி அந்த இடத்தை விட்டு வேகமாக ஓடிவிட்டார். அவர் சென்ற பிறகு நாங்கள் எங்கள் முயற்சியைத் தொடர்ந்தோம்.

பரமானந்தல் என்ற ஊரில் ஒருவரைச் சந்தித்தோம்.

''இங்கே கல்வெட்டு ஏதாவது உண்டா?'' என்று கேட்டோம்.

''இருக்கிறது'' என்றார்.

''எங்களுக்கு அந்தக் கல்வெட்டைக் காண்பிப்பீர்களா?''—என்றோம்.

''வாருங்கள் காண்பிக்கிறேன்'' என்று சொல்லியபடி எங்களை அழைத்துச் சென்றார். சில அடி தூரம் அவருடன் நடந்து சென்றோம்.

''இதுதாங்க இங்கே இருக்கிற கல்வெட்டு'' என்று ஒரு கல்லைக் காண்பித்தார். எங்களுக்குச் சிரிப்பும் வந்தது. கோபமும் வந்தது.

ஏன் தெரியுமா? அவர் காண்பித்த கல்—மாமன்னர்களால் வீரர்களின் நினைவாக நடப்பட்ட நடுகல் அல்ல—நமது சாலைகளில் நட்டு வைக்கப்பட்டிருக்கும் 'மைல் கல்'தான்!

ஆண்டிப்பட்டி என்ற ஊர்; அங்கே ஒரு நடுகல் புதைந்திருந்ததைக் கண்டோம்; அதைத் தோண்டிப் பார்ப்பதற்கு அந்த ஊர்ப் பொது மக்கள் சிலரின் உதவியை நாடினோம்; ஓரிருவர் எங்களுக்கு ஒத்துழைப்புத்தர முன் வந்தார்கள்; ஆனால், அவர்கள் ஒரு நிபந்தனை விதித்தார்கள்.

''எங்களுக்குப் பாதிப் பங்கு தந்தால்தான் நாங்கள் தோண்டுவதற்கு உதவி செய்வோம்'' என்று சொல்லியபடி தோண்டும் முயற்சியில் ஈடுபட்டார்கள்; நடுகல்லைத் தோண்டி எடுத்த பின்புதான் அவர்களுக்குப் புரிந்தது, புதையல் எதுவும் கிடையாது என்ற செய்தி! பாவம்; ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றார்கள்.

இப்படி எத்தனையோ விதமான உணர்வுகள் உள்ள மக்களின் மத்தியில் சென்று, அரும்பாடுபட்டுக் கல்வெட்டுக்களை ஆராய்ந்தோம்.

எங்களது ஆராய்ச்சி வீண் போகவில்லை. கொட்டையூர் என்ற ஊரில் கிடைத்த நடுகல்லில் ''சோமாசிகோ திருமானிற்கு 21-வது யாண்டு'' என்று ஒரு செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தச் சோமாசிகோ திருமான் இதுவரை வரலாற்றில் குறிப்பிடப்படவில்லை. இவன் யார் என்பது இனிமேல்தான் வரலாற்றாசிரியர்களாலும்—ஆராய்ச்சியாளர்களாலும் கண்டுபிடிக்கப்பட வேண்டும். இந்தக் கல்வெட்டு கி.பி. 5-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி அல்லது கி.பி. 6-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியாக இருக்கலாம் என்று தெரிகிறது.

இதுவரை மூன்று என்ற எண்ணுக்குரிய வரிவடிவம் இதுவரை தவறாகவே கருதப்பட்டு வந்திருக்கிறது. மூன்று என்ற எண் எழுத்தை இதுவரை ஐந்து என்றே எண்ணிக் கொண்டிருந்தோம். அது தவறு என்பது இக்கல்வெட்டின் மூலமாகத் தெளிவாகிவிட்டது.

இதுவரை 'னி என்ற எழுத்து கல்வெட்டில் காணப்படவில்லை. அண்மையில் கண்டுபிடித்த கல்வெட்டில் 'னி' காணப்படுகிறது.

இடக்கல் என்னும் ஊரில் ஒரு புதுமைச் செய்தி; பரமேச்சுர பர்மரின் கல்வெட்டு முதன் முறையாகக் கிடைத்திருக்கிறது என்பதுதான் அந்த புதுமைச் செய்தி.

தண்டராம்பட்டுக் கோயிலில் உள்ள நடுகல் ஒன்று நரசிம்மவர்மனின் ஆட்சியின் 7-ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது—அதிலே முத்தரையர் என்னும் பரம்பரையைப் பற்றிய செய்தி கிடைத்திருக்கிறது.

எங்கள் ஆராய்ச்சிப்பணியின்போது எவ்வளவோ தொல்லைகள் ஏற்பட்டபோதும் கூட—இந்தப் புதிய செய்திகள் அந்தத் தொல்லைகளை எல்லாம் மறக்கச் செய்து விட்டது. அது மட்டுமல்ல; நாங்கள் இனி அடுத்தடுத்துச் சென்று எங்கள் ஆய்வுப் பணியை நடத்துவதற்கு எங்களுக்கு மன வலிவினை இந்தப் புதிய ஆராய்ச்சிச் செய்திகள் உருவாக்கியிருக்கின்றன என்பதைப் பெருமிதத்துடன் கூறிக்கொள்கிறோம்''

இவ்வாறு பெருமையுடன் கூறிக்கொள்ளும் அகழ்வாராய்ச்சித் துறை மாணவர்கள் தங்கள் பணியில் மேன்மேலும் வெற்றி பெற வேண்டும்—வெற்றி பெறுவார்கள் என்று நம்புகிறோம்.

## கிருமிகள் திருட்டு !

ஆஸ்திரேலியாவில் பிரிஸ்பேன் நகரிலுள்ள ஒரு மருத்துவ மனையிலிருந்து, பயங்கர நோய்க் கிருமிகள் அண்மையில் திருடிச் செல்லப்பட்டன. இக் கிருமிகள் ஆராய்ச்சிக்காக வைக்கப்பட்டிருந்தன. இக்கிருமிகளை அஜாக்கிரதையாகக் கையாளப்பட்டால் பயங்கர நோய்கள் பரவிவிடலாம் என்று காவல்துறையினர் வானொலி மூலமும், தொலைபேசி மூலமும் அனைவருக்கும் எச்சரிக்கை விடுத்துள்ளனர். நிகழ்ச்சிகளைப் பாதியில் நிறுத்தி இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது.

'' யார் திருடிச் சென்றிருந்தாலும் அதன் மூலம் அவருடைய உயிருக்கு ஆபத்து ஏற்படும். திருடிச் சென்றவர் அக்குப்பியை மிக ஜாக்கிரதையாகக் கையாள வேண்டும். அதை உடனே கொண்டுவந்து ஒப்படைக்க வேண்டும். எங்காவது அதைத் தூக்கி எறிந்தால் உடனே காவல்துறைக்குத் தெரிவிக்க வேண்டும் '' என்று வானொலி—தொலைக்காட்சி மூலம் எச்சரிக்கப் பட்டுள்ளது. இதுபற்றி நூற்றுக் கணக்கானவர்களை விசாரித்துள்ளனர்.

# "வருடக்கணக்கில் மருந்துகள் சாப்பிடுவதால் தீமைகள் ஏற்படலாம் என்பது வைத்திய மேதைகளின் கருத்து"

பிரபல பழனி

வைத்தியதிலகம்



வைத்தியராஜ்

DR. S. காளிமுத்து
R. M. P. (IND.) V. V. C.,
A. M. I. H.

வாழ்க்கையில் சுகபோகங்களை இழந்த வாலிப வயோதிக அன்பர்களுக்கு பிரபல-பழனி வைத்திய திலகம்-வைத்தியராஜ் S. காளிமுத்து R.M.P. (IND). V.V.C., A.M.I.H. அவர்களின் ஆலோசனையும்-கருத்தும்.

ஆடவர்கள், படித்த பட்டதாரியும், பாமரரும், தங்கள் வாழ்க்கையில் முன் நடந்த தீய வழக்கங்களால் தங்கள் உடல் பலகீன மடைந்து ரத்தக் குறைவு, சோர்வு, தலைவலி -உஷ்ணம்-சோம்பல், கைகால் அசதி, உடல்மெலிவு, தூக்கக் குறைவு, ஆயாசம், களைப்பு, பீதி, வெட்கம், பயம், வெறுப்பு, தளர்ச்சி, வாழ்க்கையில் வெறுப்பு உண்டாகிக் குடும்ப வாழ்க்கையில் மனவேதனையும் அதிருப்தியும், சஞ்சலமும், நிம்மதியில்லாமலும் கஷ்டப்படுகிறுர்கள். இப்படிப்பட்டவர்கள் வருடக் கணக்கில் மருந்துகள் சாப்பிட்டுப் பலனில்லாமல் பின் நம்மிடம் சிகிச்சை பெற்று விரைவில் குணமடைந்தோர்கள் ஏராளம்.... 'வீட்டு வாடகை தருவதுபோல் மாதாமாதம் பணம் செலுத்தி வருடக்கணக்கில் மருந்துகள் சாப்பிட்டேன்; ஒன்றும் பலனில்லை' என்றும் ஏராளமான கடிதங்கள் நமக்கு தினசரி வந்துகுவிகின்றன! பழனி மருந்தைப் பற்றித் தெரியாதவர் பாரில் உண்டோ? மருந்தை உபயோகிக்கும் போதே பலனைப்பெறும் அன்பர்கள் மட்டும் எம்மிடம் சிகிச்சை பெறலாம்—வருடக் கணக்கில் சிகிச்சை பெற நினைக்கும் அன்பர்களுக்குக் கண்டிப்பாக நாம் சிகிச்சை தர இயலாது.

கேம்புகளில் நேரில் மருந்துகள் பெற முடியாதவர்கள் வி.பி. பார்சலுக்கு ஆர்டர் எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். போஸ்டேஜ் இலவசம்.

—: 1 மாத சிகிச்சை மருந்துகள் :—

| மிக உயர்தரம் | தங்க பஸ்பம் | உயர்தரம் | முதல் தரம் | இரண்டாந் தரம் |
|---|---|---|---|---|
| ரூ. 90-00 | ரூ. 120-00 | ரூ. 42-00 | ரூ. 33-00 | ரூ. 24-00 |

கிளை : 41, நைனியப்பன் தெரு, மண்ணடி, சென்னை-1. போன்: 21448.
சென்னை கிளை ஆபீசில் 1 முதல் 7 தேதி மீண்டும் 15 முதல் 21 தேதி நேரில் விஜயம்

GOVT. REGD. T. M. No. 204841 REGD 15443.

வைத்தியத் திலகம், வைத்திய ராஜ் டாக்டர் S. காளிமுத்து R.M.P., (IND.), V.V.C., A.M.I.H.

## பழநி சித்தர் வைத்தியசாலை (T) பழநி S.I.

போன் : 316 தந்தி : சித்தர்



# திராட்சையும் திருமணமும்



"திராட்சையோ! திராட்சை'' என்று கூவிய குரல் கேட்பதற்கு இனிமையாக இருந்தது. அந்த இனிய குரலைக் கேட்டவுடனேயே திராட்சை வாங்கிச் சாப்பிடவேண்டும் என்ற ஆசை அழகிரியின் உள்ளத்தில் எழுந்தது.

கிருஷ்ணகிரியில் நின்றுகொண்டிருந்த விரைவுப் பேருந்து வண்டியின் உள்ளே அமர்ந்திருந்த அழகிரி சன்னல் வழியாக வெளியே எட்டிப் பார்த்தான் அவன் எட்டிப் பார்ப்பதைக் கண்டதும் ''திராட்சையோ! திராட்சை'' என்று மீண்டும் கூவிக் கொண்டே கூடையுடன் அவனருகில் வந்தாள் அந்தப் பெண்.

அந்தப் பெண்ணைக் கண்டதும் ஒரு கணம் திகைத்து விட்டான் அழகிரி. ஏனெனில் அந்தப் பெண் அழகே உருவாக அமைந்திருந்தாள். ஆனால், அவள் உடுத்தியிருந்த ஆடைகள் அவளது ஏழ்மைக் கோலத்தை எடுத்துக் காட்டத் தவறவில்லை. அந்தப் பெண்ணை எங்கேயோ பார்த்த நினைவு வரவே அழகிரி சற்று யோசித்தான்.

''என்ன அண்ணே யோசிக்கிறே! என்னை எங்கேயோ பார்த்த மாதிரி இருக்கா?'' என்று அந்தப் பெண் கேட்டாள்.

''ஆமாம் தங்கச்சி! அதைப்பற்றித்தான் யோசிக்கிறேன்'' என்றான் அழகிரி.

என் அத்தான் அன்பரசு அவர்களுடன் எங்கள் வீட்டிற்கு நீங்கள் முன்பொரு முறை வந்தீர்களே! என்பெயர் தேன்மொழி நினைவில்லையா?''

''நினைவு வந்துவிட்டது தங்கச்சி!'' என்று சொல்லிவிட்டுப் பேருந்தை விட்டுக்கீழே இறங்கி வந்து, ''ஆமாம் நீ புகுமுக வகுப்பு வரை படித்திருந்தாயே! ஏன்இப்படித் திராட்சை வியாபாரம் செய்யறே? உன் அப்பா என்ன ஆனார்?'' என்று கேட்டான்.

''அப்பா இறந்து ஒரு வருடம் ஆகிவிட்டது. ஏதோ, உங்க யோசனையைக் கேட்டு, காடாகக் கிடந்த 5 ஏக்கர் நிலத்தையும் திருத்திக் கிணறு வெட்டித், திராட்சை பயிரிட்டார். காய்ப்புக்கு வருவதற்குள் கண்ணை மூடி விட்டார். அந்தத் திராட்சைத் தோட்டத்திலே அப்பப்போ கிடைக்கிற பழத்தை இப்படிக் கொண்டுவந்து விற்றுத்தான் நான் பிழைப்பு நடத்துகிறேன்''

முத்து



''அன்பரசு உன்னைத் திருமணம் செய்து கொள்ளப் போவதாகச் சொன்னனே''

''ஆம்! அது நிறைவேருமல் போய்விட்டது''

''ஏன்?''.

''அது பெரிய கதை.......'' என்று பெருமூச்சு விட்டாள் தேன்மொழி.

பேருந்து புறப்படத் தயாராகியது.

''அப்ப சரி, தங்கச்சி! நான் மிகவும் அவசரமாகப் பெங்களூர் செல்கிறேன். நாளை இதே பேருந்தில் திரும்பி வருகிறேன். வந்து அன்பரசைச் சந்திக்கிறேன். ஒரே வருடத்தில் 5 ஏக்கர் திராட்சையிலிருந்து ஒரு இலட்ச ரூபாய் சம்பாதித்துவிடலாம். எல்லாம் நாளை விவரமாகப் பேசிக் கொள்ளலாம்'' என்ருன்.

பேருந்து புறப்பட்டு விட்டது. அழகிரியின் பேச்சைக் கேட்டபடி, அவனது அருகில் அமர்ந்திருந்த ஒரு முதியவர்-அழகிரியிடம் பேசத் தொடங்கினர்.

''தம்பி! ஒரே ஆண்டில் 5 ஏக்கர் திராட்சை மூலம் ஒரு இலட்சம் சம்பாதிக்க முடியுமா?''

''எப்படி?''

''முடியும்!''

''நான் வேளாண்மைப் பட்டம் பெற்று வேளாண்மைத் துறையில் பணியாற்றுகிறேன். எனக்கு வேளாண்மைப்பற்றித் தெரியும். முறைப்படி திராட்சை சாகுபடி செய்தால் ஐந்தாவது ஆண்டில் ஏக்கருக்கு 25,000 முதல் 30,000 கிலோ வரை மகசூல் பெற முடியும். அதிலிருந்து ரூபாய் 25,000 வரை நிகர இலாபம் பெறமுடியும். இந்த அடிப்படையிலேயே, ஒரே ஆண்டில் 5 ஏக்கர் திராட்சையிலிருந்து ஒரு இலட்சம் ரூபாய் சம்பாதிக்கலாம் என்றேன்''.

''சரிதம்பி! எனக்குச் சொந்த ஊரு தருமபுரி. திராட்சைப் பயிரிட்டுப் பார்க்கணும் என்று எனக்கும் ரொம்ப நாளா ஆசை. அதைப் பற்றிக் கொஞ்சம் விளக்கமாகச் சொல்லு தம்பி!''.

''பொதுவாகத் தமிழ்நாட்டில் அனுப்-இ-ஷாகி, பச்சைத் திராட்சை, பன்னீர் திராட்சை, விதையில்லா திராட்சை, செலக்ஷன் நெ. 94, காலி சாகிபி ரகங்களைப் பயிரிடலாம்.''

''திராட்சை சாகுபடி செய்யும் நிலத்தில் எக்காலத்திலும் 6 அடிக்குக் கீழேயே நீர் மட்டம் இருக்க வேண்டும். மணல் கலந்த செம்மண் நிலம் திராட்சைக்கு ஏற்றது. களர் மண் தவிர, சரளை போன்ற மண் வகையிலும் திராட்சைப் பயிரிடலாம். மண், வடிகால் வசதியுள்ளதாக இருக்க வேண்டியது அவசியம். தண்ணீர் வசதி திராட்சைக்கு மிகவும் தேவை. உப்புத் தண்ணீரைப் பாசனத்திற்குப் பயன்படுத்தக் கூடாது.

திராட்சை நடுவதற்கு நிலத்தில் வரிசை வரிசையாகக் குழிகளைத் தோண்ட வேண்டும். அனுப்-இ-ஷாகி, விதையில்லாத் திராட்சை, பச்சைத் திராட்சை காலி சாகிபி, செலக்ஷன் நெ. 94 முதலிய ரகங்களுக்கு வரிசைக்கு வரிசை 20 அடி இடைவெளியும், செடிக்குச் செடி 10 அடி இடைவெளியும் விட வேண்டும். பன்னீர்த் திராட்சைக்கு வரிசை சைக்கு வரிசை 10 அடி இடைவெளியும், செடிக்குச் செடி 5 அடி இடைவெளியும் விட்டால் போதுமானது.

''குழிகள் 3 அடி நீளம், 3 அடி அகலம், 3 அடி ஆழம் உள்ளதாக இருக்க வேண்டும். குழிகளை 2 வார காலம் உலர விட வேண்டும். குழிகளில் காய்ந்த சருகுகளைப் போட்டு நெருப்பு வைத்துக் கொளுத்தி நுண் கிருமிகளைக் கொல்லுதல் சிறந்தது. குழிகளில் பி.எச்.சி. 10 சத மருந்து தூவி விடுதல் வேண்டும். ஒவ்வொரு குழியிலும் 100 கிலோ மக்கிய தொழு உரத்தையும், 100 கிலோ பசுந்தாள் உரத்தையும் மண்ணுடன் கலந்து நிரப்ப வேண்டும். பசுந்தாளுரம் நன்கு மக்கிய பிறகே குழிகளில் வேர்விட்ட திராட்சைப் பதியங்களை நட வேண்டும். வேர்விட்ட பதியங்களை ஜூன் மாதம் முதல் பிப்ரவரி மாதம் வரை நடலாம்.''



''திராட்சைப் பதியங்கள் எங்குக் கிடைக்கும் தம்பி?''

''வேளாண்மைத் துறை அலுவலாளர்களுக்கு எழுதி முன் பணம் கட்டினல், தரமான வேர்விட்ட திராட்சைப் பதியங்கள் கிடைக்கும்''.

''திராட்சைப் பதியங்களை நட்ட பிறகு என்ன செய்ய வேண்டும்?''

''பதியங்களை நட்டபின் தண்ணீர் கட்ட வேண்டும். பின்பு 3 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் பாய்ச்சி வர வேண்டும். செடிகளுக்கு ஆதரவாக 6½ அடி உயரமுள்ள மூங்கில் குச்சிகளை நட்டு இணைத்துக் கட்டவேண்டும். பதியங்களை நட்ட 2 மாதங்களுக்குப் பிறகு ஒவ்வொரு செடிக்கும் 25 கிலோ மக்கிய தொழு எருவும், 50 முதல் 100 கிராம் வரை அமோனியம் சல்பேட் அல்லது 250 கிராம் கடலைப் பிண்ணாக்கும் இட்டால் செடிகள் நன்கு வளரும். செடியில் மேல் நோக்கி நேராக வளரும் துளிரை மட்டும் விட்டுவிட்டு அவ்வப் போது பக்கத்தில் தோன்றும் துளிர்களை அகற்றி வர வேண்டும்.''

''திராட்சைக்குப் பந்தல் போட வேண்டுமா?''

''தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் பந்தல் போட்டுத் திராட்சை வளர்ப்பதே இலாப கரமாக இருக்கிறது.''

''பந்தலுக்குக் கருங்கல், கான்கிரீட், கிளுவை மரத்துண்டுகள் ஆகியவைகளைக் கொண்டு கால் அமைக்கலாம். அவைகளை நட்டு அதன்மேல் கழிகளைக் கொண்டு அல்லது இரும்புக் கம்பிகளைக் கொண்டு பந்தல் அமைப்பது சிறந்தது. தரை மட்டத்திலிருந்து 6 அடி உயரத்தில் பந்தல் அமைக்க வேண்டும். திராட்சைச் செடி நான்கு மாத காலத்தில் பந்தல் உயரத்திற்கு வளர்ந்து விடும். அதன்பின் ½ அடி உயரத்திற்குப் பந்தல் மேல் வளரவிட்டு, வளரும் நுனியைக் கிள்ளி விடவும். இதனால் 2 அல்லது 4 பக்கக் கிளைகள் தோன்றும். அவைகளை நாலாப்பக்கங்களிலும் படர விட வேண்டும். இக்கிளைகள் பந்தலின் ஓரத்தை அடைந்தவுடன், நுனிகளைக் கிள்ளிவிட வேண்டும். இதனால், மேலும் பல பக்கக் கிளைகள் தோன்றும். அவைகளை 1½ அடி இடைவெளியில் மாற்றி மாற்றி இரு பக்கங்களிலும் படர விட வேண்டும்.''

''திராட்சைக் கொடிகளை வெட்டி விடுகிறார்களே அது பற்றியும், உரமிடுவதைப்பற்றியும் தெரிந்து கொள்ளலாம் என்று நினைத்தேன். பெங்களூர் வந்தாச்சு! நான் அவசரமாகப் போகிறேன். இல்லேன்னா அதையும் தெரிந்து கொண்டுபோய் விடுவேன்''.



''மேலும் விவரங்களுக்குக் கிருஷ்ணகிரியில் உள்ள மாவட்ட வேளாண்மைத் துறை அலுவலர் அவர்களை நாடிக் கேட்டுக் கொள்ளுங்களேன்''.

''சரி வருகிறேன் தம்பி. வணக்கம்!'' என்று கூறிவிட்டுப் போய்விட்டார். அவருடைய போக்கு அழகிரிக்கு வியப்பை ஊட்டியது.

பெங்களூரில் நடைபெற்ற அலுவலகச் சம்பந்தமான கூட்டத்தில் கலந்து கொண்டு மறு நாள் குறிப்பிட்டப்படி கிருஷ்ணகிரிக்குத் திரும்பினான் அழகிரி. பேருந்தை விட்டு இறங்கித் தேன்மொழியையும், அன்பரசையும் அழகிரி தேடினான். அவர்களைக் காணவில்லை. என்ன செய்வது என்று யோசித்துக் கொண்டிருக்கையில் முதல் நாள் அழகிரியுடன் பேருந்தில் பயணம் செய்த முதியவர் அழகிரியின் அருகில் வந்தார்.

'' தம்பீ வந்துவிட்டாயா ? உன்னைத்தான் எதிர்பார்த்தேன் என்றார்.''

'' ஐயா ! நான் உங்களைத் தேடி வரவில்லையே !''—அழகிரி சொன்னான்.

''அன்பரசையும் தேன்மொழியையும் தான் நீ தேடி வந்திருக்கிறாய் என்று எனக்குத் தெரியும் தம்பீ!''

'' ஐயா அப்படி என்றால் .. நீங்கள்?''

'' அன்பரசின் தந்தை, சாதித் திமிரினாலும், செல்வச் செருக்கினாலும் அன்பரசையும் தேன்மொழியையும் திருமணம் செய்ய முடியாதபடி தடுத்து வை த் தி ரு ப் ப து நான் தானப்பா!''

அழகிரி அதிர்ச்சி அடைந்தான் ! அவனது அதிர்ச்சியைக் கண்ணுற்ற அன்பரசின் தந்தை மேலும் பேசத் தொடங்கினார்.

'' தம்பீ ! அன்பரசின் மேல் உனக்குள்ள அக்கரையைப் பார்த்த பிறகு நான் வெட்கமடைகிறேன். அன்பரசையும், தேன்மொழியையும் இல்வாழ்க்கையில் ஈடுபட நான் மனப்பூர்வமாகச் சம்மதிக்கிறேன். வா ! அவர்கள் இருக்குமிடத்திற்கு உன்னை அழைத்துச் செல்கிறேன்!

* * *

**தேன்மொழியின்** குடிசை ; அங்கே ஒரு சிறு கயிற்றுக் கட்டில் ; அதிலே ஒரு மெலிந்த உருவம்-அடையாளமே தெரிந்து கொள்ள முடியவில்லை அழகிரியினால் ! ஆனால், அந்த உருவம் அடையாளம் கண்டு கொண்டது! வெறுத்து ஒதுக்கிய தந்தையும்




Shilpi BOB 10/71

விருப்பத்திற்குரிய நண்பனும் வந்திருப்பதை உணர்ந்தது அந்த மெலிந்த உருவம். அந்த உருவம்தான் அன்பரசு.

"வா அழகிரி! வாங்க அப்பா!" என்று இருவரையும் அன்பரசு வரவேற்றான்; எழுந்திருக்க முயன்றான்; முடியவில்லை; அதற்குள் அன்பரசின் தந்தை குறுக்கிட்டார்.

"அன்பரசு! டைபாயிடு காய்ச்சலால் பாதிக்கப்பட்ட நீ உடம்பை அலட்டிக்கொள்ள வேண்டாமப்பா! பேசாமல் படுத்திரு" என்று சொல்லிவிட்டு, "உன்னை நோய்க்கு ஆளாக்கிய என்னை மன்னித்துவிடு" என்று மனம் கலங்கிச் சொன்னார்.

அப்போது அங்கு வந்த தேன்மொழி அந்தக் காட்சியைக் கண்டு அதிசயப்பட்டாள்; நடவாதது நடந்து விட்டது என்ற மகிழ்ச்சி அவளது இதயத்தில் அலைமோதியது.

"அன்பரசு! தேன்மொழி! கவலைப்படாதீர்கள்! தை பிறந்ததும் உங்களுக்குத் திருமணம்"—என்றார் அன்பரசின் தந்தை.

உடனே, அன்பரசு, "அப்பா உங்கள் வார்த்தையை ஏற்றுக் கொள்ள முடியாது" என்றான்.

"அன்பரசு! முன்பு உன் திருமணத்திற்கு நான் தடை விதித்தேன்; நீ திருமணத்திற்குத் துடித்தாய்; இப்போது நான் சம்மதம் தெரிவிக்கிறேன்; நீ மறுப்புக் கூறுகிறாயே!" கலக்கத்துடன் கேட்டார்.



"இல்லையப்பா! நான் நோயிலிருந்து எழுந்து வந்ததும் திராட்சைத் தோட்டத்தில் வேளாண்மை செய்து ஒரு இலட்சம் ரூபாயைத் தேன்மொழிக்குத் தேடிக் கொடுத்துவிட்டுத்தான் திருமணம் செய்வேன்! இது என் இலட்சியமப்பா!"—பெருமிதத்துடன் சொன்னான் அன்பரசு.

"உன் விருப்பப் படியே வைத்துக்கொள்! நான் முதலில் ஊருக்குப் போய் உன் அம்மாவிடம் இந்த இனிக்கும் செய்தியைத் தெரிவிக்க வேண்டும். அதற்குள் தேன்மொழியின் திராட்சைத் தோட்டத்தையும் பார்த்துவிட்டுப் போகவேண்டும். அழகிரி நேற்றுச் சொன்னபடி நானும் திராட்சை போடப் போகிறேன்" என்றார்.

தேன்மொழி, அழகிரி, அன்பரசின் தந்தை மூவரும் திராட்சைத் தோட்டத்திற்குப் போனார்கள். தேன்மொழி திராட்சைத் தோட்டத்தில் சிட்டாகப் பறந்து கொண்டிருந்தாள்.

"உடனடியாகத் திராட்சைக்குக் காவாத்து செய்து உரமிடவேண்டும்" என்றான் அழகிரி.

"பணமில்லையே அண்ணா!" என்றாள் தேன்மொழி.

"இனிமேலும் பஞ்சப்பாட்டு பாடாதே! நிலவள வங்கியின் மூலமாகத் தமிழ்நாடு அரசு கடன் தருகிறது. இன்றைக்கே அங்குச் சென்று உன் பெயரில் கடன் மனு கொடுப்போம். கடன் கிடைக்க ஒரு மாதம் ஆகலாம். அதற்குள் உன் மாமனாரிடம் இருந்து ஆயிரம் ரூபாய் கடன் வாங்கித் தருகிறேன். அதை வைத்துக் கொண்டு, காவாத்து செய்து உரமிட்டு, மருந்து தெளித்துவிடு" என்றான் அழகிரி.



தேன்மொழி மறுக்காமல் "சரி" என்றாள்.

"எப்படிக் காவாத்து செய்யறது என்பதை யெல்லாம் தெரிவித்துவிடு அழகிரி" என்றார் அன்பரசின் தந்தை.

"அனுபி-இ-ஷாகிக்கு 4 கணுக்களும், விதையில்லா திராட்சை, பன்னீர்த் திராட்சை ஆகியவைகளுக்கு 7 கணுக்களும், பச்சை திராட்சை, செலக்ஷன் நெ. 94 ஆகியவைகளுக்கு 5 கணுக்களும் விட்டுக் காவாத்து செய்யணும்."

"உரம் எவ்வளவு வைக்கணும் அண்ணே?"

"காவாத்து செய்த பின்பு செடிகளைச் சுற்றிலும் ஒரு அடி தள்ளி மேற்பரப்பு மண்ணை 6 முதல் 9 அங்குல ஆழத்திற்கு வெட்டி எடுத்துவிட்டு ஒவ்வொரு செடிக்கும் 5 கிலோ அமோனியம் சல்பேட், 200 கிலோ மக்கிய தொழுஎரு, 200 கிலோ பசுந்தாள் எரு, 5 கிலோ சூப்பர் பாஸ்பேட், 4 கிலோ மூரியேட் பொட்டாஷ் ஆகியவைகளை இட்டு மண்ணால் மூடிவிட வேண்டும். பொட்டாஷ் உரத்தில் ஒரு பாதியைக் காவாத்து செய்த உடனேயும், மீதியை 60 நாட்கள் கழித்தும் வைக்கவேண்டும். உரமிட்டவுடன் தண்ணீர்ப் பாய்ச்ச வேண்டும். பின்பு வாரம் ஒரு முறை தண்ணீர்ப் பாய்ச்சவும். செடிகள் பூக்கும் சமயத்தில் தண்ணீர்ப் பாய்ச்சக் கூடாது. அறுவடைக்குப் பதினைந்து நாட்கள் முன்னதாகத் தண்ணீர்ப் பாய்ச்சுவதை நிறுத்திவிட வேண்டும்.



''காவாத்து செய்த 2 அல்லது 3 நாட்களுக்குப் பிறகு ½ சதம் போர்டோ கலவையைத் தெளிக்க வேண்டும். இது தெளிப்பதற்கும் அவ்வப்போது மருந்து தெளிப்பதற்கும் வேளாண்மைத் துறையினரின் உதவியை நாடுதல் நல்லது. காவாத்து செய்த 30 நாட்களில் பூக்குலைகள் மலரும். அடுத்த 90 நாட்களில் பழங்கள் முதிர்ச்சி அடைந்து அறுவடைக்குத் தயாராகும். ஆக மொத்தம் காவாத்து செய்த 120 நாட்களில் பழங்களை அறுவடை செய்யலாம்.''

'' அடுத்த ஆண்டு மே மாதத்தில் மீண்டும் காவாத்து செய்து, உரமிட்டால், மீண்டும் பூக்கள் தோன்றிப் பழங்கள் கிடைக்கும். தமிழ்நாட்டு இயற்கைச் சூழ்நிலை, ஆண்டில் குறைந்தது 2 முறை திராட்சை மகசூல் எடுக்க ஏற்றதாக இருக்கிறது. வட மாநிலங்களில் ஒரே ஒரு அறுவடை மட்டுமே செய்ய முடியும். எனவே, ஒரே ஆண்டில் 5 ஏக்கர் திராட்சை மூலம் ஒரு இலட்சம் ரூபாய் சம்பாதித்து விடலாம் தேன்மொழி '' என்றான் அழகிரி.

'' சரி அண்ணே ! அப்படியே செய்கிறேன் '' என்றாள் தேன்மொழி.

அன்பரசின் அப்பா, அன்று மாலை தருமபுரிக்குத் திரும்பினார். அன்பரசையும், தேன்மொழியையும் நிலவள வங்கிக்கும், மாவட்ட வேளாண்மைத் துறை அலுவலரிடமும் அழைத்துச் சென்று கடன் பெறவும், திராட்சைக்கு மருந்து தெளிக்கவும் வேண்டிய ஏற்பாடுகளை அழகிரி செய்தான். மறுநாள் அழகிரி ஊருக்குத் திரும்பினான். தேன்மொழியும், அன்பரசும் கண்ணீர் மல்க வழி அனுப்பினார்கள்.

ஐந்து மாதங்களுக்குப் பிறகு ஒரே அறுவடையில் ரூபாய் 1,12,000 கிடைத்ததாகத் தேன்மொழியும், அன்பரசும் கடிதம் எழுதியிருந்தார்கள். அழகிரி மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தான். அடுத்த அறுவடையையும் முடித்துக் கொண்டு தை மாதத்தில்தான் திருமணம் என்று அன்பரசு கோடிட்டு எழுதியிருந்தான்.

அடுத்த தை மாதத்தில் அலங்கரிக்கப்பட்ட பந்தலில் அன்பரசு தேன்மொழி திருமணம் நடைபெற்றது. எல்லா நிகழ்ச்சிகளும் முடிந்த பின்பு ஊருக்குப் புறப்பட்டுக்கொண்டிருந்தான் அழகிரி.

'' அழகிரி ஓர் அனாதை ! அவன் ஓர் அனாதையை மணந்து கொண்டு 2 குழந்தைகளுடன் கஷ்டப்படுகிறான். ஆனால், இது போன்ற நல்ல காரியம் செய்வதில் முன்னால் நின்று செயலாற்றுவான் '' என்று தன் அப்பாவிடம் அன்பரசு சொன்னான்.

'' அழகிரியும் இனிமேல் என் பிள்ளை மாதிரிதான் ! என் சொத்தில் பாதி அவனுக்கு எழுதப் போகிறேன் ! '' என்றார் அவர்.

'' அதை முதலில் செய்யுங்களப்பா'' என்றான் அன்பரசு.

'' என் பணிக்குப் பணத்தைக் கொடுத்து களங்கப் படுத்தி விடாதீர்கள். நான் ஓர் அனாதை! அதனால்தான் எனக்கு அனாதைகளுக்கு உதவும் மனம் உள்ளது! நான் பணக்காரனாகி விட்டால் இந்த இரக்க உள்ளம் இருக்குமோ இருக்காதோ? என் மேல் உங்களுக்கு அன்பு இருக்குமானால் உடனே ஒரு திராட்சைத் தோட்டம் அமையுங்கள் ! என் நினைவு உங்களிடம் என்றும் நிலைத்து நிற்கும் ! '' என்று கூறி விட்டுப் புறப்பட்டு விட்டான் அழகிரி.




# மாணவர்களுக்கு வழிகாட்டும் மாபெரும் மன்றம்

“கடமை கண்ணாகும்; காலம் பொன்னாகும்” இந்தத் திருவாசகத்தைப் படித்துக் கொண்டே மாணவர் மன்றத்தினுள் நுழைகிறோம். புலவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் பலர் ஆங்காங்கே தத்தம் பணிகளில் ஈடுபட்டிருக்கின்றனர். போட்டிகள் தேர்வுகள், விழாக்கள் முதலியன நடத்தி மாணவர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் ஊட்டி வருவது இந்த மாணவர் மன்றம்.

சென்னை ஜார்ஜ் டவுனிலுள்ள இந்த மன்றம், 1932-ஆம் ஆண்டு தொடங்கப் பெற்று, இன்றளவும் சீரும் சிறப்புமாக நடந்து வருகிறது. அதற்குக் காரணம் இம்மன்றத்தைப் போற்றி வளர்த்த பேராசிரியர் மயிலை சிவமுத்து, வீரத் தமிழன்னை டாக்டர் தருமாம்பாள் ஆகியோரேயாவர்.

மறைந்த பேராசிரியர் மயிலை சிவமுத்து அவர்கள் தம் வாழ்நாள் முழுவதும் மன்றத்துக்காகவே உழைத்தார். பள்ளிப் பிள்ளைகளைக் கண்டால் அவருக்குக் கொள்ளை ஆசை. குழந்தைகளுக்குக் கொடுப்பதற்கென்றே அவல், கடலைகளை நிறைய வாங்கித் தயாராக வைத்திருப்பார். எல்லாருக்கும் ஒவ்வொரு பிடி கொடுத்து அவர்கள் உண்பதைக் கண்டு மகிழ்வார். குழந்தை உள்ளம் உள்ள பேராசிரியரின் மாணவர் தான் அமைச்சர் திரு என். வி. நடராசன் அவர்கள்; இவரும் சில காலம் மன்றத்துக்காகப் பணியாற்றியிருக்கிறார்.

நாற்பதாண்டுகளாக நற்பணியாற்றி வரும் இந்த மாணவர் மன்றத்தின் நோக்கங்கள் பலவாகும். முத்தமிழை வளர்த்தல்; குழந்தைகளிடம் கலையுணர்வைத் தூண்டடல்; மாணவர்கள் பல துறைகளிலும் சிறந்து விளங்க ஊக்குதல்; சிறந்த தமிழ் நூல்களை வெளியிடுதல்; முதியோர் கல்வி வளர்ச்சிக்குத் தொண்டாற்றுதல் முதலியனவாகும்.

முதலில் ஒரு சிறிய வீட்டில் துவக்கப்பட்ட இந்த மன்றம், பிறகு ஓரளவு வசதியான ஒரு வாடகை இடத்தில் அமைந்தது; இப்போது இந்த மன்றம் சொந்தக் கட்டடத்தில் இருக்கிறதென்றால் அதற்குக் காரணம், மாணவர்களும், ஆசிரியர்களும், பொது மக்களும் தந்த நன்கொடையேயாகும்.

இம்மன்றத்தின் சார்பில் ஆண்டு தோறும் மாணவர்க்குப் பயனுள்ள பல போட்டிகள் நடைபெறுகின்றன. கதை, கட்டுரை, கவிதை, ஓவியம், பேச்சு, கையெழுத்து முதலிய போட்டிகள் நடக்கின்றன. இவை தவிரக் குறள் ஒப்புவித்தல் போட்டி, பாப்பாப் போட்டியும் நடக்கின்றன. இந்தப் போட்டிகளில் தமிழகம் முழுவதும் உள்ள உயர்நிலைப் பள்ளிகள், கல்லூரிகளிலிருந்து சுமார் இரண்டு இலட்சம் மாணவ, மாணவிகள் கலந்து கொள்கின்றனர்.

மலேயாவில் வாழும் தமிழ் மக்களுக்காகத் ‘தமிழ்மணி’ பட்டத் தேர்வும் இம்மன்றம் நடத்தி வருகின்றது. இப்படி எல்லா வகையிலும் சிறந்து விளங்கி, மாணவர்களுக்காகவே நடத்தப்பட்டு வரும் இதுபோன்ற ஓர் அமைப்பு தமிழகத்தில் இதுவே பெரியதாகும்.



மயிலை சிவமுத்து

இவை மட்டுமா? இங்குப் பேரறிஞர் அண்ணா தமிழ்க் கல்லூரியும், மாணவர் மன்றத் தொடக்கப் பள்ளியும், டாக்டர் தருமாம்பாள் படிப்பகமும், மணியரசர் நூல் நிலையமும் உள்ளன. மன்றத்தின் சார்பில் ‘நித்திலக் குவியல்’ என்னும் திங்களிதழும், மாணவர் மன்ற வானொலிச் சிறுவர் மன்றமும் சிறப்பாக நடந்து வருகின்றன.

தமிழகத்துக்குச் சுற்றுலாவரும் மாணவர்கள், ஆசிரியர்கள் இம்மன்றத்திற்கு வந்து தங்கி மகிழ்வுடன் செல்வத்தைப் பார்க்க முடிகிறது. 1957-ல் வெள்ளி விழாக் கொண்டாடிய இந்த மன்றத்தின் கட்டடத்துக்குச் ‘சிவமுத்து நிலையம்’ என்ற பெயரை பேரறிஞர் அண்ணா அவர்கள் சூட்டி மகிழ்ந்தார்.

இம்மன்றத்துக்காக உழைத்த தமிழ்நெறிக் காவலர் மயிலை சிவமுத்து அவர்களின் திருஉருவச் சிலையை அண்மையில் மன்றத்தில் நிறுவவும், தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் அதனைத் திறந்து வைக்கவும் தக்க ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

மன்றத்தில் பல்லாண்டுகளாகத் தொடர்பு கொண்டு பம்பரம் போலச் சுழன்று நற்பணி புரிந்து வருகின்ற தலைவர் புலவர் கோ. வில்வபதி, செயலாளர்கள் புலவர் தணிகை உலகநாதன், மி. ச. நடேசன், மற்றும் ப. கி. பொன்னுசாமி, மா. ரா. வஞ்சிக் கோவன் ஆகியோரை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

மாணவர் மன்றம் மாணவர் உலகுக்கு ஓர் கலங்கரை விளக்காகத் திகழ்ந்து வருகிறதென்றால் அது உண்மை. வெறும் புகழ்ச்சி இல்லை.

# "சொந்த முயற்சியால் எதையும் சாதிப்பதே ஒரு நாட்டின் வலிமை. பிறநாடுகளிலிருந்து உதவி பெறுவதால் அல்ல"

— *திருமதி இந்திரா காந்தி*

இந்தப் பொன்னாளில் இவ்வார்த்தைகள் தொழில் துறைப் பெருக்கத்தையும் முன்னேற்றத்தையும் நோக்கி நம்மை மேலும் ஊக்குவிக்கட்டும்.

கொதிகலன் தொழில் நுட்பத்தை நாங்கள் புதிதாகக் கற்ற துவக்க நாட்களிலிருந்தே சுய சார்பு என்பது எங்களுக்கு அர்ப்பணிப்புக்கான விடா முயற்சியாக இருந்து வருகிறது. இங்கேயே கிடைக்கும் மூலப் பொருள்களுக்கான வழி வகைகளையும் தயாரிப்பில் புதிய உத்திகளையும் புதிய முறைகளைக் காணும் ஆய்வுகளையும் பெருக்குவதில் எங்கள் திறமையையும் அறிவையும் ஒவ்வொரு ஆண்டும் செலுத்தி வந்திருக்கிறோம். உலகின் எந்தப் பகுதியிலும் தயாரிக்கப்படக் கூடிய மிகப் பெரிய அளவு கொதிகலன்களுக்கு ஈடாகத் தயாரிக்கும் நம்பிக்கையைப் பெற்றிருக்கிறோம்.

இன்று நம் நாடு கொதிகலன்களை இறக்குமதி செய்யத் தேவையில்லை. BHEL தயாரிக்கும் கொதிகலன்கள் நாட்டின் பல பகுதிகளிலும், வெளி நாடுகளிலும் விரைவில் இயங்கிவரும். அவற்றின் மொத்த மதிப்பு ரூ. 230 கோடி. இதன் மூலம் ரூ. 160 கோடிக்கு மேல் அந்நியச் செலாவணி மீதப்படும். ஹைதராபாத்—ஹரித்துவாரிலுள்ள எங்கள் சகோதர நிறுவனங்களின் துணையோடு வளமான வருங்காலத்துக்கு தேவையான மின்சக்தியை உற்பத்தி செய்கிறோம்.

பல நாடுகளின் கடுமையான போட்டிகளுக்கு இடையே மலேசியாவில் ஒப்பந்தக் கட்டளை பெற்று கொதிகலன்களை நிறுவுவதில் ஈடுபட்டுள்ளோம். இந்த முயற்சி சுயசார்புக்கு ஓர் உருவாக்கம்.



வளம் பெருக்கும் மின்சக்தி உற்பத்திப்பணியில்...

**BHEL**

பாரத் ஹெவி எலெக்ட்ரிகல்ஸ் லிமிடெட்
(இந்திய அரசின் ஓர் நிறுவனம்)
யூனிட்: ஹை பிரஷர் பாய்லர் ப்ளான்ட்
திருச்சிராப்பள்ளி-14

பதிவு அலுவலகம்:
5 பார்லிமெண்ட் தெரு
புது டெல்லி-1.

ASP/M/116

மாடங்கள் பலவகைப்படும்.
' வீரர் கண்படுக்கும் மாடம்' ;
' திரைப்பொருள் கிடக்கும் மாடம்' ;

' மகளிர் மணிக்கலம் வைக்கும் மாடம் '— இவையல்லாத இடம் நகரில் இல்லை எனச் சீவக சிந்தாமணி ஆசிரியர் திருத்தக்க தேவர் எழுதியுள்ளார். ஒவ்வொன்றும் முகில் தோய்ந்த கன்று போன்று பலவாக நிறைந்திருந்ததை ''மாட ஈட்டகம்'' என்றும் குறித்துள்ளார்.

இம்மாட அமைப்பில் படகுகளும் கட்டப்பட்டன. அவை ''மாடப்புனை'' என்றும், ''நீரணி மாடம்'' என்றும் பெயர் பெற்றன.

### மாண்புடைய மாடம்

மாடம் மாண்புள்ள வளமனையாகத் திகழ்ந்தது. மாடம் எனும் சொல்லே மாண்புடையது என்னும் பொருளைக் கொண்டது. மாண் என்பது அதன் மூலச்சொல். அது மாடு—மாடம்—மாடி என வளர்ந்தது.

' சேண் ' என்றால் நெடுந்தொலைவு என்னும் தன்மையைக் குறிக்கும். அது ' சேடு' என்று ஆகி நெடுந்தொலைவை உடையது என்னும் எல்லைப் பொருளினைத் தரும் ' சேடு ' ' சேடி ' ஆகி, தொலைவில் உள்ள இடம்—நாடு (விஞ்சையர் நாடு) எனப் பொருள் தரும்.

கோண்-வளைவு ; கோடு-வளைவை உடையது ; கோடி-வளைந்த பொருள்.

இவை போன்றே,
மாண்-மேம்பட்ட பெருமை ;
மாடு-மேனிலைப் பெருமையை உடையது ;
மாடி-மேனிலை இடம்-என்று பொருள் வளர்ந்தது.

மாடு என்னும் சொல் பல பொருளைத் தருவது. இங்கு இடம், பக்கம், செல்வம், பொன் எனும் பொருள்கள் நான்கும் இயைந்து நிற்கும் சொல்லாய் மேம்பட்ட நிலையைக் குறிக்கிறது.

கூடு-கூடம் ; பாடு-பாடம் என்றாவது போல் மாடு-மாடம் என்றாயிற்று. மாடம் என்பது மாடு என்னும் சொல்லில் இயைந்த நான்கு பொருள்களுக்கேற்ப மாளிகைக்குப் பக்கமாய்,-வாழ்வியலின் பக்க வளமனையாய்ச் செல்வச் செழிப்பின் சின்னமாய்ப் பொன் பேழையாய்த் திகழ்ந்தது.

இம்மாடம் முன்னர்க் கண்டது போன்று ஒரு நிலையாகவும், மேன்மேல் அடுக்கடுக்காகப் பல நிலையாகவும் கட்டப்பட்டது. அக்கால மாடம் மலைபோன்று காட்சியளித்ததாம். முகிற்கூட்டம் படியும் அளவில் உயரமாய் விளங்கிற்றும்.

'' மழையென மலையென மாடம் ஓங்கி ''
— மலைபடுகடாம்.

'' மழையென மருளும் மகிழ்செய்
மாடம் ''—பொருநராற்றுப்படை.

'' மழையாடும் மலையின் நிவந்த மாட
மொடு ''—மதுரைக் காஞ்சி.

'' உயர்நிலை
வான்தோய் மாடத்து வரிப்பந்து அசைஇ''
—பெரும்பாணாற்றுப்படை

மாடத்தில் ஏறுவதற்கு ஏணிப்படி உயர்த்தி நிறுத்தப்பட்டிருந்தது. அதற்கு நகைச்சுவைபட உவமை கூறினர் உருத்திரங் கண்ணனார் ;

'' வானம் வீழ்ந்துவிடாமல் ஊன்றி முட்டுக் கொடுத்தது போன்று ஏணி சாத்தப்பட்டிருந்ததாம். ஏற, அருமையாய் விண்ணைக் குத்துவது போன்று உயர்ந்து வளர்ந்த மாடத்தில், இரவில் ஏற்றப்பட்டுக் கொழுந்து விட்டெரியும் விளக்கு, கடலில் வரும் கலங்களைக் கரைந்து அழைக்கும் '' கலங்கரை விளக்கமாக '' இருந்ததாம்.





இம்மாடங்கள் வீதியின் இருமருங்கிலும் அமைந்திருந்தன. வீதி வையையாறு போன்றும், பக்கங்களில் அமைந்த மாடங்கள் ஆற்றின் மேடான இரு கரைகள் போன்றும் தோன்றியதாம்.

இம்மாடங்களை மாளிகையுடன் கூட்டி அமைப்பர். அது மாட மாளிகை எனப்பட்டது. மாடம், மாளிகையின் முன்னரும், மருங்கிலும், உட்புறத்தும் அமைக்கப்பட்டது. மாளிகையின் வாயில் முகப்பு, கோபுரம் போன்றும் அமைக்கப்படும். அம் முகப்பை மாடமாகவும் அமைத்தனர். இதனை,

" கோபுரமின்றி வாசலை மாடமாகவும் அமைத்தலின் மாடம் என்றார் "

என மதுரைக்காஞ்சி உரையில் நச்சினார்க்கினியர் குறித்துக் காட்டினர்.

## எழுநிலை மாடம்

நெடுமையாய் உயர்ந்த நிலையில் கட்டப்படும் மாடம் " நெடுநிலை மாடம் " (சிலப்பதிகாரம்) என்று வழங்கப்பட்டது. முன்னர் ' நெடுநிலைக்கந்து '; ' நெடுநிலைக் கோட்டம் ' எனப்பட்ட கட்டுகளின் வளர்ச்சியே இந்த ' நெடுநிலை மாடம் ' எனலாம். அடுக்கடுக்காக மேல் நிலையில் கட்டப்பட்டதால் இது ' நிரைநிலை மாடம் (மதுரைக் காஞ்சி) எனவும் குறிக்கப்பட்டது.

இவ்வாறு நெடுநிலைமாடம் என்றும், நிரைநிலை மாடம் என்றும் குறிக்கப்படும் மாடம் ஏழு நிலைகளைக் கொண்ட மாடமாக அமைந்தது. ஏன் ஏழு நிலைகளில் கட்டப்பட்டது? இப்படியொரு வினா என் உள்ளத்தில் எழுந்தது. இவ்வினாவிற்கு விடை காணுதல் ஒரு நல்ல ஆய்வாயிற்று. இந்த ஆராய்ச்சியால் புலப்பட்ட விளக்கங்கள் பழந்தமிழ்ப் பெருமகனின் வாழ்வியற் செம்மையை உலக அளவிலும் உயர்த்திக் காட்டுவன ஆகின்றன.

இக்காலத்துப் பொறியியல் அறிவியலை மணந்து பெற்றெடுத்து வளர்த்துவரும் கட்டிடக் கலை ' அம்மாடியோ ' என வியக்கத் தக்கது. மூக்கின் உச்சியில் சுட்டு விரலைச் சேர்த்து அகல விழித்து வியக்கத்தக்கது. 300 மாடிகள் கொண்டனவாய்ப் பல்வகைக் காலநிலைக்கேற்ற அமைப்புக்களுடன், நினைத்தால் நினைத்தபடி நிகழ்த்தும் பொறியமைப்புகளும் கொண்டவை இக்கால மேல்நாட்டு மாடங்கள். ஆயினும், இவை நம் பழந்தமிழ்நாட்டு எழுநிலை மாடத்திற்கு ஈடாகா என்றால் கேட்போர்க்கு நகைப்புத் தோன்றலாம். சொல்வோனை ஏளனமாக என்னலாம். ஆனால், இது உண்மை என்பதை நாட்டுவதே இக்கட்டுரை.

மேல்நாட்டுப் பலநிலை மாடங்கள் வாய்ப்புகளையும், வனப்புகளையும் வாழ்வுத்துணைகளையும் செயற்கைப் பாங்கில் ஏற்படுத்தித் தருவன. அவை உடலுக்கு நிலைப்பான நலத்தைத் தரும் என்று உறுதியாகக் கூற இயலாது. பழந்தமிழ்நாட்டு எழுநிலைமாடம் இயற்கை நலங்களை இயற்கைப் பாங்கு சிதையாமலே துய்க்கச் செய்யும் அமைப்புகளைக் கொண்டது. காலத்திற்கும் நேரத்திற்கும் ஏற்றபடி இயற்கையின் பயனைக்கொள்ளும் வகையில் அமைக்கப்பட்டது.

இவ்வமைப்புதான் புதுமையும் பெருமையும் மிக்கது. எழுநிலைமாடம் என்பது ஏழு அடுக்கு மாடி வீடு. ஒவ்வொரு அடுக்கும் முன் குறிக்கப்பட்டது போன்று மேல் வளைவாய் ஒட்டப்பட்டு மேல்தளம் மட்டமாய்ப் பூசப்பட்ட ஒட்டுக் கட்டிடம். முதல் அடுக்காம் கீழ்த்தளம் சரக்கு அறை. இது வாழ்வுக்கு வேண்டப்படும் பல்பொருள்கள் நிறைந்த பண்டாரம். மேல் எழுந்த ஆறு மாடிகளும் தனித்தனியே ஆறு பருவங்களுக்கு உரியவை.

தமிழர் ஓராண்டுக் காலத்தை இரண்டிரண்டு திங்கள்களாகப் பகுத்து; ஆறு பருவங்களாகக் கொண்டனர் :

சித்திரை, வைகாசி—இளவேனிற் பருவம்.

ஆனி, ஆடி—முதுவேனிற் பருவம் (கோடைக்காலம்).

ஆவணி, புரட்டாசி—கார்ப் பருவம் (மழைக்காலம்).

ஐப்பசி, கார்த்திகை—கூதிர்ப்பருவம் (நடுக்குங் குளிர்காலம்).

மார்கழி, தை—முன்பனிப் பருவம் (விடியற்காலப் பனி).

மாசி, பங்குனி—பின்பனிப் பருவம் (அந்திப்பனி).



இவ்வாறு பருவங்களில் இளவேனிற் பருவம் ஒன்றே தமிழகத்து வாழ்வியலுக்கு இனிமையான இன்பப் பருவம். இக்காலத்தில் இப்பருவம் இரு திங்கள்கள் தள்ளி மாற்றமடைந்துள்ளது. ஆனுல், நம் கீழை நாடாம் மலைநாட்டில், இன்றும் இளவேனிலாகச் சித்திரை, வைகாசி அமைந்துள்ளது. இளவேனில் அல்லாத பிற பருவங்கள் வாழ்விற்கு ஒவ்வொரு வகையில் இடையூறு தருவன. அவ்வவ்விடையூறுகளைக் குறைத்து நலமாக்கும் பாங்கில் இவ்வெழுநிலை மாடத்தில் மேல் ஆறு மாடங்களும் அமைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு பருவத்திற்கும் அதற்குரியதாய்க் கட்டப்பட்ட மாடத்தில் உறைந்து வளமான வாழ்வில் நலமான பயன் துய்த்தனர். எல்லாப் பருவகால வாழ்வையும் சுவையுடையதாகவே வைத்துக்கொண்டனர்.

அழிவற்ற மிகப்பெரும் செல்வம் படைத்தோரே இம்மாடங்களை அமைத்துக்கொண்டனர். பழந்தமிழகத்துப் பெருநகரங்களில் இவ்வெழுநிலை மாடங்கள் பல்கி நிறைந்திருந்தன. எழுநிலை மாடத்தின் பொதுவான வளங்களைத் தமிழ் இலக்கியங்கள் கொண்டு அறியலாம்.

'' ஏழுயர் மாட மூதூர் ''—என்று பாடினுர் வில்லிபுத்தூரார்.

' அழகின் அணிகலமாய் அமைந்த எழுநிலை மாடம் நல்ல கலைத் தொழிலுடன் விளங்கியது. நீரூற்றுக்கள் அமைக்கப்பட்டிருந்தன. இதனைப் பெருங்கதை ஆசிரியர் கொங்குவேளிர் என்னும் குறுநிலமன்னர்,

'' ஏரணி அமைந்த எழுநிலை நல்வினை
நீரணி மாடம் '' —என்ருர்.

' அகிற்புகை வெண்மையாக ஆவிபோல் பெருகி, உள்ளிடமெல்லாம் நிறைந்து விம்மி வெளிவரும் மாடம் '—என்பதைச் சிவக சிந்தாமணி,

'' இன்னகில் ஆவி விம்மும் எழுநிலை மாடம் ''—என்கிறது.

'' இடம் சிறந்து உயரிய எழுநிலை மாடம் ''—என்னும் முல்லைப்பாட்டிற்கு,

' தனக்குள்ள இடமெல்லாம் பொன்னுலும், மணியாலும் சிறப்புப் பெற்று உயர்ந்த ஏழுநிலையினுடைய மாடம் ''—என்று நச்சினுர்க்கினியர் உரைவிளக்கந் தந்துள்ளார்.

இம்மாடங்களில் '' அரமியம் '' என்னும் நிலாமுற்றங்கள் இருந்ததை,

'' நிரைநிலை மாடத்து அரமியம் ''
என்று மதுரைக்காஞ்சியும், சிலப்பதிகாரமும் இயம்புகின்றன.

மாடத்துச் சுவர்களில் பூவேலைப்பாடுகள் ஓவியமாகவும், கதையாகவும் வடிக்கப்பட்டிருந்தன. மலர்க்கொடிகள் படர விடப்பட்டிருந்தன. பெரிய சுடுமண் தொட்டிகளாம் தாழிகளில், நீர் நிரப்பப்பட்டு நீர்ப்பூக்களாகிய குவளையும், செங்கழுநீரும் வளர்க்கப்பட்டன. இது இக்காலத்துத் தொட்டிச்செடி போன்றது. மாட வளைவுகளில் முத்து மாலைகள் முறையாக நாற்றித் தொங்கவிடப்பட்டிருந்தன. பருவ நிலைக் கேற்பக் காற்று வரவும், அடைக்கவுமாகப் பல்வகையான மான்கண் காலதர், சாளரம், கால்போகு பெருவழி, நேர்வாய்க்கட்டளை (சாலேகம்), எனும் சாளர வகைகள் அமைக்கப்பட்டிருந்தன. அச் சாளரங்களிலும் மாலைகள் தொங்கவிடப்பட்டிருந்தன. வாயில்களில் யானைத் தந்தங்கள் அணி செய்யப்பட்டு மகர வாசிகைகள் இடம் பெற்றிருந்தன. பல்வகை இசைக்கருவிகள் இருந்தன. யவனர் நாட்டினின்றும் வந்த அழகிய பாவை விளக்குகளும், இரும்பு விளக்குகளும் ஆங்காங்கே இடம்பெற்றிருந்தன. மகளிர் பந்தாடும் சிற்றிடங்கள் அமைக்கப்பட்டிருந்தன. '' பெறற்கரும் சிறப்பின் துறக்கம் ஏய்க்கும் நெடுங்கால் மாடம் ''—என்று பட்டினப்பாலை பாடும் அளவில் வீட்டுலகமே போன்று (சுவர்க்கம்) இன்பக் கொள்கலமாய் எழுநிலைமாடம் அமைக்கப்பட்டிருந்தது.



பிற்காலத்து வள்ளலார் இராமலிங்க அடிகளும் இவ்வெழுநிலை மாடத்தைக் குறித்து வியந்து பாடியுள்ளார். பொன்னம்பலக் காட்சியினைக் காணும் அவர், அப்பொன்னம்பலத்தை எழுநிலை மாடத்தின் மேல் கண்டாராம். எவ்வாறு ?

' ஒளி மலை ஒன்றின்மேல் வீதி உண்டாச்சு—வீதி நடுவொரு மேடை இருந்தது—மேடைமேல் அங்கொரு கூடம் இருந்தது',

'' கூடத்தை நாடக் கூடம் மேல் ஏழ்நிலை
மாடம் இருந்ததடி—அம்மா—மாடம்
இருந்ததடி ;

ஏழ்நிலைக் குள்ளும் இருந்த அதிசயம்
என்னென்று சொல்வேனடி—அம்மா—
என்னென்று சொல்வேனடி ''—

என ஏழ்நிலை மாடத்தைக் கண்டு வியக்கின்ருர். அவ்வேழ்நிலை அடுக்கில் ஒவ்வொன்றி

லும் ஒன்பது மணி ஒளிகள் முறை முறையே, உயர்ந்து உயர்ந்து ஒளிர்வதாக வியக்கின்றார். இவ்வாறு பாடப்பட்ட பாடல் உடம்பையே பொன்னம்பலமாகக் கண்ட நுண்பொருள் கொண்டது என்பர்.

உரன்வவராம் சித்தர்களும் உடம்பினுள் ஓடும் உயிர் மூச்சின் ஓட்டம் எழு படிகளில் உயர்வதாகக் கண்டனர். அவ் வேழையும் வயிற்றுமூலம், நீரகம், கொப்பூழ், நெஞ்சீரல், தொண்டைக்குழி, சுழிமுனை, மண்டையுச்சி என மேன்மேல் அடுக்காக வகுத்தனர். உயிர்மூச்சு, இவ்வேழு அடுக்குகளிலும் ஏறி உயர்வதாகக் குறித்தனர். அதனையும் ஒரு கட்டிட அமைப்பேபோல் எழுநிலை அடுக்கு மாடமாக உருவகம் செய்தனர்.

சித்தர்கள் உள்ளத்தில் எழுந்த இக்கருத்தும், வள்ளலார் வாய்மொழியும் நம் பழந்தமிழரது எழுநிலை மாடத்தின் நிழல்களே எனலாம்.

### ஆறு பருவத்திற்கு ஆறு மாடி

எழுநிலை மாடங்கள் இன்பமாகப் பொழுது போக்குவதற்காகவே கட்டப்பட்டன. செல்வக் கணவன் மனைவி பருவ கால மாற்றங்களின் இடையூறு தோன்றா



மல் கூடியிருந்து இன்பம் துய்ப்பதற்காகவே, அமைக்கப்பட்டன. இந்த இன்பம் நிலா ஒளியில் நிகழ்வதாக இருந்தது. இதற்கு வாய்ப்பாக எழுநிலைமாடங்களில் 'நிலாமுற்றங்கள்' அமைக்கப்பட்டிருந்தன.

நிலாமுற்றம் என்பது மேற்கூரை மூடப்படாத மொட்டைமாடி. நிலவின் ஒளியில் படிவதற்கும் இம்முற்றம் பயன்படும். காதல் மேவியவர் நிலாவொளியில் கட்டிலில் இன்பமுறுவர். இதனை நாகரிகமாக ''நிலவுப்பயன் கொள்ளல்'' என்று குறித்தனர். இவ்வாறு கூறுதலை இலக்கணம் ''இடக்கர் அடக்கல்' என்று குறிக்கும்.

இந்த நிலவுப்பயன் கொள்ளுதலை இலக்கியங்கள் ஒருங்குநின்று பேசுகின்றன :

''நிலவுப்பயன் கொள்ளும் நெடுவெண் முற்றத்து''—நெடுநல்வாடை.

''வெண்ணிலவின் பயன் துய்த்தும்''—பட்டினப்பாலை.

''நிலவுப் பயன்கொள்ளும் நெடுநிலா முற்றம்''—சிலப்பதிகாரம்.

''சுடர்வெண் ணிலவின் தொழிற் பயன் கொண்ட மிசைநீள் முற்றம்''—பெருங்கதை.

எனவே, நிலவுப்பயன்கொள்ளும் நிலா முற்றங்கள் எழுநிலை மாடத்தில் முன் புறத்திலும் பின்புறத்திலும் நீட்டி அமைக்கப்பட்டிருந்தன. எழுநிலை மாடத்தை இன்ப மனை எனலாம்.

இனி, இந்த இன்பமனை எவ்வாறு பருவங்களுக்கு ஏற்ப அமைக்கப்பட்டிருந்தது என்பதைக் காணலாம்.

கண்ணகியும் கோவலனும் திருமணம் முடிந்த பின்னர், எழுநிலை மாடத்தில் அமைந்து கூடி இன்பமாகக் காலங் கழித்தனர்.

மாதவியினுடைய மாளிகையிலும் எழுநிலைமாடம் இருந்தது. கோவலனும் மாதவியும் அதிற் கூடி இன்ப வாழ்வில் மூழ்கினர். இதேபோன்று சீவகன் காந்தருவதத்தையுடனும், உதயணன் வாசவதத்தையுடனும் எழுநிலை மாடத்தில் கூடியிருந்ததை அவ்வக்காப்பியங்கள் பேசுகின்றன.



கோவலன் பிரிந்ததும் மாதவி தனித்துத் துயரமடைந்து,

''நெடுநிலை மாடத்து இடைநிலத்து ஆங்கோர்
படையமை சேக்கைப் பற்றியுள் வீழ்ந்த''

தைக் கோசிகன் கூற்றுகச் சிலம்பு பேசுகிறது. இவ்வடிகளைச் சிலம்பின் உரையாசிரியர்,

''எழுநிலத்தையுடைய மாடத்து நாலா நிலத்து ஒரு படுக்கை
யமைந்த சேக்கையிடத்தே மயங்கி வீழ்ந்த செய்தியும்''—என்று

விளக்கியுள்ளார். இதைக்கொண்டு நெடுநிலை மாடம் என்பது எழுநிலைமாடம் என்பதையும், இடைநிலம் என்பது நான்காவது மாடி என்பதையும் அறியலாம். (நெடுநிலை — எழுநிலை ; இடைநிலம்—நாலா நிலம் என மனையறம் படுத்த காதையிலும் குறிப்புரை எழுதியுள்ளார்).




தமிழர் வாழ்வில் சிறப்பிடம் பெற்று விளங்குவது குடை !

''திங்கள் மாலை வெண்குடையான்''

''குடை நிழலிருந்து குஞ்சரம் ஊர்ந்தோர்......''

''ஒரு குடைக் கீழ் உலகாண்ட''

என்றெல்லாம் வரும்போது ஆட்சிப் பாதுகாப்பின் ஒரு சின்னமாகக் குடை சித்திரிக்கப்படுகின்றது. ஆளும் உரிமையின் சின்னமாகவும் அச்சொல் பயன் படுத்தப்பட்டது.

''செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன் கவிகைக்கீழ் தங்கும் உலகு'' எனும் குறளால் மன்னர்களின் வெண்கொற்றக் குடைகள் பற்றித் தெரிந்தும் இருக்கிறோம்.

வரலாற்றுப் பெருமை போகச் சாதாரண மக்களின் அன்றாட வாழ்வில் ஒரு மூலையிலே குடை நிச்சயமாக ஓர் இடத்தைப் பெற்றிருக்கின்றது. மழைக் காலம், வெய்யிற் காலம் இரண்டிலும் பாதுகாப்புக்குப் பலரிடம் கையோடு இருக்கும் கருவி—குடை ! பலத்த மழைக் காலத்தில் குடை மட்டும் இல்லை என்றால் பல வேலைகள் தடைப்பட்டே போகும். அந்த நேரத்தில் குடையில், ஒதுங்குவதற்கு இடம் தந்து ''கொடை வள்ளல்'' என்ற பட்டத்தைச் சிலர் சுலபமாகப் பெற்றுக் கொள்ளுகிறார்கள். மறந்து வைத்து விட்டுக் கையைப் பிசைந்து கொண்டு நிற்கும் படிச் செய்யும் பொருட்கள் வரிசையில் குடையே முதலிடம் பெறுகின்றது.

ஓர் அரசியல் தலைவர், அண்மையில் மற்றொருவருடைய வாதத்துக்குப் பதிலளிக்கையில் ''உங்கள் வாதம் 'லேடீஸ்' குடைபோல இருக்கின்றது. இது மழையையும் தாங்கவில்லை; வெய்யிலுக்கும் பயன்படவில்லை'' என்பதாகக் கூறினார். ஆனால், ஆண்களின் கருப்புக் குடை அப்படி அல்ல.

### ஒரு குடைக் கீழ்

சில பல சமயங்களில் ஆயுதமாகவும் குடை பயன்படுகின்றது. அண்மையில் செங்கற்பட்டு அருகில் குடையைக் கொண்டு, சிறுத்தைப் புலியைக் கொன்றவர் பற்றிய செய்தி அனைவரும் அறிந்ததே.

### ஒரு குடை ரூபாய் 150

தொழில் என்ற முறையில் குடை செய்யும் தொழில், உள் நாட்டுத் தேவைப் பொருட்களை வழங்கும் அங்காடியில் ஒரு முக்கிய இடம் வகிக்கின்றது. இந்திய நாடு முழுவதையும் எடுத்துக் கொண்டால் சுமார் 400 தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன.

ஆண்டு ஒன்றுக்கு ஏறத்தாழ 2 கோடி குடைகள் அவற்றில் தயாரிக்கப்படுகின்றன. இக்குடைகளின் மொத்த விலைமதிப்பு சுமார் ரூ. 25 கோடி ஆகும். பம்பாயில் சுமார் 100 தொழிலகங்கள்; கேரளத்தில் 150; டில்லியில் 35; கல்கத்தாவில் 90; தமிழ் நாட்டில் சுமார் 25 என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இத்தொழிற் சாலைகளில் சுமார் 15,000 பேர் வேலை செய்கிறார்கள். இத்தொழிலகங்கள், சிறு தொழில் அல்லது குடிசைத் தொழில் போல இயங்குகின்றன. குறிப்பிட்ட பருவங்களில் மட்டுமே இந்த வேலை தீவிரமாக நடைபெறுகின்றது. கேரளத்தில் ஆண்டுக்குச் சுமார் 9 மாதக் காலமும், மற்ற இடங்களில் டிசம்பரிலிருந்து ஜூன் வரை 7 மாதக் காலமும் இந்த வேலை நடைபெறுகின்றது. மழைத் துளி விழத் தொடங்கியதும் கூடவே தோன்றும் ஒரு தொழில் 'குடை ரிப்பேர்'!



உடும்பு, பல்லி இனத்தைச் சேர்ந்த பெரிய பிராணி. இதன் தோலிலிருந்து, அழகிய பைகள், காலணிகள், பர்ஸ்கள் மற்றும் கஞ்சிரா எனும் தாள வாத்தியக் கருவி முதலியன செய்யப்படுகின்றன.

குடைகள் வகையைப் பொறுத்த வரை, ஒன்று ரூ. 8-லிருந்து ரூ. 15 வரை பல்வேறு வகை விலையில் குடைகள் தயாரிக்கப்படுகின்றன. ஆனால், சாதாரணமானவர்கள் வாங்கும் பெரும்பான்மையான குடை ஒன்றின் விலை சுமார் ரூ. 10 என்ற அளவில் உள்ளது.

தயாராகும் 2 கோடி குடைகளில் சுமார் 35 சதவிகிதக் குடைகள் மோட்டாத் துணியால் ஆனவை ; 40 சதவிகிதம் நடுத்தரத் துணியினாலும், 25 சதவிகிதக் மென்மையான தரமான துணியினாலும் ஆனவை. 5 சதவிகிதம் குடைகள், நைலான், ரேயான் குடைகளாகும்.

பம்பாய் செஞ்சுரி மில்ஸ் தான் குடைகளுக்கான துணிகள் தயாரிப்பில் முதலிடம் வகிக்கின்றது. அண்மைக் காலத்தில் குடைத் துணிகள் விலை 20 லிருந்து 25 சதவிகிதம் வரையிலும், கம்பிகள் விலை 10 லிருந்து 15 சதவிகிதம் வரையிலும் ஏறிவிட்டன. செய்யும் கூலியும் சுமார் 15 சதவிகிதம் அதிகரித்து விட்டது. இந்த நிலவரம் காரணமாகக் குடைகள் ஏற்றுமதி சுருங்கிவிட்டது. 1965–66-ஆம் ஆண்டில் ரூ. 46 இலட்சம் பெறுமான குடைகள் ஏற்றுமதி செய்யப்பட்டன. இது ரூபாய் 18 இலட்சமாகக் குறைந்து, கடந்த ஆண்டில் ரூ. 35 இலட்சமாக ஓரளவுக்கு அதிகரித்துள்ளது. இலங்கை, கென்யா, நேபாளம், சவுதி அரேபியா, பர்மா ஆகிய நாடுகளுக்குத்தான் இந்தியக் குடைகள் பெரும்பாலும் ஏற்றுமதியாகின்றன.



கதர் கிராமத் தொழில்கள்
கதர், கதர்ப்பட்டு, சோப்பு, தேன்
செக்கெண்ணெய்,
தோல்பொருள்கள்,
பனைவெல்லம், சர்க்கரை,
மண்பாண்டம், வார்ப்படங்கள்,
பனைப்பொருள்கள்,
பித்தளை, வெண்கலப்
பாத்திரங்கள்
பற்பல கைநுட்பப் பொருள்கள்
தயாராகின்றன!
கதர் கிராமத் தொழில்களை ஆதரிப்பது உணவு உற்பத்திக்கு உழைக்கும் கிராம மக்களுக்கு உதவுவதாகும்

இந்தியாவில் பல பகுதிகளிலும் பலமுறை புள்ளி விவரங்கள் தொகுக்கப்பட்டதில் மொத்த மக்கள் தொகையில், 5.5 சத வீதம் கண் திரைப் படலம் ( Cataract ) என்னும் நோயால் பாதிக்கப்படுகிறூர்களாம். ஆண்டு தோறும் 0.5-லிருந்து 0.75 சதவீத மக்கள் இந்நோய் காரண மாகக் குருடாகின்றனர். எனவே, மூன்று மில்லியன்மக்களுள்ள ஒரு




மாவட்டத்தில் இந்தக் கண் திரைப் படலம் காரணமாக ஆண்டுதோறும் 15,000 பேர் குருடர்களாகின்றனர்.

தற்போது இருக்கும் அரசினர் மருத்துவ மனைகள், தனியார் மருத்துவ நிலையங்கள் போன்ற வைகளில், இந்தக் கண்திரைப் படலம் வந்த நோயாளிகளுக்கு 10-லிருந்து 20 சதவீதத்திற்கு மேல் அறுவைச் சிகிச்சை செய்ய முடிவதில்லை. இந்தக் கண்நோய் காரணமாக ஆண்டு தோறும் இரண்டு இலட்சம் பேர் பார்வை இழக்கின்றனர்.

இந்தக் குறைகளையெல்லாம் போக்க நடமாடும் மருத்துவ மனைகள் மிகவும் அவசியமாகும். இந்த வகையில், மதுரை எர்ஸ் கின் மருத்துவமனை ஆதரவில் நடந்துவரும் நடமாடும் கண் மருத்துவமனை 1961-லிருந்து சிறப்பான முறையில்செயல்பட்டு வருகிறது. இதுவரை 51 முகாம் களில், 1,61,518 பேர்களுக்குச் சிகிச்சை அளித்திருக்கிறது. 21,813 பேர்களுக்குக் கண் அறு வைச் சிகிச்சை செய்திருக்கிறது. உணவு, மருந்துகள் முதலான வற்றுக்காக இதுவரை ஒன்பது இலட்ச ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது.

ஓர் இடத்தில் ஒரு முகாமுக்கு ஆகும் மொத்தச் செலவு ரூ. 10,500. ஒரு நோயாளிக்கு உணவு, மருந்து, சிகிச்சை முத லானவற்றுக்காகும்செலவு ரூ.25.

தமிழ்நாடு அரசு ஒவ்வொரு முகாமுக்கும் ரூ. 5,000 நிதியுதவி அளிக்கிறது. இலண்டனிலுள்ள ராயல் காமன்வெல்த் கழகம், ஆண்டுதோறும் கூடுதலாக இந்த முகாம்கள் ஏற்படத் தக்க உதவி கள் செய்து வருகின்றது. 'கனடி யன் கௌன்சில்' இந்த முகா முக்கு ஒரு வண்டியையும், மருத் துவச் சாதனங்களையும் வழங்கி யிருக்கின்றது.

இந்த முகாம்கள் சிறப்பாக நடைபெற, பள்ளிக்கூட மாண வர்கள், ஆசிரியர்கள், மாணவர் தேசியப்படை, ஊர்க்காவல் படை, செயின்ட் ஜான்ஸ் ஆம்பு லன்ஸ், ரோட்டரி, அரிமா சங் கத்தினர் ஆகியோர் பெருந்துணை புரிந்து வருகின்றனர். நோயாளி களை அழைத்து வருவது, அறுவைச் சிகிச்சைக்குப் பின் அவர்களைத் தூக்கிச் செல்வது, உணவு வழங்குவது போன்ற பல வேலைகளை அவர்கள் சலிப்பின்றிச் செய்கின்றனர்.

இந்தக் கண் முகாம், கண் ணுள்ள முகமாக ஒளிபெற்று விளங்கி வருகிறது. எண்ணற்ற ஏழை எளியவர்களுக்குக் கண் ணொளி தரும் இந்த முகாமின் தொண்டினை எவ்வளவு பாராட் டினாலும் தகும்.

---

இந்தியாவிலேயே பெரிய கோழி முட்டையைப் பார்த்திருக்கிறீர் களா ?

அது ஒசூர் கால் நடைப் பண்ணை யிலுள்ளது.

மாதிரிக்குச் செய்யப்பட்ட முட்டையல்ல.

' ஒயிட் லெக்கார்ன் ' கோழி யிட்ட முட்டை.

இந்த மாதிரி பெரிய கோழி முட்டை இந்தியாவில் வேறு எங்கும்—எந்தக் கோழிப் பண்ணை யிலும் இருப்பதாக இது வரை தகவல் கிடையாது.

இந்தக் கோழி முட்டை யின் எடை 110 கிராம். சாதார ணமாக ஒரு கோழி முட்டை 45 கிராம், 50 கிராம் எடை இருக்கும். 60 கிராம் எடையைப் பெரும்பாலான கோழிமுட்டை கள் தாண்டுவதில்லை.




இந்தப் பெரிய கோழி முட்டைக்கு அடுத்தபடியாக இன் னெரு முட்டையை ஒசூர் கால்நடைப் பண்ணையிலுள்ள ஒரு ஒயிட் லெக்கார்ன் கோழி யிட்டுள்ளது. அதன் எடை 95 கிராம்.

# பொறுமைக்குப் பரிசு

"பயணிகளிடம் நல்ல முறையில் நடந்துகொண்டால் எந்த விதத் தகராறும் வராது. பேருந்தில் நாலுபேர் வருவார்கள்; போவார்கள்; ஒவ்வொருவரும் ஒவ்வொரு குணமுள்ளவர்களாக இருப்பார்கள். நாம்தான் அவர்களிடம் பொறுமையாகப் போக வேண்டும். இப்படி இருந்தால் சண்டையோ, சச்சரவோ ஏற்படாது" என்கிறார் 52 வயதான ஓட்டுநர் திரு கே. நாராயணசாமி.

இவர் தமிழ்நாடு அரசு போக்குவரத்துப் பேருந்தில் ஓட்டுநராக, 1948-லிருந்து பணியாற்றி வருகிறார். இவர் பத்து ஆண்டுகள் சென்னை நகரில் ஓட்டுநராக இருந்தார்; இப்போது ஒன்பது ஆண்டுகளாகச் சென்னை—கொளத்தூர் வழிப் பேருந்தில் பணியாற்றி வருகிறார்.

இவருக்கு அண்மையில் "சிறந்த ஓட்டுநர்" என்ற பாராட்டும், பதக்கமும் கிடைத்தன. தமிழக ஆளுநர் மேதகு கே. கே. ஷா அவர்கள் இந்தப் பரிசை வழங்கினார். மயிலை அகாடமி ஏற்பாடு செய்த இந்த விழாவில், "சிறந்த நடத்துநர்" (Best Conductor) ஒருவருக்கும் பரிசு கிடைத்திருக்கிறது.

பொறுமையும், அடக்கமும் உள்ள இந்த ஓட்டுநர், 1940-லிருந்து 1946 வரை சிங்கப்பூரில் ராணுவத்தில் மேஜருக்கு ஓட்டுநராகப் பணியாற்றினார். அதாவது 'நாயக்' பதவியில் இருந்தார். ராணுவத்திலும் சரி, இப்போதும் சரி, இவர் பேருந்தை ஓட்டி இதுவரை ஒரு விபத்தும் ஏற்பட்டதில்லை. ராணுவத்தில் நல்ல பெயரை எடுத்தது போலவே, இப்போதும் அனைவராலும் பாராட்டப்பட்டு வருகிறார் இவர்.

தமிழ்நாடு அரசு போக்குவரத்தில் இவரே, சிறந்த ஓட்டுநராக ஐந்துமுறை பரிசு பெற்றிருக்கிறார்! போக்குவரத்து வார விழாவில் இருமுறையும், 'ரோட்டரி கிளப்' சார்பில் ஒருமுறையும் இவர் இதற்கான பரிசுகள் பெற்றுள்ளார்.

செங்கற்பட்டு மாவட்டம் பாலூரைச் சேர்ந்த திரு. நாராயணசாமி திருமணமானவர். செல்லமாக ஒரேஒரு பெண்ணைப் பெற்றுக் கொண்டு குடும்ப நலத்தில் அக்கறை செலுத்தும் இவர், ஓட்டுநர் பயிற்சிப் பள்ளி (Driver Training School) யில் ஆசிரியராகவும் பணியாற்றியிருக்கிறார்.

தமிழ்நாடு அரசு போக்குவரத்திலேயே தொடர்ந்து ஐந்தாண்டுகள் "சிறந்த ஓட்டுநர்" பரிசுகளைப் பெற்றவர் இவர் ஒருவரே.

"இந்தப் பரிசுகளெல்லாம் என்னை மேலும் மேலும் ஊக்கப்படுத்துகின்றன. இந்தத் துறையில் நாங்கள் நல்ல முறையில் நடந்துகொள்வதற்கு இந்தப் பரிசுகள் உதவியாக இருக்கும். பொது மக்களுக்கும், அரசு ஊழியர்களான என்னைப் போன்றவர்களுக்கும், நல்லதொடர்பு இருக்க வேண்டும். அதற்கேற்ப ஒவ்வொருவரும் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையோடு நடந்து கொள்ள வேண்டும்" என்று மகிழ்ச்சியுடன் கூறுகிறார் ஓட்டுநர் நாராயணசாமி.

நடத்துநர் திரு இ. பாலகுருப் என்ன சொல்கிறார்?

கேரளாவைச் சேர்ந்த இவர் 23 ஆண்டுகள் தமிழ்நாடு அரசு போக்குவரத்தில் நடத்துநராகப் பணியாற்றி வருகிறார். இதுவரை இவர்மீது எந்தவிதப் புகாரும் வந்ததில்லை. எல்லாரிடமும் சுமுகமாகப் பழகும் பண்பை இவர் இயற்கையிலேயே பெற்றிருப்பதால்தான், இருமுறை இவரே 'சிறந்த நடத்துந'ருக்கான பரிசைப் பெற்றிருக்கிறார்.

"நல்ல முறையில் நடந்து கொண்டால் எந்தப் புகாரும் வராது. பயணிகளோடு சச்சரவு வருவது போலத் தெரிந்தால் பொறுமையாக இருந்துவிட வேண்டியதுதான். இதில் கௌரவம் ஒன்றும் குறைந்துவிடாது" என்று கூறும் திரு பாலகுருப்புக்கு வயது 43. திருமணமானவர். நான்கு குழந்தைகள் இருக்கின்றார்கள்.

பேருந்தில் பயணிகள் விட்டுச் சென்ற நான்கு எவர்சில்வர் தம்ளர், மணிபர்ஸ் முதலியவற்றைப் பத்திரமாகத் தம் அலுவலகத்தில் ஒப்படைத்திருக்கிறார். இவரது நேர்மையை அதிகாரிகள் பாராட்டியுள்ளனர்.

ஒருமுறை ஒரு பயணி இவரிடம் மிகக் கோபமாகப் பேசினாராம். இவரும் பதிலுக்குப் பேசி இருந்தால் சண்டையே வந்திருக்குமாம். ஆனால், பதில் எதுவும் பேசாமல், அவர் இறங்கும் இடம் வரும்வரை, பொறுமையாக இருந்துவிட்டாராம். அவரும் தானாகவே பேசிக் கொண்டு இறங்கிப் போய்விட்டாராம்.

"பொதுப்பணியில் ஈடுபாடு உள்ளவர்களுக்குச் சகிப்புத் தன்மை மிகவும் அவசியம். இல்லாவிட்டால் இந்தப் பணியில் யாருமே நீடிக்க முடியாது" என்று உறுதியாகக் கூறுகிறார் நடத்துநர் பாலகுருப்.

மொழியையோ, அவளது காரையோ கவனிக்கவில்லை. ''விடுவிடு'' வென்று டாக்டரின் இல்லத்தினுள் நுழைந்து விட்டாள்.

மாதவனும், அவனைத் தொடர்ந்து அந்த மங்கையும் இப்படிப் பூங்கொடியைத் தேடி ஓடி வந்தது, தேன்மொழியின் நெஞ்சிலே புதிய குழப்பத்தையே உண்டுபண்ணிற்று.

''........இவரை நிழலைப் போலவே அவள் தொடரத் தொடங்கி விட்டாளே! ஒருவேளை அவள் உடம்பிலே ஏதாவது கோளாறு ஏற்பட்டு, அதைக்காட்டிக் கொள்ளத்தான் இப்போது கூட்டி வந்திருப்பாரோ? அப்படியானால் அவளுக்கும் இவருக்கும் என்ன உறவு? எப்படித் தொடர்பு? அவள் யார் என்பதைப் பிறகு கூறுவதாகத் தம் வீட்டிலே அன்று சொன்னாரே ஒழிய, அப்புறம் நேரிலோ தொலை பேசியிலோ அவளைப் பற்றி மூச்சே விடவில்லையே! நாமாகத் தூண்டித் துருவிக் கேட்டால், நான் அவர்மீது ஐயப்பாடு கொள்வதாக இவர் தவறாகக் கருதிவிட்டால் என்ன செய்வது என்றுதானே நானும் பேசாமல் இருந்தேன்! ..ஆனால், இப்போது இவருக்கும் அவளுக்கும் ஏதோ ஒருவகையில் இணக்கமான நெருக்கம் இருக்கும் போலத் தான் தெரிகிறது!....இந்தப் புதிரை எப்படித்தான் அவிழ்ப்பது? .......''

—மின்னித் தெறிக்கும் நினைவோட்டங்கள், தான் முன்பு எண்ணியவாறு டாக்டரின் வீட்டெதிரே காரை நிறுத்திக் கீழே இறங்கவிடவில்லை தேன்மொழியை.

தானும் அந்த வேளையில், பூங்கொடியிடம் போனால் அவர்கள் இருவருடைய உண்மையான நிலையையும் உணர்ந்து கொள்ள முடியாதோ என்று ஐயப்பாடு கொண்ட அவள்,

'' பிறகு வந்து டாக்டரைத் தனியாகச் சந்தித்து அவளைப் பற்றித் தெரிந்து கொண்டால் போகிறது!''

—என்று திட்டமிட்டவளாகத் தன் வண்டியைத் திருப்பினாள் கடற்கரையை நோக்கி.

• • •

மான மாலை வேளை.

மூடநம்பிக்கை இருளில் மூழ்கிக்கிடக்கும் மக்களிடம், பகுத்தறிவு வெளிச்சத்தைப் பரப்பிவிட்டுச் சில மணி நேரமே ஓய்வு கொள்ளச் செல்லும் சீர்திருத்தச் செம்மலைப்போலவே வான மேடையேறி ஒளிக் கதிர்களை வழங்கிய பகலவன் தன் அலுக்கையை நீக்கிக் கொள்ள அடிவானத்திலே மறைந்து கொண்டிருந்தான் மேற்குத் திக்கில்.

வள்ளலார் வருணிக்கும் மெல்லியப் பூங்காற்று, நிலத்தின் மேனியை—இந்த நிலத்திலே நெளிகின்றவர்களின் மேனியை வருடிக் கொஞ்சியது, குளுமையைச் சுமந்து வந்து.

'காதலர் பாதையை, ஒட்டியே தன் காரை நிறுத்திவிட்டுக் கடலை நோக்கி நடந்தாள் தேன்மொழி.

கள், வரிசை வரிசையாக அமைந்து கவர்ச்சியான பொருள்களைக்காட்டி, வருவோர் போவோரின் கவனத்தையெல்லாம் திருப்பிய வண்ணம் இருந்தன.

அவைகளுக்குப் பின்னால் வண்ண வண்ண உடைகள் அணிந்த சின்னஞ் சிறுவர்கள், வண்ணத்துப் பூச்சிகளாக ஓடிப் பிடித்து விளையாடிக் கொண்டிருந்தனர்.

இளமையின் தலைவாசலில் நிற்கும் ஆண்களும் பெண்களுமே இணை இணையாகக் கைகளைக் கோத்துக் கொண்டு—கண்களால் பேசிக் கொண்டு—அமர்ந்தும், நடந்தும், பட்டாணி, வேர்க்கடலையை வாங்கிக் கொறித்தும், சிரித்தும் தங்கள் பொழுதினை மிக இன்பமாகக் கழித்தனர்.

அவர்களைப் போலவே தானும் மாதவனோடு வந்து இந்த

## 14. புதிர் அவிழ்ந்தது!

அன்று ஞாயிற்றுக் கிழமை இல்லையாதலால் அவ்வளவு நெரிசலான கூட்டம் என்று கூறமுடியாது.




மாதிரி தனிமையிலே இனிமை காண மாட்டோமா என்று எவ்வளவு தவிதவித்திருக்கிறாள்-தாகங் கொண்டிருக்கிறாள்—தேன்மொழி!

ஆனால் .........அவனோ..?

கடலை ஒட்டிக் கட்டுமரங்கள் சில, கழுவிக் காயப்போட்ட வாளைமீன் கருவாடு மாதிரி வெளுத்துக் கிடந்தன.

ஏதோ மணியோசை 'கிணுங்கிணுங்' என்று ஒலித்தது.

அந்த மரங்களுள் ஒன்றின்மீது வந்து அமர்ந்து கொண்ட தேன்மொழி, நீலக்கடலில் நெளியும் அலைகளை—அவை குதித்துச் சுருளும் கோல எழிலைக் கண்கொட்டாமல் பார்த்தாள். அந்த ஆர்ப்பரிக்கும் அலைகள்தான் இந்தப் பரந்த கடல் போதாதென்று மனித நெஞ்சுக்குள்ளும் நினைவுகளாக இடம் பிடித்துக் கொண்டனவோ என்றும் அவள் கற்பனை செய்தாள்!

களிடமிருந்து தன் கண்களைப் பெயர்த்துப் பின்புறம் திரும்பி மணல் அலைகள் மீது அவற்றை மிதக்க விட்டபோது—

ஒட்டகம் ஒன்று சிறுமி ஒருத்தியைச் சுமந்த வண்ணம் நடந்து அசைந்து செல்வது தெரிந்தது.

உடனே, தன்னுடைய பிஞ்சுப் பருவத்தில், இதே மாதிரி தானும் ஒட்டகத்தில் பயணம் செய்யவேண்டும் என்று தன் அப்பாவிடம் தான் அடம் பிடித்தது அவள் நினைவிலே பளிச்சிட்டது. ஆனால், அன்றைக்கு அவள் தடுமாறிக் கீழே விழுந்து விட்டாள்; அப்போது அருகில் ஓடிவந்து அவளைத் தாங்கிப் பிடித்துக் கொண்டவர் பேரின்பமுத்துவா ? அல்லர்; ஒரு பெருநோய்க்காரி! அதற்காக அவளை அவர் எவ்வளவு திட்டித் தீர்த்தார் நன்றியே இல்லாமல்!

சிறு சிறு வெடிப்புகளும் முடிச்சுகளுமாகச் சிதிலமடைந்த அந்தக் கிழவியின் முகத்தைக் நினைத்ததுமே . . . . . .

தேன்மொழிக்கு இப்போது வயிற்றையே குமட்டிக்கொண்டு வந்தது; உடம்பெல்லாம் கூட அரிப்பதுபோல் தோன்றியது ; சட்டென்று ஆடிக்காற்று வீசிக் காயப் போட்டிருந்த துணியை எங்கோ அடித்துக் கொண்டு போய்விட்டதைப் போலத் தன் மனத்தில் நிலவிய அமைதி கணப் பொழுதில் பறிபோய் விட்டதாக உணர்ந்தாள் தேன்மொழி. அதற்குமேல் கட்டு மரங்களில் அமர்ந்திருக்க அவளுக்கு இருப்புக் கொள்ளுமா என்ன ? கடல் அலைகளின் காவிய விளையாட்டைத்தான் அவளால் சுவைக்க முடியுமா என்ன ?

எனவே, எழுந்து நடந்தாள் காரைநோக்கி!

* * *

தேன்மொழி தன் வீட்டினுள் நுழைந்த போது—

அங்கே மாதவன் மட்டும் அல்ல, அந்த மங்கையும் உடனிருந்தாள்.

சற்று முன்னர் சமையற்காரி சண்பகம் கொண்டு வந்து கொடுத்த காஃபியைப் பருகிக் கொண்டிருந்த அவள், அதை முழுவதுமாகக்கூடக் குடிக்காமல் குவளையை அப்படியே எதிரே கிடந்த சிறு மேசையில் வைத்து விட்டுப் பரபரப்போடு எழுந்து நின்றாள் ; தேன்மொழிக்கு வணக்கம் செய்தாள்.

அவளுக்கு மறுவணக்கம் புரியக் கூட இவளுக்குத் தன் னினைவு இல்லை; தலையை மட்டும் ஆட்டினாள்; காரணம், திகைப்புத்தான் !

மாதவனுக்கும் அந்தமடந்தைக்கும் அப்படி யென்ன நெருக்கமான பிணைப்பு இருக்கமுடியும் என்று மண்டையைப் போட்டுக் குழப்பிக் கொண்டு அந்தப் புதிரை எப்படித்தான் அவிழ்த்துத் தெளிவு படுத்திக் கொள்ள போகிறோம் என்று தான் அங்கலாய்த்துக் கொண்டிருந்த நிலையில், அதற்கெல்லாம் தேவையே இல்லையென்று தெரிவிக்கின்ற வகையில், அவர்கள் இருவருமே இப்படி ஒன்றாகச் சேர்ந்து தன் வீட்டுக்கே வந்து நிற்பார்கள் என்று தேன்மொழி எதிர்பார்க்கவே இல்லை.

'' உட்காருங்கள் '' — என்று இவள் சொல்லும் போழுதே மாதவன் அவளைப் பற்றிய அறிமுகத்தைத் தொடங்கினான்.

அவளுடைய பெயர்தாமரைக் கண்ணி என்பதாம்; ஆனால், எல்லாரும் அழைப்பது 'தாமரை' என்றுதானாம். தாய்-தந்தையரின் முகம் எவ்வாறு இருக்கும் என்றே தெரியாமல் ஓர் அனாதை அவள். உயர்நிலைப் பள்ளி இறுதி வகுப்புவரைப் பயின்ற அவள், பின்னர் செவிலியர் ( Nurse ) பயிற்சியும் பெற்றிருக்கிறாள் ஒரு கிறித்துவ நிறுவனத்தின் மூலம். வேலை கிடைக்காமல் திண்டாடிய அவளை, மாதவனைப் படிக்க வைத்து ஆளாக்கினாரே அந்த 'உபதேசியார் கிழவர்' தாம் சென்னைக்கு அனுப்பி வைத்திருக்கிறார், ஒரு கடிதத்துடன். அந்தக் கடிதத்தில் அவளுக்கு எந்த வகையிலாவது உதவி புரியுமாறு வற்புறுத்தி எழுதியுள்ளார் அவர். உபதேசியாரிடமிருந்துதானடைந்த நன்மைகளுக் கெல்லாம் கைம்மாறாக எந்த நன்றிக்கடனுமே தன்னால் செய்ய முடியவில்லையே என்று மாதவன் நெடுநாட்களாகவே எண்ணி வருந்தியதுண்டு. அந்த மனம் புண்ணுக்கு மருந்திட்டுக் கொள்வதற்கு ஏதுவாகத் தாமரைக் கண்ணி வந்து சேர்ந்தது அவனுக்கு மிகுந்த மகிழ்ச்சியையே அளித்தது. அவளுக்கு எங்கேயாவது, எப்படியாவது வேலை வாய்ப்பினை வாங்கித் தந்துவிட வேண்டும் என்று துடியாய்த் துடித்த அவன் உள்ளத்தில், டாக்டர் பூங்கொடியே முதலில் தோன்றினாள். அவளிடம் பேசிப்பார்த்ததில், தன்னுடைய சொந்த மருத்துவ மனைக்கே ஒரு செவிலிப்பெண் தேவை என்றும், எனவே தாமரைக் கண்ணியைத் தானே அமர்த்திக் கொள்வதாகவும் பூங்கொடி கூறி விட்டாள். அவ்வாறு வேலைவாங்கிக் கொடுத்துவிட்ட பூரிப்போடுதான் தாமரைக் கண்ணியை அழைத்துக்கொண்டு தேன்மொழியின் இல்லத்திற்கு வந்திருக்கிறான் மாதவன்.

அவனிடமிருந்து, தாமரைக் கண்ணி பற்றிய விளக்கங்களைக் கேட்ட பிறகு, தன் நெஞ்சை நெருடிக்கொண்டிருந்த ஒருமுள்—அழுத்திக்கொண்டிருந்த ஒரு சுமை—மெள்ள விலகி வெளியேறுவதை உணர்ந்தாள் தேன்மொழி.

''இப்போது எங்கே தங்கி இருக்கிறீர்கள்?''

—என்று கேட்டாள் தாமரைக் கண்ணியை நோக்கி.

''நுங்கம்பாக்கத்தில் என் தோழி ஒருத்தியின் வீட்டில் ''

### பேனா நண்பர்கள் தேவை

மொரிசியஸ் தீவினைச் சார்ந்த திரு ரெங்கசாமி ரெங்கன், தமிழகத்தினைச் சார்ந்த இளைஞர்களுடன் கடிதம் மூலம் தொடர்பு கொள்ள விரும்புகிறார்.

அவருடன் கடித நண்பர்களாக விரும்புவோர் கீழ்க் கண்ட முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

Mr. Rengasamy Runghen,
St. Pierre, Petit-Verger,
MAURITIUS.

—அடக்கமாக அவள் விடையளிக்கும் பொழுதே மாதவன் குறுக்கிட்டான்.

''இன்னும் சில நாட்களில் டாக்டர் பூங்கொடியின் மருத்துவ மனையிலேயே எப்போதுமே தங்கும்படி நேருமோ என்று நினைக்கிறேன். இன்றைக்கு அவர் பேசிய பேச்சு அந்தப் போக்கில் தான் இருந்தது''

'' அப்படியானால், இனிமேல் நாம் அடிக்கடி சந்தித்துக் கொள்ளலாம் என்று சொல்லுங்கள்''.

கண்களைச் சிமிட்டிய வாறே கூறினாள் தேன்மொழி.

'' ஓ, தாராளமாக!''

—என்று தன் முத்துப்பற்களைக் காட்டி முறுவலித்தாள் தாமரையும்.

பிறகு, உபதேசியார் கிழவரின் உயர்ந்த பண்பாடு, பரந்த மனப்பான்மை—கிறித்துவ அறப் பணிக் குழுக்களின் (மிசின்களின்) கல்வி மற்றும் மருத்துவத் தொண்டுகள் அவற்றைப் போலக் கருணையோடு இயங்காமல் இந்தியத் துணைக் கண்டத்திலே முளைத்த சமயங்களும் சில சமயவாதிகளும் கடைப்பிடிக்கும் தன்னலப் போக்கு, செயலற்ற தன்மை ஆகியவை பற்றியெல்லாம் தொட்டுச் சென்றது அவர்களுடைய பேச்சு.

சிறிது நேரத்தில், சமையற்காரி சண்பகம் வந்து,

''இலை போடட்டுமா?'' —என்றாள்.

உடனே தாமரைக்கண்ணி,

'' என் தோழி எனக்காகச் சாப்பிடாமலே காத்திருப்பாள்; நான் வரட்டுமா?''

—என்று விடை கேட்டாள்; தப்பித்துக்கொள்ளப்பார்த்தாள்.

ஆனால் தேன்மொழி விடுவாளா?

மூவரும் உணவு அருந்தி முடிந்ததும், கையைக் கழுவி விட்டுத் தேங்காய்ப்பூத் துண்டினால் முகத்தைத் துடைத்துக் கொண்டிருந்த மாதவன் அருகே வந்தாள் அவள்.

''கொஞ்சம் மாடிப்பக்கம் வருகிறீர்களா?''

—என்று அவனுடைய மறுமொழியை எதிர்பார்க்காமலே மேலே ஏறிச் சென்றாள்.

மாதவனும் பின்தொடர்ந்தான்.

அறையினுள் நுழைந்ததும்—

பேச நினைத்திருந்ததையெல்லாம் மறந்துவிட்டவளைப் போல, அவனையே விழுங்கி விடுகிற மாதிரி இமைக்காமல் நோக்கினாள் தேன்மொழி.

அவளது இளமை ததும்பும் இதயத்தில் நுங்கும் நுரையுமாகப் பொங்கிப் பெருகிற்று வேட்கை வெள்ளம்! அவனுடைய கட்டான உடலை அப்படியே கட்டித் தழுவிக் கொள்ள வேண்டும் போல் ஒரு மோகச் சிலிர்ப்பு!

அடுத்த கணமோ....?

அவளது மனத்திரையில்—

அந்தக் கன்னடக் காரியின் அருவருப்பான உருவத்தின் கரிய நிழல்....

மாதவனின் அக்காளுடைய சேதாரமடைந்த சிற்பத் தோற்றம்......

வேட்கை வெள்ளம் மெள்ள வடிகிறது; மோகச் சிலிர்ப்பு மெள்ள மறைகிறது.

'' என்ன தேன்மொழி, என்ன அப்படிப் பார்க்கிறாய்?''

—அமைதியைக் கலைந்தான் அவன்.

> கலைத் துறையின் மூலம், சீரியக் கருத்துக்களை மக்களுக்கு எடுத்துச் சொல்ல முடியும் என்பதில் மிகுந்த நம்பிக்கை கொண்டவன் நான். முற்போக்கு நாடுகளெல்லாம் இதில் நம்பிக்கை வைத்திருக்கின்றனர். இது ஒரு தொழில்-வருமானம் பெறும் சாதனம் என்றில்லாமல் நாட்டுக்கு நற்கருத்துக் களைத் தரும் சிறந்த துறையாகும்.
>
> —பேரறிஞர் அண்ணா.

''ம்....ஒன்றும் இல்லை....''

'' ஒன்றும் இல்லாததற்குத் தான் இப்படி அவசரமாக அழைத்தாயா இந்த மாடி அறைக்கு?''

—மாதவன் கேலியாகச் சிரித்தான்.

அந்தச் சிரிப்பிலேதான் எவ்வளவு கவர்ச்சி—'சலதரங்கம்' கலகலத்த மாதிரி!

அந்தக் குரலிலேதான் எவ்வளவு கம்பீரம்—'கோட்டு வாத்தியம்' போல!

அந்தச் சிரிப்புக்கும் குரலுக்குமே தன் நெஞ்சத்தை அடமானம் வைத்துவிட்ட தேன்மொழி, நொடிப் பொழுதிற்குள் தலையைக் கவிழ்த்து மீண்டும் அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

'' தாமரைக் கண்ணியைப் பஸ்சிலே போகச் சொல்லிவிட்டு இரவு நீங்கள் இங்கேயே தங்கி விடலாமே என்று சொல்லத் தான் அழைத்தேன்.''

'' அது எப்படித் தேன்மொழி? அதோடு அலுவலகக் கணக்குக் கட்டுகள் வேறு நிறையத் தேங்கிவிட்டன என் வீட்டில். அவற்றையெல்லாம் இன்றிரவே சோதித்து முடித்து விடவேண்டும் என்றும் திட்டமிட்டிருக்கிறேன். அப்புறம் இன்னொரு முக்கியமான செய்தியை உனக்குச் சொல்ல மறந்து விட்டேனே!''

'' என்னங்க? ..''

'' தாமரைக்கண்ணிக்கு வேலை வாங்கிக் கொடுப்பதற்காக டாக்டர். பூங்கொடியிடம் போனேனா? அந்த அம்மா என்னை ஏற இறங்கப்பார்த்து விட்டு, 'உங்கள் கண்ணெல்லாம் உள்ளே போய்விட்டதே! முகமே வெளுத்து இருக்கிறதே! ஏதோ இரத்தசோகை கொண்ட மாதிரி தோன்றுகிறதே!'—என்று சொல்லிக்கொண்டே 'ஸ்டாத்தாஸ்கோப்பை' வைத்துச் சோதிக்கவே தொடங்கி விட்டார்கள்.''

'' அப்புறம்? ''

'' அப்புறம் என்ன? நாளைக் காலையிலேயே நான் ஒரு பெரிய டாக்டரைச் சந்

திக்க வேண்டுமாம். தானே அழைத்துக் கொண்டு போவதாகவும், தவறாமல் வந்துவிட வேண்டும் என்றும் கண்டித்துவிட்டார் பூங்கொடி. இந்த நிலையிலே இங்கேயே நான் தங்கினால் உன் அழகு முகத்தையே பார்த்துக்கொண்டு, உன் அமுதக் குரலையே கேட்டுக் கொண்டு இருக்கத்தான் தோணுமே ஒழிய எனக்குப் பிறகு உறக்கமா வரும்?''

—என்றவாறே அவளுடைய மாதுளங் கன்னத்தைச் செல்லமாகக் கிள்ளினான் மாதவன்.

அவனது வலிய கரத்தைத் தானும் தன் கையினால் பற்றித் தன் கதுப்புக் கன்னத்தோடு சேர்த்து அணைத்துக்கொண்டாள் தேன்மொழி. பழுத்த மாவிலையில் பட்டுப்பூச்சி இழைகிற மாதிரி, அவளது ரோஜாப்பூ இதழ்கள், அவனுடைய உள்ளங் கையில் மிதந்தன; ஈரப்படுத்தின. அதே சமயம், விழிக் குவளைகளும் நிரம்பி வழிந்தன நீரினால்.

''எதற்குத் தேன்மொழி இப்படிக் கலங்குகிறாய்? எனக்கு அதெல்லாம் ஒன்றும் இருக்காது; நீ கவலைப்படாதே!''

—அவளது கண்ணீர்த் துளிகளைத் தன் விரல்களால் சுண்டி எறிந்தான் மாதவன்.

தேன்மொழியோ விழிகளைக் குளமாக்கிக் கொண்டிருந்த அதே வேளையில், தானும் டாக்டரும் மறைமுகமாக எண்ணிக் கைவிட்ட ஒரு திட்டம் இப்போது ஈடேறவே போகிறது என்கிற களிப்பிலேயும் திளைக்கிறாள் என்பதை அவனால் எப்படி ஆருடமாய்க் கணிக்க முடியும்?

* * *

அன்று இரவு முழுதும்—

இமைகளையே மூட முடியாமல், படுக்கையிலேயும் கிடக்க முடியாமல் தவியாய்த் தவித்தாள் தேன்மொழி.

வறுமையை மட்டுமே மணந்து கொண்டவர்களின் வளமான கற்பனைக் கோட்டைகளைப் போலவே, உறக்கம் என்பதும் அவளைவிட்டு வெகுதொலைவுக்கு ஓடிவிட்டது.

தன் உயிரினும் மேலான காதலனுக்கு—தன் உள்ளக் கோவிலின் ஒரே தெய்வத்திற்கு—ஒருவித உடற்கோளாறும் இருக்கக்கூடாதே என்று தனக்குத் தெரிந்த தெய்வங்களையெல்லாம் வேண்டிக் கொண்டாள் அந்தப் பேதைப்பெண்!

மறுநாள் எப்போது பொழுது விடியும் என்று காத்திருந்தவளைப் போலப் பூங்கொடியின் இல்லத்திற்குப் படையெடுத்துப் போனாள் அவள்.

மாதவன் சற்று நேரங்கழித்தே வந்தான். முந்தின நாள் இரவு தானும் டாக்டர் வீட்டுக்கு வரப் போவதாக அவள் சொல்லவில்லையாதலால், அவளுடைய வருகை அவனுக்கு வியப்பையே அளித்தது.

பிறகு, தாமரைக்கண்ணி உட்பட நால்வருமாக ஒரு பெரிய டாக்டரிடம் சென்றனர்.

அவரைத் தனியே சந்தித்து ஏதோ பேசினாள் பூங்கொடி.

பின்னர், மேலோட்டமாகச் சோதனை செய்து பார்த்துவிட்டு மாதவன் படுக்கையில் இருந்துதான் தீர வேண்டும் என்று கண்டித்துவிட்டார் அவர்.

பத்து நாட்கள் கழிந்தன.

பல்வேறு சிகிச்சைகள் நடந்த பிறகு அந்தப் பெரிய டாக்டர் வெளியிட்ட வார்த்தைகளோ..?

(வளரும்)


## காலக் கண்ணாடி

காலத்தைக் கடந்து கம்பீரமாக நிற்கின்றன, தாஜ் மஹால் போன்ற கவின்மிகு கட்டடங்கள். காலம் பதித்துச் சென்ற சுவடுகளை நாம் அவற்றைக் கண்டதும் எளிதாக அறியமுடிவதில்லை. வனப்பு மிகுந்திருப்பினும் வாய் திறவாதவை, அந்தச் சின்னங்கள். அவற்றைவிட சாஸனங்களும் சரித்திரமுமே கால ஓட்டத்தைக் கண்ணாடிபோலத் தெளிவாகக் காட்டுகின்றன. நூல்கள் அனைவருடனும் அளவளாவுகின்றன. கடந்த காலத்தை மெய்யாகப் பேணிப் பாதுகாப்பவை, புத்தகங்களும், பிற தஸ்தாவேஜுகளுமே; சரித்திரம் எங்கு, எப்படிச் சாகாவரம் பெறுகிறது என்பதை வருங்காலத்துக்கு விளக்கிக் கூறி வழி காட்டுகின்றன, அவை.

மகத்தான நிகழ்ச்சிகள் பற்றியும், வரலாற்றை வகுக்கும் வல்லவர் குறித்தும் எழுதுவதையும் படிப்பதையும் முன்னிலும் எளிதாக்கியுள்ளது நவீனமுறைக் காகிதத் தயாரிப்பு. சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் நிறுவனம் தற்போது தயாரித்துவரும் தரமான காகிதம் அமரநிலைக்குரிய 'அந்த நாளை' ஆராய்ந்தறியப் பேருதவி புரிகிறது என்பதைக் கூறவும் வேண்டுமோ!

**சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் லிமிடெட்,**

பள்ளிப்பாளையம், சேலம் ஜில்லா, தென்னிந்தியா

SPB



"இந்த அழகிய புடவை எனக்கு ரொம்பவும் பிடித்திருக்கிறது....'' என்று மணிமேகலை, கைத்தறிக் கண்காட்சியிலிருந்து வாங்கி வந்த புடவையை எடுத்துக் காட்டினாள்.

உடனே அவள் கணவன் தமிழ்மாறன், '' ஆமாம். இந்தப் புடவையின் வண்ணம் கண்ணைக் கவர்கின்ற தல்லவா? இது உனக்கு ரொம்பப் பொருத்தமாக இருக்கும்....'' என்று தன் விருப்பம் தெரிவித்தான்.

கண்காட்சியில் வண்ண வண்ணத் துணிகள் வகைவகையாய்க் காட்சியளித்தன. புடவைகள், சட்டைத் துணிகள், போர்வைகள் இப்படி எத்தனையோ வகையான துணிகள்பூ வேலைப் பாடுகளுடன் காண்போரைக் கவர்ந்தன. ஆனால், அத்தனையும் வாங்க முடியுமா? மணிமேகலைக்கு எல்லாமே பிடித்திருந்தன. ஒவ்வொரு வகையில் ஒவ்வொன்று வாங்கி அணிந்து அழகு பார்க்க அவள் மனம் ஒருகணம் ஆசை வெள்ளத்தில் மிதந்தது. இப்படி அவள் எண்ண அலை மோதுவதற்குக் காரணம் கண்ணைக் கவரும் வண்ணத் துணிதான். இப்படி இந்தத் துணிகளுக்கு வண்ணந் தருவது யாருடைய கைவண்ணம்?

புடவையில் அழகிய பூக்களைப் பார்த்த மேகலைக்கு, இந்தத் துணியின் கதையைத் தெரிந்து கொள்ளவேண்டும் போலிருந்தது. உலகில் எத்தனையோ விஷயங்கள் மக்களுக்குத் தெரியாமலிருக்கின்றன; பலர் அதைத் தெரிந்து கொள்ளவும் விருப்பம் காட்டுவதில்லை. அன்றாடம் ஆயிரக்கணக்கான பேர் ரயிலில் பயணம் செய்கிறார்கள். எத்தனைப் பேருக்கு ரயிலின் கதை தெரியும்? இப்படி ஒவ்வொன்றையும் எடுத்துக் கொண்டால், எல்லாம் கேள்விக்குறியாகத்தான் முடியும். ரயிலைப் பற்றியும் தெரிந்துகொள்ளலாம். மயிலைப்பற்றியும் தெரிந்து கொள்ளலாம். எல்லாவற்றுக்கும் ஆர்வம் வேண்டும்.




இந்த ஆர்வம் மணிமேகலைக்கு வந்ததில் வியப்பில்லை. காரணம் அவள் கணவன் ஒரு புத்தகப்புழு. அவன் எல்லாத் தகவல்களையும் அறிந்தவன். தான் அறிந்தவற்றை மனைவிக்குச் சொல்லி மகிழ்வதிலே ஆர்வம் உள்ளவன்.

சாப்பாடு முடிந்து இருவரும் தம்வீட்டு மொட்டை மாடியில் ஓய்வாகப் பேசிக் கொண்டிருந்தனர். பால் நிலவு ஒளியைப் பொழிந்து கொண்டிருந்தது. மணிமேகலை பேச்சை ஆரம்பித்தாள்.

'' ஆமாம், இந்தப் புடவைக்கெல்லாம் நிறம், பூ முதலிய அலங்காரங்களெல்லாம் எப்படிச் செய்கிறார்கள்? அதுமட்டுமல்ல, பொதுவாகத் துணி எப்படித் தயாரிக்கப் படுகிறது? உங்களுக்குத்தான் தெரியுமே! அதைச் சொல்லுங்களேன். ''

'' மேகலை! புடவை மட்டுமல்ல. சட்டை, வேட்டி, போர்வையென எல்லாவகைத் துணிகளைத் தயாரிக்கவும் தமிழ் நாட்டில் நிறைய ஆலைகள் உள்ளன. இந்தத் தொழில் நுணுக்கங்களைக் கற்றுத்தர ஒரு தொழில் நுட்பக் கல்வி நிறுவனம் சென்னை அடையாறில் இருக்கிறது. அதற்குப் பெயர் 'நெசவுத் தொழில் நுட்பக் கல்வி நிறுவனம்' (Institute of Textile Technology) இதைக் கடந்த வாரம் போய்ப் பார்த்தேன்.

''அங்கு என்னென்ன நடக்கிறது? கண் காட்சியிலே வாங்கினேமே சேலை, அதைப்போல அங்குக் கிடைக்குமா? '' மணிமேகலை ஆர்வத்துடன் கேட்டாள்.

தமிழ்மாறன் சிரித்துக் கொண்டே, '' இந்த நிறுவனத்தில் கற்றுக் கொடுக்கத்தான் துணி நெய்யப்படுகிறதே தவிர, விற்று இலாபம்சம்பாதிக்க அல்ல. இந்த நிறுவனம் 1965-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் தொடங்கப் பட்டது. இதற்கு வேண்டிய இயந்திரங்கள் போன்ற தளவாடங்கள் வாங்கத் தமிழ்நாடு அரசு ஏழு இலட்ச ரூபாய் அனுமதித்துள்ளது. இப்போது உள்ளவை தவிர, மேற்கொண்டு நவீன இயந்திரச் சாதனங்களை வாங்க இந்நிறுவனம் திட்டமிட்டுள்ளது. ''

'' இதில் நான் கூடச்சேர்ந்து இந்தத் தொழிலைப்பற்றி தெரிந்து கொள்ளலாமா? ''

'' முடியாது. பள்ளி இறுதி வகுப்புத் தேர்வு பெற்றவர்களே இத்தொழில் நுட்பக் கல்வி நிறுவனத்தில் சேர்ந்து படிக்கலாம். இந்தக் கல்விப் பயிற்சி மூன்று ஆண்டாகும். பிறகு 'டிப்ளமா' வழங்கப்படுகிறது. இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் சென்னை வண்ணாரப்பேட்டையில் இதே போன்ற தொழில் நுட்பக் கல்வி நிறுவனம் ஒன்று இருந்தது. கோவையிலும் இதே போன்ற நிறுவனமொன்று

செயல்பட்டு வந்தது. ஆனால், அது மூடப்படவே சென்னையில் இது ஆரம்பிக்கப்பட்டது.''

''இது போன்ற நிறுவனங்கள் மற்ற மாநிலங்களில் உள்ளனவா?''

''நமக்குப் பிறகு ஆந்திரா, மைசூர், கேரளா மாநிலங்களில் இதுபோன்ற நிறுவனங்கள் ஆரம்பிக்கப்பட்டன. தமிழ்நாட்டில் சேலத்திலுள்ள இராஜபாளையத்தில் ஒரு தனியார் நிறுவனமும் உள்ளது. சென்னையில் உள்ள நிறுவனத்தில் ஆண்டுக்கு முப்பது பேர்வரை சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். இதுவரை அறுபது பேர்கள் தேர்வு பெற்றுப்பல்வேறு ஆலைகளில் மேற்பார்வையாளராகவும், பிற வேலைகளிலும் பணியாற்றுகிறார்கள். இங்குப் பயிற்சி பெற்றுத் தேறிய ஒரு மாணவனுக்கு உடனே ஏதாவதொரு ஆலையில் வேலை கிடைத்து விடும்.''



துணி உறுதியானதா என்பதைச் சோதிக்கும் கருவி

''அப்படியானால் இங்குப் பயிற்சி பெறும் ஒரு மாணவனுக்கு எல்லா வேலையும் தெரியும் என்று சொல்லுங்கள்......''

''ஆமாம், மேகலை! பஞ்சிலிருந்து துணி நெய்வதுவரை இங்குப் பயிற்சி தரப்படுகிறது. ஒரு மாணவனிடம் பஞ்சைக்கொடுத்தால் அதைத் துணியாக்கிக் கொண்டு வந்து கொடுப்பான். பஞ்சை நூலாக்கி துணிநெய்து, சாயம் போட்டுப் பூ வேலைப்பாடுகள் அமைத்து, அழகான துணியை உருவாக்கிக் காட்டவேண்டும். இந்த அளவுக்கு அவனுக்குப் பயிற்சி அளிக்கத் திறமை மிக்க விரிவுரையாளர்கள் இங்கே பணியாற்றுகிறார்கள்.''

''இங்குப் பயிற்சிபெற்ற ஒரு மாணவனுக்குப் பஞ்சிலிருந்து நூல் நூற்பது வரை, துணிநெய்து பூ வேலைப்பாடுகள் அமைப்பது வரையிலுள்ள இயந்திரவேலைகள் தெரியும் என்று சொல்லுங்கள்.''

''ஆமாம் இந்த நிறுவனத்தில் நான்கு பிரிவுகள் உள்ளன. 1. நூற்பு (Spinning) 2. நெசவு (Weaving) 3. துணி பரிசோதனை (Textile Testing) 4. சாயம் போடுதல் (Chemistry and dying) இந்தப் பிரிவுகளில் இப்போது அறுபது மாணவர்கள் பயிற்சி பெறுகிறார்கள். இலங்கையைச் சேர்ந்த சில மாணவர்களும் இங்குப் பயிற்சி பெற்று வருகிறார்கள்.''

''வெறும் கைத்தறித் துணிகள் மட்டும்தான் இங்குத் தயாரிக்கக் கற்றுத் தரப்படுகிறதா?''

''தற்போது இந்த அளவில் தான் உள்ளது. நவீன இயந்திரச் சாதனங்களை வாங்கியதும் டெரிலின், நைலான், டிரேயான் முதலிய துணிவகைகள் பற்றிய நுணுக்கங்களும் கற்றுத் தரப்படுமாம். இப்போது இங்கு 29 விசைத்தறிகள் உள்ளன. பருத்தி நூல், துணியின் தன்மை ஆகியவற்றை அறிந்து கொள்ளத் துணி பரிசோதனைப் பிரிவு உதவுகிறது''

''துணிகளுக்குப் பூ வேலைப்பாடுகள் எப்படி அமைக்கிறார்கள்?''



துணியில் படங்களை நெய்யும் ஜெக்கார்டு இயந்திரம்

''இங்குத் தேர்ச்சி பெற்ற ஓவியர் ஒருவர் இருக்கிறார். இவரது கற்பனையில் வண்ண வண்ண மலர்கள் உருவெடுக்கும்; அழகிய இயற்கைக் காட்சிகள், படங்கள் வடிவெடுக்கும். புடவையோ, போர்வையோ, அதிலுள்ள பூ வேலைப்பாடுகளுக்குத் இவர்தான் காரணம். முதலில் இவர் எந்த வண்ணப்புடவைக்கு எந்த மலர் அழகாக இருக்கும் என்று பார்த்து அதன்படி வரைந்து கொடுப்பார். அவர் கொடுப்பதை நெசவுத் தொழிலில் தேர்ச்சி பெற்றவர்கள் பரிசீலிப்பார்கள். ஓவியர் கொடுத்த பூவை நெசவிலும் அமைக்கலாம்; 'பிளாக்' மூலம் துணியில் அச்சுமிடலாம்.''

''இங்குக் கற்றுக் கொடுக்கும் போதே தயாரிக்கப்படும் புடவை, போர்வைகள் முதலியன ஓர் ஆண்டுக்குள் சேர்ந்துவிடுமே. அதை என்ன செய்வார்கள்?''

''ஆண்டுக்கோர் முறை அவைகளை ஏலத்தில் விற்று விடுகிறார்கள். ஏன், அந்த ஏலம் எப்போது வருகிறது என்று கேட்கிறாயா?''

''இல்லை, இல்லை!'' என்றாள் சிரித்துக்கொண்டே மணிமேகலை. தமிழ்மாறன் மேலும் தொடர்ந்தார்.

''இந்நிறுவன மாணவர்கள் ஒரு தமிழ் மன்றத்தையும் நடத்துகிறார்கள். ஆண்டு தோறும் நடக்கும் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றுப் பரிசுகளும் பெறுகிறார்கள். இவர்களுக்கு ஒரு நூலகமும் உள்ளது. இத்தொழில் சம்பந்தமான நூல்களும், பிற இதழ்களும் இதில் உள்ளன. சில மாணவர்கள் இங்குள்ள விடுதியில் தங்கிப் படித்து வருகின்றனர். இங்குப் படித்தவர்களே இந்நிறுவனத்தில் 'ஆபரேட்டர்' களாகப் பணியாற்றுகிறார்கள்.''

''இவர்கள் புத்தம் புதிய பூ வேலைப்பாடுகளை உருவாக்கிக் கொண்டேயிருக்கிறார்களே. அதை வெளியிலுள்ள துணித் தயாரிப்பாளர்களுக்கு அறிமுகப்படுத்துவதில்லையா?''

''இத்தகைய முயற்சி இவர்களுக்கு இருக்கிறது. இன்னொன்றையும் நாம் இங்குக் குறிப்பிட வேண்டும். ஒரு சட்டைத் துணி இருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். இந்தத் துணி உறுதியானதா, இல்லையா என்று எப்படிக் கண்டுபிடிப்பாய்?''

''துணியை நன்றாக இழுத்துப் பார்த்தால் தெரிகிறது. உறுதியா இல்லையா என்று......''

''ஆமாம். இப்படிப் பார்த்துச் சோதித்து அறிவதற்காக ஒரு கருவி இங்கு உள்ளது. இதற்குக் கிளாத் ஸ்ட்ரெங்த் டெஸ்டர்'' (Cloth Strength Tester) என்று பெயர். இதில் இணைக்கப்பட்டுள்ள ஒரு துண்டுத்துணியை, இரு பக்கமும் பிடித்துள்ள கருவி இழுக்கிறது. இதேபோல நூல் உறுதியாக இருக்கிறதா என்பதைக் கண்டு பிடிக்கவும் ஒரு கருவி இருக்கிறது. இவையிரண்டும், துணியும் நூலும் எந்த அளவுக்கு உறுதியானவை என்பதைக் கடியாரம் போன்ற எண்களுள்ள கருவியில் காட்டி விடுகின்றன. இப்போது இது சம்பந்தமாக நவீனக் கருவி ஒன்று வந்துள்ளதாம். அது காற்று அழுத்தத்தினால் துணியைக் கிழியச் செய்து அதன்

த் கருவி விரைவில் இங்கு வர விருக்கிறது ''.

'' அங்குள்ள இயந்திரங்களை யெல்லாம் போய்ப் பார்த்தீர் களா? ''

'' பஞ்சிலிருந்து திரி உண்டாக் கும் இயந்திரம், திரியை ஒரே கனமாக, ஒழுங்காக ஆக்கும் இயந்திரம், திரியிலிருந்து நூல் இழைகளை எடுக்கும் ஸ்பீட்ப்ரேம் ( Speed Frame ) என்ற இயந்திரம் முதலியனவற்றைப் போய்ப் பார்த்தேன். இன்னொரு இயந்திரம் ஒன்று உள்ளது. அதற் குப் பெயர் ஜெக்கார்டு மிஷின்.''

'' அப்படியென்றால்? ''

'' ஜெக்கார்டு என்னும் பிரஞ் சுக்காரர் இதைக் கண்டுபிடித் தார். அதனால் அதற்கு அப்பெயர் வந்தது. இதன் தனிச் சிறப்பு என்னவென்றால், நமக்கு எந்தப் படம் வேண்டும் என்று எண்ணு கிறோமோ அதை இயந்திரம் நெய்துவிடும். ''

'' அது எப்படி? மந்திர தந்திர வேலையா? ''

இதன் வேலையும். காந்தியடிகள் அல்லது அறிஞர் அண்ணா படம் வேண்டும் என்று வைத்துக்கொள் வோம். அதை ஓவியர் வரைந்து கொடுப்பார். ஒரு கருவி ஓவியர் வரைந்த மாதிரியே ஓட்டை களைப்போடும். அவ்வாறு துளை போட்ட அந்தப் படத்தை இந்த இயந்திரத்தின் மேலுள்ள ஒரு பெட்டி போன்ற அமைப்பில் பொருத்தி விடுவார்கள். இந்தப் படத்திலுள்ள துளைக்கும், அதை யொட்டிவரும் இழை போன்ற கயிறுகளுக்கும் தொடர்பு இருக் கிறது. துணி நெய்து கொண்டு வரும்போதே, குறிப்பிட்ட அந் தப்படமும் நெய்யப்பட்டுவிடும்.

'' அப்படியா? விந்தையாக இருக்கிறதே! ''

'' ஆமாம். இந்த விந்தையான கருவி கம்ப்யூட்டருக்கும் முன் னோடியாகத் திகழ்கிறதாம். துணியில் பெரிய பெரிய அளவில் பூக்களோ இயற்கைக் காட்சி களோ, உருவப் படங்களோ அமைக்க வேண்டுமானால், அதா வது நெய்ய வேண்டுமானால்

டும். எந்த அளவுக்குப் பெரிதாக வேண்டுமோ அந்த அளவுக்குப் படத்தை அமைத்து, அதற்கான தனிக் கருவிகளில் நெய்ய வேண்டும்.

'' ஒரு விழாவுக்காக இராணி எலிசபெத்துக்குத் தேவையான பூ வேலைப்பாடுகள் மிகுந்த உடை ஒன்றும், தரை விரிப்பு ஒன்றும் செய்ய, விழா நடப்பதற்கு ஒன் றரை ஆண்டுகளுக்கு முன்பே தயார் பண்ணக் கொடுத்து விட் டார்களாம். அவர்களுக்குப் பதின்மூன்றும் எண்ணில் நம் பிக்கை கிடையாது இல்லையா? அதற்காகப் பதின்மூன்று அடிக் குக் குறைவாகவே, அதாவது எப்படிப் பார்த்தாலும் பதின் மூன்று என்று அகலமோ உய ரமோ வராத அளவு பார்த்துக் கொண்டார்களாம். ''

'' நன்றாகத்தான் இருக்கிறது. இன்று நல்ல தகவல்களைத் தெரிந்து கொண்டேன். உங் களுக்கு ரொம்ப நன்றி, '' என்று சொல்லிக்கொண்டே எழுந்தாள் மணிமேகலை.

## மரங்கள் வளர அதிர்ச்சி வைத்தியம்.

அதிர்ச்சி வைத்தியம் சில மனிதர்களுக்கு நல்ல பலனைக் கொடுப்பதுண்டு. ஆனால், எல்லா மரங்களுக்கும் இந்த அதிர்ச்சி (ஷாக்) வைத்தியம் துரித வளர்ச்சியைத் தருவ தாகப் பிரிட்டிஷ் விஞ்ஞானி டாக்டர் மில்லார்டு என்பவர் தெரிவித்திருக்கிறார்.

கன்றாக இருக்கும் செடி களில் கம்பிகள் மூலம் மின் சாரத்தைச் செலுத்தினால், அதன் இயற்கையான வளர்ச்சி யைவிட அதிக வேகமாக அது பெரிய செடியாக வளருகிறது.

செடிகளில் மின்சாரத்தைப் பாயவிட்டால் இவை விரைவில் மரமாகின்றன.

ஒரு மூன்று மாத காலத்தில் தானாக வளரும் வளர்ச்சி யுடன், ஷாக் பெற்று அடையும் வளர்ச்சியை ஒப்பிட் டால் பின்னது கிட்டத்தட்ட இருமடங்கு இருப்பது தெரி கிறது என்கிறார் இவர்.

இந்த விவசாய விஞ்ஞா னிக்கு இந்த ஆராய்ச்சி தோன்றியதே அதிசயமானது.



மரங்கள் வளர்ச்சிக்கான சத் துக்களை மண்ணிலிருந்து பெறு கிறது. வேரிலிருந்து உச்சி வரை செல்லும் இந்தச் சத்துப் பொருளில் சிறிதளவு-மிகக் குறைந்த அளவு-மின்சக்தியும் இருக்கிறது. மரங்கள் வளர்ச் சிக்கு இந்த மின்சக்தியும் உதவுகிறது என்பது இவர் கண்டுபிடிப்பு. இந்த அடிப் படையில் அதிகமாக மின்சக் தியைச் செடிகளின் மீது பாய்ச்சி னால் இவை துரிதமாக வளரு கின்றன என்பது அவர் கருத்து.

அடுத்தக் கட்டமாக மின்சக்தி யுள்ள பாட்டரிகளைச் செடிகளு டன் இணைத்தே வைப்பது பற் றியும் இவர் யோசித்து வரு கிறார். செடிகளின் வளர்ச்சி சிக்கு இந்தமுறை பலனளிக் கும். ஆனால், மரங்களுக்கு உதவுமா என்பதை ஆராய்ந்து தான் கூறவேண்டும் என்றார் இவர். அதுவும் முடியும் என்றால், பிறகு மரம் உற் பத்தி பற்றி எந்த நாடும் கவ லையே கொள்ளத் தேவை யில்லை!

1—2—7



# ஏரிருபது

பெற்றதிரு நாட்டில் பெரும்பசியை நீக்கிடவே
உற்றதொழில் ஆகும் உழவு.

தென்புலத்தில் இன்பத் திருமண்ணில் நன்செய்யில்
பொன்விளைக்கும் வேளாண்மை போற்று.

நல்லரகம் தக்கவுரம் நாள்தோறும் காப்புமுறை
நெல்விளைவை ஓங்கவைக்கும் நேர்.

மெய்யாக ஓர்மா விளையுமறை நூறுகலம்
ஐ-ஆர்-எட் டென்றே அறி.

உழுதோன் கணக்கிட்டால் ஒன்றும்மிஞ்சா தென்னும்
பழமொழிதான் பொய்த்ததின்று பார்.

ஓர்மா நடுவதற்கே ஓர்பத் திரண்டுகுழி
தேர்ந்தெடுத்து நாற்றங்கால் செய்.

விரைவாய் நடவுநட வேண்டுமென்றால் அந்தச்
சுருள்பாய் நாற்றங்கால் தோது.

உரமிடுமின் நன்செயிலே உற்பத்தி ஓங்கத்
திறம்பெறுமின் ஏர்த்தொழில் தேர்ந்து.

பண்ணைஎரு வென்னும் பழஞ்சாணம் சாம்பருமே
மண்ணைவள மாக்கும் மருந்து.

அடியுரம் மேலுரம் ஆய்ந்த அளவில்
நடவுக்கு முன்பின்னும் நல்கு.

பொட்டாசு போன்றவற்றைப் போட்டுப் புதுமுறையாய்
நட்டால் பெருமகசூல் நம்பு.

உவர்நிலமும் சீர்பெறவே உண்டாம் வழிகள்
அவையறிந்து நன்னிலமாய் ஆக்கு.

பொன்னும் பயிரழிக்கும் பொல்லா எலிகளையே
முன்னால் ஒழிப்பாய் முனைந்து.

தண்டமுகல் தூரமுகல் சார்ந்துவரும் நோய்பலவும்
கண்டொழித்தல் நெற்பயிர்க்குக் காப்பு.

நெல்மாவுப் பூச்சிதனை நேரத்தில் பார்த்ததனைக்
கொல்வாய்நீ பாரத்யான் கொண்டு.

பூக்கும் குறுவையின் போதழிக்கும் தீப்புகையான்
போக்கத்தூள் பி.எச்.சி. பேடு

தப்பாமல் கூட்டுறவுச் சங்கத்தால் நன்மைபல
எப்போதும் பெற்றிடலாம் இன்று.

தீவிரச் சாகுபடித் திட்டத்தால் நெல்வகையின்
மாவிளைவைக் காண்பாய் மகிழ்ந்து.

வாடும் பயிர்கண்டு வாடும் மனங்கொண்டு
பாடுபடச் செல்லுதலே பண்பு.

ஏர்காத்து நாட்டின் எழில்காத்துச் செந்தமிழ்த்தாய்ச்
சீர்காத்து வாழ்தல் சிறப்பு.

—மு. வெங்கடேசன்

# ஆராய்ச்சிப் பணியில் அரசின் சாதனை



ஒரு நோயாளி வருகிறார். மருத்துவர் அவரைப் பரிசோதிக்கிறார் ஆனால், நோயாளிக்கு என்ன நோய் என்று அவரால் அறிய முடியவில்லை. உடனே நோயாளியின் இரத்தத்தைச் சிறு கண்ணாடிக்கருவிகளில் வைத்து அனுப்புகிறார். எங்கு? கிண்டியில் உள்ள கிங் ஆராய்ச்சி நிலையத்துக்கு!

ஓர் ஊரில் காலரா பரவி இருப்பதாகச் சந்தேகப் படுகிறார்கள். ஆனால், அதனைத் திட்டமாகச் சொல்ல முடியவில்லை. ஒரு நோயாளியின் மலத்தை ஆராய அனுப்புகிறார்கள். எங்கு ? கிங் ஆராய்ச்சி நிலையத்துக்கு !

ஆம்! கிங் ஆராய்ச்சி நிலையம் (Kirg Institute) சென்னை, கிண்டியில் இருக்கிறது. 19-வது நூற்றாண்டில் தொடங்கப்பட்ட இந்த நிலையம் இப்போது 40 ஏக்கர் பரப்பளவில் அமைதியான இயற்கைச் சூழ்நிலையில் அமைக்கப்பட்டிருக்கிறது. நல்ல காற்றோட்டமான பரந்த இடத்தில், மிக முக்கியமான பணிகளில் ஈடுபட்டிருக்கும் இந்த ஆராய்ச்சி நிலையத்துக்குக் ‘ கிங் ’ என்ற பெயர் எப்படி வந்தது?

வெள்ளையர் ஆட்சிக் காலத்தில் லெப்டினென்ட் கர்னல் டபிள்யூ. ஜி. கிங் என்பவர், அம்மை குத்தும் இலாகாவில் இன்ஸ்பெக்டராகவும், சுகாதார உதவி ஆணையராகவும் பணியாற்றிக் கொண்டிருந்தார்.

கிருமிகள் ஆராய்ச்சிக்காகவும் அம்மை, காலரா, பிளேக் முதலான நோய்களுக்கான தடுப்பு மருந்துகளைத் தயார் செய்வதற்காகவும், சென்னை நகரிலேயே ஆராய்ச்சிக் கூடம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்று இவர் பெருமுயற்சி செய்தார். தமது விருப்பத்தை அக்காலச் சென்னை அரசுக்கு விண்ணப்பம் செய்தார். பல காரணங்களால் இவருடைய விண்ணப்பத்தை அரசினர் புறக்கணித்து வந்தார்கள். பிறகுதான் இதற்கொரு விடிவு காலம் வந்தது.

அப்போது சென்னை ஆளுநராக இருந்த ஆம்தில் பிரபு ( Lord Ampthill) ஓர் ஆராய்ச்சிக் கூடத்தைத் திறந்து வைத்தார். அப்போது அவர் கிங் துரை பதினைந்து ஆண்டுகளாக இந்த ஆராய்ச்சி நிலையத்துக்காகப் பாடுபட்டதைக் குறிப்பிட்டு, இந்த நிலையத்துக்கு அவர் பெயரையே வைப்பதுதான் பொருத்தமானது என்பதை எடுத்துச் சொன்னார். அன்றுமுதல் இது ‘கிங் ஆராய்ச்சி நிலையம்’ (King Institute) . என்ற பெயருடன் விளங்கி வருகிறது.

இந்தப் பழம்பெரும் ஆராய்ச்சி நிலையத்தில் 800 பேர் பணியாற்றுகிறார்கள். இவர்களில் 30 பேர் மருத்துவர்கள், பெண் மருத்துவர்களும் இங்கு அதிகமாக இருக்கிறார்கள். 20 பேர் விஞ்ஞானப் பட்டதாரிகள். மற்றும் கால்நடை மருத்துவர்கள் நான்கு பேர்களும், தொழில் நுட்ப உதவியாளர்களும் பணியாற்றுகிறார்கள்.

இந்தியாவிலேயே முதன் முதல் துவக்கப்பட்ட பெருமை இந்த ஆராய்ச்சிநிலையத்தையே சாரும். இம்மாதிரியான ஆராய்ச்சி நிலையங்கள் பம்பாயிலும், ஐதராபாத்திலும் இருந்தாலும், பெருமளவு அனைவராலும் போற்றிப் புகழும் வண்ணம் பணியாற்றிவருவது சென்னை கிங் ஆராய்ச்சி நிலையமே.

நோய்கள் எப்படிப் பரவுகின்றன என்பது நமக்குத் தெரியும். காற்று, தண்ணீர், உணவு முதலானவைகள் மூலம் அவை பரவி மக்களுக்குப் பெருந் தீங்கை உண்டு பண்ணுகின்றன. கிருமிகளில் எத்தனையோ வகைகள் உண்டு. அத்தனை வகைக் கிருமிகளிலிருந்தும் அத்தனை வகை நோய்கள் உற்பத்தி செய்யப்பட்ட வண்ணம் உள்ளன. இந்தக் கிருமிகளையெல்லாம் நாம் பார்க்க முடியுமா? எந்தெந்தக் கிருமிகள் எந்தெந்த நோயை உண்டு பண்ணுகின்றன என்று நாம் தெரிந்து கொள்ள முடியுமா? முடியும். கிங் ஆராய்ச்சி நிலையத்தில் இவைகளையெல்லாம் பார்க்கமுடியும். ஆம்! இந்தக் கிருமிகளெல்லாம் இங்குவளர்க்கப்படுகின்றன, ஆராய்ச்சிக்காக!

நீரைப் பரிசோதிக்கவும், உணவுக் கலப்படத்தைக் கண்டுபிடிக்கவும், இந்த நிலையத்தார் முன்பு ஆராய்ச்சி செய்து வந்தார்கள். இப்போது அவை தனித்தனி நிலையங்களால் பரிசோதிக்கப்பட்டு வருகின்றன. இந்தக் கிங் நிலையத்தில் ‘என்னென்ன’ இருக்கின்றன?

பாம்பு, தேள், விஷப்பூச்சிகள், எலி, முயல், குதிரைகள், கன்றுக் குட்டிகள், கிருமிகள். . . . . . !

‘‘ஐயோ போதும்! இன்னும் சொல்லாதீர்கள்’’ என்று நீங்கள் சொல்வதற்கு முன், இந்த நிலையத்தில் என்னென்ன ‘பணிகள்’ நடைபெறுகின்றன என்பதைத் தெரிந்து கொள்வோம்.

இரண்டாவது உலகப் போரின்போது நமது வீரர்கள் ஆங்காங்கு முகாம்கள் அமைக்க வேண்டியிருந்தது. அப்போது வேலையாட்களும் அங்குத் தங்க நேர்ந்தது. அவர்கள் குடிக்கச் சுத்தமான நீர் தேவை. நீரை உபயோகிப்பதற்கு முன் அதிகாரிகள் ஆங்காங்கே உள்ள நீரை, கிங் ஆராய்ச்சி நிலையத்துக்கு அனுப்பிப் பரிசோதனை செய்து வந்தார்கள்.

ஒரு சமயம் நெல்லூரில் மக்கள் ஒருவகை நோய்க்கு ஆளானார்கள். இந்த நோய் முதுகு எலும்பையும், கீல்களையும்

தாக்கும். இந்நோயாளிகள் குனிந்து நிமிர முடியாது. பற்களிலும் மாறுதல்கள் தோன்றினவாம். நோய் உள்ள இடத்திலும், நோய் இல்லாத இடத்திலும் உள்ள கிணறுகளிலிருந்து தண்ணீரை எடுத்து, கிங் ஆராய்ச்சி நிலையத்துக்கு அனுப்பினார்கள். நோய் பரவியிருந்த ஊரிலிருந்து எடுத்த நீரில் ஒருவகை உப்பு கலந்திருந்தது; நோய் இல்லாத ஊரில் எடுத்த நீரில் இந்த உப்பு இல்லை என்பது பரிசோதனையிலிருந்து தெரியவந்தது.

இப்படி ஆராய்ச்சிகள் செய்து வரும் இந்நிலையத்திற்கு 'தடுப்பு மருந்து தயாரிக்கும் நிலையம்' என்ற பெயருமுண்டு. இந்த நிலையத்தில் இப்போது ஆறு பிரிவுகள் இருக்கின்றன. அவை
1. அம்மைப்பால் தயாரித்தல்.
2. நஞ்சுமுறிப்புப் பிரிவு.
3. குருதி சேமிக்கும் நிலையம்.
4. நோய்கள் பரிசோதனைக் கூடம்.
5. பொருள்களின் தரத்தைக் கண்டு பிடித்தல்.
6. காலரா, டைபாய்டு தடுப்பு மருந்துப் பிரிவு.

இவ்வாராய்ச்சிகளில் தேர்ந்த விஞ்ஞானிகள் பலர் இந்நிலையத்தில் செயல்பட்டு வருகின்றனர். ஆராய்ச்சிகளுக்குத் தேவையான எல்லாச் சாதனங்களும் இங்கு இருக்கின்றன. இங்குத் தயாரிக்கப்படும் அம்மைப்பால் தமிழ்நாட்டிற்கும், அந்தமான், ஒரிசா, வங்கம், ஆகிய இடங்களுக்கும் அனுப்பப் படுகின்றன. அம்மைப்பால் கன்றுகள் மூலமாகத் தயாரிக்கப்படுகின்றது. அதற்காக ஒன்றரை வயதுள்ள, நோயற்ற கன்றுகள் இங்கு வளர்க்கப்படுகின்றன. இந்தக் கன்றின் வயிற்றினடியில் நன்கு மழிக்கப்பட்டு, கீறி அந்த இடத்தில் அம்மை குத்தப்படுகின்றன. அந்த இடம் பொங்குகிறது. அதைச் சிறு கரண்டியில் சுரண்டி எடுத்தால் ஒரு திரவம் கிடைக்கிறது. இதைக் கொண்டு இவ்வாராய்ச்சி நிலையத்தில் அம்மைப்பால் தயாரிக்கப்படுகிறது.

அம்மைப் பாலைச் சிறுசிறு புட்டிகளில் ஊற்றிக் குளிர்ந்த அறையில் வைத்துக் காப்பாற்றுகிறார்கள். அம்மைப் பாலைப் பொடியாகவும் தயாரிக்க முடியும். இதோடு நீர்கலந்து அம்மைப் பால் உண்டாக்கிக் கொள்ளலாம்.

ஒரு ஊரில் காலரா என்று வைத்துக் கொள்வோம். அதனைத் திடமாக அறிவதற்கு, அந்த நோயாளியின் மலத்தை இந்த நிலையத்துக்கு அனுப்பிப் பரிசோதிக்கிறார்கள். பிளேக் நோய் ஊரில் பரவும்பொழுது எலிகள் இறந்து விழுகின்றன. அப்படி விழும் எலியினுடைய ஈரல்களை எடுத்துக் கண்ணாடித் துண்டில் தேய்த்து உருப்பெருக்காடியின் மூலம் சோதனை செய்து, அந்நோய் பரவுகின்றதா என்பதை அறிந்து சொல்கிறார்கள். சில சமயங்களில் நோயுள்ள ஊர்களுக்கும் இந்த நிலையத்தினர் சென்று சோதனை நடத்துகின்றனர். நோய் பரவுவதற்கு முன்பே, அதனை மேலும் பரவவிடாமல் தடுக்க இந்த நிலையம் வழிவகை செய்து வருகிறது. வெள்ளத்துக்கு அணை போடுவது போல இந்த நிலையம் நோய்க்குத் தடை போடுகிறது.

இவ்வளவு நுணுக்கமான ஆராய்ச்சிகள் பல செய்து வரும் இந்நிலையம், பல்கலைக் கழகப்பட்ட மேற்படிப்பு மாணவர்களுக்கும் பயிற்சி தருகிறது. எம்.டி., பி.எச்டி., எம்.எஸ்சி., போன்ற பட்டப் படிப்புகள் இங்குக் கற்றுத் தரப்படுகின்றன.

இங்குள்ள நஞ்சு (விஷம்) முறிவுப் பிரிவின் வேலை என்ன?

டிப்தீரியா என்ற ஒருவகை நோய் சிறுப்பிள்ளைகளைத் தாக்குகின்றது. இந்த நோய் தொண்டையில் பரவி ஒருவகையான நஞ்சு நீரை இரத்தத்தில் புகுத்தி விடுகின்றது. இரத்தத்தில் இந்த நஞ்சுநீர் பரவும் போது, இதயமும் வேறு சில தசைகளும் வலி குன்றித் தளர்ந்து போகும்.

டிட்டனஸ் என்னும் வாய்க் கட்டம்மை நோய் ஒன்று இருக்கிறது. காயம் பட்டவர்களைத் தாக்குகின்ற இந்த நோயினால் நோயாளி பிழைப்பது அரிது. டிட்டனஸ் கிருமிகள் காயம் பட்ட இடத்தில் தங்கி வளர்ந்து நஞ்சுத் தன்மையை உடலில் பரவச் செய்யும். உடலின் தசைகள் அனைத்தும் இறுகி நின்று, பொறுக்க முடியாத வேதனையை விளைக்கும். பின்பு மூச்சு அடைப்பட்டு உயிருக்கே கேடு வரும்.

இவ்விரண்டு நோய்களையும் வராமல் தடுக்க என்ன வழி?

டிட்டனஸ் கிருமிகளைக் கருவிகளில் வைத்து வளர்த்து, அதன் நஞ்சைப் பொழியச் செய்வார்கள். இந்த நஞ்சுநீர் கொடிய இயல்புடையது. ஒரு சிறு துளியும் மிகக் கேடு விளைக்கும் இந்த நஞ்சுநீரைச் சிறு பிராணிகளுக்குள் புகுத்தி ஆராய்ந்தனர். அப்பிராணிகள் தசை இறுக்கம் அடைந்து இறந்தன. ஆனால், இந்த நஞ்சு நீரைக் குதிரைகளுக்குச் செலுத்தினால் அவை பாதிக்கப் படுவதில்லை; அதற்கு இரத்தம் அதிகமாக இருப்பதே காரணம். நஞ்சு நீரை முறிக்க ஒருவகைத் தடைப்பொருள் குதிரையின் இரத்தத்தில் உண்டாகிறது. குதிரையின் இரத்தத்தை எடுத்து, நஞ்சு முறிவு மருந்துகள் தயார் செய்கிறார்கள். இப்படி ஒவ்வொரு நஞ்சுள்ள நோய்க்கும் அந்தந்த நோய்க் கிருமிகளை வளர்த்து அதன் நஞ்சைக் குதிரைக்குச் செலுத்தி, குதிரை இரத்தத்திலிருந்து நோய்த் தடுப்பு மருந்து தயாரிக்கிறார்கள்.



தமிழகத்திலுள்ள எல்லா அரசினர் மருத்துவ மனைகளுக்கும், மத்திய இரத்தசேமிப்பு நிலையமாக இந்தஆராய்ச்சி



1—2—7எ



ஆராய்ச்சிப் பிரிவில் ஒரு காட்சி

நிலையம் விளங்கி வருகிறது. இரத்தச் சேமிப்புச் சம்பந்தமான எல்லா உபகரணங்களையும் இந்த நிலையமே தயாரித்து மருத்துவ மனைகளுக்கு வழங்குகிறது.

மனித இரத்தத்தை நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை; 1. ஏ.பிரிவு, 2. பி.பிரிவு, 3. ஓ. பிரிவு. 4. ஏ. பி. பிரிவு. ஏ பிரிவு இரத்தமும், பி. பிரிவு இரத்தமும் ஒன்றுடன் ஒன்று சேராது. ஓ.பிரிவு இரத்தம் வேறு பிரிவைச் சேர்ந்தவர்களுடைய இரத்தத்துடன் சீராகக் கலந்து கொள்ளும். ஆனால், ஏ.பி. பிரிவைச் சார்ந்தவருடைய இரத்தம் வேறு பிரிவினருடைய இரத்தத்துடன் சீராகச் சேருவதில்லை. இதனால், இரத்தச் சேமிப்பில் இப்பிரிவினருடைய இரத்தத்தை ஏற்றுக் கொள்வதில்லை.

பாகிஸ்தான் நம்மீது போர் தொடுத்த போது, ஏராளமான பேர் எழும்பூரிலுள்ள செஞ்சிலுவைச் சங்கத்தில் இரத்த தானம் செய்தார்களல்லவா? இந் ஆராய்ச்சி நிலையத்தினர் தான் அங்குச் சென்று இரத்தத்தைச் சேமித்தார்கள். இப்போதும்சேமித்து வருகின்றார்கள். இப்படிச் சேமித்து வைக்கும் போது இரத்த வடிகங்கள் (Corpuscles) அடியில் தங்கியிருக்கும். அதன்மீது தெளிந்த நீரும் (Plasma) தேங்கலாகத் தங்கி நிற்கும். இவ்விரண்டு பொருள்களையும் வேறு வேறாகப்பிரிக்கலாம்.

இரத்த வடிகங்களையும், வடிகங்களுக்கு மேல் தங்கியிருக்கும் நீரையும் தனியே பயன்படுத்தலாம். இரத்த நீரைச் சுமார் ஓர் ஆண்டு வரைக்கும் காப்பாற்றிப் பயன்படுத்தலாம். இரத்த வடிகங்களைப் பத்து நாள் வரையில் காப்பாற்றிப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

கொடிய காயங்கள் படும் பொழுதும், மிகப் பெரிய இரணச் சிகிச்சைகள் நிகழும் போதும், தீக்காயங்கள் ஏற்படும் பொழுதும் நாடித் தளர்வு பொதுவாக ஏற்படும். அப்பொழுது இரத்த நீரை மட்டும் நோயாளியின் நரம்பு வழியாக உடலில் செலுத்தினால் நோயாளி நாடி வலிவுறும். உயிர் பிழைப்பான். இரத்த நீரை முன்னரே சேமித்து வைப்பதால் காலந் தாழ்த்தாமல் நோயாளிக்கு உதவ முடியும். இரத்த வடிகங்களை இரத்தச் சோகை பிடித்த நோயாளிக்குச் செலுத்துவதனால் அவனுடைய இரத்தம் தெளிந்து செழுமை பெறும். இப்படி ஆபத்துக்கு உதவும் சமய சஞ்சீவியாக இந் நிலையம் இருந்து வருகிறது.

இரத்தத்தைப் பொடியாகவும் ஆக்கிப் பயன்படுத்தி வருகிறார்கள். பாகிஸ்தான் போரில் காயமடைந்த எண்ணற்ற வீரர்களுக்குக் இந் நிலையம் இரத்தப் பொடியை அனுப்பியிருக்கிறது. செஞ்சிலுவைச் சங்கத்தின்மூலம் அமைச்சர்களின் துணைவியர்கள், பிரமுகர்கள், பொதுமக்கள் முதலானோர் சுமார் 250 பேர் இரத்தம் வழங்கியுள்ளனர். இதைத் தவிர வெளியிடங்களுக்கும் சென்று சுமார் 250 பேர்களிடம் இரத்த தானம் பெற்றிருக்கிறார்கள். இதற்காக இரண்டு இரத்தச் சேமிப்பு வண்டிகள் இங்கே உள்ளன. சில சமயங்களில் சிறைக் கைதிகளிடமிருந்தும் இரத்த தானம் பெறுவதுண்டு. அதற்காக அவர்களுக்கு 15 நாள் உணவு வழங்கப்படுகிறது.

சேகரிக்கப்பட்ட இரத்தத்திலிருந்து திரவத்தைத் தனியாக எடுக்கிறார்கள். ஒரு கருவியின் மூலம் இத்திரவத்தைத் திடப் பொருளாகப் பொடியாக மாற்றுகிறார்கள். இத்திடப்பொருள் ஐந்தாண்டுகள் வரை கெடாமல் இருக்கும். தேவையான போது இதை இரத்தமாக ஆக்கிக் கொள்ளலாம். போர் முனையில் குண்டுக் காயம் பட்ட வீரர்களுக்கு இது பெரிதும் உதவும்.

மருத்துவ மனைகளில் சேமிக்கப்படும் இரத்தத்தை ஏழு நாட்கள் வரை வைத்திருப்பார்கள். அதற்குப் பிறகு இந் நிலையத்துக்கு அவற்றை அனுப்பிவிடுவார்கள். இங்கு அவைகளைத் திடப் பொருளாக மாற்றி

புட்டிகளில் அடைத்துப் பாதுகாப்பாக வைத்து அவசரக் காலத்துக்கு உதவுவார்கள்.



லெப்டினெண்ட் கர்னல் கிங்

இதோடு இவர்கள் பணி நின்றுவிடவில்லை. குளுகோசும் தயாரிக்கிறார்கள். 'டிஸ்டில் வாட்டரும்' சிறு சிறு குப்பிகளில் தயாரித்து மருத்துவமனைகளுக்கு அனுப்புகிறார்கள். மேலும், இப்போது தேள் கடிக்கு மருந்து ஒன்றையும் கண்டுபிடிப்பதில் முனைந்துள்ளார்கள். பாம்பு, தேள் முதலானவைகளிடமிருந்து அதன் நஞ்சை எடுக்க முன்பெல்லாம் அதனைக் கொல்ல வேண்டியிருந்தது. இப்போது மின்சார அதிர்ச்சியின் மூலம் நஞ்சை மட்டும் எடுக்கலாம். அந்த நஞ்சிலிருந்து மருந்துகள் தயாரிக்கின்றனர்.

தயாரிக்கப்பட்ட மருந்துகள் நல்ல பலனை அளிக்கின்றனவா என்று பரிசோதிக்க வெள்ளெலிகள், முயல்களை இங்கு ஆயிரக் கணக்கில் வைத்துள்ளனர். மருந்துகளுக்குக் குதிரையின் இரத்தத்தைப் பயன்படுத்துவதற்காக இங்குச் சுமார் 100 குதிரைகள் இருக்கின்றன. சில குதிரைகள் ராணுவத்தினராலும், 'ரேஸ் கிளப்' பினராலும் அன்பளிப்பாக வழங்கப்பட்டவை. சில குதிரைகள் அமிர்தசரஸ், டெல்லி முதலிய இடங்களிலிருந்து விலைக்கு வாங்கப்பட்டவை.

இங்குத் 'தொழில் நுட்ப ஆய்வுக் கூடப்பள்ளி' (School of Laboratory Technology) ஒன்று இருக்கிறது. இங்கு ஆய்வுக்கூடச் சம்பந்தமான தொழில் நுட்பங்களைக் கற்றுத்தந்து, சான்றிதழ் தரப்படுகின்றது. தனியார் ஆய்வுக் கூடங்களில் பணியாற்றுபவர்கள் கூட இங்கு வந்து பயிற்சி பெறுகிறார்கள். தொற்று நோய்த் தடுப்பு ஊசிகள் போட்டுச் சான்றிதழ் தருவதும் இவர்கள் பணிகளில் ஒன்று.

மனித குலத்துக்கு மகத்தான பணியில் ஈடுபட்டிருக்கும் கிங் ஆராய்ச்சி நிலையத்துக்கு ஆண்டுக்கு அறுபது இலட்சம் ரூபாய் செலவாகிறது. ''வசதியும், வாய்ப்பும் இருந்தால் உலக நாடுகளே பாராட்டும் அளவுக்கு இன்னும் அரிய ஆராய்ச்சிகள் நம்மால் செய்ய முடியும். அத்தகைய திறமைமிக்க விஞ்ஞானிகள் நம்மிடம் இருக்கிறார்கள்'' என்று பெருமிதத்துடன் கூறுகிறார் இந்நிலைய இயக்குநர் டாக்டர் எஸ். ஞானதேசிகன். இவர் இதே நிலையத்தில் இருபது ஆண்டுகளாகப் பணியாற்றி வருகிறார்.

கிருமிகளை ஒழித்துக் கட்டி, நோய் என்னும் மரணக்குழியிலிருந்து மக்களை விடுவிக்க அரும்பாடுபட்டு வரும் கிங் நிலையம், மற்ற ஆராய்ச்சி நிலையங்களுக்கு ஒரு 'கிங்'காக—மன்னனாக விளங்குகிறதென்றால் அது மிகையல்ல!

## வீரத்திற்குப் பரிசு

குடந்தையைச் சேர்ந்த திரு சீனிவாசன் அவர்களது மைந்தன் சூரிய நாராயணன். 15 வயதுள்ள இவ்விளைஞன் பதினோராம் வகுப்பு மாணவன்.

5—8—1971 அன்று காவிரியில் நீராடிவிட்டுச் சூரிய நாராயணன் வீடு திரும்பிக் கொண்டிருந்தான். ''அய்யோ அய்யோ'' எனும் அலறலைக் கேட்டான் அப்போது; காவிரியாற்றில் இரு பெண்களும், இரு சிறுமிகளும் ஓர் ஆடவரும் சுழலிலே சிக்கி உயிருக்கு மன்றாடுவதைக் கண்ட அவன் ஆற்றிலே தாவினான்; நீரோடு போராடிய அவர்களை நீந்திக் கரையில் சேர்த்தான்;

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 24-ஆம் நாளில் நேரு விளையாட்டுத் திடலில் மாநகராட்சிச் சார்பில் நடந்த நேரு விழாவில் முதல்வரின் மனைவியார் திருமதி தயாளு கருணாநிதி அவர்கள் வெள்ளிக் கோப்பையை எஸ். சூரிய நாராயணனுக்கு வழங்கினார்.

கடந்த 25—1—72 அன்று டெல்லியில் குழந்தைகள் நலச் சங்கம் இந்த மாணவனுக்கு வீரப் பதக்கம் அளித்துச் சிறப்பித்திருக்கிறது.

# உண்மையை உணர்த்தும் கருவி!

**கொ**லை செய்துவிட்டுக் கொலை செய்யப்பட்டதற்கான ஆதாரங்களையெல்லாம் வெகு சாமர்த்தியமாக மறைத்து விட்டுத் தப்பி விடுகின்றனர் சில குற்றவாளிகள். துப்பறியும் நாய்களாலும் அவர்களை மோப்பம் பிடிக்க முடிவதில்லை. சந்தேகப்பட்டு அவர்களைப் பிடித்து விசாரித்தாலும் அவர்கள் குற்றத்தை ஒப்புக்கொள்வதில்லை. உருட்டல், மிரட்டல், அடித்தல், துன்புறுத்தல் ஆகியவற்றின் மூலம், அத்தகைய குற்றவாளிகளிடமிருந்து உண்மையை வரவழைக்க முடிவதில்லை. இதற்கெல்லாம் காரணம் அவர்களுக்குள்ள மன வலிமையே !

மனவலிமை உள்ள குற்றவாளி மனித உருவில் உள்ள காவல்துறை அலுவலர்களையும், துப்பறியும் நிபுணர்களையும், வழக்கை விசாரிக்கும் நீதிபதிகளையும் ஏமாற்றிவிடக் கூடும். ஆனால், குற்றவாளியைக் கண்டுபிடிக்க உதவும் கருவியை ஏமாற்றிவிட முடியாது ! அதை 'உண்மை விளம்பி' என்றுகூடக் கூறலாம்.

குற்றவாளியைக் கண்டு பிடிக்க உதவும் கருவியின் பெயர் 'டிசெப்டோகிராப்' (Decepto-graph) எனப்படுகிறது. அந்தக் கருவி மின்சாரத்தினால் இயங்கக் கூடியது. அதில் எழுதுகோல் போன்ற குறியிடும் அலகுகள் மூன்று உள்ளன. அவ்வலகுகள், அந்தக் கருவியில் பொருத்தப்பட்டிருக்கும் கட்டத்தாளில் (Graph paper) கோடுகள் போட்டுச் சந்தேகத்திற்குரிய ஆள் குற்றவாளியா இல்லையா என்பதைப் புலப்படுத்தும்.

கொலை செய்திருப்பான் என்று சந்தேகப்படும் ஆளை அக்கருவியின் அருகில் அமரச் செய்து, கருவியுடன் இணைக்க வேண்டும். இணைப்புகளைக் கொடுத்த பின்பு, அந்த ஆளிடம் 'உன் பெயரென்ன? உன் ஊர் எது ?' என்பன போன்ற சாதாரணக் கேள்விகளை (Normal question) முதலில் கேட்க வேண்டும். அந்த ஆள் கூறும் பதிலுக்கு ஏற்ப அவனுடைய இரத்த அழுத்தம் (Blood pressure) மூச்சு விடுதல் (Respiration) தோலின் தாங்கும் சக்தி (Skin Resistance) ஆகியவைகள் அமைந்திருக்குமாதலின், அதற்கேற்ப அந்தக் கருவியில் உள்ள கட்டத்தாளில் மூன்று வெவ்வேறு கோடுகள் ஏற்படும். அக்கோடுகள் சாதாரண நிலையில் அந்த ஆளின் மனநிலையைக் காட்டுகின்றன. அதன்பின் படிப்படியாகக் கேள்வியின் தன்மையைக் கடுமையாக்க வேண்டும். கேள்விகளுக்கு ஏற்பக் கோடுகள் அமையும்.

பின்பு திடீரென்று 'நீதான் அந்தக் கொலையைச் செய்தாய் என்பதற்கு ஆதாரம் உள்ளது. உண்மையை ஒப்புக் கொள்கிறாயா ?' என்று கேட்க வேண்டும். அப்பொழுது அவன் மன வலிமையின் காரணமாக 'இல்லை' என்று பதிலளிக்கலாம். ஆனால், அந்த அதிர்ச்சி தரும் கேள்வியின் மூலம் அவனுடைய உள்ளத்திலும், உடலிலும் ஏற்படும் மாற்றங்களை அந்தக் கருவி கோடுகள் மூலம் காட்டிவிடும். அக்கோடுகள் சாதாரணக் கேள்விகள் கேட்கப்பட்ட போது ஏற்பட்ட கோடுகளுக்கு முற்றிலும் மாறுபட்டவைகளாக இருக்கும். அதிலிருந்து அந்த ஆள் உண்மைக் குற்றவாளி என்பதை அறிந்து கொள்ளலாம்.

அந்த ஆள் உண்மையிலேயே குற்றவாளி இல்லை என்றால், சாதாரணக் கேள்விகள் கேட்ட போது தோன்றிய கோடுகள் போலவே, அதிர்ச்சி தரும் கேள்விகள் கேட்டபோது தோன்றிய கோடுகளும் ஒரேமாதிரியாக இருக்கும்.

குற்றவாளியைக் கண்டுபிடிக்க உதவும் அந்தக் கருவி சென்னை தெற்குக் கடற்கரைச் சாலையில் உள்ள மாநிலக் கல்லூரியில் உள்ளது. மாநிலக் கல்லூரியில் 14-1-1972 முதல் 17-1-1972 வரை நடைபெற்ற உளவியல் கண்காட்சியில் (Psychology Exhibition) அக்கருவியும் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது. இந்தியாவிலேயே இத்தகைய கருவி வேறு எங்கும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

உளவியல் கண்காட்சியில் நமது நுண்ணறிவுத் திறன், பிறரைக் கவரும் தன்மை (Personality) ஆகியவைகளையும் அறிந்துகொள்ள வழி செய்திருந்ததுடன், நமது உள்ளத்தை உணரப் பல விளக்கங்கள் செய்து காட்டப் பட்டன. அக்காட்சியைக் கல்வி அமைச்சர் திரு. நாவலர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்கள், 13-1-1972 அன்று மாலை திறந்து வைத்தார். அவ்வமயம் உளவியல் சங்கத்தின் சார்பாக அவர்களிடம் ரூபாய் 1,500 பாதுகாப்பு நிதியாக அளிக்கப்பட்டது.

உளவியலை எல்லாரும் உணர்ந்து கொள்வதற்காகவும் பாதுகாப்பு நிதி திரட்டுவதற்காகவும் உளவியல் கண்காட்சி அமைக்கப் பட்டது மிகவும் பாராட்டுக்குரியதே !

# செய்திகள்! செய்திகள்! செய்திகள்!

## களையெடுக்கும் புல்!

பயிரை அழிப்பதில் வெட்டுக்கிளி, எலி, இவற்றோடு களையும் சேர்ந்து கொள்கிறது. களை களை அகற்றுவதே உழவர்களுக்கு ஒரு பெரும் வேலையாக இருக்கிறது. களையெடுக்கும் வேலையைச் செய்ய மருந்து சக்தியுடன் கூடிய ஒருவகைப் புல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இப்புல்லை ஷெல் நிறுவனத்தார் கண்டு பிடித்துள்ளனர்.

மருந்து சக்தியுடைய இப்புல் சிலவாரங்களுக்குத் தான் உயிரோடு இருக்கும். அப்போது, பயிர்களினூடே தோன்றிப் பயிர் வளர்ச்சியைப் பாதிக்கும் களைகளை வளர விடாமல் பட்டுவிடச் செய்கிறது இந்தப் புல். பயிர்களுக்கு ஆரம்ப காலத்தில் களைகளால் பெருந்தீங்கு ஏற்படும். எனவே அந்த ஆரம்ப காலத்தில் களையை அழிக்க வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும். அந்த வேலையை இந்தப் புல் செய்கிறது.

பயிர்வளர்ச்சியைப் பாதிக்கும் களைகளை அழித்துப், பயிரைப் பாதுகாத்துவிட்டுப் பின்னர் சில வாரங்களில் இப்புல்லும் தானே அழிந்து விடுகிறது.

## கடல் பாசித்தூள் ஓர் சிறந்த சத்துணவு !

கடல்பாசியைச் சேகரித்துப் பதப்படுத்தித் தூளாக்கி, உணவுப் பொருள்களின்மேல் உப்புத்தூளைப் போல் போட்டுச் சாப்பிடுவது உடலுக்கு மிகவும் நல்ல சத்து தரக்கூடியது என்று அயர்லாந்து நிறுவனம் ஒன்று அறிவித்திருக்கிறது.

சிறந்த சத்துணவாகப் பயன்படுவதுடன், நல்ல எருவாகவும் இதனைப் பயன்படுத்தலாம். சத்துணவுத் தூள் தயாரிப்பதில் சேதமடையும் கடல் பாசியை எருவாகப் பயன்படுத்தினால் பயிர்கள் குறைந்தது இருமடங்கு வளர்ச்சியும், பலனும் தருகின்றன என்றும் அந்நிறுவனம் கூறுகிறது.

கடல்பாசி அப்படியே ஒரு சிறந்தவைட்டமின். சத்துணவுத் தட்டுப்பாடு இருக்கும் இக்காலத்தில், இயற்கையாகக் கிடைக்கும் சத்துணவைப் பயன்படுத்த வேண்டாமா? இதற்காக அயர்லாந்து நிறுவனம் ஒரு பெரிய தொழிற்சாலை ஏற்படுத்தியிருக்கிறது. கடல் பாசியைப் பெருமளவில் சேகரித்து, இயந்திரங்கள் மூலம் உலரவைத்துத் தூள் செய்கிறார்கள்.



இப்படித் தயாரிக்கப்படும் சத்துணவு ஐரோப்பாவில் ஏற்கெனவே பிரபலமாகியிருக்கிறது. இதையறிந்ததும் இந்தியாவும், ஆப்பிரிக்காவும் இதில் அக்கறை காட்டிக் கடல்பாசி வளர்க்க முடிவு செய்துள்ளன. இந்த அயர்லாந்து நிறுவனம் சென்ற ஆண்டில் மட்டும் 10 இலட்சம் பவுன்களுக்கும் மேல் மதிப்புள்ள கடல்பாசித் தூள்களை விற்பனை செய்திருக்கிறது.

## அங்கை அளவில் அதிசய வானொலி !

நமது உள்ளங்கையைவிட மிகச் சிறிய அளவில் அமைக்கப்பட்ட ஓர் அதிசய வானொலியைச் சோவியத்து ருஷ்யா உருவாக்கியுள்ளது. உலகிலேயே மிகச் சிறிய வானொலியான இதன் விலை எவ்வளவு தெரியுமா? ரூ. 58 தானாம்.

## விந்தையிலும் விந்தை !

உலகப் புகழ்பெற்ற ஆக்ஃபா நிறுவனம் ஒரு புதுமையான காமிராவைத் தயாரித்துள்ளது. வழக்கமாகப் படம் எடுக்கும் காமிராவில் உள்ள பொத்தானை அழுத்துவதற்குப் பதிலாக இதில் பொருத்தப்பட்டுள்ள சிவப்பு வண்ண வட்டக் கருவி மீது சற்று முணுமுணுத்தால் போதுமாம்; தெளிவான படத்தை இது எடுத்து விடுகிறது. விஞ்ஞான விந்தைகளில் இதுவும் ஒரு விந்தை.

## கண்ணான உதவி !

பிரிட்டனைச் சேர்ந்த ராயல் காமன்வெல்த் நிறுவனம் அமைத்துள்ள நடமாடும் கண் சிகிச்சை முகாம்கள் இந்தியா வெங்கும் உள்ள சிற்றூர்கள் தோறும் சென்று, முகாமிட்டு அவ்வப் பகுதியில் உள்ள பார்வையற்றோர்க்குச் சிகிச்சை அளிக்கும் சிறந்த பணியை மேற்கொண்டுள்ளது.

அதன்படி மதுரை மாவட்டம் முழுவதும் முகாமிட்டு ஏறத்தாழ 1,500 பார்வை இழந்த பாமர மக்கட்கு இந்த ஆண்டில் அறுவைச் சிகிச்சையை இதுவரை செய்து முடித்து விட்டது. சிகிச்சைகள் அனைத்தும் இலவசம்! இலவசம்!



அண்ணன் காட்டிய வழி!
கதை: நம்பியின் தம்பி
படம்: இமோர்
15
• வேலனும், முத்துவும் ஆற்றங்கரைக்கு வருகிறார்கள்
முத்துவும் வேலனும் ஒன்றுக வருகிறர்களே!
ஆருயிர் நண்பர்கள் ஒன்று வராமல் தனித்தனியாகவா வருவார்கள்?
வேலா! உன் பட்டணத்துச் சிநேகிதங்க செல்வனும் செந்தாமரையும் வரலியா?
முத்து! நாங்க கூப்பிட்டா எங்கேயும் வரமாட்டேன்னு சொன்னே... இப்ப எப்படி வந்தே?
நான்தான் முத்துவைக் கெஞ்சி இங்கே உங்களிடம் அழைத்து வந்தேன்!
எங்களிடமா?
உங்க எல்லாரிடமும் மன்னிப்புக் கேட்டுக்கணும்னுதான் நான் இங்கே முத்துவை அழைச்சிக் கிட்டு வந்தேன்
ஏன் வேலா! இந்தத் திடீர்ச் சரணகதி?
இப்ப என்ன நடந்துச்சு? எதுக்கு நீ மன்னிப்புக் கேட்கணும்?
ஆமாம் வேலா நீ மன்னிப்புக் கேட்டா அருமை நண்பன் முத்துவின் மனம் படாதபாடு படும்! முதல்லே காரணத்தைச் சொல்லு!
எப்பவும் கிண்டல்தான்! வேலா! விஷயத்தைச் சொல்லு!
வேலா! நீ ஒண்ணும் பயப்பட வேண்டாம்! அது கிடைச்சிடுச்சு!
தொடரும்

# வெண்பாப் போட்டி

## 25. யாரைநாம் போற்றிடுவோம் ஈங்கு

காடுமே டெல்லாம் கழனியாம்; பூங்காவாம்;
நாடும் தொழிற்புதுமை நன்றுடாம்;—வீடெல்லாம்
ஆராத சொர்க்கமாம்; பேருழைப்பின் ஆற்றலுடை
யாரைநாம் போற்றிடுவோம் ஈங்கு.

—புலவர். கோம்பைச்சிரான், கோம்பை.

வறுமை நிலைமாறி வாட்டும் துயர்நீங்கிச்
சிறுமை சிதைந்தொழியும்; சீர்மை—பெறுதலாலிப்
பாருயரும்; நன்னெஞ்சப் பேரன்புப் பண்புடை
யாரைநாம் போற்றிடுவோம் ஈங்கு.

—ஆர். மகேந்திரமணி, தருமபுரி.

விண்வெளியில் வீரம் விளைத்த விறற்படையோ?
மண்வெளியைத் தேய்த்தபெரும் மாப்படையோ?—தண்
கடலில்
போரை அழித்த புகழ்ப்படையோ? அப்படை
யாரைநாம் போற்றிடுவோம் ஈங்கு.

—புலவர் சமா. அருணைசலம், சித்தளந்தூர்.

உண்ண உணவின்றி, உற்றறிய எண்ணறிவுக்
கண்ணின்றிக் கட்டவோர் கந்தலின்றி—மண்ணுலகில்
தேரையென வாழுநிலை மாற்றிடும் அப்பெரி
யாரைநாம் போற்றிடுவோம் ஈங்கு.

—உலகத்தமிழ்க் கழகம், தாராபுரம் வட்டம்.

பண்பால் பதவியிலே பாங்குமிகும் பான்மையால்
கண்போல் பிறரின்பம் காத்ததனல்—அண்ணுபோல்
ஊரை உலகை உயர்த்திவிடும் ஊக்கமுடை
யாரைநாம் போற்றிடுவோம் ஈங்கு.

—சிவ. இருட்டிணன், கணியூர்.

வீட்டிற் கொருபிள்ளை வீரத்திற் கோர்பிள்ளை
நாட்டிற்குப் போதுமே! நாடிடும்—நாட்டினில்
போர்வீரர் ஏருழவர் போற்றுமன்னை—யார்தந்தை
யாரைநாம் போற்றிடுவோம் ஈங்கு.

—இரா. தேன்மொழியாள், சின்னத்தாராபுரம்.

அன்போ டறிவும் அளவிலாச் செல்வமும்
நன்றுடனே கொண்டாரிந் நல்லவர்—என்கின்ற
சீரைப் பெறுவதினும் செம்மையாம் நம்மன்னை
யாரைநாம் போற்றிடுவோம் ஈங்கு.

—சு. முத்துக்கருப்பன், பேரையூர்.

வல்லரசைப் பேட்டியிட்டு வல்லிரவுந் துஞ்சாமல்
நல்லறப் போர்நடத்தி நாடுவென்றூர்—நல்லாய்கேள்!
கூன்ரவாழ் விக்கவந்த கூர்மதியாம் காந்தியம்மை
யாரைநாம் போற்றிடுவோம் ஈங்கு.

—எ. கண்ணம்மாள், செஞ்சி.

காடழித்து நாடாக்கிக் காட்டாறு தேக்கிவைத்து
வீடளித்து மக்கள் விழிப்புணர்ச்சிக் (கு)—ஏடளித்துக்
கூரையெலாம் கோபுரமாய் ஆக்கும் நினைப்புடை
யாரைநாம் போற்றிடுவோம் ஈங்கு.

—கு. ஜெயப்பிரகாஷ் நாராயணன், திருமங்கலம்.

---

பரிசு பெற்ற வெண்பா எழுதியவர்:—

வித்துவான் ச. சீத்தாராம்,
திருவள்ளுவர் இல்லம், கோம்பை அஞ்சல்,
மதுரை மாவட்டம்.

கோலோச்சி நாட்டின் குடிகாக்கும் மன்னரினும்
வேல்தூக்கிச் செய்யும்போர் வீரரினும்—மேலாவார்
ஏருழவர் ; என்றும் பணியாற்றும் அப்பெரி
யாரைநாம் போற்றிடுவோம் ஈங்கு.

—எஸ். சாம்பசிவம், நாமக்கல்.

கயவர் கொடுமையில் காய்ந்திங்கே வந்தோர்
துயர்துடைத்த தூயவர்கள் ; என்றும்—அயராமல்
யாவரையும் காக்கும் இனிய அருள்விழி
யாரைநாம் போற்றிடுவோம் ஈங்கு.

—நெ. சி. சாம்பமூர்த்தி, குரோம்பேட்டை.

கல்லாரும் கற்றவரும் இல்லாரும் உள்ளவரும்
எல்லாரும் ஏற்கும் இசைவினில்—நல்லாராய்ப்
பேரெடுத்து மண்ணில் பெயர்விளங்க வாழ்ந்தபெரி
யாரைநாம் போற்றிடுவோம் ஈங்கு.

—புஷ்பன், தடாகம்.

அன்பால் அரவணைக்கும் அன்னையுடன் பிள்ளைக்காய்த்
தன்னின்பம் வேண்டாத் தகப்பனையும்—என்னன்பே !
பேரறிவை யூட்டும் தலைவராம் அப்பெரி
யாரைநாம் போற்றிடுவோம் ஈங்கு.

—வே. குருநாதன், மதுரை-2.

சாதி மதமென்று சண்டையிட்டு மக்களினம்
பாதிக்கப் பட்டதையே பாரறியும்—சாதிமத
வேரறுத்தே வீழ்த்துவதால் வீரர்ஈ ரோடுபெரி
யாரைநாம் போற்றிடுவோம் ஈங்கு.

—கோ. புகழேந்தி, புதுவை-4.

பொன்னோ சிறுபொருளோ போர்வீரர்க் கன்பொளிர
நன்றியுடன் ஈவதுவே நம்கடனும்—தன்னுயிரை
ஊரை, உறக்கத்தை, உற்றாரைப் பற்றினை
யாரைநாம் போற்றிடுவோம் ஈங்கு.

—சி. சௌ. கருப்பன் செட்டி, திருச்சி-15.

வெங்களத்தில் வீரம் விளைத்துமே வெம்பகைவர்
பங்கமுற்றுத் தாள்பணியப் போர்புரிந்த—சிங்கமொத்
தாரைநாம் பாராட்டல் தக்கதாம்; அத்தகை
யாரைநாம் போற்றிடுவோம் ஈங்கு.

—ஆ. தவசிலிங்கம், ஈரோடு-1.

மாது மனமகிழ்வாள் மாச்சுகந் தான்கிடைக்கும்
தீதகலச் சீர்வரிசை தேடிவரும்—போதிலுறை
வாரை நினைவூட்டும் வண்திருக்கை நம்மாமி
யாரைநாம் போற்றிடுவோம் ஈங்கு.

—பொன் சுகுமாரன், பி.ஏ., திண்டுக்கல்.

நன்றென் றவற்றுள்ளும் நன்றே நலிந்தவர்க்
கென்றும் உழைத்திடும் ஏந்தல்கள்—வென்றிகொள
வீரக் களத்தில் விளையாடும் மேதகை
யாரைநாம் போற்றிடுவோம் ஈங்கு.

—பொன். வேலம்மாள், கொட்டாரம்.

எல்லாரும் நன்னிலை எய்தினரால், கீழ்மேலாம்
பொல்லாத பேதங்கள் போயினவால்—நல்லோரே
ஓர்நிறை யாயரசிங் கோச்சுவரேல், அத்தகை
யாரைநாம் போற்றிடுவோம் ஈங்கு.

—ச. வானவன், கோவில்பட்டி.

மன்னும் உலகினிலே வாழும் உயிரனைத்தும்
தன்னுயி ராமெனத் தான்நினைந்து—நன்மையுறச்
சீரைபுக்க செம்பியன்போல் சீவன்மாட் டன்புடை
யாரைநாம் போற்றிடுவோம் ஈங்கு.

—நாகை ந. இராமசாமி, செக்காப்பட்டி.

ஞாலம் அமைதியுற நாட்டில் உயர்பஞ்ச
சீல நெறிநின்று சேவித்தார்—சாலுமே
போரைத் தவிர்த்த புகழ் இந்திராகாந்தி
யாரைநாம் போற்றிடுவோம் ஈங்கு.

—இந்திரா ஹெலன் மனோன்மணி, பி.ஏ., முன்னுவாரன் கோட்டை.

விடநாக மென்னநம் வீரரெலாம் சீற
உடனாக வேபகைவர் ஒத்தார்—கடனாகும்
வீரனைப் பெற்று விரும்பிக் கொடுத்ததா
யாரைநாம் போற்றிடுவோம் ஈங்கு.

—புலவர் சோ. கருப்பசாமி, அருப்புக்கோட்டை.

குற்றுயிராய் வீழ்ந்துமே குண்டுகள் வீசியுமே
வெற்றிகண்ட போர்ப்படை வீரனைப்—பெற்றெடுத்தே
தாரைக் கலங்காது தந்திட்ட தாய்தந்தை
யாரைநாம் போற்றிடுவோம் ஈங்கு.

—மு. சா. இராசரத்தினம், தேனி.

ஏ8—2—1

ஒப்பிலா தேர்ங்கிநிற்கும் ஒண்டமிழிற் கல்விகற்க
ஒப்ப மறுப்பாரும் உள்ளாரே—எப்படித்தான் ?
பாரைக் கவர்கின்ற பைந்தமிழின் பீடுமதி
யாரைநாம் போற்றிடுவோம் ஈங்கு.

—பாக்கியசாமி, சென்னை-3.

வங்கமெனத் தங்கமென வாய்மையெனும் வாளெடுத்துச்
சிங்கமெனச் சீறிநின்று சின்னவரைச்—சங்கரிக்கும்
போரைத் தொடுப்பதற்குப் போய்வாராய் யென்றிடுந்தா
யாரைநாம் போற்றிடுவோம் ஈங்கு.

—குப்பிச்சிப் பாளையக் குமரன்.

நாட்டின் நலங்காத்து நாற்படையும் வாகையணிந்(து)
ஈட்டும் புகழ்காக்க வீறுகொண்டு—நாட்டில்நெற்
போரைக் குவித்துமனம் பூரிக்கும் ஏர்ப்படை
யாரைநாம் போற்றிடுவோம் ஈங்கு.

—இரா. இ. வேலன், சென்னை-49.

ஞாலமுள நாள்வரையில் நல்லோர் பலர்புகழும்
சீலமிக வாய்ந்த செயலன்றோ—சாலவே
பாரைத்தம் பாவாலே ஈர்த்தகவி பாரதி
யாரைநாம் போற்றிடுவோம் ஈங்கு.

—த. ச. தவசிமணி, அருப்புக்கோட்டை.

ஏவுகணை ஓர்பக்கம், ஏழ்மைகளின் தாழ்மைகள்
பாவுதல் ஓர்பக்கம், பண்புடனே—தூவழகே !
பாரினில் போரழித்து நின்று பணிசெய்தா
யாரைநாம் போற்றிடுவோம் ஈங்கு.

—புதுவை வெண்ணிலா, தென்னார்க்காடு.

நன்றி மறவாத நற்செயலாம், தம்முயிரைத்
தந்தேதம் தாய்நாட்டைக் காத்தோரை—என்றுமிப்
பாரோர் நினைக்கும் படியாக அப்பெரி
யாரைநாம் போற்றிடுவோம் ஈங்கு.

—சு. தங்கப்பன், பி.எஸ்சி.,பி.ஏ., நாகர்கோயில்-1.

தமிழ னெனுமுணர்வைத் தாய்நாட்டின் பற்றை
அமிழ்தாம் மொழியறிவை ஆக்கித்—தமினும்தாழ்ந்
தாரை வுயர்த்திட்டா ராதலினால் தந்தைபெரி
யாரைநாம் போற்றிடுவோம் ஈங்கு.

—புலவர் ஆயை. மு. இளஞ்செழியன், பெங்களூர்-1.

அடிமைத் தளையறுத்து அல்லலுற்ற மக்கள்
மிடிமைத் துயர்நீக்கி மேன்மைக்—குடியாக்கிக்
கூரையடி வாழ்ந்தோரும் கோட்டைபுகச் செய்தகாந்தி
யாரைநாம் போற்றிடுவோம் ஈங்கு.

—தி. செ. இராமசாமி, எம். ஏ.பி.டி., நாமகிரிப்பேட்டை.

கண்ணன் கவிதை, கருங்குயிலின் காதற்பா
பண்ணிப் புதுயுகமாம் பண்ணொலிக்கக்—கண்மணியே !
பாரதிதான் வந்திட்டான்; நம்கடன்என் ? பாரதி
யாரைநாம் போற்றிடுவோம் ஈங்கு.

—ஜெயபாலன், சென்னை-26.

தாய்மொழியைத் தாய்நாட்டைத் தன்னுடைய தாயாரை
வாய்மொழி மாறாமல் காப்போரைத்—தூய்மைமிக்
காரைத் துணிவுடன் வாழ்வாரை அன்புடை
யாரைநாம் போற்றிடுவோம் ஈங்கு.

—கா. மு. கண்ணாயிரம். புல்லரம்பாக்கம்.

வீரம் விளையாட வீணர் ஒழிந்தோட
பாரும் செழித்தாடப் பாத்தொடுத்தார்—ஏறுநடை
வீரர் எனவாழ வேண்டாவோ ? பாரதி
யாரைநாம் போற்றிடுவோம் ஈங்கு.

—கலைமன்னன், கம்பம்.

புறங்கண்டார் ; பூத்தார் ; புகழ்கொண்டார் ; தன்மார்(பு)
உறக்கொண்டார் வீரம் புகலாய் !—மறமகனே !
பாரைப் பெரிதன்றே ஏற்றும் அவர்மனைவி
யாரைநாம் போற்றிடுவோம் ஈங்கு.

—பாடி. மா. சு. தமிழேந்தி, ஓலைப்பாடி.

இன்னல் தவிர்க்கும் ; இதயத்தைப் பண்படுத்தும் ;
கன்னலென வாழ்வில் களிப்பூட்டும்—தன்னுடலுள்
ஈரைந்து மாதங்கள் ஏற்றீன்ற அன்புத்தா
யாரைநாம் போற்றிடுவோம் ஈங்கு.

—சு. நாராயணசாமி, தில்லைநகர்.

இந்தியாவை மீட்டிட்டார் எம்காந்தி ; தேனுரையால்
சிந்தையில் வாழ்கின்றார் சிலரண்ணா—தந்திரத்தை
வேரறுத்தார் எம்வீரர் ; மாமேருள் அப்பெரி
யாரைநாம் போற்றிடுவோம் ஈங்கு.

—அரு. மதிவாணன், சித்தளந்தூர்.



# அண்ணாசாலையில் அதிசயப் பாலம்!

சென்னை நகரில் போக்குவரத்து நெரிசல் மிகுதியும் உள்ள இடம் ஜெமினி சந்திப்பு தான். இங்கே பயண நெரிசல் நேரத்தில், மணிக்கு 7,500 ஊர்திகள் கடந்து செல்கின்றன என்று கணக்கிடப்பட்டுள்ளது. இங்குப் போக்குவரத்தைக் கட்டுப்படுத்தி நெறிப்படுத்தத் தானியங்கி மின்விளக்கு அமைக்கப்பட்டிருந்தது. எனினும், கால தாமதத்தைத் தவிர்க்க முடியவில்லை. மேலும், ஒரு சில மணித்துளிகளில் ஊர்திகளின் நீண்ட (க்யூ) வரிசையே ஆரம்பமாகிவிடும். இந்தத் தடையையும், கால தாமதத்தையும் போக்கி, அண்ணா சாலையில் சென்று வரும் ஊர்திகள் தங்கு தடையின்றிச் சென்று வரவும், அந்தச் சந்திப்பில் வேறு பல திசைகளில் செல்லும் ஊர்திகளும் அவ்வாறே தங்கு தடையின்றிச் செல்லவும் வழி காண வேண்டும்; இதனால் ஏற்படும் விபத்துக்கள் தவிர்க்கப்பட வேண்டும் என்கிற வேட்கையின் அடிப்படையே ஜெமினி மேம்பாலத் திட்டம்.

இந்த மேம்பாலம் கட்டும் திட்டம் சில காலமாகவே தமிழ் நாடு அரசின் ஆலோசனையில் இருந்து வந்தது. எனினும், திட்ட அமைப்பில் ஏற்பட்ட சிற்சில மாறுதல்களின் காரணமாக வேலை தொடங்குவது சற்றுத் தாமதமாகிக் கடந்த ஆகஸ்டு-செப்டம்பர்த் திங்களில் இறுதி அங்கீகாரம் அளிக்கப்பெற்று வேலை முழுவேகத்தில் தொடங்கப்பட்டது.

மேம்பால வேலை நடைபெற்றுக்கொண்டிருக்கும் காலத்தில், அந்தச் சந்திப்பில் போக்குவரத்து, தடைப்படக்கூடாது என்பதற்காகப் பால அமைப்பை இரண்டு சமப் பகுதிகளாகப் பிரித்து, ஒரு பகுதி வேலையை மேற்கொண்டு, அது முடியுந் தறுவாயில் உள்ளது. இந்த ஒரு பகுதி வேலை விரைவில் முடிக்கப்பட்டு, வருகிற மார்ச்சு ஏப்ரல் மாதத்தில் அது போக்குவரத்துக்குத் திறந்து விடப்படும் என்று பால அமைப்புப் பணியில் ஈடுபட்டுள்ள பொறியாளர்கள் தெரிவிக்கின்றனர். இந்த ஒரு பகுதி வேலை முடிந்ததும் தொடர்ந்து அடுத்த இரண்டாம் பகுதி வேலை தொடங்கப்பெறும். எப்படியும் 1972 இறுதிக்குள் பாலம் முழு அமைப்புப் பெற்றுப் போக்குவரத்துக்கு முழுதுமாகத் திறந்துவிடப்பட இருக்கிறது.

இந்தியாவிலேயே இவ்வகை அமைப்புடைய மிகப்பெரிய மேம்பாலம் இதுதான் என்பது குறிப்பிடத் தக்கதாகும். இந்த மேம்பாலத்தின் நீளம் 1,506 அடி. இதனை மேலும் நீட்டவேண்டிய அவசியம் ஏற்பட்டால், தொடர்ந்து விரிவுபடுத்தத் தக்க வடிவமைப்பு இப்பாலத்தின் இன்னொரு சிறப்பாகும்.

பம்பாயில் இத்தகைய இரண்டு மேம்பாலங்கள் உள்ளன. எனினும், அவை மிகச் சிறியனவேயாகும். இந்தியத் துணைக் கண்டத்தில் கட்டப்படுகிற முதலாவது பெரிய மேம்பாலம் இதுதான் என்பது தமிழகத்திற்குப் பெருமை தரக்கூடிய செய்தியாகும்!

வெளிநாடுகளில் ஜப்பானிலும், ஜெர்மனியிலும், இம்மாதிரியான மேம்பாலங்கள் ஏராளமாகக் கட்டப்பட்டிருக்கின்றன. இலண்டன் மாநகரில், இத்தகைய அமைப்புடைய மிகப் பெரிய மேம்பாலம் ஒன்று 60 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ளது. 2½ மைல் நீளமுள்ள அந்த மேம்பாலத்தின் பெயர் 'இலண்டன் மேற்கு வழி' (West Way of London) என்பது.

தொடக்கத்தில் இத்திட்டத்திற்குச் சுமார் 50 இலட்சம் ரூபாய் செலவாகலாம் என்று மதிப்பீடு செய்யப்பட்டது. இப்போது, மதிப்பீட்டுக்கு மேல் 15 இலட்சம் ரூபாய் அதிகமாகலாம் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

இந்த மேம்பாலத்திற்கான திட்டம் தயாரிப்பதிலும், வரைவு தயாரிப்பதிலும், மதிப்பீடு செய்வதிலும், தொழில் நுணுக்கப் பணி புரிவதிலும் தமிழ்நாடு நெடுஞ்சாலைக் கிராமப் பணித் துறையைச் சார்ந்த பொறியாளர்களே முழுக்க முழுக்க ஈடுபட்டுள்ளனர். மேல்நாட்டுப் பொறியியல் வல்லுநர்களின் எத்தகைய உதவியும் ஒத்துழைப்பும் இல்லாமல், நமது பொறியாளர்களே இந்தப் பாலத்தைக் கட்டுகின்றனர். இதில் ஈடுபட்டுள்ள பொறியாளர் சிலர் பொறியியற் கலை கற்க மேல்நாடு சென்று வந்தவர்கள். அவர்கள் அங்குப் பயின்றபோது, இத்தகு மேம்பால அமைப்புப் பற்றியும் கற்றுள்ளனர்.

மேம்பாலம் கட்டும் இடம், போக்குவரத்து நெரிசல் மிகுதியுமுள்ள முக்கியமான இடமாதலின், போக்குவரத்துக்கு ஒரு சிறிதும் இடையூறு இல்லாமல், பாலத்தைக் கட்டுகிறார்கள். முன்னமே குறித்தபடி, பாலவேலை இரு சமப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, வேலை மிகவும் விரைவாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதுமட்டுமின்றிக், காலதாமதத்தைத் தவிர்ப்பதற்காக, நடுத் தூண்களின் மேல் போடப்படுகிற கான்கிரீட் கர்டர்களையும், தளவரிசைகளையும் இப்போது வேலை நடைபெறும் இடத்திலேயே—தரையிலேயே வைத்துத் தயாரித்து மேலே தூக்கிப் பொருத்திவிட ஏற்பாடு செய்துள்ளனர். எனவே, அவர்கள் திட்டமிட்டுள்ளபடி மேம்பாலத்தின் ஒரு பகுதி நிச்சயமாக வருகிற மார்ச்சு-ஏப்ரல் மாதத்தில் போக்குவரத்துக்குத் திறந்துவிடப்பட்டுவிடும் என்பதில் ஐயமில்லை.

அடுத்து, இந்தப் பாலத்தின் அமைப்புப் பற்றிக் குறிப்பிட வேண்டும்; இந்தச் சந்திப்பில் 5 பாட்டைகள் (வழிகள்) சந்திக்கின்றன. அண்ணா சாலை வழியே நேரே சென்றுவர ஒரு முக்கிய-பிரதான மேம்பாலம். ஜி. என். செட்டி சாலையிலிருந்து அண்ணா சாலைக்கு வரும் ஒரு வளைவுப்பாதை; அண்ணா சாலையிலிருந்து ஜி. என். செட்டி சாலைக்குத் திரும்பிச் செல்லும் இன்னொரு வளைவுப் பாதை; ஜெமினி சந்திப்பில் ஒரு சுற்று வட்டப்பாதை. இந்தச் சந்திப்பில் 5 சாலைகள் சந்திக்கின்றன. மொத்தமாக 20 திசைகள் இருக்கும்.

பொதுவாக, விரைவாகச் செல்லும் ஊர்திகள், மெதுவாகச் செல்லும் ஊர்திகள், நடந்து செல்வோர் என்னும் மூன்று வகைக்கும் தனித்தனிப் பாதைகள் இருக்கும். இவையனைத்தும் ஒருவழிப் பாதைகளே யாதலின், போக்குவரத்தில் தங்கு தடை இருக்காது—கால தாமதமிருக்காது. இவற்றிற்கெல்லாம் மேலாக விபத்துக்கள் முழுக்க முழுக்கத் தவிர்க்கப் படலாம்.

அடுத்து, இந்த மேம்பாலத்தைக் கட்டுவதற்குத் தேவையான சில நிலப்பகுதிகள் தனியார்க்கும் அரசியலார்க்கும் சொந்தமாக இருந்தன. அந்த இடங்களுக்குரியவர்கள், நெடுஞ்சாலை-கிராமப் பணித்துறையினர் சென்று கேட்டதுமே தேவையான இடங்களை எவ்விதத் தயக்கமோ தடங்கலோ இல்லாமல் தந்துதவ முன்வந்தது பெரிதும் பாராட்டுக்குரியது. இவ்வகையில், ஜெமினி ஸ்டுடியோவினர் 3 கிரவுண்டு நிலத்தையும், இராசா சர் அண்ணாமலைச் செட்டியார் அறநிலையம் 2 கிரவுண்டு நிலத்தையும், கண்ணம்மை பில்டிங்ஸ் உரிமையாளர்கள் 1 கிரவுண்டு நிலத்தையும், செவிட்டு ஊமைப் பள்ளியினர் 1 கிரவுண்டு நிலத்தையும் மனமுவந்து கொடுத்துதவினார்கள். வேளாண்மைத் தோட்டக்கலைக் கழகத்தினர் 35 கிரவுண்டு நிலத்தைக் கொடுத்துதவினார்கள்.

இந்த மேம்பாலம் முழுக்க முழுக்கத் தமிழ்நாடு அரசின் செலவிலேயே கட்டப்படுவதாகும் என்பது குறிப்பிடத் தக்கது.








வேளாண்மை விளக்கமே
கேட்கப்பட வேண்டும்

**வினா :** நான் கே.1 மிளகாய் பயிரிட ஆவலுடன் உள்ளேன். ஜூன், ஜூலை தான் ஏற்ற பட்டமா? ஜனவரி, பிப்ரவரியிலும் பயிரிடலாமா? இவை போக வேறு பட்டம் உள்ளதா? அடியுரம், மேலுரம் இடைவெளி, விதையளவு பற்றியும் தெரிவிக்கவும்.

கே. ஏ. சண்முகக்கவுண்டர்
வடதொரசலூர்
தென்ஆர்க்காடு மாவட்டம்.

**விடை :** கே. 1 மிளகாய் பயிரிடக் கீழ்க்கண்ட பட்டங்கள் ஏற்றவையாகும்.

1. முக்கியப் பட்டம்: செப்டம்பர்—அக்டோபர் விதைப்பு.
2. கோடைப்பட்டம் : மார்ச்சு—ஏப்ரல் விதைப்பு.
3. ஆடிப்பட்டம் : ஜூன்—ஜூலை விதைப்பு.

அடியுரம் : மிளகாய் பயிரிட, கடைசி உழவில் ஏக்கருக்கு 20 வண்டி தொழு எரு, 100 கிலோ சூப்பர் பாஸ்பேட், 25 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகியவைகளை அடியுரமாக இட வேண்டும்.

மேலுரம் : மிளகாய் நாற்று நட்ட 50-வது நாளிலும், 75-வது நாளிலும் ஆக இருமுறை மேல் உரம் இட வேண்டும். ஒவ்வொரு முறையும் ஏக்கருக்கு 70 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 30 கிலோ யூரியா இட வேண்டும். இரசாயன உரத்தைச் செடிகளைச் சுற்றிலும் சற்றுத் தள்ளி வட்டமாக இட்டு, மண்ணால் மூடித் தண்ணீர் விடவேண்டும்.

இடைவெளி : நாற்று விட்ட 40 முதல் 45 நாட்களுக்குள்—நாற்றைப் பறித்து வரிசை வரிசையாகப் பார்களில் நட வேண்டும். பாருக்குப் பார் 1½ அடி இடைவெளி இருக்க வேண்டும். வரிசையில் செடிக்குச் செடி 1½ அடி இடைவெளி விட்டு நடவேண் வேண்டும்.

விதையளவு : ஓர் ஏக்கர் நட 500 கிராம் விதையை ஒரு சென்ட் பரப்பில் நாற்றுவிட வேண்டும். கே.1 மிளகாய் விதைகளைப் பெற உங்கள் ஊராட்சி ஒன்றியத் துணை வேளாண்மை அலுவலர் (வளர்ச்சி) அவர்களின் உதவியை நாடுங்கள்.

* * *

**வினா :** எனது தோட்டக் கிணற்றில் சைடு குழி போட விரும்புகிறேன். அதாவது கிணற்றின் உள்ளே சுமார் 50 அடி ஆழம், 2 அங்குல விட்டமுள்ள குழிகள் போட வேண்டும். அதற்குப் 'பவர் டிரில்' வைத்திருப்பவர்களின் முகவரி தங்களுக்குத் தெரியுமா? தெரிந்து கூறினால் நான் அவர்களுடன் தொடர்பு கொள்கிறேன்.

சி. முத்தையா,
75, பார்வதிபுரம், முசிறி.

**விடை :** திருச்சியில் உள்ள உதவி வேளாண்மைப் பொறியாளர் (பார்வை) அவர்களுடன் தொடர்பு கொண்டால், பவர் டிரில் வாடகைக்குப் பெற முடியும். அவரை அணுகினால் முழு விவரமும் தெரியக்கூடும். எனவே பின்கண்ட முகவரிக்குத் தொடர்பு கொள்ளுங்கள் :

உதவி வேளாண்மைப் பொறியாளர், (பார்வை),
ராக்கெட் ரோடு லேன்,
திருச்சி-1.

* * *

**வினா :** தமிழக அரசு மலைத் தோட்டங்களின் பேரில் கடன் கொடுப்பதாகக் கேள்விப் பட்டேன். அந்தக் கடனைப் பெறுவதற்குரிய வழிமுறைகளைத் தெரிவித்தால் நான் என் ஆயுட் காலம் முழுவதும் தங்களுக்கு நன்றி உள்ளவனாக இருப்பேன்.

ஜே. முருகேசன்,
பழனிச்செட்டிப்பட்டி,
மதுரை மாவட்டம்.

**விடை :** தங்கள் நிலத்தின் பேரில், நிலவள வங்கியிலிருந்து கடன் பெறலாம். தங்களுக்கு உள்ள சொத்து மதிப்பின் பேரிலேயே நிலவள வங்கியிலிருந்து கடன்பெற இயலும். எனவே, இதுபற்றிய முழு விவரங்களையும் அறிய உங்கள் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள கூட்டுறவு வளர்ச்சி அலுவலரை அணுகுங்கள். வேளாண்மைத் துறை மூலம் பழத்தோட்டம் புதிதாக அமைப்பதற்குக் கடன் பெறலாம். அதுபற்றி அறிய உங்கள் ஊராட்சி ஒன்றியத்துணை வேளாண்மை அலுவலர் (வளர்ச்சி) அவர்களை அணுகுதல் நல்லது.

* * *

**வினா :** எங்களுக்கு எந்தவிதமான நிலமும் சொந்தத்தில் இல்லை. நன்செய்களும், புன்செய்களும் சேர்ந்து கிட்டத்தட்ட 1 ஏக்கர் பயிரிட்டு வருகிறோம். விளைவதில் நிலத்தின் சொந்தக்காரருக்குக் கொடுத்தது போக மீதமுள்ளதை வைத்தே சாப்பிட வேண்டியிருக்கிறது. மேலும், நன்செய் நிலங்கள் வாங்கி விவசாயம் செய்ய முயற்சிக்கின்றேன். அதற்கு ரூ. 10,000 தேவைப்படுகிறது. அந்த ரூபாயைக் கடனாக அரசாங்கத்திலிருந்து வாங்க

முடியுமா? கடனை 4 ஆண்டில் திருப்பிக் கட்டி விடுகின்றேன். தங்கள் பதிலை விரைவில் எதிர் பார்க்கிறேன்.

**விடை :** தங்களுக்குச் சொந்தத்தில் கொஞ்சங் கூட நிலமே இல்லாதிருக்கும் பொழுது, எதை வைத்துக் கடன் கொடுக்க முடியும் என்பதைத் தயவு செய்து எண்ணிப் பாருங்கள். சொத்து மதிப்பின் பேரிலேயே எந்தக் கடனும் பெறமுடியும். அப்படியிருக்கும் பொழுது 10,000 ரூபாய் கடனாக அரசாங்கத்திடமிருந்து தாங்கள் எப்படிப் பெறமுடியும்? உங்கள் ஆர்வத்தைப் பாராட்ட வேண்டி, நிலம் பெறுவதற்கு ஒரு வழியைத் தெரிவிக்கிறோம்.

நிலமற்றவர்களுக்கு நிலப் பட்டா அரசு வழங்கி வருகிறது. உங்கள் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு, தங்களுக்குப் பட்டா நிலமே இல்லை என்பதைக் குறிப்பிட்டு மனு அனுப்புங்கள். உங்களுக்குப் பட்டா நிலமே இல்லை என்பது உண்மையானால், உங்கள் பகுதியில் பட்டா வழங்குவதற்கு நிலங்கள் இருக்குமானால், தங்களுக்குப் பட்டா கிடைக்க ஆவன செய்வார்கள். மேலும் தங்கள் பகுதி வட்ட ஆட்சியாளர் (தாசில்தார்) அவர்களிடமும் தங்கள் வேண்டுகோளை நேரில் தெரிவித்தல் நல்லது. அவர் கூறும் முறைப்படி மனுச் செய்யுங்கள்.

* * *

**வினா :** போடிநாயக்கனூர் யூனியனைச் சேர்ந்த கிராமங்களில் 3,000 ஏக்கரில் பருத்தி சாகுபடி செய்துள்ளோம். இங்குப் பருத்திக்கு வேண்டிய மருந்து கிடைக்காமல் நாங்கள் மிகவும் கஷ்டப்படுகிறோம். அதிகாரிகள் குறிப்பிடும் முக்கிய மருந்துகள் கிடைக்கவில்லை. நாங்கள் 5 வட்டிக்குக் கடன் வாங்கிச் சாகுபடி செய்துள்ளோம். எங்களுக்கு வேண்டிய செவின், கந்தகத்தூள், டி.டி.டீ. ஆகியவைகள் கிடைக்க ஆவன செய்வீர்களா? (முழுக் கடிதமும் வெளியிடப்படவில்லை)

மு. ப. ராஜேந்திரன்,
சிலமலை.
மதுரை மாவட்டம்.

**விடை :** பருத்திக்கு வேண்டிய மருந்துகள் போடி நாயக்கனூர் ஊராட்சி ஒன்றியக் கிடங்கில் இல்லையென்றால், உங்கள் ஊராட்சி ஒன்றியத் துணை வேளாண்மை அலுவலரிடமும், ஆணையாளரிடமும் கூறி உடன் வரவழைத்துக் கொடுக்கும்படிக் கேட்டுக் கொள்ளுங்கள். பெரியகுளத்தில் உள்ள மாவட்ட வேளாண்மை அலுவலருக்குத் தெரிவித்தால், அவர் எங்கிருந்தாவது தேவையான மருந்துகளை உடனே வரவழைத்துக் கொடுப்பார். எனவே, மேற்குறிப்பிட்டவர்களை உடனே அணுகி மருந்து வரவழைத்துக் கொடுக்குமாறு கேட்டுக் கொள்ளுங்கள்.

* * *

**வினா :** இரசாயன உரங்களை அதிகமாக நிலத்தில் இட்டால் நிலம் உவர் நிலமாக மாறிவிடும் என்று சில விவசாயிகள் கூறுகிறார்கள் உண்மையா?

—ச. அங்குசாமி,
கோவில்பத்து விவசாயிகள்
முன்னேற்றச் சங்கம்,
களக்காடு.

**விடை :** நிலத்தில் உள்ள சத்துக்கும், அந்த நிலத்தில் சாகுபடி செய்யவிருக்கும் பயிருக்குத் தேவையான அளவிற்கும் ஏற்ப இரசாயன உரங்களை இட்டால் நிலம் கெட்டுவிடாது. தொழு எரு அல்லது தழை எருவையும், தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்து ஆகியவை களைகொடுக்கும் இரசாயன உரங்களையும் தேவையான அளவுக்கு இட்டால் நிலம் கெட்டுவிடாது என்பது ஆராய்ச்சிகளின் மூலம் அறிந்த உண்மையாகும்.

இங்கிலாந்தில்உள்ள 'ரோதம்ஸ்டெட்' என்ற இடத்தில் கடந்த 100 ஆண்டுகளுக்கும் மேலாக இரசாயன உரங்களை இட்டுக் கோதுமை பயிரடப்பட்டு வருகிறது. அது போலவே தமிழ் நாட்டில் கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த பண்ணையில் சென்ற 50 ஆண்டுகளாகத் தொடர்ந்து இரசாயன உரமிட்டுச் சோதனை செய்யப்பட்டு வருகிறது. இதனால், விளைச்சல் குறைந்து விடவில்லை; நிலவளமும் குன்றிவிட வில்லை. ஆகவே, இரசாயனஉரமிடுவதால் நிலவளம் நாளடைவில் குன்றிவிடும், என்ற கருத்து, பொருத்தமற்றது என்பது தெளிவாகும். ஆனால், தேவைக்கு மேல் உரமிட்டாலோ அல்லது மணிச்சத்து, சாம்பல் சத்துக்களை அளிக்காமல் தழைச்சத்து உரங்களை மட்டும் அளித்து வந்தாலோ மகசூல் குறைந்து விடக்கூடும். சுண்ணும்புச்சத்து குறைவாயுள்ள நிலங்களில் அமோனியம் சல்பேட் உரத்தைத் தொடர்ந்து அதிகமாக இட்டால் நிலம் அமிலத்தன்மை அடைந்து உவர் நிலமாகவே மாறிவிடக்கூடும். பொதுவாகத் தமிழ்நாட்டு மண்களில் சுண்ணும்பு (Calcium) அதிகமாக உள்ளதால், இரசாயன உரமிடுவதால், நிலம் உவர் நிலமாக மாறிவிடும் என்று அஞ்சவேண்டாம்.

* * *

**வினா :** பம்பாயிலுள்ள இன்டோஃபில் கெமிக்கல்ஸ் லிமிடெட் கம்பெனியாரின் விளம்பரம் நமது 'தமிழரசு' இதழில் அடிக்கடி வருகின்றது. நெற்பயிரைப் பாதுகாத்துக் களையை மட்டும் ஒழிக்க ஸ்டாம் எப். 34 உபயோகிக்கும்படி அதில் தெரிவித்துள்ளார்கள். களையை மட்டும் ஒழிக்க இந்த மருந்து பயன்படுமானால், விவசாயிகளுக்கு இது மிக்கப் பயனுள்ளதாகவே இருக்கும். இது நமது ஆராய்ச்சிப் பண்ணைகளில்பரிசோதனை செய்யப்பட்டுள்ளதா? இது எங்குக் கிடைக்கும் என்ற விவரங்களைத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

—எஸ். ஜி. விநாயகமூர்த்தி, எம். ஏ., தலைவர், வட சென்னை மாவட்ட காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர், சென்னை மாநகராட்சி உறுப்பினர், சென்னை-21.

### தாயும் சேயும்

''கருவுற்ற காலங்களில் பெண்டிர், சில குறிப்பிட்ட உணவுகளை உட்கொள்ளுவதாலேதான் அங்கவீனமான குழந்தைகள் பிறக்கின்றன. தாய்மார்கள் செய்யும் சிறு பிழை—குழந்தைகட்கு வாழ்நாளெல்லாம் பிறரை அண்டிவாழும் நிலை'' என்று ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசின் மத்திய நல்வாழ்வுத் துறை அமைச்சர் குறிப்பிட்டார்.

விடை;—பம்பாயிலுள்ள இன்டோஃபில் கெமிக்கல்ஸ் லிமிடெட் நிறுவனத்தார் விளம்பரப்படுத்தியுள்ள ''ஸ்டாம் எப்-34'' என்ற களைக்கொல்லி மருந்து நெல் வயல்களில் தோன்றும் களைகளை அறவே அழிக்க மிகவும் ஏற்றது என்பது, கோயம்புத்தூரில் உள்ள தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் நடத்தப்பெற்ற பரிசோதனைகளிலிருந்து தெரிய வருகிறது. தமிழ்நாடு அரசின் வேளாண்மைத் துறை இக்களைக் கொல்லி மருந்தைப் பயன்படுத்திப் பல்வேறு இடங்களில் பரிசோதனை செய்து பார்த்துப் பயனுள்ளது என்பதை அறிந்த பின்பே, ''ஸ்டாம் எப். 34'' என்ற களைக்கொல்லி மருந்தை உழவர்களுக்கு வழங்க அனுமதி அளித்துள்ளது.

ஒரு ஏக்கர் நெல் வயலுக்கு ஒரு லிட்டர் ''ஸ்டாம் எப். 34'' களைக்கொல்லி மருந்தையும், 5 கிலோ யூரியாவையும், 350 லிட்டர் தண்ணீரில் கரைத்துக் கையால் இயக்கும் தெளிப்பானால் தெளிப்பதே நெல் வயலில் தோன்றும் களைகளை அழிப்பதற்கு உள்ள மிகவும் சிக்கன முறையாகும். விசைத் தெளிப்பான் (Power Sprayer) மூலம் தெளிப்பதென்றால் ஒரு லிட்டர் ''ஸ்டாம் எப். 34'' களைக்கொல்லி மருந்தையும், 5 கிலோ யூரியாவையும் 80 லிட்டர் தண்ணீரில் கரைத்து ஒரு ஏக்கரில் தெளிக்க வேண்டும். இம்முறையில் களைகளை அழிக்க ஏக்கருக்குச் சுமார் ரூ.28·00 ஆகிறது. அதன் விவரம் வருமாறு:—

| | | |
|---|---|---|
| 1 | லிட்டர் ''ஸ்டாம் எப். 34'' மருந்தின் விலை. | 18·00 |
| 5 | கிலோ யூரியாவின் விலை. | 5·00 |
| | தெளிக்கும் ஆள் கூலி, தெளிப்பான் வாடகை முதலியன. | 5·00 |
| | ஆக மொத்தம் | 28·00 |

ஏக்கருக்கு ரூ. 28·00 செலவிட்டு, ஒரு முறை ''ஸ்டாம் எப். 34'' களைக் கொல்லி மருந்தையும் யூரியாவையும் தண்ணீரில் கலந்து தெளித்தாலே களைகள் அழிந்து விடுகின்றன.

ஆனால், பொதுவாக நெல் வயல்களுக்கு 2 முறை கூலியாட்களைக் கொண்டு களை யெடுக்கப்பட்டு வருகிறது. ஏக்கருக்குச் சராசரியாக முதல் முறை 15 பெண்களும், இரண்டாம் முறை 10 பெண்களும் களையெடுக்கத் தேவைப்படுகின்றனர். இவ்வாறு களையெடுக்க ஒரு பெண் கூலியாளுக்கு ஒரு நாளைக்கு ரூ. 1.75 (மதிய உணவு இல்லாமல்) கூலி வீதம் 20 பெண்களுக்கும் ரூபாய் 43.75 கூலி கொடுக்க வேண்டியுள்ளது.

ஆகவே கைகளால் களைகளை எடுப்பதைக் காட்டிலும் ''ஸ்டாம் எப். 34'' களைக்கொல்லி மருந்தையும் யூரியாவையும் கலந்து தெளிப்பதே சிக்கனமானது என்பது தெளிவாகிறது. இம்முறையினால் சராசரியாக ஏக்கருக்கு ரூ. 15.75 மீதமாவதுடன், மகசூல் அதிகமாகி இலாபமும் பெருகுகிறது.



இதன் பின்னங் கால்களை விரும்பி உண்கின்றனர். இதன் தோலைப் பதனிட்டுப் பலவித வண்ணங்களில் சிறிய தோல் பொருட்கள் செய்கிறார்கள்.

இம்முறையில் ''ஸ்டாம் எப். 34'' தெளிக்கும்போது பின் கண்டவைகளைக் கவனத்தில் கொண்டு செயல்படவேண்டியது மிகவும் அவசியமாகும். இல்லாவிட்டால் விரும்பத்தகாத விளைவுகள் ஏற்பட்டுச் சேதம் ஏற்படக்கூடும்.

1. நடவு செய்த 15 முதல் 20 நாட்களுக்குள் ''ஸ்டாம் எப். 34'' களைக்கொல்லியை யூரியாவுடன் கலந்துத் தெளிக்க வேண்டும்.

2. இக்கரைசலைத் தெளிப்பதற்கு முன்பு நெல் வயலில் உள்ள தண்ணீரை வடித்துவிட வேண்டும்.

3. இவ்வாறு தெளிக்கப்பட்டதற்குப் பிறகு 48 மணி நேரம் வரை நெல் வயலுக்குத் தண்ணீர் பாய்ச்சக்கூடாது.

4. ''ஸ்டாம் எப். 34'' யூரியா தெளிப்பதற்கு ஒருவாரம் முன்பாகவும், தெளித்த பிறகு ஒரு வாரம் வரையும் பூச்சிப் பூஞ்சாள மருந்துகளைத் தெளித்தலோ அல்லது இரசாயன உரமிடுதலோ தவிர்க்கப்பட வேண்டும்.

5. களைக்கொல்லி மருந்து தெளிக்கப் பயன்படுத்திய தெளிப்பானைப் பூச்சிப் பூஞ்சாள மருந்து தெளிக்கப் பயன்படுத்தக் கூடாது. இதற்கென தனித் தெளிப்பான் வைத்துக் கொள்வதே சிறந்தது.

6. தெளிக்கும்போது முகத்திலோ, கண்களிலோ அல்லது உடலின் வேறு பகுதியிலோ படாமல் கவனமாகத் தெளிக்க வேண்டும். களைக்கொல்லிமருந்து கண்களில் அல்லது நோவில் பட்டால் உடனே தண்ணீரினால் நன்கு கழுவ வேண்டும். தெளிப்பை முகர்ந்து பார்க்கக் கூடாது.

''ஸ்டாம் எப். 34'' களைக் கொல்லியின் விலை அதிகமாக இருப்பதால், ஏழை உழவர்கள் அதைத் தெளிக்க முன்வர மாட்டார்கள். ஏழை எளிய உழவர்களும் ''ஸ்டாம் எப். 34'' களைக்கொல்லியைப் பயன்படுத்தி களைகளை அழித்து விளைவினைப் பெருக்க வேண்டுமென்பதற்கே தமிழ்நாடு அரசு 15 சத மானிய விலையில் இம்மருந்தை வழங்குமாறு ஆணையிட்டுள்ளது. இச்சலுகை விலையில் ஊராட்சி ஒன்றிய வேளாண்மைக் கிடங்குகளிலிருந்து இக்களைக்கொல்லியைப் பெற்றுக் கொள்ளலாம். அல்லது முழுவிலைக்கே கீழ்க்கண்ட முகவரியில் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

திசைன்டிபிக் பெர்ட்டிலைசர் கம்பெனி(பிரைவேட்)லிமிடெட்,
பொன்னுரங்கம் ரோடு,
ஆர். எஸ். புரம்,
கோயம்புத்தூர்-2.

''ஸ்டாம் எப். 34'' களைக் கொல்லி மருந்து தெளிக்க, வேளாண்மைத் துறை அலுவலர்களின் உதவியை நாடுதல் நல்லது.

# ஒப்பந்தப் புள்ளி அறிவிப்புகள் (டெண்டர்கள்) வேலை வாய்ப்பு விளம்பரங்கள்

## நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை

நாகர்கோவில் கோட்டம்

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காகவும், அவர்கள் சார்பாகவும் நாகர்கோவில் (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை) கோட்டப் பிராந்தியத்திலுள்ள அரசினர் சாலைகளில் 1972–73-ஆம் ஆண்டிற்கான பராமரிப்பு வேலைகளுக்கான மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் நாகர்கோவில் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை) அவர்களால் அவர்களுடைய அலுவலகத்தில் 9—2—1972-ஆம் தேதி பிற்பகல் 3-00 மணி வரையிலும் (அலுவலக நேரப்படி) பெற்றுக்கொள்ளப் படும். பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் அன்றைய தினமே பிற் பகல் 3-15 மணிக்கு ஒப்பந்ததாரர்கள் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

ஒப்பந்த விவரங்களும் குறிப்பிட்ட நமூனுக்களும் நிபந்தனைகளும் கோட்டப் பொறியாளர் அலுவலக மேலாளர் அவர்களிடமிருந்து அலுவலக நேரங்களில் 24—1—1972 முதல் 8—2—1972 வரை (விடு முறை நாட்கள் தவிர) சதவீத ஒப்பந்தப் புள்ளி ஒன்றுக்கு ரூபாய் 3·11 வீதமும் அட்டவணை ஒப்பந்தப் புள்ளி ஒன்றுக்கு ரூபாய் 6·21 வீதமும் (விற்பனை வரி உட்பட) செலுத்தி விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம். இந்தப் பணம் எந்தக் காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரப்பட மாட்டாது.

ஒப்பந்தப் புள்ளிகளின் உறையின் மேல் ஒப்பந்ததாரரின் முழு முகவரியுடன், வேலையின் பெயரையும் எழுதி, கோட்டப் பொறியாளர் (நெ.கி.ப.) நாகர்கோவில் என்ற முகவரிக்கு, அரக்கு முத்திரை யிட்டு அனுப்ப வேண்டும்.

வேலை விவரங்கள், முன் வைப்புத் தொகை, விவரங்கள் அடங்கிய அட்டவணை இவ்வலுவலகத்திலும் இதன் அனைத்து உட்கோட்ட உதவிப்பொறியாளர் (நெ.கி.ப.) அலுவலகத்திலும் பிரிவு அலுவலகங் களிலும் உள்ள அறிவிப்புப் பலகைகளில் விளம்பரம் செய்யப்படும்.

முன் வைப்புத் தொகை, இக்கோட்டத்தின் எல்லைக்குட்பட்ட ஏதாவது அரசினர் கருவூலத்தில் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பின் கீழ் செலுத்தி அதற்கான செல்லுச் சீட்டை ஒப்பந்தப் புள்ளிகளோடு இணைத்து அனுப்ப வேண்டும். முன் வைப்புத் தொகை இல்லாத ஒப்பந்தங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

ஏ. அப்துல்காதர்,
கோட்டப்பொறியாளர் (நெ.கி.ப.).

த. 22

---

## குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பி லும் கீழ்காணும் வேலைக்கென ஒப்பந்தப் புள்ளிகள் முத்திரை யிடப்பட்ட உறையில் தமிழ்நாடு பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை (குடிநீர், வடிகால் வாரியம்) பொதுப் பணித்துறை, நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை அல்லது இவை போன்ற இதர அரசினர் துறைகளில் பதிவு பெற்ற உரிய வகுப்பு ஒப்பந்ததாரர்களிட மிருந்து எண் 17, சர். பி.டி. இராசன் சாலை, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள பொதுச் சுகாதாரப் பெறியியல் துறை மேற் பார்வைப் பொறியாளர் அவர்களால் 4—2—1972 பிற்பகல் 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்பட்டு அன்று பிற்பகல் 3-30 மணிக்கு ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியா ளராலோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவராலோ அவருடைய அலுவலகத்தில் வைத்துத் திறக்கப்படும்.

வேலையின் பெயர்:—பள்ளப்பட்டி குடிநீர்த் திட்டம்—மூன்றும் நிலை (நிறைவு)—பகிர்வு முறைக்கென வார்ப்பிரும்பு, ஆஸ்பெஸ்டாஸ் குழாய்களைப் பதித்தலும் இணைத்தலும்.

ஒப்பந்த வகை:—மொத்தத்தொகை.

முன்வைப்புத் தொகை:—ரூ. 1,770 (ரூபாய் ஆயிரத்து எழு நூற்று எழுபது மட்டும்).

இத்தொகைக் கருவூலச் செலான், பண உத்தரவுச் சீட்டு அல்லது தேசிய வங்கி உத்தரவாதம் இவற்றில் ஏதாவது ஒரு வடிவில் திருச்சி பொதுச் சுகாதாரப் பொறியியல் துறைக் கோட்ட நிருவாகப் பொறியாளர் பெறும் வகையில் செலுத்தப்பட்டு அதற்கான அத்தாட்சி ஒப்பந்தப் படிவங்களுடன் இணைக்கப்படவேண்டும்.

வேலையினை முடிப்பதற்குரிய கால அளவு:—ஒன்பது மாதங்கள்.

ஒப்பந்தப் படிவங்களின் விலை:—ரூ. 10·35 (விற்பனை வரி உட்பட). ஒப்பந்த படிவங்கள் வேண்டுவோர் திருச்சி பொதுச் சுகாதாரப் பொறியியல் துறைக் கோட்ட நிருவாகப் பொறியாளரிடமிருந்து பி-15, தில்லை நகர், மெயின் ரோடு, திருச்சி-3 என்ற முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் அதற்கான மேற்குறித்த விலையினைச் செலுத்தி, 2—2—1972 புதன் மாலை 5 மணி வரையில் ஒப்பந்தப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

மதுரை-2,
26—12—1971.

மேற்பார்வைப் பொறியாளர்,
குடிநீர் வடிகால் வாரியம்.

(த.6)

---

## நெடுஞ்சாலை கிராமப் பணித் துறை

தேசிய நெடுஞ்சாலை வட்டம், சென்னை-1

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் தேசிய நெடுஞ்சாலை வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் அரக்கு முத்திரையிட்ட இனவரி ஒப்பந்தப் புள்ளிகள் 9—2—1972 மாலை 3 மணி வரை கீழ்க்கண்ட வேலைக்குப் பெற்றுக்கொள்ளப்படும்.

| வரிசை எண்ணும், வேலையின் விவரம். | பிரிவு. | முன்வைப் புத்தொகை. |
|---|---|---|
| 1 தே. நெ. எண் 7, சேலம், திண்டுக்கல் சாலையில் கி. மீ. 255/0 இருந்து 278/0 முடிய பாதையை அகலப் படுத்திப் பலப்படுத்துதல். | சேலம். | ரூ. 61,475 |

ஒப்பந்தப் புள்ளிகள் 9—2—1972 அன்றே மாலை 3-15 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் திறக்கப்படும்.

ஒப்பந்தத்திற்கான நமூனுக்கள் வரைபடங்கள் முதலியவற்றைக் கோட்டப் பொறியாளர் (நெ.) தேசிய நெடுஞ்சாலைக் கோட்டம், சிறப்பு கோட்டம், சேலம் அலுவலகத்தில் 10—1—1972 முதல் 8—2—1972 முடிய விற்பனை வரியுட்பட 51·75 கட்டிப் பெற்றுக் கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பிக்கொடுக்கப்பட மாட்டாது.

மேற்குறிப்பிட்ட முன் வைப்புத் தொகையைக் கோட்டப் பொறி யாளர் (நெ.) தேசிய நெடுஞ்சாலைக் கோட்டம், சேலம் அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் ரெவின்யூ டெபாசிட் என்ற தலைப்பின் கீழ் கோட்டப் பொறியாளர் (நெ.) தேசிய நெடுஞ்சாலைக் கோட்டம், சேலம் பெயரில் செலுத்திச் செல்லுச் சீட்டையாவது அல்லது வங்கி பொறுப்புறுதியையாவது ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

குறிப்பிட்ட முன் வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டா.

தி. மு. ஆ. ஜெயராமன்,
மேற்பார்வைப் பொறியாளர்.

(த. 10)

## ஏல விளம்பரம்

### தேனி—அல்லி நகரம் நகராட்சி

### (மதுரை மாவட்டம்)

தேனி-அல்லி நகரம் நகராட்சிக்குச் சொந்தமான தேனி, மேற்குச் சந்தை சரகத்திலுள்ள 78 ஸ்டால்களை 1-4-1972-ஆம் தேதி முதல் 31-3-1973-ஆம் தேதி முடிய ஒரு வருட காலத்திற்கு உபயோகித்துக் கொள்ள தேனி-அல்லி நகரம் நகராட்சி மன்ற தனி அதிகாரி அவர்களால் நகராட்சி மன்ற அலுவலகத்தில் 11-2-1972-ஆம் தேதி வெள்ளிக் கிழமை காலை 11-00 மணிக்குப் பகிரங்கமாக ஏலம் விடப்படும். ஏல நிபந்தனைகள் மற்றுமுள்ள இதர விவரங்களை அலுவலக நேரங்களில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

கா. முகமதுஇப்ராஹிம், பி.ஏ.,
தனி அலுவலர்.

தேனி,
6-1-1972.
(த.2)

## ஒப்பந்தப் புள்ளி

### மின்சார வாரியம்

வேலூர் வருவாய்த் துறை,உதவித் தலைமைக் கணக்காயர் அலுவலகம், (இதுவரை, 'காமராஜ் அலுவலகம்' காட்பாடி விரிவில் அமைந்திருந்தது) இடம் மாற்றப்பட்டு 1972 சனவரி முதல் வாரத்திலிருந்து வேலூர் 1 (வ.ஆ.) நீலி கோடௌன் தெரு, 5-ஆம் நெம்பர் கட்டடத்தில் செயல்படும். வேலூர் சப்-ஸ்டேஷன், மேல்பாடி, திருவலம், கணியம்பாடி, கண்ணமங்கலம் (கிழக்கு மேற்கு) ஒடுகத்தூர் (கிழக்கு, மேற்கு) ஊசூர், அணைக்கட்டு, பள்ளிகொண்டா, கீழ் வைத்தியனுங்குப்பம், வடுகந்தாங்கல், லத்தேரி ஆகிய செக்ஷன்களின்கீழ் வரும் மின் உபயோகிப்போர்கள், தங்கள் மின் கட்டண பட்டியல்கள் சம்பந்தமான எல்லா விஷயங்களுக்கும் தொடர்புகொள்ள, வேலூர் வருவாய்த்துறைப்பிரிவின் புது விலாசத்தை கவனித்துக் கொள்ளுமாறு கோரப்படுகிறார்கள்.

மேற்பார்வைப் பொறியாளர்,
வேலூர் மின் திட்டம், காட்பாடி நகர்விரிவு.

(த.3)

## திருத்தம்

### பொதுப்பணித்துறை

ஒப்பந்தப் புள்ளி அறிவிப்புத் திருத்தம் எண். டி.என்.வி. 26/71-72 தேதி 7-12-1971.

ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு எண். டி.என்.வி. 26/71-72 தேதி 7-12-1971 " வைப்பாருக்குக் குறுக்கே ஆத்தங்கரை கிராமம் அருகில் அணைக்கட்டுக் கட்டுதல் " இந்த வேலை விலக்கப்படுகிறது.

மேற்பார்வைப் பொறியாளர்,
பொதுப்பணித் துறை,
திருநெல்வேலி, கன்னியாகுமரி வட்டம், பாளையம் கோட்டை.

(த.15)

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் லிமிடெட்

பதிவு செய்யப்பட்ட அலுவலகம் :— 150-ஏ, அண்ணாசாலை, தபால் பெட்டி எண். 5205, சென்னை-2.

அரக்கோணம், உருக்கு வார்ப்பட நிறுவனத்திற்கு, 6,000 டன் சுண்ணாம்புக் கற்கள் வழங்குவதற்கு, 15-2-1972 மாலை 3-00 மணி வரை, குரூப் மெட்டீரியல்ஸ் மேலாளர், தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் லிமிடெட் அலுவலகம், அவர்களால் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்படும்.

ஒப்பந்தப் புள்ளிகள், அதே நாள் மாலை 3-30 மணிக்கு, அச்சமயம் வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில், குரூப் மெட்டீரியல்ஸ் மேலாளர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற ஒருவரால் திறக்கப்படும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள், இந்நிறுவன அலுவலகத்தில் 17-1-1972 முதல் செட் ஒன்றுக்கு ரூ. 10·37 செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

மேலாளர்,
குரூப் மெட்டீரியல்ஸ்.

(த.5)

## ஒப்பந்தப் புள்ளி

### மின்துறைப் பொருட்களை உந்து வண்டிகளில் ஏற்றிச் செல்லல்

தருமபுரி மின்திட்ட மேற்பார்வைப் பொறியாளரால் 5-2-1972 பிற்பகல் 3-00 மணிவரை "அரக்கு முத்திரையிடப்பட்ட குத்தகை நிபந்தனைத் தாள்கள்" (Sealed Tenders) கீழ்க்கண்ட வேலைகளுக்காகக் கோரப்படுகின்றன.

"1-4-1972 முதல் 31-3-1973 வரை (1) தருமபுரி புகை வண்டி நிலையத்திலிருந்து தருமபுரி மத்திய பண்டகசாலைக்கும் அல்லது புகை வண்டி நிலையத்திலிருந்து ஐந்து கிலோ மீட்டருக்குள் அடங்கும் இதர இடங்களுக்கும் (2) தருமபுரி மின்திட்டத்திலுள்ள ஏதாவதொரு பண்டகசாலையிலிருந்து அதே திட்டத்திலுள்ள இதர பண்டகசாலைகளுக்கும், அல்லது தமிழகத்தில் வேறெந்த இடத்திற்காகிலும் பொருட்களைப் பெற்றுச் சென்று ஒப்படைத்தலும் தமிழகத்தின் இதர இடங்களிலிருந்து பண்டகங்களை ஏற்றிவந்து தருமபுரி மின்னியக்கத் திட்டத்தில் ஒப்படைத்தலும் (3) தருமபுரி மின்திட்ட எல்லைக்குள் ஆர்.சி.சி. கம்பங்களை அவைகளின் உற்பத்தித் தானத்திலிருந்து வேலை தானத்திற்கு ஏற்றிச் செல்லுதலும்".

குத்தகை விவரங்கள் நிபந்தனைத் தாள்கள் (Tender Conditions) ஆகியவற்றைப் பிரதி ஒன்றுக்கு ரூ.5 (ரூபாய் ஐந்து மட்டும்) திருப்பித்தரத் தக்கதல்ல)பண அஞ்சல் மூலமாகவோ அல்லது நேரிலோ தருமபுரி மின்னியக்கத் திட்டத் தலைமைக் கணக்காயரிடம் (செலவினம்) செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

பண அஞ்சல் பெறும் கடைசி நாள் 2-2-1972. குத்தகை விவரங்கள் மற்றும் நிபந்தனைகளடங்கிய தாள்கள் சாதாரண அஞ்சல் மூலமாக மட்டும் அனுப்பப்படும். இடையில் அஞ்சல் தவறினலோ அல்லது தாள்கள் கிடைப்பதற்குத் தாமதமானலோ மின்சார வாரியம் பொறுப்பேற்காது. குத்தகை விவரம் மற்றும் நிபந்தனைகளடங்கிய தாள்கள் மாற்றத் தக்கதல்ல. கீழே கையொப்பமிட்டவர் எந்த ஒரு ஒப்பந்தப் புள்ளியையோ அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையோ எவ்விதக் காரணமும் காட்டாமல் நிராகரிக்க இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட குத்தகைதாரர்களிடையே பகிர்ந்து கொடுக்கவும் உரிமை பெற்றவராவார். ரூ. 500 (ரூபாய் ஐநூறு மட்டும்) பிணைத் தொகையாகத் தருமபுரி மின் திட்ட அலுவகத்தில் நேரில் செலுத்தி ரசீது பெற்றோ அல்லது ஷெடியூல்டு வங்கியில் (Scheduled banks) செலுத்தப்பட்ட பண மாற்றோலை (Demand drafts) இணைக்கப்பட்டோ அனுப்பப்படும் குத்தகை நிபந்தனைத் தாள்கள்மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். குத்தகைத் தாள்கள் வந்திருக்கும் குத்தகைதாரர்கள் முன்னிலையில் 5-2-1972 பிற்பகல் 4 மணியளவில் திறக்கப்படும். குத்தகை விவரத் தாள்கள் 17-1-1972 தேதியிலிருந்து விற்பனைக்குக் கிடைக்கும்.

மேற்பார்வைப் பொறியாளர்,
தருமபுரி மின்திட்டம்,
தருமபுரி.

(த. 7)

## ஏல விற்பனை

### வேளாண்மைத் துறை

இந்த இலாகாவினல் பறிமுதல் செய்யப்பட்ட ஸ்டேயர் டிராக்டர் (எம். எஸ். ஓய். 4631) விக்ரமா டிரெய்லர் மற்றும் அதனுடைய உப கருவிகள் 9-2-1972 அன்று காலை 11-00 மணி அளவில் இவ்வலுவலகத்தில் அவை "தற்போது இருக்கும் நிலையில்" பொது ஏலம் விடப்படும்.

ஏலம் பற்றிய முழு விவரங்களுக்கும் நிபந்தனைகளுக்கும் இவ்வலுவலகத்தை அணுகவும்.

உதவி விவசாயப் பொறியாளர்,
(ஆய்வு ) நந்தனம்.
சென்னை-35.
தொலைபேசி எண் 441595.

(த. 8)

## மதுரை மாவட்டக் கூட்டுறவு விநியோக விற்பனைச் சங்கம் லிமிடெட், எ. 1437, மதுரை

## லாரி டிரான்ஸ்போர்ட் ஒப்பந்த நிபந்தனைகள்

| டெலிவரி எடுக்க வேண்டிய இடம். | கொண்டு சேர்க்கவேண்டிய இடம். |
|---|---|
| 1. சென்னை துறைமுகம் (சென்னையிலுள்ள அரசினர் உரக் கிடங்குகள்). | மதுரை, திண்டுக்கல், பழனி, தேனி, திருமங்கலம். |
| 2. ஆவடி .. .. .. .. .. | ஷை |
| 3. கடலூர் .. .. .. .. .. | ஷை |
| 4. நாகப்பட்டினம் .. .. .. | ஷை |
| 5. பாண்டிச்சேரி .. .. .. | ஷை |
| 6. நெய்வேலி .. .. .. | ஷை |
| 7. தூத்தூக்குடி .. .. .. .. | ஷை |
| 8. கொச்சி .. .. .. .. | ஷை |
| 9. மன்னார்குடி .. .. .. | ஷை |

மேலே கண்டபடி மதுரைக்கும், ஏனைய இடங்களுக்கும் லாரி மூலம் டிரான்ஸ்போர்ட் செய்ய அயிட்டம் வாரியாக லாரி வாடகை 1-4-1972-ஆம் தேதி முதல் 31-3-1973 முடிய ஒரு வருட கான்ட்ராக்ட் செய்ய டன் ஒன்றுக்கு என்ன லாரி வாடகை (இறக்குக் கூலி நீக்கி) தேவை என்பதற்கு ஒப்பந்தப்புள்ளி கொடுக்க வேண்டியது. ஒப்பந்தப்புள்ளி விலைகள் இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் பாரத்தில் இருக்க வேண்டும். அவ்வாறில்லாவிடில் ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்படும்.

2. சட்ட சம்பந்தமான சுய காரியங்களை நடத்த யோக்கியதாம்சம் பெற்றவர்கள் மட்டும் ஒப்பந்தப்புள்ளி போடுவதில் கலந்து கொள்ள வேண்டும்.

3. ஒப்பந்தப்புள்ளி கொடுக்கும் சமயம் ரொக்க டெபாசிட் ரூ. 1,000 எங்கள் சங்கத்தில் செலுத்தப்பட வேண்டும். ஒப்பந்தப்புள்ளி கட்டுத் தொகை கட்டாதவர்கள் ஒப்பந்தப்புள்ளி கவனிக்கப்பட மாட்டாது. ஒப்பந்தப்புள்ளி முத்திரை வைக்கப்பட்ட கவரில் அனுப்பப்பட வேண்டும்.

4. ஒப்பந்தப்புள்ளி எங்கள் சங்கத்திற்கு கிடைக்க வேண்டிய கடைசி தேதி 25-2-1972 மாலை 4 மணி.

5. ஒவ்வொரு அயிட்டத்துக்கும் தனித்தனி ரேட் கொடுக்கப்பட வேண்டும்.

6. ரொக்க ஜாமீன் தொகை ரூ. 5,000 (ரூபாய் ஐயாயிரம்) முதலில் டெண்டர் டெபாசிட் ரூ. 1,000 (ரூபாய் ஆயிரம் மட்டும்) கட்டி டெண்டர் சமர்ப்பிக்க வேண்டும்.

7. ஜாமீன் தொகை ரூ. 5,000-க்கு வட்டி கிடையாது.

8. ஒப்பந்தப்புள்ளி விலை ஒப்புக்கொள்ளப்பட்டால் அந்த நபர் ஜாமீன் தொகை ரூ. 5,000 ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளி கட்டுத் தொகை ரூ. 1,000 கட்டியது போகப் பாக்கி ரூ. 4,000 கட்டி ஒப்புக் கொண்ட தேதியில் இருந்து ஒரு வாரத்திற்குள் எக்ரிமெண்ட் பத்திரம் எழுதிக் கொடுத்துவிட வேண்டும்.

9. மேற்குறிப்பிட்ட பிரகாரம், ஒப்புக்கொள்ளப்பட்ட ஒப்பந்தப்புள்ளிதாரர் குறிப்பிட்ட காலத்திற்குள், பாக்கி கட்டுத் தொகையைக் கட்டத் தவறினாலோ அல்லது ஒப்பந்தப் பத்திரம் எழுதிக் கொடுக்கத் தவறினாலோ, அவருக்குக் கொடுக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி ஒப்புதல் உத்திரவு ரத்துச் செய்யப்பட்டு அவருடைய கட்டுத் தொகையையும் பறிமுதல் செய்யப்படுவதுடன் புதிதாக வேறு ஒப்பந்தப்புள்ளி தரவழைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, குறைந்த ஒப்பந்தப்புள்ளி ஒப்புக் கொள்ளப்படும். இதனால் அரசுக்கோ அல்லது மதுரை மாவட்டக் கூட்டுறவு விநியோக விற்பனைச் சங்கத்திற்கோ ஏற்படும் நஷ்டத்திற்கு முதலில் ஒப்புக் கொள்ளப்பட்ட ஒப்பந்தப்புள்ளிதாரே பொறுப்பாவார்.

10. ஒப்புக்கொண்ட ஒப்பந்தப்புள்ளிதாரர் 1-4-1972-ஆம் தேதிமுதல் 31-3-1973 முடிய ஒரு வருட காலத்திற்கு கான்ட்ராக்டராக நியமனம் செய்யப்படுவார்.

11. தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்ததார் மேற்படி ஒப்பந்தப் புள்ளி ஒப்புக்கொள்ளப்பட்டு மேற்படி ரேட்டுப்படி வேலையை ஒப்புக்கொள்ளவில்லையானால் ஒப்பந்தப் புள்ளி கட்டுத்தொகையை அவர் இழப்பதோடு இதனால் சங்கத்திற்கு ஏற்படும் சகல நஷ்டத்தையும் அவரே பொறுப்பேற்க வேண்டியிருக்கும்.

12. 1—4—1972-ஆம் தேதிக்குப்பின் ஏற்படும் புது அலாட்மெண்டுதான் ஒப்பந்தப் புள்ளி விலையில் அமல்படுத்தப்படும்.

13. சரக்குகள் குறைவாக டெலிவரி செய்யப்பட்டால் அதனால் ஏற்படும் நஷ்டத்திற்கு ஒப்பந்ததாரரே பொறுப்பு.

14. கண்ட்ரோல் சரக்குகள் பெரும்பாலும் ஏற்றப்பட்டுச் செயல்படுத்துவதால் குறைபாடோ அல்லது கெட்டுவிடுவதாலோ ஏற்படும் நஷ்டத்திற்கும் மற்றும் கிரிமினல் நடவடிக்கைகளுக்கும் தனிப்பட்ட முறையில் ஒப்பந்தாரரே பொறுப்புதாரியாவார்.

15. லாரி டிரான்ஸ்போர்ட் சம்பந்தப்பட்டமட்டில் எங்கள் சங்க லாரிகளும் வானும் செயல்படுத்தப்படும். இதற்குக் கான்ட்ராக்டருக்கு எவ்வித அலவன்சோ அல்லது சலுகையோ கிடையாது. அதாவது டிரான்ஸ்போர்ட் விஷயத்தில் சங்க லாரிகளுக்குத்தான் முதல் சலுகைக் கொடுக்கப்படும். சங்க லாரிகள் டிரிப் அடித்தது போக மிதம் இருந்தால்தான் ஒப்பந்ததாரருக்கு லோடு கொடுக்கப்படும்.

16. சாக்குகளை அலாட் செய்து டெலிவரி எடுக்க ரயில் ரசீதோ அல்லது டெலிவரி ஆர்டரோ அல்லது ஆதரசேசன் கடிதமோ கொடுத்து உரிய காலத்தில் டெலிவரி எடுக்கப்படாததால் ஏற்படும் டெமரேஜ், வார்பேஜ் ஆகியவைகளுக்கு ஒப்பந்தப் புள்ளிதாரர்தான் பொறுப்பு.

17. சரக்குகள் பூராவும் நல்ல நிலையில் ஒப்புக்கொடுத்து டெலிவரி செய்தபின்தான் லாரி வாடகைச் சங்கத்தால் அலுவலக நேரத்தில் கொடுக்கப்படும் (லாரி வாடகையை அட்வான்சாக கொடுக்கப்படமாட்டாது).

18. சரக்குகளை எங்கள் சங்கத்துக்கு காலை 10 மணி முதல் மாலை 6 மணிக்குள் டெலிவரி செய்து விடவேண்டும். சென்ட்ரல் வேர்ஹவுஸ் கிடங்கியில் வைக்கப்படவேண்டிய அயிட்டமகா இருந்தால் மாலை 5 மணிக்குள் டெலிவரி செய்துவிடவேண்டும்.

19. அரசு குறிப்பிட்ட கெடுவுக்குள் சரக்கைச் சங்கத்தின் சம்பந்தப்பட்ட இடங்களுக்கு டெலிவரி எடுத்துக் கொடுக்க வேண்டிய பொறுப்பு ஒப்பந்தப் புள்ளிதாரரைச் சேர்ந்தது.

20. அரசு விடுமுறை நாட்களிலும், சங்கத்தின் விடுமுறை நாட்களிலும் லாரி மூலம் சரக்குகளை ஏற்றி வரக்கூடாது.

21. மேற்படி நிபந்தனைகளுக்கு மீறி சங்கத்துக்குப் புறம்பாகவும் மற்றும் சங்கத்தின் கௌரவத்தைப் பாதிக்கும்படியும் காண்ட்ராக்டர் நடக்கும் பட்சம் மேற்படியார் கட்டின ஜாமீன் தொகை ரூ. 5,000 இழப்பதோடு அவரிடம் மேற்கொண்டு சட்ட சம்பந்தமான நடவடிக்கையும் எடுக்கப்படும்.

22. ஒப்பந்த கால ஒப்பந்தம் முடிவடைந்து ஜாமீன் தொகை, ஒப்பந்ததாரரின் கணக்குகள் உள்ள காலத்திற்குச் சங்க ஆடிட் முடிவடைந்த பிறகு வாபஸ் செய்யப்படும்.

23. சட்ட சம்பந்தமாக நடவடிக்கைகளை மதுரை விவகார எல்லையில் வைத்து நடத்த ஒப்பந்ததாரர் ஒப்புக் கொள்ளவேண்டும்.

24. டெலிவரி எடுக்கவேண்டிய இடத்தையும் கொண்டு சேர்க்க வேண்டிய இடத்தையும் ஒப்பந்தப் புள்ளியில் குறிப்பிட்டு டன் 1-க்கு என்ன லாரி வாடகை என்று குறிப்பிட வேண்டும்.

25. டெலிவரி எடுக்கவேண்டிய இடத்திற்கும் கொண்டுசேர்க்க வேண்டிய இடத்திற்கும் உண்டான தூரம் போர்டிலிருந்து அனுமதிக்கப்பட்ட தூரங்கள் தான் கணக்கில் எடுக்கப்படும்.

ஒப்பந்தப் புள்ளி குறிப்பிட்டு அனுப்ப வேண்டிய நமூனா.

| டெலிவரி எடுக்க வேண்டிய இடம். | டன் 1-க்கு லாரி வாடகை விவரம். | | | | |
|---|---|---|---|---|---|
| | மதுரை | திண்டுக்கல். | பழனி | தேனி | திருமங்கலம். |
| 1. சென்னை துறைமுகம் .. | | | | | |
| 2. ஆவடி .. .. .. | | | | | |
| 3. கடலூர் .. .. | | | | | |
| 4. நாகப்பட்டினம் .. | | | | | |
| 5. பாண்டிச்சேரி .. .. | | | | | |
| 6. நெய்வேலி .. | | | | | |
| 7. தூத்துக்குடி .. | | | | | |
| 8. கொச்சி .. .. | | | | | |
| 9. மன்னார்குடி .. .. | | | | | |

(த.8)

## தமிழ்நாடு கல்வி சபார்டினேட் சர்வீஸ்
## தக்கலை கல்வி மாவட்டத்தில் (கன்னியாகுமரி மாவட்டம்)
## ஆரம்பப்பள்ளி ஆசிரியர்கள் நியமனம்

மாவட்டக் கல்வி அலுவலர் அதிகார வரம்பிற்குள் தக்கலை (கன்னியாகுமரி மாவட்டம்) நேரடி ஆட்சேர்ப்பின் மூலம், ஆரம்பப்பள்ளி ஆசிரியர்கள் நிரந்தர நியமனத்திற்கான மனுக்கள், கீழே குறிப்பிட்டவாறு வரவேற்கப்படுகின்றன.

| வரிசை எண்ணும், வேலையின் பெயரும். | உத்தேசமாக ஏற்படக்கூடிய வேலை வாய்ப்பு. |
|---|---|
| 1. ஆரம்பப்பள்ளி ஆசிரியர்கள் (தமிழ்) .. .. .. .. | 36 (முப்பத்து ஆறு) |

குறிப்பு :—வேலை வாய்ப்பு, அதிகரிக்கலாம் அல்லது குறையலாம்.

2. (ஏ) வேலைக்கான தகுதிகளும் சம்பள விகிதமும்:—

ஆரம்பப்பள்ளி ஆசிரியர்கள் :—

சம்பள விகிதம் :—ரூ. 150—4—170—5—225.

ஆரம்பப்பள்ளி ஆசிரியருக்கான முழுமையான சர்டிபிகேட், அல்லது தமிழ்நாடு அரசு ஜூனியர் பேசிக் கிரேடு பயிற்சிப் பள்ளி சர்ட்டிபிகேட் அல்லது பேசிக் கிரேடு பயிற்சி மேலே குறிப்பிட்டதற்குச் சமமான பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களால் தீர்மானிக்கப்பட்ட சமமான தகுதிகள்.

(பி) ஜூலை மாதம் 1-ஆம் தேதி 1972-ல் மனுதாரர் முப்பது வயது பூர்த்தியானவராக இருக்க வேண்டும்.

இராணுவம், கடற்படை, விமானப்படை ஆகியவற்றிலிருந்து கலைக்கப்பட்டதால் வந்தவர்கள், 1–7–1972 அன்று 40 வயது பூர்த்தியானவர்கள் விண்ணப்பித்துக் கொள்ளலாம். இந்த மனுதாரர்கள், அவர்களைப் பிரித்துவிட்டதற்கான உண்மை சர்ட்டிபிகேட்டை விண்ணப்பத்தாளுடன் இணைத்து அனுப்ப வேண்டும். தாழ்த்தப்பட்ட வகுப்பினர், தாழ்த்தப்பட்ட மலைச்சாதி வகுப்பினர் 1–7–1972 அன்று 35 வயது பூர்த்தி ஆகாதவர்கள் விண்ணப்பித்துக் கொள்ளலாம்.

3. அனுபந்தத்தில் குறிப்பிடப்பட்ட வடிவத்தில் மனுக்கள் அனுப்ப வேண்டும். இந்த அறிவிப்பு கெஜட்டில் வெளியான தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள், மாவட்டக் கல்வி அலுவலர், தக்கலை (கன்னியாகுமரி மாவட்டம்) அவர்களுக்கு மனுக்கள் வந்து சேரவேண்டும்.

4. பொதுக் கல்வி, பணிக்குரிய தகுதி ஆகியவற்றைக் காட்டும் உண்மை சர்ட்டிபிகேட் இணைத்து அனுப்பப்பட வேண்டும்.

குறிப்பு :—மூன்று நன்னடத்தைச் சான்றிதழ்கள், மனுதாரர் இறுதியாக எங்கு படித்தாரோ அந்தத் தலைமை நிறுவனத்தில் ஒன்று, இந்த அறிவிப்பு கெஜட்டில் வெளியானதற்குப் பின்னர், இரண்டு பொறுப்பான நபர்களிடமிருந்து இரண்டு நற்சான்றிதழ்கள்.

5. அரசு, உள்ளாட்சித் துறை, தனியார் நிறுவனம் ஆகியவற்றில் ஏற்கனவே பணிபுரிவோர், தற்பொழுது தங்களுக்கு வேலை கொடுத்திருப்போர் மூலமாக மட்டுமே மனுக்களை அனுப்ப வேண்டும்.

6. அரசுப் பள்ளிகள் தக்கலை கல்வி மாவட்டத்தில், தற்காலிகமாக, அவசரகாலப் பொறுப்பில் இருப்பவர்கள், நிரந்தர நியமனத்தில் தொடர்ந்திருக்கவேண்டுமென்று விரும்பினால், இந்த அறிவிப்பில் கண்டவாறு, பள்ளிகளின் தலைமைகளின் மூலமாக விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

7. ஒவ்வொரு மனுதாரரும் ரூ. 10 (பத்து ரூபாய் மட்டும்) அரசுக் கருவூலத்தில் "XXII Education F General and Miscellaneous IV other items" என்ற தலைப்பில் செலுத்தி, உண்மைச் சலானை விண்ணப்பத்தாளுடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

குறிப்பு :—இந்த அறிவிப்பு கெஜட்டில் வெளியாவதற்கு முன் தேதியில் தொகை செலுத்தப்பட்டிருந்தால், ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

8 கீழே குறிப்பிடப்பட்ட பிரிவினர் தொகை செலுத்த வேண்டியதில்லை :—

(1) தாழ்த்தப்பட்ட வகுப்பினர் அல்லது தாழ்த்தப்பட்ட மலைச்சாதி வகுப்பினர் அல்லது எந்தப் பல்கலைக்கழகத்திலாவது இண்டர்மீடியட் தேர்வில் தேர்வுபெற்றுள்ள பின் தங்கிய வகுப்பினர், சொல்லப்பட்டத் தகுதியில் எந்தப் பல்கலை கழகத்திலாவது எந்தத் தகுதியாவது பெற்றிருப்பவர்கள். இந்த மனுதாரர்கள் ரெவின்யூ அதிகாரிகளிடம், துணைத் தாசில்தார் பதவிக்குக் குறையாத அதிகாரியிடமிருந்து குறிப்பிட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர் என்பதற்கான அத்தாட்சி பெற்று அனுப்ப வேண்டும்.

(2) யுத்தப்பணி விண்ணப்பதாரர்கள் விலக்கி அனுப்பப்பட்ட சர்ட்டிபிகேட் கொடுக்கப்பட வேண்டும்.

9. நியமனத்திற்கான தேர்வு, மாவட்டக் கல்வி அலுவலர், தக்கலை அவர்களால், மனுதாரரின் இண்டர்வியூ ரிசல்ட் அடிப்படையில் முழுக்க முழுக்கத் தகுதியைக் கொண்டு எடுக்கப்படும். மனுதாரர் தமது சொந்தச் செலவில், மாவட்டக் கல்வி அலுவலர் அலுவலகம், தக்கலையில், இண்டர்வியூவுக்கு அழைக்கும் பொழுது வந்து கலந்து கொள்ளவேண்டும்.

10. வேலைக்கு எடுக்கப்படுதலோ அல்லது பின்னர் தொடர்ந்து வேலை அளிக்கப்படுதலோ இறுதியாக அரசுப் பணியில் ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டும் என்ற உரிமை கிடையாது.

11. விண்ணப்பதாரர் எவர் ஒருவர், மாவட்டக் கல்வி அலுவலர், தக்கலை அவர்களுக்கு, செல்வாக்கைப் பயன்படுத்தி, தனிப்பட்ட முறையிலோ, கடிதத்தின் மூலமாகவோ, நண்பர் மூலமாகவோ, உறவினர், அலுவலர் மற்றவர்கள் மூலமாகவோ முயற்சி செய்வாரானால் எந்தக் காரணமும் கூறாமல் தேர்விலிருந்து விலக்கப்படுவார்.

12. குறிப்பிடப்பட்ட தகுதிபெறாத மனுதாரர்கள் விண்ணப்பிக்க வேண்டியதில்லை.

13. மனுக்கள் கொண்ட உறையின்மீது, "ஆரம்பப்பள்ளி ஆசிரியர் நியமனத்திற்கான விண்ணப்பம்" என்று குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

14. விவரங்கள் சரிவரக் குறிப்பிடப்படாத, அதனுடன் சேர்த்து அனுப்ப வேண்டியவைகள் இல்லாதிருந்தாலும், பொது, உரிய பணி, மற் சர்ட்டிபிகேட்டுகள், ஒரிஜனல், ஆகியவை இல்லாத மனுக்களும், குறிப்பிட்டத் தேதிக்குப் பின்னர் வரும் மனுக்களும் ஒதுக்கப்படும்.

ஆரம்பப்பள்ளி ஆசிரியர்கள் பதவி நியமன விண்ணப்பம்--தமிழ்நாடு கல்வி சபார்டினேட் சர்வீசஸ்--தக்கலை கல்வி மாவட்டம்--கன்னியாகுமரி மாவட்டம்.

1. வேலையின் பெயர் எதற்கு விண்ணப்பிக்கப்படுகிறது என .. ..

2. விண்ணப்பதாரரின் பெயர் (கொட்டை எழுத்துக்களில்)
(ஏ) ஆண் அல்லது பெண் .. .. .. .. .. ..

(பி) திருமணம் ஆனவர் அல்லது திருமணம் ஆகாதவர் .. ..

3. தகப்பனர் பெயரும் தொழிலும் (திருமணமான பெண் விண்ணப்பதாரராக இருப்பின் கணவர் பெயரும் தொழிலும்).

4. படித்த நிறுவனம் அல்லது நிறுவனங்கள் .. .. .. ..

5. தாய் மொழி .. .. .. .. .. .. .. ..

6. (1) தேசம், மதம், ஜாதி, சமுதாயம் (புள்ளி விவர நோக்கத்திற்கு மட்டுமே).

(2) தாழ்த்தப்பட்ட வகுப்பினர், தாழ்த்தப்பட்ட மலைச்சாதி வகுப்பினர், பிற்பட்ட வகுப்பினர், அல்லது கிறிஸ்தவராக மாறியவரா? (அப்படியானல் தேவையான சர்ட்டிபிகேட்டுக்களை ரெவின்யூ அதிகாரிகளிடமிருந்து பெற்று ஒரிஜனலுடன் இணைத்து அனுப்ப வேண்டும்).

7. பிறந்த தேதி .. .. .. .. .. .. .. ..

8. (ஏ) பொதுக் கல்வித்தகுதி .. .. .. .. .. ..

(பி) தொழில் அல்லது தொழில் நுட்பத் தகுதிகள் (வருடம், எண், வகுப்பு அல்லது கிரேடு குறிப்பிடப்பட வேண்டும்).

9. எஸ்.எஸ்.எல்.சி. படித்த முதல் மொழி அல்லது மற்ற பள்ளிப் பிரிவு.

10. ஏற்கனவே அனுபவம் இருந்தால் (தேவையான தஸ்தாவேஜுகள் கொடுக்கப்பட வேண்டும்.)

11. விளையாட்டு, தேசீய மாணவர் பயிற்சிப்படை, ஆகியவற்றில் விண்ணப்பதாரரின் பங்கு அல்லது உடல் வலிமை.

12. சரியான முழு அஞ்சல் முகவரி (கொட்டை எழுத்துக்களில்) .. ..

13. தற்போது, முன்பு வேலையில் வாங்கிய சம்பளம், வேலையில் சேர்ந்த தேதி, ஏற்கனவே இருந்த வேலையிலிருந்து விலகிய தேதி, வேலையிலிருந்து விலகியதற்கான காரணம் ஆகியவை பற்றிய முழு விவரம்.

14. தொகை ரூ. 10 செலுத்திய சலான் எண், தேதி, கருவூலத்தின் பெயர் (ஒரிஜனல் சலான் இணைத்து அனுப்பப்படவேண்டும்.).

........................................................ என்ற நான் மேலே குறிப்பிட்டுள்ள விவரங்கள் யாவும் எனக்குத் தெரிந்த அளவிற்கு உண்மை என்று உறுதி கூறுகிறேன்.

விண்ணப்பதாரரின் கையொப்பம்.

இடம் :

தேதி :

குறிப்பு :—ஒரிஜனல் சர்ட்டிபிகேட், சலான், காலம் 6(2), (8(ஏ), (பி), 14 ஆகியவற்றில் குறிப்பிட்டுள்ளவைகளை இணைத்து அனுப்ப வேண்டும்.

மாவட்டக் கல்வி அலுவலர்
தக்கலை.

(அ. 1)

## பொதுப்பணித் துறை
## தேதி நீட்டிப்பு

வேலையின் பெயர்:—திருவையாற்றில் 1 உதவி ஆய்வாளர், 4 தலைமைக் காவலர், 18 காவலர்கள் ஆகியோருக்குக் குடியிருப்புகள் கட்டுதல்.

பார்வை—:தமிழரசு தேதி 1—11—1971, 16—11—1971-ல் வெளியிட்ட ஒப்பந்தப் புள்ளி அறிக்கை.
தமிழரசு தேதி 31—12—1971 வெளியிட்ட ஒப்பந்தத் தேதி நீட்டிப்பு.

மேற்கண்ட வேலைக்கான ஒப்பந்த அறிவிப்புகள் பெறும் தேதி 9—2—1972 அன்று மாலை 3-00 மணி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தப் பத்திரங்கள் 8—2—1972 அன்று மாலை 5-00வரை கிடைக்கும். மற்ற விதிகளில் மாறுதல் எதும் இல்லை.

ஆர். வேணுகோபால்,
மேற்பார்வைப் பொறியாளர்,
தஞ்சாவூர் வட்டம், தஞ்சாவூர்.

(த. 39)

---

## ஆர்.எஸ்.ஆர்.எம். லேயிங் அரசு மருத்துவ மனை, சென்னை

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும், அவர் ஆணையின் படியும், அவர் வழியின் படியும், ஆர். எஸ். ஆர். எம். மருந்துகள், டிரஸ்ஸிங்ஸ், கருவிகள், அப்ளியன்ஸஸ் ஆகியவைகள், 1—4—1972 முதல் 30—9—1972 வரை 6 மாத காலத்திற்கு வழங்குவதற்கு, குறிப்பிடப்பட்ட பாரத்தில் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள், 11—2—1972 அன்று மாலை 2-00 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் பத்திரங்கள் விலை, ஒரு சலானில் ரூ. 5-ஐ "XXIII Medical-K, Miscellaneous Receipts" என்ற தலைப்பிலும், மற்றொரு சலானில் விற்பனை வரி (சர்ச் சார்ஜ் உட்பட) ரூ. 0·20 காசு-ஐ "XII Sales Tax Receipts General Sales Tax" என்ற தலைப்பிலும் செலுத்தி, மெடிகல் ஸ்டோர்ஸ், ஆர்.எஸ். ஆர். எம். லேயிங் அரசு மருத்துவ மனை, சென்னையில், இரண்டு சலான்களையும் இணைத்து அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். எந்தச் சூழ்நிலையிலும் தொகை திருப்பித் தரப்படமாட்டாது.

ஒப்பந்தப் பத்திரங்கள் வழங்குவது, 10—2—1972 வியாழக்கிழமை மாலை 2-00 மணிக்கு நிறுத்தப்படும்.

ஏ. கே. ஜோசப்,
மேற்பார்வையாளர், ஆர்.எஸ்.ஆர்.எம்.
லேயிங் அரசு மருத்துவமனை,
சென்னை.

(த. 19)

---

## குடிநீர் வடிகால் வாரியம்

கீழ்க்கண்டவைகளை வழங்குவதற்காக, 20—2—1972 மாலை 3-00 மணி வரை நிருவாக இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், அவர்தம் அலுவலகம் எண்-1, கிளப் ஹவுஸ் ரோடு, அண்ணா சாலை, சென்னை-2-ல் குறிப்பிட்டப் பாரத்தில் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள், அதே நாள் மாலை 3-05 மணிக்கு, அச்சமயம் வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

| | |
|---|---|
| (ஏ) ஐ.எஸ்.எஸ். 651/1961-க்கு ஒத்த தரமும் பல்வேறு அளவுள்ள பைப்புகளும் காளர்களும், வழங்குதலும் ஒப்படைத்தலும். | கட்டுத் தொகை ரூ. 50,0000 |
| (பி) ஐ.எஸ்.எஸ். 651/1962-க்கு ஒத்த தரமும் பல்வேறு அளவுள்ள சால்ட் கிளேஸ்டு ஸ்டோன் வேர் பைப்புகள் வழங்குதலும், ஒப்படைத்தலும். | கட்டுத் தொகை. ரூ. 25,0000 |

ஒப்பந்த வடிவம் : மொத்தத் தொகை.

கட்டுத் தொகை, அரசுக் கருவூலத்தில் செலுத்திய ரெசிப்ட்டு சலானோ அல்லது டிமாண்டு டிராப்டோ அல்லது தேசிய மயமாக்கப் பட்ட வங்கியின் காரண்டியோ ஒப்பந்தப் புள்ளியுடன் சேர்த்து அனுப்ப வேண்டும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியச் செயலகம், எண்-1, கிளப் ஹவுஸ் ரோடு, அண்ணா சாலை, சென்னை-2-ல் எல்லா வேலை நாட்களிலும் கட்டணமின்றிப் பெறலாம். நிருவாக இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை-2, அவர்களுக்கு, ஒன்று அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையும், எக்காரணமும் கூறாமல் நிராகரிக்க உரிமை உண்டு. ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கு, ஒப்பந்தங்களை வழங்கவும் அவருக்கு உரிமை உண்டு.

நிருவாக இயக்குநர்,
குடிநீர் வடிகால் வாரியம்,
சென்னை-2.

7—1—1972.

(த. 4)

---

## தென்னார்க்காடு மார்க்கட் கமிட்டி, கடலூர்–1.

கீழ்க்கண்ட பொருளை வழங்க முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் கீழ்க்கையொப்பமிட்டவரால் 17—2—1972 மாலை 4-00 மணிக்குள் பெற்றுக் கொள்ளப்படும்.

" 4750 செலுலாய்டு எடையாளர் வில்லைகள் சப்ளை செய்தல் "
(Celluloid weighman badges)

ஒப்பந்தப் புள்ளி நிபந்தனைகளும் பாரங்களும் தென்னார்க்காடு மார்க்கட் கமிட்டி, கடலூர்-1 செயலாளர்-பொறுப்பு அவர்களிடமிருந்து வேலை நாட்களில் காலை 11-00 மணி முதல் மாலை 4-00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

ஏ. சுப்பராயன்,
செயலாளர்-பொறுப்பு.

(த. 38)

---

## மன்னார்குடி நகராட்சி

கீழே கண்ட நகராட்சி வேலைகளுக்காக 11—2—1972-ஆம் தேதி மாலை 4-00 மணி வரை கீழ்க்கையொப்பமிட்டவரால் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்படும். இதர விவரங்களை நேரிலோ, தபாலிலோ கோரிப் பெறலாம்.

| வேலையின் விவரம். | மொத்த மதிப்பீட்டுத் தொகை. | கட்டுத்தொகை. |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| 1 நகராட்சி எல்லைக்குள் நடைபெற இருக்கும் ரோடு வேலைகள், கட்டட வேலைகள். | 1,64,950 | ஒவ்வொரு மதிப்பீட்டுத் தொகையில் 5 சதவிகிதம். |
| 2 அரசினர் கடன், மானிய உதவியின்கீழ் 1970–71-ஆம் ஆண்டு செய்ய இருக்கும் தார் ரோடு வேலைகள். | 59,500 | ஷை |
| 3 புதிய பேருந்து நிலையத்திற்கும் அதன் சுற்றுப் புறத்திற்கும் மனைவிளக்கு வசதி செய்ய. | 16,000 | ஷை |
| 4 தெரு விளக்கு 4 அடி, 40 வாட்ஸ் டியூப் லைட் பிட்டிங்ஸ் சப்ளை செய்ய. | 20,000 | 1,000 |

நகராட்சி அலுவலகம்,
மன்னார்குடி.
7—1—1972

கோ. முருகன், பி.ஏ.,
ஆணையர்.

(த. 37)

## ஒப்பந்தப் புள்ளி

### பொதுப்பணித் துறை

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும், கீழ்க்குறிப்பிட்ட வேலைக்காக, 15—2—1972 அன்று மாலை 3-00 மணி வரை, மேற்பார்வைப் பொறியாளர், பொதுப்பணித்துறை, கோயம்புத்தூர், நீலகிரி வட்டம், அவர்களால் கோயம்புத்தூர் அவர்தம் அலுவலகத்திற்கு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

வேலையின் பெயர் : ஈரோடு தாலுகா தலைமையக மருத்துவ மனையில் செஸ்ட் கிளினிக்கிற்கு ஒரு கட்டடம் கட்டுதல்.
ஒப்பந்த வடிவம் : மொத்தத் தொகை.
கட்டுத் தொகை : ரூ. 2,600.
ஒப்பந்தப் பத்திரங்கள் விலை வரைபடத்துடன் விற்பனை வரி உட்பட ரூ. 5·18.
வேலை முடிக்க வேண்டிய காலம் : 4 மாதங்கள்.

ஒப்பந்தப் பத்திரங்கள், மேலாளர், நிருவாகப் பொறியாளர் அலுவலகம், கட்டடக் கோட்டம், கோயம்புத்தூர் அவர்களிடத்தில், மேற்குறிப்பிடப்பட்ட தொகையைச் செலுத்தி 28—2—1972 முதல் எல்லா வேலை நாட்களிலும் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். (தொகை திருப்பித்தரப்பட மாட்டாது).

எம். எஸ். கோபாலகிருஷ்ணன்,
மேற்பார்வைப் பொறியாளர்,
பொதுப்பணித்துறை, கோயம்புத்தூர்,
நீலகிரி வட்டம், கோயம்புத்தூர்-1.

(த.29)

---

## ஏலம்

### காஞ்சிபுரம் நகராட்சி

5—12—1971 தேதிய ஏல அறிக்கையில் கண்ட நிபந்தனைகட்கு உட்பட்டு நடக்க இருக்கும் ஸ்ரீ ஏகாம்பரநாதர் உற்சவத்தை முன்னிட்டு 18—3—1972 முதல் 6—4—1972 வரை சுங்கச் சாவடிகளில் சுங்கம் தண்டும் உரிமை, சாலை ஓரங்களில் வைக்கப்படும் தற்காலிக கடைகளுக்கு கட்டணங்கள் தண்டும் உரிமை ஆகிய உரிமைகளை 25—2—1972-ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 2 மணிக்கு காஞ்சிபுரம் நகராட்சி அலுவலகத்தில் அனைவரும் அறிய ஏலம் விடப்படும்.

பிற தகவல்களுக்கும் ஏலக்கட்டுப்பாடுகட்கும் நகராட்சி ஆணையருக்கு எழுதியோ அல்லது நேரிலோ தெரிந்துகொள்ளலாம்.

த. ஆ. சிவசுப்பிரமணியன்,
ஆணையர்.

நகராட்சி அலுவலகம்,
காஞ்சிபுரம்,
10—1—1972.
(த. 25)

---

## ஏல விளம்பரம்

### குற்றால நகரியக் குழு

குற்றாலம் நகரியத்துக்குச் சொந்தமான "கலைவாணர் கலையரங்கத்தில்" சினிமா, நாடகம், நடனம் மற்ற கலை நிகழ்ச்சிகள் ஆகியவை நடத்தும் உரிமை 1—4—1972 முதல் 31—3—1975 வரையுள்ள மூன்று வருட காலத்துக்கு நகரிய நிருவாக அதிகாரியால் குற்றால நகரிய அலுவலகத்தில் வைத்து 17—2—1972-ஆம் தேதி காலை 11.00 மணிக்குப் பகிரங்க ஏலத்தில் விடப்படும்.

ஏலம் கோர விரும்புபவர்கள் தங்களுடன் "சால்வன்ஸி சர்டிபிகேட்" கொண்டு வருவதுடன், ரூ. 1,500-ம் ஏல டெபாசிட்டாக, செலுத்த வேண்டும். ஏலம் சம்பந்தமாக மற்ற விவரங்கள் நகரிய அலுவலகத்தில் தெரிந்து கொள்ளலாம்.

சா. நா. பழனிச்சாமி, பி.ஏ.,பி.எல்.
நிருவாக அதிகாரி.

குற்றால நகரியம்,
13—1—1972.
(த.49)

---

## ஏல விளம்பரம்

### குற்றால நகரியக் குழு

1972-73-ஆம் வருடத்திற்கு குற்றால நகரியக்குழுவிற்குச் சொந்தமான இதனடியிற்கண்ட குத்தகை உரிமைகள் 1—4—1972 முதல் 31—3—1973 முடிய உள்ள ஒரு வருடத்திற்கு 1972-ஆம் வருடம் பிப்ரவரி மாதம் 16-ஆம் தேதி காலை 11.00 மணிக்கு குற்றால நகரியக்குழு அலுவலகத்தில் நிருவாக அதிகாரியால் பகிரங்கமாக ஏலம் விடப்படும்.

| குத்தகை விவரம். | பொறுப்புத் தொகை. |
|---|---|
| 1 குற்றால நகரியக்குழு பேருந்து நிலைய உணவு விடுதியில் சைவ உணவு விடுதி நடத்தும் உரிமைக்கு. | 500 |
| 2 குற்றால நகரியக்குழு பேருந்து நிலைய ஸ்டால் நம்பர் இரண்டில் பழக்கடை வைத்து நடத்தும் உரிமைக்கு. | 50 |
| 3 குற்றால நகரியக்குழு பேருந்து நிலைய கடை நம்பர் மூன்றில் வெற்றிலை, பாக்குக்கடை வைத்துநடத்தும் உரிமைக்கு. | 100 |
| 4 குற்றாலம் நகரியக்குழு பேருந்து நிலையத்தில் புத்தகக் கடை வைத்து நடத்தும் உரிமைக்கு. | 50 |
| 5 குற்றாலம் பெரிய அருவிப் பக்கமுள்ள காபிக் கடையில் சிற்றுண்டிச்சாலை நடத்தும் உரிமைக்கு. | 50 |
| 6 குற்றாலம் பெரிய அருவிப்பக்கமுள்ள ஸ்டால் நம்பர் ஒன்றில் வெற்றிலை பாக்குக்கடை வைத்து நடத்தும் உரிமைக்கு. | 100 |
| 6 குற்றாலம் பெரிய அருவிப்பக்கமுள்ள ஸ்டால் நம்பர் இரண்டில் வெற்றிலை, பாக்குக்கடை வைத்துநடத்தும் உரிமைக்கு. | 100 |
| 8 குற்றாலம் ஐந்தருவி காண்டீனில் சைவ உணவு விடுதி நடத்தும் உரிமைக்கு. | 200 |
| 9 குற்றாலம் ஐந்தருவி ஸ்டால் நம்பர் ஒன்றில் வெற்றிலைப் பாக்குக் கடை வைத்து நடத்தும் உரிமைக்கு. | 100 |
| 10 குற்றாலம் ஐந்தருவி ஸ்டால் நம்பர் இரண்டில் வெற்றிலை, பாக்குக் கடை வைத்து நடத்தும் உரிமைக்கு. | 100 |
| 11 குற்றாலம் நகரியக்குழுவிற்கு பாத்தியப்பட்ட இடத்தில் மட்டன் ஸ்டால் வைத்து நடத்தும் உரிமைக்கு. | 500 |
| 12 குற்றாலம் மாட்டுப் பவுண்டு கீழ்ப்பக்கமுள்ள நகரியக் குழுவிற்குப் பாத்தியப்பட்ட ஆடு அறுக்குமிடத்தில் ஆடுகளை அறுப்பதற்குள்ள உரிமைக்கு. | 50 |

### ஒப்பந்த அறிவிப்பு

குற்றாலம் நகரியக்குழுவிற்கு 1972-73-ஆம் வருடத்திற்குத்தேவையான அடியிற்கண்டவைகளை சப்ளை செய்ய 1972-ஆம் வருடம் பிப்ரவரி மாதம் 16-ஆம் தேதி மாலை 4.00 மணிவரை முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் குற்றாலம் நகரியக்குழு நிருவாக அதிகாரியால் பெற்றுக் கொள்ளப் படும்.

| ஒப்பந்த விவரம். | பொறுப்புத் தொகை. |
|---|---|
| | ரூ. |
| 1 நீர்த்த சுண்ணாம்பு சப்ளை செய்ய .. .. .. | 5 |
| 2 யாத்திரிகர்களுக்கு மதிய உணவு சப்ளை செய்ய .. | 25 |
| 3 குப்பை வண்டிகளுக்கு மாடுகள் மாத வாடகைக்கு .. | 100 |
| 4 சைக்கிள்களுக்கும் இதர வண்டிகளுக்கும் லைசென்ஸ் தகடுகள் வழங்க. | 5 |

ஏலம், ஒப்பந்தம், சம்பந்தமாக இதர விவரங்கள் அலுவலக நாட்களில் நகரியக்குழு அலுவலகத்தில் தெரிந்து கொள்ளலாம்.

நகரியக்குழு, குற்றாலம், சா.நா. பழனிச்சாமி, பி.ஏ.,பி.எல்.
13—1—1972. நிருவாக அதிகாரி.

(த. 36)

## காஞ்சிபுரம் நகராட்சி

16–2–1972-ஆம் தேதி மாலை 3 மணிவரையில்1972–73-ஆம்ஆண்டிற்கு கீழ்க்காணும் ஒப்பந்தங்களுக்காக ஒப்பந்தப்புள்ளிகள் (சீலிட்ட டெண்டர்கள்) நகராட்சி ஆணையர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் ஷெ அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்படும். பிற தகவல்களுக்கு நகராட்சி ஆணையர் அவர்களுக்கு எழுதவும்.

1. குப்பை முதலிய வண்டிகளுக்கும், நாய் பிடிக்கும் வண்டிகளுக்கும் மாடுகள் வண்டி ஓட்டுபவர் வழங்குதல்.

2. எழுதுபொருள்கள் முதலியன.

3. சுண்ணாம்பு நீர்.

4. தொற்றுநோய், நோயாளிகளுக்கு உணவு வழங்குதல்.

5. வண்டி, சைக்கில், நாய், நான்கு சக்கர வண்டி, ரிக்ஷா வண்டிகள் முதலியவைகளுக்குத் தகரத்தினால் செய்த லைசென்ஸ் தகடுகள் வழங்குதல்.

6. அச்சிடுதல்.

7. குப்பை வண்டிகளையும், நகராட்சி மோட்டார் வண்டிகளையும் பழுது பார்த்தல்.

8. தாய் சேய் நலவிடுதிகளுக்கு ரொட்டி, பால், மண்ணெண்ணெய், விறகு, முதலியவை வழங்குதல்.

காஞ்சிபுரம்,
11—1—1972.

த. ஆ. சிவசுப்பிரமணியன்,
ஆணையர்.

(த. 34)

## பொறியியல் பணித் துறை

வேலையின் பெயர் : வடசென்னை வியாசர்பாடியில் அரசினர் உயர்நிலைப் பள்ளிக்குக் கட்டடங்கள்—கட்டுதல்.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பிலும் மேற்கூறிய வேலைக்கு மேற்பார்வைப் பொறியாளர், சென்னை செங்கற்பட்டு வட்டம், அவர்களால் சேப்பாக்கம், சென்னை-5ல் உள்ள அலுவலகத்தில் 9—2—1971 மாலை 3 மணிக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்பத்திரங்கள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் மேற்பார்வைப் பொறியாளர், சென்னை—செங்கற்பட்டு வட்டம், சென்னை-5 அவர்களால் 9—2—1971 மாலை 3.15 மணி அளவில் வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் ஒப்பந்தப்பத்திரங்கள் திறக்கப்படும்.

| | |
|---|---|
| (அ) ஒப்பந்தப்படிவம் .. .. .. | மொத்தத்தொகை. |
| (ஆ) முன்வைப்புத்தொகை .. .. | ரூ. 3,400. |
| (இ) வேலை முடிக்க வேண்டிய காலம் .. | 4 மாதம். |
| (ஈ) ஒப்பந்தப் பத்திரங்கள் விலை .. | ரூ. 20 மட்டும் + விற்பனைவரி ரூ. 0.70 மட்டும். |
| (உ) ஒப்பந்தப்பத்திரங்கள் கிடைக்கும் நாட்கள் (அலுவலக நேரங்களில்). | 2—2—1972 முதல் 8—2—1972 வரை. |
| (ஊ) ஒப்பந்தப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ளும் கடைசிநாள். | 9—2—1972 |

2. ஒப்பந்தப்பத்திரங்களின் விலை (Public works remittances III other remittances) என்ற தலைப்பிலும், விற்பனைவரி "XII Sales tax (b) receipts under State Sales tax act" என்ற தலைப்பிலும் தனித்தனியாக அரசாங்கக் கருவூலங்கள் (அ) ரிசர்வ் பாங்கியில் கோட்டப் பொறியாளர் கட்டடக் கோட்டம் 11, சேப்பாக்கம், சென்னை-5 அவர்கள் கணக்கில் கட்டப்பட வேண்டும். மேற்கண்ட சலான்களோடு விண்ணப்பமும் கொடுத்தபின் ஒப்பந்தப்பத்திரங்கள் வழங்கப்படும்.

3. மேற்பார்வைப் பொறியாளர் சென்னை—செங்கற்பட்டு வட்டம், சேப்பாக்கம், சென்னை-5 அவர்களுக்கு எவ்விதக் காரணமும் காட்டாமல் ஒப்பந்தப்பத்திரங்களை நிராகரிக்கும் உரிமை உண்டு.

4. மற்றைய விவரங்கள் மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் தெரிந்து கொள்ளலாம்.

7—1—1972.

பி. கே. கந்தசாமி,
மேற்பார்வைப் பொறியாளர்,
சென்னை—செங்கற்பட்டு வட்டம்,
சென்னை-5.

(த. 41)

## தமிழ்நாடு மின்சார வாரியம்

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பாகவும் அவர்களின் உத்தரவுப்படியும், கோவை பைக்காரா மத்திய பண்டக சாலையிலிருந்து சாமான்களை (1) பைக்காரா மின் திட்டத்தின் கிளை பண்டகசாலைகளுக்கும் எதிரிடையாகவும் (2) மத்திய பண்டகசாலையிலிருந்து மற்ற மின் திட்டங்களின் மத்திய அல்லது கிளை பண்டக சாலைகளுக்கும், எதிரிடையாகவும், ஏற்றிச் செல்வதற்கான அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கீழே கையொப்பமிட்டவரால் அவருடைய அலுவலகத்தில் 10—2—1972 தேதியன்று மாலை 3 மணிவரை பெற்றுக் கொள்ளப்படும். அதே தேதியில் மாலை 3-30 மணியளவில் ஒப்பந்தப்புள்ளிகள் பிரிக்கப்படும். மேற்படி ஒப்பந்தப்புள்ளி உறையின் மீது " சாமான்களை லாரியில் ஏற்றிச் செல்வதற்கான ஒப்பந்தப்புள்ளி " என்று குறிப்பிட்டிருக்க வேண்டும்.

ஒப்பந்தப்புள்ளி நமூனுக்கள், விதிகள் அடங்கிய பாரங்களைப் பெற அதற்குரிய விலையான ரூபாய் 5 (ரூபாய் ஐந்து மட்டும்) " தலைமைக் கணக்காயர் (செலவினம்), பைக்காரா மின் திட்டம், டாடாபாத் கோவை-12 " என்ற விலாசத்திற்கு நேரிலோ அல்லது தபால் மூலமாகவே செலுத்தி, அதற்கான ரசீதை பண்டகசாலை மேற்பார்வையாளர், பைக்காரா மத்திய பண்டகசாலை கோவை-12 என்ற விலாசத்தில் காண்பித்து மேற்படி பாரங்களைப் பெற்றுக் கொள்ளலாம். யாதொரு காரணத்தைக் கொண்டும் செலுத்திய தொகை திருப்பித்தரப்படமாட்டாது.

தபாலில் பாரங்களைப் பெற விருப்பம் உள்ளவர்கள் மேற்படி பாரங்கள் தாமதமாகக் கிடைத்தாலோ அல்லது காணமல் போனாலோ அதற்கு இந்த மின்சார வாரியம் எந்த விதமான பொறுப்பும் ஏற்காது என்பதை அறியவும்.

இலாகா பாரத்தில் அல்லாத ஒப்பந்தப்புள்ளிகளும் குறிப்பிட்ட தேதியில் வந்து சேராததுமான ஒப்பந்தப்புள்ளிகளும் நிராகரிக்கப்படும்.

ஒப்பந்தப்புள்ளி நமூனுக்கள் 9—2—1972 பகல் 12 மணிவரைதான் விற்கப்படும்.

மேற்பார்வைப் பொறியாளர்,
பைக்காரா மின்திட்டம்,
டாடாபாத்,
கோவை-12.

(த. 40)

## ஏல விற்பனை

### நீலகிரி வடக்குப் பிரிவு மூங்கில் காடுகள்

நீலகிரி வடக்குப் பிரிவு குன்னூர் வனச் சரகத்தைச் சேர்ந்த கீழ்க்கண்ட மூங்கில் காடுகள் நீலகிரி வடக்குப் பிரிவு, மாவட்ட வன அலுவலகத்தில் நீலகிரி வடக்குப் பிரிவு வன அலுவலர், அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட அலுவலரால் 21–2–1972-ஆம் தேதியன்று காலை 11 மணிக்குப் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

1. ஹூலிக்கல் நீ.II 150·14 ஹெக்டர்.
2. வாகப்பனை நீ.II 334·68 ஹெக்டர்.

ஏனைய விவரங்களை நீலகிரி வடக்கு வனப்பிரிவு அலுவலரிடமிருந்தோ அல்லது குன்னூர் வனச்சரக அலுவலரிடமிருந்தோ பெற்றுக்கொள்ளலாம்.

உதகமண்டலம்,
4–1–1972.

எஸ். சுப்பராயலு நாயுடு,
மாவட்ட வன அலுவலர்.

(த. 20)

# ஒப்பந்தப் புள்ளி

நிருவாகப் பொறியாளர், பொது சிறப்புக் கிராமநல பணித் திட்ட கோட்டம், தருமபுரி-3.

ந. க. எண். 11479/72, த. வ. நாள், 10—1—1972.

1. வேலையின் பெயர் பட்டியலில் உள்ளபடி.

2. வேலையை முடிக்க வேண்டிய காலம் பட்டியலில் உள்ளபடி.

3. ஒப்பந்த முறை கே 2 கோட்டம் தருமபுரி (பொ.ப.து.) சிறப்புக் கிராமநல பணித்திட்டம், தருமபுரி.

4. ஷெ வேலைக்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் சென்னை ஆளுநர் அவர்கள் சார்பில் நிருவாகப் பொறியாளர் (பொ.ப.து.) சிறப்புக் கிராம நல பணித்திட்டம் கோட்டம் அவர்களால் தருமபுரியிலுள்ள அவர்களுடைய அலுவலகத்தில் 17—2—72 அன்று மாலை 4 மணி வரை வரவேற்கப்படும்.

5. ஒப்பந்தப் புள்ளி அறிக்கை வேலையின் விவரங்கள் முதலியவற்றைப் பெற மேலாளர் (பொ.ப.து.) சிறப்புக் கிராம பணித்திட்டம், தருமபுரி அவர்களுக்கு விண்ணப்பித்து ஒவ்வொரு வேலைக்கும் ஒப்பந்தப் பாரத்தின் விலையான ரூ. 5.18 (ரூபாய் ஐந்தும் பதினெட்டு காசு மட்டும்) செலுத்தி பெறலாம். ஒப்பந்தப் புள்ளிப் பாரத்திற்காக செலுத்தப்பட்ட பணம் எக்காரணத்தைக் கொண்டும் எந்த சந்தர்ப்பத்திலும் திருப்பித்தரப் படமாட்டாது.

6. ஒப்பந்தப் புள்ளி அறிக்கை பெற விண்ணப்பங்கள் இவ்வலுவலகத்திற்கு 14—2—72-க்குள் வரவேண்டும். இந்த தேதிக்குப் பிறகு விண்ணப்பங்கள் பொதுவாக பெறப்படமாட்டாது. ஒப்பந்தப் புள்ளிப் பாரங்கள் 1—2—72-ஆம் தேதி முதல் கிடைக்கும். இந்த இலாகாவினால் கொடுக்கப்பட்ட பாரங்களில் மட்டும்தான் ஒப்பந்தப் புள்ளி சமர்ப்பிக்கப்படவேண்டும்.

7. ஒப்பந்தப் புள்ளி உறையில் இட்டு ஒப்பந்தப் புள்ளி என்று எழுதி முத்திரையிட வேண்டும். உறையின் மேல் வேலையின் பெயரை எழுத வேண்டும்.

8. இந்த வேலைக்கான ஒப்பந்தப் புள்ளி அறிக்கையிலும், பட்டியலிலும், கண்டுள்ள தொகையைக் கட்டுத் தொகையாக ரெவின்யூ டெபாசிட் என்ற தலைப்பில் கட்டிப் பணம் செலுத்தி ரசீது ஒப்பந்தப் புள்ளி அறிக்கையுடன் எழுதப்பெற்று சமர்ப்பிக்க வேண்டும். பிரைஸ் பாண்டுகள் செக்குகள் கட்டுத் தொகையாக ஏற்கப்பட மாட்டாது.

9. இப்பிரிவில் 7, 8ல் கூறிய நிபந்தனைகளின்படி இல்லாத ஒப்பந்தப் புள்ளி தள்ளுபடி செய்யப்படும்.

10. எந்த ஒப்பந்தப் புள்ளியையும் அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையும் காரணமேதும் காட்டாமலும் நிராகரிக்க நிருவாகப் பொறியாளருக்கு உரிமை அளிக்கப்படும்.

11. ஏற்றுக்கொள்ளப்படாத ஒப்பந்ததாரரின் பிணைப்பணம் ஒப்பந்தம் முடிவுபெற்ற பிறகுதான் திருப்பி அளிக்கப்படும்.

12. ஒப்பந்தப் புள்ளிப் பெற்றுக் கொண்டபின் வேலையைச் செய்யவேண்டிய மொத்த மதிப்பில் 2½ சதவீதம் கையெழுத்திடுமுன் செலுத்த வேண்டும்.

13. கட்டுத்தொகை அரசினர் கடன் பத்திரம் சென்னை மின்சார போர்டின் கடன் பத்திரம் 12 வருட தேசியப் பாதுகாப்புப் பத்திரங்கள், 20 வருட தேசீய சேமிப்புப் பத்திரங்கள் இவைகள் அதன் மதிப்புக்கு 25 சதவிகிதம் குறைவாகத்தான் ஒப்புக்கொள்ளப்படும்.

14. கட்டுத்தொகை கடன் பத்திரங்கள் மூலம் கொடுத்தால் அதை நிருவாகப் பொறியாளர் (பொ.ப.து.) சிறப்புக் கிராம பணித்திட்டம், கோட்டம் தருமபுரி அவர்கள் பெயருக்கு மாற்றி சம்பந்தப்பட்ட அஞ்சல் அலுவலக ஒப்புதலுடன் ஒப்பந்தப் புள்ளியுடன் இணைக்க வேண்டும். அப்படிச்செய்யாவிட்டால் பொதுவாகத் தள்ளுபடி செய்யப்படும்.

| எண்ணும், வட்டமும். | வேலையின் பெயர். | கட்டுத் தொகைச் சலான் மூலம். | பத்திரங்கள் மூலம். | வேலையைச் செய்து முடிக்க வேண்டிய காலம். |
|---|---|---|---|---|
| | | ரூ. | ரூ. | |
| 1. ஊத்தங்கரை .. .. .. | கொண்டம்பள்ளி கிராமத்தில் காரிக்காசன் குட்டை பள்ளத்தின் குறுக்கே ஏரி அமைத்தல். | 1,500 | 1,880 | 8 மாதங்கள். |
| 2. ஷெ .. .. .. | காட்டுசிங்காரபட்டி கிராமத்தில் காட்டாற்றின் குறுக்கே ஏரி அமைத்தல். | 5,440 | 1,800 | 14 மாதங்கள். |
| 3. ஷெ .. .. .. | ஆலாபுரம் ஏரியின் வாய்க்கால் விரிவு படுத்துதல் சம்மந்தமாக. | 1,430 | 1,790 | 8 மாதங்கள். |
| 4. அரூர் .. .. .. .. | கதிரி நாயக்கன் அள்ளி கிராமத்தில் இருக்கும் பணமரத்துக்குட்டையைப் பழுது பார்த்தல். | 380 | 480 | 4 மாதங்கள். |
| 5. ஷெ .. .. .. .. | அஸ்தங்கிரி கிராமத்தில் பொடியம் பள்ளத்தின் குறுக்கே ஏரி கட்டுதல். | 1,740 | 2,180 | 10 மாதங்கள். |
| 6. ஷெ .. .. .. .. | பைரநாயக்கன்பட்டி கிராமத்தில் ஒட்டுப் பள்ளத்தின் குறுக்கே ஏரி அமைத்தல். | 6,440 | 8,050 | 14 மாதங்கள். |
| 7. ஷெ .. .. .. .. | ஆண்டியூர் கிராமத்தில் தீர்த்தம் பள்ளத்தின் குறுக்கே ஏரி கட்டுதல். | 3,000 | 3,750 | 12 மாதங்கள். |
| 8. ஷெ .. .. .. .. | கதிரிபுரம்மிட்ட அள்ளி கிராமத்தில் காட்டாற்றைத் திருப்பி ஏரி அமைத்தல். | 5,420 | 6,780 | 16 மாதங்கள். |
| 9. கிருஷ்ணகிரி .. .. .. | கிட்டம்பட்டி அருகே படதாலாவு ஏரியின் கோடிக் கால்வாய் குறுக்கே புதிய அணைக்கட்டு கட்டுதல். | 2,720 | 3,400 | 10 மாதங்கள். |
| 10. ஷெ .. .. .. .. | கூலியம் கிராமத்தில் இருக்கும் கூலியம் அணைக்கட்டுக்குப் பழுது பார்த்தல். | 3,680 | 4,600 | 10 மாதங்கள். |
| 11. தருமபுரி .. .. .. .. | சங்கம் பசன்தலாவ் ஏரி தூர் வாரி புனரமைத்தல் வேலை செய்தல். | 1,790 | 2,280 | 8 மாதங்கள். |
| 12. தேன்கனிக்கோட்டை .. .. | கொய்மனபள்ளி கிராமத்தில் புதிய ஏரி அமைத்தல் .. | 6,320 | 7,300 | 16 மாதங்கள். |

**டி. பி. ரங்கநாதராவ்,**

நிருவாகப் பொறியாளர் (பொ.ப.து.) சி.கி.ப.தி.

(த.35)

இயக்குநரின் ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண். 4/71-72.

ஒப்பந்தப் புள்ளிகள் விற்பனைக்கும், பெறுதலுக்குமான காலவரம்பு நீட்டிப்பு.

வேலையின் பெயர் :—36 அங்குலம் உள்விட்டம் அளவுள்ள முன்னதாக அழுத்தமேற்றப்பட்ட கான்கிரீட் குழாய்களும், தனி, அமைப்புகளும் (Prestressed Concrete pipes and specials) தயாரித்து, அவற்றை வேலை இடத்திற்குக் கொண்டு சென்று சரியான வரிசைப்படியும், சரிவுப்படியும் வைத்து, ரப்பர் வளைய இணைவுகளாகப் பொருத்துதல்.

மேற்குறித்த வேலைக்காக, நிலநீர் இயக்குநர் அலுவலகத்தில், முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெறுவதற்கான காலவரம்பு 21—2—1971 மாலை 3-00 மணி வரை நீட்டிக்கப்படுகிறது.

ஒப்பந்தப்புள்ளிகள் நிலநீர் இயக்குநரால் அவருடைய அலுவலகத்தில் 21—2—1972 அன்று மாலை 3-30 மணிக்கு அச்சமயம் வந்திருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் பிரிக்கப்படும்.

ஒப்பந்தப் பத்திரங்கள் மேற்குறித்த அலுவலகத்தில், அலுவலக நேரங்களில் 18—2—1972 வரை கிடைக்கும். மற்ற நிபந்தனைகளில் மாற்றம் எதுமில்லை.

சா. பஞ்சநதம்,
நிலநீர் இயக்குநர்.

நிலநீர் இயக்குனர் அலுவலகம்,
10எ, தண்டபாணி தெரு,
சென்னை-17.
(த.ஆர். 6)

## அரசு மருத்துவ நிறுவனம், சென்னை மாநகர், காசநோய் சானடோரியம், தாம்பரம் ஆகியவற்றில் 1972-73-க்குப் பயன்படுத்தப்பட்ட எக்ஸ்ரே பிலிம்கள், சேதமான ஹைபோசொலுசன் ஆகியவற்றை வாங்கி அகற்றுதல்:—

அரசு மருத்துவ நிறுவனம், சென்னை மாநகரம், காசநோய் சானடோரியம், தாம்பரம் ஆகியவற்றில், 1972 எப்ரல் மாதம் 1-ஆம் தேதி முதல் அல்லது ஒப்பந்தம் அங்கீகரிக்கும் தேதியிலிருந்து 1973 மார்ச்சு மாதம் 31-ஆம் தேதி வரை, பயன்படுத்தப்பட்ட எக்ஸ்ரே பிலிம்கள், சேதமான ஹைபோசொலுசன் ஆகியவற்றை வாங்கி அகற்றுவதற்கு, மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் தலைமைக் கணக்கு அலுவலர், கல்லூரிக் கல்வித்துறை இயக்குநர் அவர்தம் அலுவலகத்தில், 1972 பிப்ரவரி 23-ஆம் தேதி மாலை 2-00 மணிவரை பெற்றுக் கொள்ளப்படும்.

ஒப்பந்த நிபந்தனைகளின் பிரதி, தேவையான பொருட்களின் அட்டவணை, ஒப்பந்தப் புள்ளிப் பத்திரம், ஆகியவற்றைக் கல்லூரிக் கல்வித் துறை இயக்குநர், சென்னை-5 அவர்தம் அலுவலகத்திற்கு மனுச் செய்து பெறலாம். ஒப்பந்தப் பத்திரத்தின் விலை ரூ. 5-ம், விற்பனை வரிக்குத் தனியாக 3½ சதவீதமும், ரிசர்வ் பாங் ஆப் இந்தியாவிலோ, அல்லது ஸ்டேட் பாங் ஆப் இந்தியாவின் எந்தக் கிளையிலோ அல்லது ஏதேனும் அரசுக் கருவூலத்திலோ, தமிழ்நாடு அரசின் கணக்கில் முறையே, "XXIII Medical—J. Miscellaneous—Director of Medical Education" "XII Sales Tax—b. Receipts Under the State Sales Tax Act General Sales Tax" என்ற தலைப்பின்கீழ் செலுத்த வேண்டும். ரிசர்வ் பாங் ஆப் இந்தியாவில் செலுத்தியிருந்தால், உண்மைச் சலான் கொடுக்கப்பட வேண்டும். கருவூலத்தில் செலுத்தியிருந்தால், செலான் நம்பரும், தேதியும், செலுத்திய தொகையும், ஒப்பந்ததாரரின் பெயரும், தொகை செலுத்தப்பட்ட வங்கி அல்லது கருவூலத்தின் பெயரும், மனுவில் குறிப்பிட்டுப் பெறலாம். எச்சூழ்நிலையிலும் தொகை திருப்பித் தரப்படமாட்டாது.

ஒவ்வொரு ஒப்பந்தத்துடனும், 1971-ஆம் வருடம் அக்டோபர் மாதம் 1-ஆம் தேதிக்குப்பின் தாசில்தார் கையொப்பமிட்ட, ஒப்பந்தம் கொடுக்கப்படும் சாமான்களின் மதிப்பு ரூ. 10,000க்கு மேற்பட்டால் வருமான வரி பாக்கியில்லாமல் செலுத்தியதற்குரிய அத்தாட்சியும், ரூ. 1,000க்கு மேற்பட்டால் விற்பனை வரி கட்டி முடித்த அத்தாட்சியும், தேசிய இனச் சான்றும், அல்லது அரசிதழ் பதிவுபெற்ற அலுவலர் அளித்த அத்தாட்சியின் உண்மை நகலும் ஒப்பந்தத்துடன் வைத்து அனுப்ப வேண்டும்.

ஆர். பசுபதி,
தலைமைக் கணக்கு அலுவலர், மருத்துவக் கல்வித்துறை இயக்குநர் அலுவலகம்,
சென்னை-5.

(த.ஆர். 7)

## சிறைத் துறை

1972-73-ஆம் ஆண்டிற்குக் கீழ்க்கண்ட நிறுவனங்களுக்குத் தேக்குமரச் சட்டங்கள், பலகைகள் முதலியவை வழங்குவதற்காக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 18-2-1972 தேதி பிற்பகல் 3 மணிவரை தமிழ்நாடு ஆளுநர் அவர்களுக்காகவும், அவர்களின் சார்பாகவும் வரவேற்கப்படுகின்றன. விலைகள் மெட்ரிக் அளவைகளில் மட்டுமே குறிப்பிடப்பட வேண்டும்.

நிறுவனங்கள் —சென்னை, வேலூர், கடலூர், திருச்சி, சேலம், மதுரை, கோயம்புத்தூர், பாளையங்கோட்டை முதலிய இடங்களிலுள்ள மத்திய சிறைகள், மற்றும் புதுக்கோட்டை பார்ஸ்டல் பள்ளி, சென்னை பல்லாவரத்திலுள்ள ஆண்கள் பிற்காப்பு இல்லம்.

ஒப்பந்தப் புள்ளிகள் மூடி முத்திரையிடப்பட்ட உறைகளில் ஒப்புகைப் பதிவஞ்சலில் (By Registered Post Act. due) மட்டுமே அனுப்பப்பட வேண்டும். உறையின் மேல் "........க்கு (இங்கே எந்த நிறுவனத்திற்கான ஒப்பந்தப்புள்ளியோ அந்தந்த நிறுவனத்தின் பெயரைக் குறித்து) தேக்கு மரச் சட்டங்கள், பலகைகள் முதலியன வழங்குவதற்கான ஒப்பந்தப்புள்ளி" என்று தவறுமல் எழுதித் தமிழ் நாடு சிறைத்துறைத் தலைமைப் பார்வையாளர் அவர்களின் பெயருக்கு அனுப்ப வேண்டும்.

ஒப்பந்தப்புள்ளிகள் சிறைத்துறைத் தலைமைப் பார்வையாளரின் அலுவலகத்தில் 19-2-1972 முற்பகல் 10-30 மணிக்குள் திறக்கப்படும்.

ஒப்பந்த நமூனாக்கள் ஒப்பந்தப்புள்ளி விதிகள் வழங்க வேண்டிய மர வகைகளின் விவரக் குறிப்பீடுகள் முதலியவைகள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் கண்காணிப்பாளர் அவர்களிடமிருந்து மட்டுமே நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். இவ்வாறு செலுத்தப்பட்ட கட்டணம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

பி. குப்புசுவாமி,
சிறைத்துறைத் தலைமைப் பார்வையாளர்,
"குறளகம்" 5-வது மாடி, சென்னை-1.

சென்னை-1
22-12-71.
(த. ஆர். 4)

## நிலநீர் இயக்குநர் அலுவலகம்

இயக்குநரின் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண் 7/71-72.

வேலையின் பெயர் :—சென்னை நிலநீர்க்கோட்டத்திற்குத் தேவையான வார்ப்பு இரும்புக் குழாய்கள் (C.I. Pipes) இணை உபயோகிக்கும் கார் ஈயக்கட்டிகள் (Pig lead) வழங்குதல்.

தமிழ்நாடு ஆளுநருக்காக, அவர் சார்பில் நிலநீர் இயக்குநர் அவர்களால் மேலே குறிப்பிட்டுள்ள வேலைக்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மேலே குறித்துள்ள அலுவலகத்தில் 17—2—1971 அன்று மாலை 3-00 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் நிலநீர் இயக்குநர் அவர்களால் கீழே குறிப்பிட்டுள்ள அவருடைய அலுவலகத்தில் 17—2—1971 அன்று மாலை 3-30 மணிக்கு அச்சமயம் வந்திருக்கும் ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

| | |
|---|---|
| ஒப்பந்த வடிவம் .. .. .. | K-2 |
| முன்வைப்புத் தொகை .. .. | ரூ. 5,900. |
| ஒப்பந்தப் பத்திரங்களின் விலை .. | விலை ரூ. 10 (ரூபாய் பத்து மட்டும்), விற்பனை வரி ரூ. 0·40 (நாற்பது காசுகள் மட்டும்). |
| வேலை முடிக்கவேண்டிய காலம் .. | 3 மாதங்கள். |
| ஒப்பந்தப் பத்திரங்கள் மேற்குறித்த அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் கிடைக்கும் காலம். | 18—12—1971முதல்14—2—1972 முடிய. |

ஒப்பந்தப் பத்திரங்களின் விலை, எந்தச் சூழ்நிலையிலும் திருப்பியளிக்க இயலாது. அரசாங்கக் கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் "Public Works Remittances III other Remittances" என்ற தலைப்பிட்டு நிர்வாகப் பொறியாளர் நிலநீர்க்கோட்டம், சென்னை-17, அவர்களின் கணக்கில் செலுத்தப்பட வேண்டும். விற்பனை வரி மேற்படி தொகை செலுத்தப்பட்ட அதே சலானில் "XII Sales Tax (b) Receipts Under State Sales Tax Act, General Sale's Tax" என்ற தலைப்பில் அரசாங்கக் கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் செலுத்தப்பட வேண்டும். மேற்குறித்த சலானைக் கொடுத்த பின்புதான் ஒப்பந்தப் பத்திரங்கள் வழங்கப்படும்.

சா. பஞ்சநதம்,
இயக்குநர்.

நிலநீர் இயக்குநர் அலுவலகம்,
நெ. 10எ, தண்டபாணி தெரு, சென்னை-17.
(த.ஆர். 5)

# நிலத்தின் தாகம் தணித்திடுவான்—
# அவன் பெயர் ஸீமென்ஸ் பம்ப்மாஸ்டர்

SIEMENS




அனைத்திந்தியாவில் ஸீமென்ஸிடம்
மட்டும்தான் பம்பிங் செட்டுக்குத்
தேவையான எல்லா சாதனங்களும்—
அதாவது பம்பு, மோட்டார், ஸ்டார்ட்டர்,
ஸ்விட்ச்ஃப்யூஸ் யூனிட் மற்றும் அவற்றை
இணைப்பதற்கான ட்ரோபோடூர் கேபிள்
உள்பட—ஒரே தொழில்நுட்ப முறையில்
தயாரிக்கப்பட்டு வழங்கப்படுகின்றன.
இந்த பம்பிங் செட் மிகவும் நம்பகத்துடன்
இயங்குவதற்கு இதுவே உத்தரவாதம்.

## ஸீமென்ஸ் இந்தியா லிட்.

● பம்பாய் ● கல்கத்தா ● சென்னை ● நியூ டெல்லி
● அகமதாபாத் ● பெங்களூர் ● ஹைதராபாத் ● லக்னோ

## ஏல விளம்பரம்

## தேனி—அல்லிநகரம் நகராட்சி

1972-ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 1-ஆம் தேதி முதல் 1973-ம் வருடம் மார்ச்சு மாதம் 31-ம் தேதியோடு முடிவடையும் ஒரு வருடக் காலத்திற்கு தேனி-அல்லி நகரம் நகராட்சிக்குச் சொந்தமான தேனி வாரச்சந்தை (மேற்கு சந்தையில் தற்போது வடமேற்கு மூலைப் பக்கமுள்ள மூங்கில் கடைகள்நீங்கலாக உள்ள பகுதிகள் அனைத்திலும் சுங்கம் வசூல் செய்யும் பாத்தியதை)யையும், வண்டிப் பேட்டையையும் (சாராயக் கடை நீங்க லாக), சந்தையில் விழும் இளநீர் மட்டைகள், நகராட்சி எல்லையில் விழும் பன்றி எருவை எடுத்துச் செல்லும் பாத்தியதையையும் 1972-ம் வருடம் பிப்ரவரி மாதம் 14-ம் தேதி திங்கட்கிழமை காலை 11 மணிக்கு தேனி-அல்லி நகரம் நகராட்சி தனி அதிகாரி அவர்களால் நகராட்சி அலுவலகத்தில் பகிரங்கமாக ஏலத்தில் விடப்படும். மற்ற விவரங்களை அலுவலகத்தில் தெரிந்து கொள்ளலாம்.

கா. முகமது இப்ராஹிம்,

தேனி,
4–1–1972.

தனி அதிகாரி.

(த. 50)

## ஏலம்

## தீயணைப்புத் துறை

கண்டனம் செய்யப்பட்ட கீழ்க்கண்ட தொடர் ஊர்தி பம்ப் வேலூர் தீ அணைப்பு நிலையத்தில் 4–2–1972 அன்று காலை 11 மணிக்குப் பகிரங்க ஏலத்தில் விடப்படும். மேற்படி இடத்தில் பம்பைப் பார்வையிடலாம். விற்பனை நிபந்தனைகளைக் கீழே கையொப்பமிட்டவர் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்

| வண்டியின் விவரம். | பதிவு எண். | வருடம், மாடல். |
|---|---|---|
| தொடர் ஊர்தி பம்ப் | எம்.எஸ்.ஒய். 3197 | கவெண்டிரி கிளைமாக்ஸ் பெரியது 1955 மாடல். |

யூ. நாராயணா,
கோட்டத் தீயணைப்பு அலுவலர்,
வேலூர் கோட்டம்.

(த. 55)

## ஒப்பந்தப் புள்ளி

## நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை
## சென்னை வட்டம்—சென்னை-25

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை), சென்னை வட்டம், சென்னை-25 அவர்களால் கீழ்க்கண்ட வேலைக்கு அரக்கு முத்திரையிடப்பட்ட இனவாரி ஒப்பந்தப் புள்ளிகள் கிண்டி, சென்னை-25-ல் உள்ள மேற்படியார் அலுவலகத்தில் 16–2–1972 அன்று மாலை 3 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

| வரிசை எண்ணும், வேலையின் விவரம். | முன்வைப்புத் தொகை. |
|---|---|
| | ரூ. |
| 1. பொன்னேரிக்கரை சாலை கி. மீ. 2/8 முதல் 8/4 வரை மேம்பாடடையச் செய்தல் (தென் ஆர்க்காடு மாவட்டம்).. | 10,300 |

ஒப்பந்தங்கள் 16–2–1972 அன்றே மாலை 3-15 மணிக்கு திறக்கப் படும்.

ஒப்பந்தத்திற்கான நிபந்தனைப் பத்திரங்கள், நமூனக்கள், வரைபடங் கள் முதலியனவற்றைக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை), கடலூர் அவர்கள் அலுவலகத்தில் விற்பனைவரியுட்பட ரூ. 51.75 கட்டி 7–2–1972 முதல் 15–2–1972 வரை அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள முன்வைப்புத் தொகைகளைக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை), கடலூர் அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் "ரெவின்யூ டெபாஸிட்" என்ற தலைப்பின் கீழ் கோட்டப் பொறியாளர் (நெடுஞ் சாலை கிராமப் பணித்துறை) கடலூர் பெயரில் செலுத்திச் செல்லுச் சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

முன் வைப்புத் தொகையை அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளின் உறுதிப் பத்திரங்களாக அனுப்பினால் அதற்கான ரிசர்வ் வங்கியின் ஒப்புதலை யும் சேர்த்து அனுப்ப வேண்டும்.

குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீல னைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா.

ஜி. ஜார்ஜ் ஜேகப்,

சென்னை-25,
11–1–1972.

மேற்பார்வைப் பொறியாளர் (நெ.கி.ப.).

(த. 56)

## ஏலம்

## ஆத்தூர் நகராட்சி

## 1972–73-ஆம் ஆண்டில் பொது ஏலம் மற்றும் ஒப்பந்த விளம்பரம்

ஆத்தூர் நகராட்சிக்குப் பாத்தியப்பட்ட பேருந்து வண்டி நிலையம், சந்தை, வண்டிப்பேட்டை, மற்றும் பன்றி எரு பொறுக்குதல் ஆகிய பலவகைப்பட்ட இனங்களில் 1–4–1972 முதல் 31–3–1973 முடிய ஓராண் டிற்குக் கட்டணம் வசூல் செய்தலும், மற்றும் பேருந்து நிலையத்தில் உள்ள உணவு விடுதிகள், அதைச்சார்ந்த கடைகள், இனிரயின் பஜார் கடைகள், பெட்டிக் கடைகள், மற்றுமுள்ள இதரக் கடைகளும் 1–4–1972 முதல் 31–3–1973 முடிய உள்ள காலத்திற்கு அனுபவித்துக் கொள்ளும் உரிமைக்கும் 1972-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 14, 15, 16-ஆம் தேதி களில் தினசரி காலை 10 மணி முதல் நகராட்சி ஆணையரால் ஆத்தூர் நகராட்சி அலுவலகத்தில் பகிரங்க ஏலம் நடத்தப்படும். மேலும் 1972–73-ஆம் ஆண்டிற்கு இந்நகராட்சிக்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் தேவைப்படும் சாமான்கள் வழங்க 16–2–72-ந் தேதி மாலை 4 மணி வரை முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்படும். மேற்படி ஒப்பந்தப் புள்ளிகள் அன்று மாலை 4-30-க்குத் திறக்கப்படும். ஏலங்கள் மற்றும் ஒப்பந்தங்கள் சம்பந்தமான சகல விவரங்களும் 1972 ஜனவரி மாதத்திய சேலம் மாவட்ட அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது. இதர விவரங்கள் வேண்டுவோர் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கே. வி. லெட்சுமி நாராயணன்,

ஆத்தூர்,
14–1–1972.

ஆணையர்.

(த. 51)

## ஏல விற்பனை

## வனத்துறை

## தமிழ்நாடு அரசினர் மரக் கிடங்கு, பொள்ளாச்சி

சுமார் 500 க. மீட்டர் முதல் 1,500 கன மீட்டர் வரை (ஈட்டி, தேக்கு, கரிமருது, தடசு, பில்லமருது மற்றும் பல ஜாதி) மரங்கள் ஆகியவைகளை 2–2–1972-ஆம் தேதி மற்றும் 22–2–1972-ஆம் தேதிகளில் தமிழ்நாடு அரசு ஆளுநர் அவர்கள் சார்பாக, தென்கோவை மாவட்ட வன அலுவலர் அவர்களால் அல்லது அவரது உத்திரவு பெற்றவர்களால் பகிரங்கமாய் ஏலம் விடப்படும். ஏலம் காலை 9 மணி முதல் தொடர்ச்சி யாக நடத்தப்படும்.

மற்ற விவரங்கட்குப் பொள்ளாச்சியிலுள்ள தமிழக அரசினர் மரக் கிடங்கின் வனச்சரக அலுவலருக்கு விண்ணப்பித்துக் கொள்ளவும்.

பூ. க. பொன்னுசாமி,

பொள்ளாச்சி,
7–1–1972.

மாவட்ட வன அலுவலர்.

(த. 52)

## ஒப்பந்தப் புள்ளி

வேலையின் பெயர்—

செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டத்திலுள்ள சித்தாமூர் ஆற்றின் குறுக்கே அணை கட்டுதல்.

தமிழ்நாடு அரசு ஆளுநர் சார்பிலும், அவருக்காகவும், பொதுப்பணித் துறை மற்றும், அரசினர் பிற துறைகளில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக் காரர்களிடமிருந்தும், ஆயக்கட்டுதாரர்களிடமிருந்தும் மூடி முத்திரையிட்ட ஒப்பந்த புள்ளிகள் மேற்குறிப்பிட்ட பணிக்காகச் செங்கற்பட்டு வடார்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் 10-2-1972 மாலை 3 மணி வரைக்கும் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் அதே நாள் மாலை 3-15 மணிக்கு, அப்போது வந்து இருக்கும் ஒப்பந்தப்புள்ளி தாரர்கள் முன்னிலையில் செங்கற்பட்டு வடார்க்காடு பெருவட்ட மேற்பார் வைப் பொறியாளர் அவர்களால் பிரிக்கப்படும்.

| | |
|---|---|
| ஒப்பந்த முறை .. .. .. | கே-2 |
| முன்வைப்புத் தொகை .. .. | ரூ. 4,000 |
| ஒப்பந்தப்புள்ளி பத்திரங்களின் விலை வரைபடங்களுடன். | ரூ. 20.70 (விற்பனை வரி உட்பட). |
| முடிக்கவேண்டிய காலம் ஒப்பந்தப் புள்ளி. | 15 மாதங்கள். |

ஒப்பந்தப்புள்ளி பத்திரங்கள் செங்கற்பட்டு வடார்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் 25-1-1972 தேதி முதல் 8-2-1972 தேதி வரை விற்பனைக்குக் கிடைக்கும். ஒப்பந்தப் புள்ளி பத்திரங்களுக்கான விலைத்தொகை ரூ. 20·00 (அது எந்தச் சூழ்நிலையிலும் திருப்பித்தரப்படமாட்டாது), கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கி ஆகியவற்றில் **"P.W.D.—Remittances III—other Remittances"** என்ற தலைப்பின் கீழ் நிர்வாகப் பொறியாளர், பொதுப்பணித்துறை, காஞ்சிபுரம் கோட்டம், காஞ்சிபுரம் என்பவர் கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

விற்பனை வரி ரூ. 0.70 கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் **" XII Sales Tax (b) Receipts under state Sales Tax Act—General Sales Tax.**

என்ற தலைப்பின் கீழ் செலுத்தப்பட வேண்டும். மேற்படி கருவூலச் செலுத்துச் சீட்டுகளை இவ்வலுவலகத்திற்கு விண்ணப்பத்துடன் அனுப் பினால் ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் தரப்படும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள முன் வைப்புத்தொகை, கருவூலச் சீட்டு வடிவிலோ தேசியச் சேமிப்புப் பத்திரங்களாகவோ, அல்லது ஷெடியூல்டு பாங்குகளின் கால் ரசீது டிபொசிட் வகையிலோ, அல்லது ஷெடியூல்டு பாங்குகளின் "டிமாண்ட் டிராப்டாகவோ" ஏற்றுக்கொள்ளப்படும். முன் வைப்புத் தொகைக்காகக் கொடுக்கப்படும் "ஷெடியூல்டு பாங்குகளின் "டிமாண்டு டிராப்டுகள்" செயற் பொறியாளர், பொ.ப.து. காஞ்சிபுரம் கோட்டம், காஞ்சிபுரம், அவர்கள் பெயரால் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். மாநில அரசு கடன் பத்திரங்களும், மின்வாரியப் பத்திரங் களும், நடைமுறை விலையில் 5 சதவீதம் குறைத்து ஏற்றுக்கொள்ளப் படும். தேசீயச் சேமிப்பு நற்சான்றுப் பத்திரங்கள் அந்த அஞ்சல் நிலையத்தாரின் ஒப்புதலுடன் ஏற்றுக்கொள்ளப்படும். முன்வைப்புத் தொகை வேறு எந்தப் படிவத்தில் செலுத்தப்பட்டிருந்தாலும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

**சு. சு. இராமசுவாமி,**
மேற்பார்வைப் பொறியாளர், பொ.ப.து.,
செங்கற்பட்டு—வடார்க்காடு பெருவட்டம், வேலூர்-1.

(த. 33)

## ஒப்பந்தப் புள்ளி

### குடிநீர் வடிகால் வாரியம்

வேலையின் பெயர்—

வலுவேற்றப்பட்ட காங்கிரீட்டு குழாய்க்குள் தாங்கும் வண்ணம் வலு வேற்றப்பட்ட காங்ரீட் பாலம், சென்னை அடையாறு ஆற்றுக்குக் குறுக்கே கட்டுதல்.

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும், மேலே கூறப்பட்டுள்ள வேலைக்காகப் பொதுப்பணித்துறை அல்லது மற்ற அரசுத் துறைகளைப் பெரிய நிறுவனங்களில் பதிவு செய்து கொண்டுள்ள உரிய பிரிவு ஒப்பந்ததாரர்களிடமிருந்து, தனித் தலைமைப் பொறியாளர், வீராணம் குடிநீர் வழங்கு திட்டம் மற்றும் கூவம் மேம்பாட்டுத் திட்டம், சென்னை-5 அவர்தம் அலுவலகத்தில் 2-2-1972 மாலை 2 மணிவரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

| | |
|---|---|
| ஒப்பந்த வடிவம் .. .. .. | மொத்தத் தொகை. |
| கட்டுத்தொகை .. .. .. | ரூ. 10,000 |
| ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களின் விலை. | ரூ. 10 மற்றும் விற்பனை வரி ரூ 0.37. |
| வேலை முடிக்கவேண்டிய காலம் .. | 8 மாதங்கள். |

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரத்தின் விலை **" III Suspense G. Remittances—(iii) other Remittances T.W.A.D. Funds.**

என்ற தலைப்பில் அரசுக் கருவூலத்திலோ அல்லது ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியாவிலோ, மேற்பார்வைப் பொறியாளர், வீராணம் திட்டக்கோட்டம், சென்னை-5 அவர்தம் கணக்கில் செலுத்த வேண்டும். ஒப்பந்தப்புள்ளி படிவம், தனித் தலைமைப் பொறியாளர், வீராணம் குடிநீர் வழங்கு திட்டம், சென்னை-5 அவர்தம் அலுவலகத்தில் 17-1-1972 முதல் 1-2-1972 வரை தொகை செலுத்திய செல்லுச் சீட்டைக் கொடுத்துப் பெறலாம்.

**தனித் தலைமைப் பொறியாளர்,**
குடிநீர் வடிகால் வாரியம்.

(த. ஆர். 1)

## ஏல விளம்பரம்

அடியிற்கண்ட தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்குச் சொந்த மான கண்டனம் செய்யப்பட்ட லாண்ட் ரோவர் ஊர்தி ஒன்று உள்ளது உள்ளபடியே 1972-ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 14-ம் நாள் (14-2-72) அன்று கும்பகோணம் பொதுச் சுகாதாரப் பொறியியல் உட்கோட்டம் உதவிப் பொறியாளர் அவர்களால், 6-ம் இலக்கமிட்ட கல்யாணராமன் தெருவில் அமைந்துள்ள, பொதுச் சுகாதாரப் பொறியியல் உட்கோட்ட அலுவலகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

(1) லாண்ட் ரோவர்—ஊர்தி எண் எம்.எஸ். ஒய். 1649—1953-ஆம் ஆண்டின் மாதிரி—பெட்ரோல் எஞ்சின்—ரோவர் கம்பெனியரால் தயாரிக்கப்பட்டது.

மேற்படி ஊர்தியை அது வைக்கப்பட்டுள்ள இடத்தில் (கும்பகோணம்) அலுவலக வேலை நேரத்தில் சென்று ஆய்வு செய்யலாம். பிணைத் தொகை, மற்றும் தேவைப்பட்ட விவரங்களைக் கும்பகோணம் உதவிப் பொறியாளரிடம் இருந்து அறிந்து கொள்ளவும்.

**மேற்பார்வைப் பொறியாளர்,**
பொதுசுகாதாரப் பொறியியல் வட்டம்,
தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்,
எழும்பூர், சென்னை-8.

(த. ஆர். 2)

## ஒப்பந்தப் புள்ளி

### சிறைத் துறை

1972-73-ஆம் ஆண்டிற்கு கீழ்க்கண்ட நிறுவனங்களுக்கு கச்சாப் பொருட்கள் வழங்குவதற்கான மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் 16-2-72 தேதி பிற்பகல் 3 மணி வரை தமிழ்நாடு ஆளுநர் அவர்களுக் காகவும், அவர்களின் சார்பாகவும், வரவேற்கப்படுகின்றன. விலைகள் மெட்ரிக் அளவைகளில் மட்டுமே குறிப்பிடப்பட வேண்டும்.

நிறுவனங்கள்—சென்னை, வேலூர், கடலூர், திருச்சி, சேலம், மதுரை, கோயம்புத்தூர், பாளையங்கோட்டை முதலிய இடங் களிலுள்ள மத்திய சிறை மற்றும் புதுக்கோட்டை பார்ஸ்டல் பள்ளி, சென்னை பல்லாவரத்திலுள்ள ஆண்கள் பிறகாப்பு இல்லம்.

ஒப்பந்தப்புள்ளிகள் மூடி முத்திரையிடப்பட்ட உறைகளின் ஒப்புகைப் பதிவஞ்சலில் (By Registered Post Act d. due.) மட்டுமே அனுப்பப்பட வேண்டும். உறையின் மேல் "........க்கு (இங்கே எந்த நிறுவனத்திற்கான ஒப்பந்தப்புள்ளியோ அந்தந்த நிறுவனத்தின் பெய ரைக் குறித்து) கச்சாப் பொருட்கள் வழங்குவதற்கான ஒப்பந்தப்புள்ளி என்று தவறுமல் எழுதித் தமிழ்நாடு சிறைத்துறைத் தலைமைப் பார்வை யாளர் அவர்களின் பெயருக்கு அனுப்ப வேண்டும்.

ஒப்பந்தப்புள்ளிகளைச் சிறைத்துறைத் தலைமைப் பார்வையாளரின் அலு வலகத்தில் 17-2-72 முற்பகல் 10-30 மணிக்குத் திறக்கப்படும்.

ஒப்பந்த நமூனாக்கள், ஒப்பந்தப்புள்ளி விதிகள், வழங்க வேண்டிய கச்சாப் பொருட்களின் விவரக் குறிப்பீடுகள் முதலியவைகள் சம்பந்தப் பட்ட நிறுவனங்களின் கண்காணிப்பாளர் அவர்களிடமிருந்து மட்டுமே நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். இவ்வாறு செலுத்தப்பட்ட கட்டணம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

**பி. குப்புசுவாமி,**
சிறைத்துறைத் தலைமைப் பார்வையாளர்,
"குறளகம்", 5-வது மாடி, சென்னை-1.

தேதி 22-12-71

(த. ஆர். 3)

## குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும், கீழே குறிப்பிட்டுள்ள வேலைகளுக்காக, மேற்பார்வைப் பொறியாளர், மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் வட்டம், தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியம், கோயம்புத்தூர்-12 அவர்களால், 25/1, 3-வது தெரு, டாடாபாத், கோயம்புத்தூர்–12 என்ற முகவரியிலுள்ள அவர் தம் அலுவலகத்தில், 11–2–1972 அன்று மாலை 3–00 மணி வரை, மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 4-00 மணிகசு அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

வேலையின் பெயர்:—(1) பொள்ளச்சி குடிநீர் வழங்கும் திட்ட மேம்பாடு—ஐ.எஸ். எஸ். என் 226/1962 மற்றும் இது நாள் வரை ஏற்பட்டுள்ள திருத்தத்திற்கும் ஒத்த தரமும் பல்வேறு அளவும் உள்ள எம். எஸ். ராடுகளை வழங்குதலும், ஒப்படைத்தலும்.

(2) புஞ்சைப்புளியம்பட்டி குடிநீர் வழங்கும் திட்டம் . ஐ.எஸ்.எஸ். என் 226/1962 மற்றும் இதுநாள் வரை ஏற்பட்டுள்ள திருத்தத்திற்கும் ஒத்த தரமும் பல்வேறு அளவும் உள்ள எம்.எஸ். ராடுகளை வழங்குதலும், ஒப்படைத்தலும்.

கட்டுத் தொகை :—ரூ. 2,250. (ஒவ்வொரு வேலைக்கும்.)

ஒப்பந்தப் பத்திரங்கள் விலை : ரூ 10.35 விற்பனைவரி உட்பட ஒவ்வொரு வேலைக்கும்.

ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைக்குமிடம் :—நிருவாகப் பொறியாளர் அலுவலகம், மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் கோட்டம், 11/8, பாஸ்யகாருலு சாலை, ஆர்.எஸ். புரம், கிழக்கு, கோயம்புத்தூர்-2-ல் விலையை நேரில் பணமாக, அல்லது மணியாடர் மூலமாகவோ செலுத்திப் பெறலாம்.

வேலை முடிக்க வேண்டிய காலம் :—ஒரு மாதம்.

கட்டுத் தொகை, நிருவாகப் பொறியாளர், மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் கோட்டம், அவர்கள் வரம்பிற்குட்பட்ட கருவூலத்தில் செலுத்திக் கருவூலச் சலான் வடிவிலோ, அல்லது நிருவாகப் பொறியாளர், மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் கோட்டம், கோயம்புத்தூர்-2 அவர்கள் பெறும் வகையில் டிமாண்டு டிராப்டாகவோ செலுத்த வேண்டும். நாட்டுடமையாக்கப்பட்ட எந்த வங்கியினுடைய காரண்டியும் கூடக் கட்டுத் தொகையாக ஏற்றுக் கொள்ளப்படும்.

ஒன்று அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையும், எக்காரணமும் கூறாமல் நிராகரிக்க, மேற்பார்வைப் பொறியாளர், மக்கள் நல்வாழ்வுப் பொறியியல், அவர்களுக்கு உரிமை உண்டு.

**எம். துரைராஜன்,**
மேற்பார்வைப் பொறியாளர்,
குடிநீர் வடிகால் வாரியம்,
கோயம்புததூர்-12.

(த.13)

---

## தருமபுரி நகராட்சி

தருமபுரி நகராட்சிக்கு 1972–73-ஆம் ஆண்டுக்குத் தேவையான கருங்குண்ணி வகை சப்ளை, தாய்சேய் நலவிடுதிக்குக் கோதுமை ரொட்டி பசும்பால் சப்ளை, பொது சுகாதார வாகனம் பழுது பார்த்தல் பொதுச் சுகாதார வண்டிகளுக்கு 13 மாடுகள், 4 எருமைகடா சப்ளை முதலிய வற்றிற்கான மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 28–1–1972-ம் நாள் மாலை 4–00 மணி வரை ஆணையர் அவர்களால் நகராட்சி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்படும். இதர விவரங்களுக்கு விண்ணப்பிக்கவும்.

**எஸ். காளியப்பன், எம்.ஏ.**
ஆணையர்.

நகராட்சி அலுவலகம், தருமபுரி,
7–1–1972.

(த.27)

---

## குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும், கீழே குறிப்பிட்டுள்ள வேலைகளுக்காக, மேற்பார்வைப் பொறியாளர் தமிழ்நாடு குடிநீர் வாரியம், கோயம்புத்தூர்-12 அவர்களால், 25/1, 3-வது தெரு, டாடாபாத், கோயம்புத்தூர்-12 என்ற முகவரியிலுள்ள அவர் தம் அலுவலகத்தில் 16–2–1972 அன்று மாலை 3–00 மணி வரை, மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் அதே நாள் மாலை 4–00 மணிக்கு அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளர் அவர்களாலோ அல்லது அவரது அதிகாரம் பெற்ற ஒருவராலோ திறக்கப்படும்.

வேலையின் பெயர் :—(1) பள்ளிபாளையம் குடிநீர் வழங்கும் திட்டம் முதல் நிலை சோன் என். 1-க்கு எம்.டபிள்யூ.எல். 174 மீட்டர், எல்.டபிள்யூ. 171 மீட்டரில் 3.75 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள ஆர்.சி.சி. மேல் நிலை நீர்த்தேக்கம் அமைத்தல்.

(2) பள்ளிப்பாளையம் குடிநீர் வழங்கும் திட்டம் முதல் நிலை சோன் என். 2-க்கு எம். டபிள்யூ.எல். 169 மீட்டர், எல்.டபிள்யூ.எல் 165.50 மீட்டரில் 3.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள ஆர்.சி.சி. மேல்நிலை நீர்த்தேக்கம் அமைத்தல்.

வேலை முடிக்க வேண்டிய காலம் :—6 மாதங்கள் (ஒவ்வொரு வேலைக்கும்).

ஒப்பந்த வடிவம் :—மொத்தத்தொகை (ஒவ்வொரு வேலைக்கும்.)
கட்டுத் தொகை :—(1) ரூ. 2,825. (2) ரூ. 2,250 (முறையே).

ஒப்பந்தப் பத்திரங்கள் விலை :—ரூ. 10.35 (விற்பனைவரி உட்பட) (ஒவ்வொரு வேலைக்கும்).

ஒப்பந்தப் படிவம் விற்கப்படும் காலம் :—(1) 12–1–1972 முதல் 14–2–1972 வரை (ஒவ்வொரு வேலைக்கும்).

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் மேற்பார்வைப் பொறியாளர், மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் கோட்டம், 18, சாமியப்ப கவுண்டர் தெரு, திருநகர் காலனி, ஈரோடு-3 அவர் தம் அலுவலகத்தில் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலையை நேரில் பணமாகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

கட்டுத்தொகை தேசியமயமாக்கப்பட்ட எந்த வங்கியினுடைய டிமாண்டு டிராப்டாகவோ அல்லது கருவூலச் சலான்வடிவிலோ மேற்பார்வைப் பொறியாளர், ஈரோடு அவர்கள் பெறும் வகையில் செலுத்த வேண்டும். நாட்டுடமையாக்கப்பட்ட எந்த வங்கியினுடைய காரண்டியும் கூட கட்டுத் தொகையாக ஏற்றுக் கொள்ளப்படும். கட்டுத் தொகையின்றிப் பெறப்படும் ஒப்பந்தப் புள்ளிகள், நிராகரிக்கப்படும்.

ஒன்று அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையும், எக்காரணமும் கூறாமல் நிராகரிக்க மேற்பார்வைப் பொறியாளர், கோயம்புத்தூர் அவர்களுக்கு உரிமை உண்டு.

**மேற்பார்வைப் பொறியாளர்.**

(த.12)

---

## பயிற்சி

---

### மீன்துறை பயிற்சி நிலையம், சென்னை-28

சென்னையிலுள்ள மீன்துறை பயிற்சி நிலையத்தில் நவீன மீன்பிடி பயிற்சி 10 மாதக்காலம் அளிக்கப்படும். மேற்படி பயிற்சிக்குச் சென்னை, செங்கற்பட்டு மாவட்டங்களிலுள்ள மீனவர்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பதாரர்கள் 18 வயதுக்கு மேற்பட்டவர்களாகவும், 35 வயதுக்கு உட்பட்டவர்களாகவும், கடலில் மீன்பிடி அனுபவம் உள்ளவர்களாகவும், நல்ல தேக ஆரோக்கியமுடையவர்களாகவும் இருக்க வேண்டும். பயிற்சி பெறும் மாணவர்களுக்கு மாதம் தலா ரூ. 50 (ரூபாய் ஐம்பது மட்டும்) உபகாரச் சம்பளம் வழங்கப்படும். விண்ணப்பங்கள் 10–2–1972 மாலை 5 மணி வரையில், மீன்துறை பயிற்சி நிலையம், சென்னை–28 அவர்களால் ஏற்றுக்கொள்ளப்படும். மற்ற விவரங்களுக்கும் விண்ணப்பப் பாரங்களுக்கும் மேற்கூறிய உதவி இயக்குநருக்கு விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

**தி. மா. ஆறுமுகம்,**
மீன்துறை துணை இயக்குநர்,
(மண்டலம்) சென்னை-6.

(த.26)

## ஒப்பந்தப் புள்ளி

### மின்சார வாரியம்

**விளக்க விபரம் எண்கள்:**

(அ) SEG—BB-47.
(ஆ) SEG—BB-48.
(இ) SEG—BB-49.

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பாக மூடி முத்திரையிட்ட தனித் தனி விலை ஒப்பங்கள் ( **Tenders** ) மேற்கண்ட மூன்று விளக்க விவர எண்களுக்கும் அதனதன் உறையில் "தமிழ்நாடு மின்சார வாரியம், பேசின் பிர்ட்ஜ் அனல் மின் திட்டம்" என்றும் (அ) விற்கு "டிப்பர் லாரி கட்டுமான் வேலை-விளக்க விவரம் எண் **SEG—BB.47"** என்றும், (ஆ)-விற்கு "லாரி கட்டுமான வேலை விளக்க விவரம் எண் SEG—BB.48" என்றும், (இ)-க்கு வாகனங்கள் ஏல விற்பனை-விளக்க விவரம் எண் SEG—BB-49" என்றும், மற்றும் ஒப்பந்ததாரரின் பெயரும் எழுதப்பட்டு கீழ்க் கையொப்பம் இட்டவரால் 5-2-1972 அன்று பிற்பகல் 1 மணி வரையில் பெற்றுக்கொள்ளப்படும். மேற்கூறிய விளக்க விவர எண்களின் விவரம் பின்வருமாறு :—

| எண். | விளக்க விவர எண் | வேலையின் விளக்கம். | வண்டிகளின் எண்ணிக்கை. | பிணைத்தொகை. ரூ. |
|---|---|---|---|---|
| அ. | SEG.BB. 47. | டிப்பர் லாரி கட்டுமான வேலை (163" WB Leyland Comet7.5 Ton.) | 4 (நான்கு) | 1,250 |
| ஆ. | SEG.BB. 48. | லாரி கட்டுமான வேலை (165" WB Fargo-5 Ton.) | 1 (ஒன்று) | 250 |
| இ. | SEG.BB. 49. | வாகனங்கள் ஏல விற்பனை— (1) பென்ஸ் டிப்பர் 1957 மாடல், MDN 4167. (2) டாட்ஜ் லாரி 1946. மாடல் MSP 2406 (3) பென்ஸ் டிப்பர், 1959 மாடல், MSX 5174. (4) பென்ஸ் டிப்பர், 1959 மாடல், MSX 5192. (ஒவ்வொரு வாகனத்திற்கும் தனித்தனியே விலை மதிப்பு கொடுத்தல் வேண்டும்.) | 4 (நான்கு) | 500 |

ஒப்பந்தப் புள்ளிகளின் படிவங்களின் விலை ஒவ்வொரு சாற்றுக் குறிப்பிப் பிரதிக்கும் தலா ரூ. 10 ஆகும். மேற்படி ஒப்பந்தப் புள்ளிகளின் விளக்க விவரப் பிரதிகள் (**Tender Specification Copies**) வேண்டுவோர் ஒவ்வொரு விளக்க விவரப் பிரதிக்கும், ரூ. 10 வீதம் துணைத்தலைமைக் கணக்கர், மின் உற்பத்தி நிலையம் பேசின் பிரிட்ஜ் மின் நிலையம், சென்னை-12 (**Deputy Chief Accountant Generation, Basin Bridge Power Station, Madras-12-**) முகவரிக்குப் பண அஞ்சல் மூலமாகவோ (**Money Order**) அல்லது நேரிலேயோ செலுத்தி அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம். இத் தொகையைப் பண அஞ்சல் மூலமாக அனுப்புவோர் தமது முகவரியையும் தேவையான பிரதிக்குரிய விளக்க விவர எண்ணையும் (**Specification Number**) தெளிவாகக் குறிப்பிட வேண்டும். பிரதிகள் சாதாரண அஞ்சல் மூலமாகவே அனுப்பப்படும். அவை உரியவர்கட்குச் சேர்க்கப்படாவிட்டால் அதற்கு மின்சார வாரியம் பொறுப்பல்ல. ஒப்பந்தப் பிரதிகள் பிறருக்கு மாற்றிக் கொள்ளத்தக்கதல்ல. கீழே கையொப்பம் இட்டவர் எந்த ஒரு விலை ஒப்பந்தத்தையோ அல்லது எல்லா விலை ஒப்பந்தங்களையோ எவ்விதக் காரணமும் காட்டாமல் நிராகரிக்க உரிமை பெற்றவர் ஆவார்.

ஒவ்வொரு குத்தகை ஒப்பந்தத்திற்கும் பிணைத் தொகையாக மேற்கூறியவாறு பேசின் பிரிட்ஜ் அனல் மின் நிலையத்தில் செலுத்தி, அதற்கான ரசீதை விலை ஒப்பந்தத்துடன் சேர்த்து அனுப்புதல் வேண்டும்.

மேற்படி ரசீது இல்லாத ஒப்பங்களும், உரிய தாள்களில் சேர்க்கப்படாத விலை ஒப்பங்களும், குறித்த காலத்திற்குப் பின்னர் வந்து சேரும் விலை ஒப்பங்களும் கண்டிப்பாக ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா. 5-2-1972 அன்று மாலை 4 மணிக்கு வந்திருக்கக்கூடிய ஒப்பந்ததாரர்கள், அல்லது அவர்களுடைய பிரதிநிதிகள் முன்னிலையில் அடியில் கையொப்பம் இட்டவரால் அலுவலகத்தில் ஒப்பந்தப் புள்ளிகள் திறக்கப்படும்.

**மேற்பார்வைப் பொறியாளர்,**
சென்னை பெருவட்டம்,
மின் உற்பத்தி நிலையம்,
(த.32) பேசின் பிரிட்ஜ் அனல் மின் நிலையம், சென்னை-12.

---

## ஏல விளம்பரம்

### தாராபுரம் நகராட்சி

### 1972-73–ஆம் ஆண்டிற்கான ஏல விளம்பரம்

நகராட்சி வாரச்சந்தை, தினசரி சந்தைகள், ஆடடிக்கும்சாலை, பேருந்து நிலையம், வண்டிகள் நிற்குமிடம், மாட்டிறைச்சிக்கடை, ஆகியவைகளில் கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமை நகராட்சிக்குப் பாத்தியப்பட்ட பேருந்து நிலையம், திருப்பூர் ரோடு, அலங்கியம் ரோடு, சோளக்கடைவீதி ரோடு முதலியவைகளிலுள்ள கடைகளை நடத்திக் கொள்ளும் உரிமை, நகராட்சி அமராவதி ஆற்றங்கரையிலுள்ள தலைமை குடிநீர் நிலையத்தில் கட்டடம் மற்றும் உபயோகத்தில் உள்ள இடங்கள் போக எஞ்சியுள்ள 0.60 சென்ட் இடத்தை விவசாயக் காரியத்திற்குப் பயன்படுத்திக்கொள்ளும் உரிமை மற்றும் இதர குத்தகைகள் 1972-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 16–ஆம் நாள் மாலை 3-00 மணிக்குப் பகிரங்கமாய் நகராட்சி அலுவலகத்தில் ஏலம் விடப்படும்.

தவிர கீழ்க்கண்ட பொருள்கள் வழங்குவதற்கும் வேலைகள் செய்து தருவதற்கும் (31-3-1973–ஆம் தேதி முடிய தேவைப்படுபவைகள்) மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஆணையர் அவர்களால் நகராட்சி அலுவலகத்தில் 21-2-1972-ஆம் தேதி மாலை 4-00 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிகள் அதே தினத்தில் 4-15 மணிக்குத் திறக்கப்படும். மற்ற விவரங்களுக்கு அலுவலக வேலை நாட்களில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

1. வைக்கோல், சோளத்தட்டு, பருத்தி விதை, புண்ணாக்கு முதலியவைகள் கொண்டு வந்து வழங்கல்.
2. கூடை, விளக்குமாறுகள் வழங்கல்.
3. எழுதுபொருள்கள் வழங்கல்.
4. அச்சுவேலைப் பதிவேடுகள், படிவங்கள் வழங்கல்.
5. துப்புரவு மாடுகளுக்கு லாடம் அடித்தல்.

**பெ. கிருஷ்ணமூர்த்தி,**
நகராட்சி அலுவலகம்,
தாராபுரம். ஆணையர்.
10—1—1972.

(த.24)

---

## ஒப்பந்தப் புள்ளி

### நாகர்கோவில் நகராட்சி

நாகர்கோவில் நகராட்சி மகாத்மா காந்தி நூற்றாண்டு நினைவு மருத்துவ மனைக்கு மருந்துகள் வழங்குவதற்கு அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் நகராட்சி ஆணையர் அல்லது அவரது ஆணை பெற்றவரால் 15—2—1972 மாலை 4 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். மேற்கொண்டு விவரங்களுக்கு ரூ. 1.03 நகராட்சி அலுவலகத்தில் செலுத்தி ஒப்பந்த அட்டவணை பெற்றுக் கொள்ளலாம்.

மதிப்புத் தொகை : ரூ. 3,500.

பொறுப்புத் தொகை : ரூ. 100.

**பி. தங்கவேலு,**
நாகர்கோவில்,
11—1—1972. ஆணையர்.

(த.23)

## ஒப்பந்தப் புள்ளி

## பொதுப்பணித் துறை

செங்கற்பட்டு வடார்க்காடு பெருவட்டம்,
வேலூர்-1.

வேலையின் பெயர்:—கட்டடங்கள்—செங்கற்பட்டு மாவட்டம் காஞ்சிபுரம் அறிஞர் அண்ணா நினைவு புற்று நோய் ஆராய்ச்சிக் கட்டடத்தில் கூடுதல் மாடிக் கட்டடங்கள் கட்டுதல்.

தமிழ்நாடு அரசு ஆளுநர் சார்பிலும், அவருக்காகவும், பொதுப் பணித்துறை மற்றும், அரசினர் பிற துறைகளில் பதிவு செய்துள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்து மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மேற்குறிப்பிட்ட பணிக்காக செங்கற்பட்டு—வடார்க்காடு பெருவட்ட மேற் பார்வைப் பொறியாளர் அவர்களால் 16–2–1972 மாலை 3–00 மணி வரைக்கும் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3·15 மணிக்கு, அப்போது வந்து இருக்கும் ஒப்பந்தப் புள்ளி தாரர்கள் முன்னிலையில் செங்கற்பட்டு வடார்க்காடு பெருவட்ட மேற் பார்வைப் பொறியாளர் அவர்களால் பிரிக்கப்படும்.

ஒப்பந்த முறை—மொத்தத் தொகை.

முன் வைப்புத் தொகை——ரூபாய் 6,400.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை வரைபடத்துடன்—ரூ. 20·70 விற்பனை வரி 3½ சதவீதம் சேர்த்து.

முடிக்கவேண்டிய காலம் ஒப்பந்தப் புள்ளி—8 மாதங்கள்.

ஒப்பந்தப் புள்ளி பத்திரங்கள் செங்கற்பட்டு, வடார்க்காடு பெருவட்டம் மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்தில் அலுவலக நேரங் களில் 1–2–1972 தேதி முதல் 14–2–1972 தேதி வரை விற்பனைக்குக் கிடைக்கும். ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களுக்கான விலைத்தொகை ரூ. 20 00 (அது எந்தச் சூழ்நிலையிலும் திருப்பித் தரப்பட மாட்டாது). கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கி ஆகியவற்றில் "P. W. D. Remittances III Other Remittances" என்ற தலைப்பின் கீழ் "நிருவாகப் பொறியாளர், பொதுப்பணித்துறை, கட்டடங்கள் கோட்டம், காஞ்சிபுரம்" என்பவர் கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

விற்பனை வரி ரூ. 0·70 கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் "XII Sales Tax (b) Receipts, under State Sales Tax Act" என்ற தலைப்பின் கீழ் செலுத்தப் படவேண்டும். மேற்படி கருவூலச் செலுத்துச் சீட்டுகளை இவ்வலுவலகத்திற்கு விண்ணப்பத்துடன் அனுப்பினால் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் தரப்படும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள முன் வைப்புத் தொகை, கருவூலச் சீட்டு வடிவிலோ தேசிய சேமிப்புப் பத்திரங்களாகவோ, அல்லது ஷெட்யூல்டு பாங்குகளில் கால் ரசீது டெபாசிட் வகையிலோ, அல்லது ஷெடியூல்டு பாங்குகளில் "டிமாண்ட் டிராப்டாகவோ" ஏற்றுக்கொள்ளப்படும். முன்வைப்புத் தொகைக்காகக் கொடுக்கப்படும் "ஷெட்யூல்டு பாங்குகளின் "டிமாண்டு டிராப்டுகள்" செயற் பொறியாளர், பொதுப்பணித்துறை, கட்டடங்கள் கோட்டம், காஞ்சிபுரம் அவர்கள் பெயரால் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். மாநில அரசுக் கடன் பத்திரங்களும், மின்வாரியப் பத்திரங்களும், நடைமுறை விலையில் 5 சதவீதம் குறைத்து ஏற்றுக் கொள்ளப்படும். தேசீய சேமிப்பு நற்சான்றுப் பத்திரங்கள் அந்த அஞ்சல் நிலையத்தாரின் ஒப்புதலுடன் ஏற்றுக் கொள்ளப்படும். முன் வைப்புத் தொகை வேறு எந்த படிவத்தில் செலுத்தப்பட்டிருந்தாலும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் பெரிய கட்டட வேலைகளில் குறைந்த பட்சம் மூன்று வருட கால அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**க. சு. இராமசுவாமி,**

மேற்பார்வைப் பொறியாளர் (பொ. ப. து.)
செங்கற்பட்டு-வடார்க்காடு பெருவட்டம்,
வேலூர்-1.

(த. 31)

---

## மின்சார வாரியம்

## மேட்டூர் மின் இயக்கத் திட்டம்
## மேட்டூர் அணை-1

### மின்வாரியத்தின் பொருட்களை ஏற்றிச் செல்வதற்கான குத்தகை விளம்பரம்

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் பொருட்டு மேட்டூர் மின் திட்ட மேற்பார்வைப் பொறியாளரால் 18–2–1972–ஆம் தேதி பிற்பகல் 2–00 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட குத்தகை நிபந்தனைச் சீட்டுக்கள், 1–4–1972 முதல் 31–3–1973 வரை மேட்டூர் அணை மத்திய பண்டகச் சாலையில் பனிமனை முதலியவற்றிலிருந்து மேட்டூர் மின் திட்டத்தி லுள்ள இதர பண்டகசாலைகளுக்கு அல்லது தமிழ்நாடு பூராவிலும் வேறெந்த இடத்திற்காகிலும் பண்டங்களை ஏற்றிச்சென்று ஒப்படைத் தலும் இதர இடங்களிலிருந்து பண்டங்களை ஏற்றிவந்து மேட்டூரில் ஒப்படைப்பதற்குமான வேலைகளுக்கு வரவேற்கப்படுகின்றன.

குத்தகை விவரங்கள், குத்தகை நிபந்தனைகள், நிபந்தனைத் தாள்கள் (Tender Form) பிரதி ஒன்றுக்கு ரூ. 5–00 (ரூபாய் ஐந்து மட்டும்) (திருப்பிதரதக்கதல்ல) பண அஞ்சல் மூலமாகவோ நேரிலோ மேட்டூர் மின்இயக்கத்திட்ட தலைமைக் கணக்காயரிடம் (செல வினம் செலுத்தி) பெற்றுக்கொள்ளலாம்.

பண அஞ்சல் பெறும் கடைசி நாள் 14–2–1972 குத்தகை விவரங்கள் மற்றும் நிபந்தனைகளடங்கிய தாள்கள் சாதாரண அஞ்சல் மூலமாக மட்டும் (அஞ்சல் செய்யப்பட்டஅடையாளம் பெற்று) அனுப்பப்படும். அவ்வாறு அனுப்பப்படும் அஞ்சல் தவறினாலோ அல்லது உரிய காலத்தில் தாள்கள் கிடைக்காது போனாலோ மின்சாரவாரியம் பொறுப்பேற்காது. குத்தகை விவரம் மற்றும் நிபந்தனைகள் அடங்கியதாள்கள் மாற்றத் தக்கதல்ல. கீழே கையொப்பமிட்டவர் எந்த ஒரு ஒப்பந்தப் புள்ளியையோ அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையுமோ எவ்விதகாரணமும் காட்டா மல் நிராகரிக்கவும், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்ததாரர் களிடையே பகிர்ந்து கொடுக்கவும் உரிமை பெற்றவராவார். ரூ. 2,000 (ரூபாய் இரண்டு ஆயிரம் மட்டும்) கட்டுத்தொகையாக மேட்டூர் மின்திட்ட தலைமைக் கணக்காயரிடம் நேரில் செலுத்தி ரசீது பெற்றோ அல்லது ஷெடியூல்டு வங்கியில் செலுத்தப்பட்ட (Demand Draft) பணமாற்றோ லையோ இக்குத்தகை நிபந்தனைத் தாளுடன் இணைத்து அனுப்ப வேண்டும். பணமாற்றோலையோ அல்லது இவ்வலுவலகத்தில் கட்டுத் தொகைச் செலுத்தியதற்கான ரசீதோ இணைக்கப்படாத குத்தகை நிபந்தனைத்தாள்கள் தள்ளுப்படி செய்யப்படும். குத்தகைத்தாள்கள் வந்திருக்கும் குத்தகைதாரர்கள் முன்னிலையில் 18–2–1972–ஆம் தேதி பிற்பகல் 3–00 மணி அளவில் திறக்கப்படும்.

குத்தகை நிபந்தனைகளும், குத்தகை தாள்களும், 17–1–1972–ஆம் தேதியிலிருந்து விற்பனைக்குக் கிடைக்கும்.

**மேற்பார்வைப் பொறியாளர்.**

(த. 30)

---

## ஒப்பந்தப் புள்ளி

## பொதுப்பணித் துறை

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும், கீழ்க் கூறப்பட்ட வேலைக்காக 10–2–1972 மாலை 3–00 மணி வரை மேற்பார்வைப் பொறியாளர், பொதுப்பணித்துறை, கோயம்புத்தூர், நீலகிரி வட்டம் கோயம்புத்தூர் அவர்தம் அலுவலகத்தில் மூடி முத்திரையிடப்பட்ட ஒப் பந்தப் புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்படும்.

வேலையின் பெயர்:—கோயம்புத்தூர், வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின், மத்தியப் பண்ணை அலுவலகக் கட்டடம் கட்டுதல்.

ஒப்பந்த வடிவம்:—மொத்தத் தொகை.

கட்டுத்தொகை.—ரூ. 2,500.

ஒப்பந்தப் பத்திரங்களின் விலை வரைபடத்துடன் விற்பனை வரி உட்பட—ரூ. 5·18.

வேலை முடிக்க வேண்டிய காலம்:—4 மாதங்கள்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள், மேலாளர், நிருவாகப் பொறியாளர் அலுவலகம், கட்டடக் கோட்டம், கோயம்புத்தூர்—அவர்களிடம், மேற் குறிப்பட்ட தொகையைச் செலுத்தி 24–1–1972 முதல் எல்லா வேலை நாட்களிலும் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். தொகைத் திருப்பித் தரப்பட மாட்டாது.

**எம். எஸ். கோபாலகிருஷ்ணன்,**

மேற்பார்வைப் பொறியாளர்,
பொதுப்பணித்துறை,
நீலகிரி வட்டம்,
கோயம்புத்தூர்-1.

(த. 17)

---

## ஏல விற்பனை

## தீயணைப்புத்துறை

கண்டனம் செய்யப்பட்ட நீர் தாங்கி வண்டி எம்.எஸ்.ஒய். 0973 (ஜி.எம்.ஸி. 1951 மாடல் வண்டி) சென்னை எழும்பூர் மார்ஷல்ஸ் சாலை 17-ஏ, எண்ணில் உள்ள கோட்டத் தீயணைப்பு அலுவலகத்தில் 19–2–1972 அன்று காலை 11 மணிக்குப் பகிரங்க ஏலத்தில் விடப்படும். இவ்வண்டியை மேற்படி விலாசத்தில் பார்வையிடலாம். விற்பனை நிபந்தனைகள் கீழ்க் கையொப்பமிட்டவரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

**எஸ். அமிர்தலிங்கம்,**

கோட்டத் தீயணைப்பு அலுவலர்,

(த. 18)

## முன்னேற்றத்திலும் செழிப்பிலும் எமது பங்கு

# TANSI

நன்கு நிர்மாணிக்கப்பட்ட நவீன தொழிற்கூடங்களோடு தனது முழு உழைப்பைக் கொண்டு நாட்டிற்கும் தொழிலுக்கும் பல துறைகளில் பணிபுரிகிறது

### தொழில்

- கட்டுமான கட்டமைப்புகள்
- தரமான வார்ப்பு இரும்பு வார்ப்படங்கள்
- எஃகு, பித்தளை ஆகியவற்றில் வடிக்கப்பட்ட உறுப்புகள்
- மின் தடுப்புச் சாதனங்கள்
- விஞ்ஞான வகை கண்ணாடி உபகரணங்கள்
- இனாமல், டிசிசி கம்பிகள்

### விவசாயம்

- வேளாண்மைக் கருவிகள்
- பயிர் பாதுகாப்பு கருவிகள்
- டிராக்டர் தொடர்பு வண்டி
- மோட்டார் விசை பேற்றங்கள்
- கரும்பாலை
- வடிமுனைக் குழாய்கள்

### அன்றாட உபயோகப் பொருட்கள்

- எஃகு, மரமேஜை, நாற்காலிகள்
- மருத்துவமனை சாமான்கள்
- கதவுகளுக்கான பூட்டு
- தாழ்ப்பாள்கள்
- சுகாதார வசதி பொருட்கள்
- பீங்கான் பொருட்கள்
- காலணிகள்
- தோலணிப் பொருட்கள்

### ஏற்றுமதி

- பல வண்ண சாதாரண தோல்கள்
- நீலநிற ஈரமான குரோம் தோல்கள்
- கட்டுமான கட்டமைப்புகள்

தகவல்களுக்கு அணுகவும்
நிர்வாக இயக்குநர்

## தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம்

(இது ஒரு தமிழ்நாடு அரசு நிறுவனம)
35/2 உட்ஸ் சாலை, சென்னை-2.

## தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம்

கீழ்க்கண்ட பதவிகளுக்காக மனுக்கள் 2-3-1972 மாலை 5 மணி வரை வரவேற்கப்படுகின்றன :—

தமிழ்நாடு கல்வி சபார்டினேட் சர்விஸ், அரசு பெண்கள் பாலி டெக்னிக்கில், கணக்கில் இரண்டு சீனியர் இன்ஸ்ட்ரக்டர் பதவிகள், வணிகப் பயிற்சியில் ஐந்து ஜூனியர் இன்ஸ்ட்ரக்டர் பதவிகள் (பெண்கள் மட்டுமே விண்ணப்பித்துக் கொள்ளலாம்).

சம்பளம் : 1. கணக்கு சீனியர் இன்ஸ்ட்ரக்டர். ரூ. 400—15—475—20 575—25—650 மாதம் ஒன்றுக்கு.

2. வணிகப் பயிற்சி ஜூனியர் இன்ஸ்ட்ரக்டர் : ரூ. 325—15—550 மாதம் ஒன்றுக்கு.

வயது : 1. கணக்கு சீனியர் இன்ஸ்ட்ரக்டர் : 1-7-1972-ல் 30 வயதிற்குக் குறைவாக

2. வணிகப் பயிற்சி ஜூனியர் இன்ஸ்ட்ரக்டர்கள் : 1-7-1972-ல் 30 வயதிற்குக் குறைவாக. அங்கனைம் உற்றவர்கள் விசயத்தில் வயது வரம்பு 10 ஆண்டுகள் வரை தளர்த்தப்படும்.

தகுதிகள் : 1. கணக்கு சீனியர் இன்ஸ்ட்ரக்டர் பதவிக்கு : கணக்கில் முதல் அல்லது இரண்டாம் வகுப்பு மேற்படிப்புப் பட்டம். 2. வணிகப் பயிற்சி ஜூனியர் இன்ஸ்ட்ரக்டர் பதவிக்கு : 1. வணிகம் அல்லது பொருளாதாரத்தில், முதல் அல்லது இரண்டாம் வகுப்புப் பட்டம் அல்லது 2. ஆர்ட்ஸ் பட்டத்துடன், அரசுத் தொழில் நுட்பத் தேர்வில், அயர் கிரேடு தட்டெழுத்து மற்றும் சுருக்கெழுத்து தமிழ் அல்லது ஆங்கிலம் ஆகியவற்றில் வெற்றி பெற்றிருக்க வேண்டும்.

2. தமிழ்நாடு மக்கள் நல்வாழ்வு சபார்டினேட் சர்வீஸில், 4 கம்பிளர்ஸ் (Compilors) பதவிகள்.

சம்பளம் : 200—5—250—10—300 மாதம் ஒன்றுக்கு (சிறப்புச் சம்பளம் ரூ. 15).

வயது : தாழ்த்தப்பட்ட வகுப்பினர், தாழ்த்தப்பட்ட மலைச்சாதிவகுப்பினர் விசயத்தில் 1-7-1972-ல் 35 வயதிற்குக் குறைவாக இருக்க வேண்டும். மற்றவர்கள் 1-7-1972-ல் 30 வயதிற்குக் குறைவாக இருக்க வேண்டும். அங்கனைமுற்றவர்கள் விசயத்தில் வயது வரம்பு 10 ஆண்டுகள் வரை தளர்த்தப்படும்.

தகுதிகள் : 1. குறைந்தபட்சப் பொதுக்கல்வித் தகுதி. 2. சர்வதேச கம்பியூட்டர்ஸ் மற்றும் டேபுலேடர்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட், மற்றும் இதுபோன்ற அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில், "பன்ச்சிங் மற்றும் வெரிபிகேசன்" பயிற்சி முடித்திருக்க வேண்டும்.

3. தமிழ்நாடு வேளாண்மை சபார்டினேட் சர்வீஸில், வேளாண்மைத் துணை அலுவலர்கள் (D.A.O.) 250 பதவிகள்.

சம்பளம் : 375—15—495—20—575—25—650 மாதம் ஒன்றுக்கு வயது : எம்.எஸ்சி. அல்லது பி.எச்டி. வேளாண்மைப்பட்டம் பெற்றிருப்பவர்கள் விசயத்தில் 1-7-1972-ல் 30 வயதிற்குக் குறைவாக மற்றவர்கள் 1-7-1972-ல் 27 வயதிற்குக் குறைவாக இருத்தல் வேண்டும். தகுதிகள் : பி.எஸ்சி. வேளாண்மைப் பட்டம். தாழ்த்தப்பட்ட வகுப்பினர், தாழ்த்தப்பட்ட மலைச்சாதி வகுப்பினர், குறைந்த பட்ச பொதுக் கல்வித் தகுதிக்கு மேலான பொதுக் கல்வித் தகுதி பெற்றுள்ள பிற்பட்ட வகுப்பினர் ஆகியோர் விசயத்தில் வயது வரம்பு கிடையாது. தங்கக் கட்டுப்பாடுச் சட்டத்தினல் பாதிக்கப்பட்ட பொற்கொல்லரின் மகன்கள் மணமாகாத மகள்கள், 1-1-1963-ல் அல்லது அதற்கு பிறகு முழுநேர அடிப்படையில் அண்டர் ஆபீசர் இன்ஸ்ட்ரக்டர் அல்லது சார்ஜன்ட் மேஜர் இன்ஸ்ட்ரக்டராகப் பணிபுரிந்த முன்னாள் தேசிய மாணவர் படையைச் சேர்ந்தவராக இருந்தால் வயது விசயத்தில் சலுகை உண்டு. இராணுவம், கடற்படை, விமானப்படை, ஆகியவற்றிலிருந்து கலைக்கப்பட்டதால் வந்தவர்கள் 1-4-1972 அன்று 40 வயதிற்குக் குறைவானவர்கள், 1-1-1964-ல் அல்லது அதற்குப் பிறகு கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து குடிபெயர்ந்து வந்தவர்கள் விசயத்திலும், இலங்கை, பர்மா முதலிய நாடுகளிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டவர்கள் விசயத்திலும் வயது வரம்பு உட்பட தகுதிகள் தளர்த்தப்படும்.

மனு வடிவங்களேயும், இதர விவரங்களேயும் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம், சென்னை-2 என்ற முகவரிக்குப் பதவிப் பெயரைக் குறிப்பிட்டுக் கடிதம் எழுதி, 23 செ. மீ. உள்ள தன் முகவரி எழுதிய (0.35 காசு நூல் அஞ்சல் வில்லை—0.05 காசு அகதிகள் நிவாரண நூல் அஞ்சல் வில்லை) ஒட்டப்பட்டு நூல் அஞ்சல் என்று குறிப்பிடப்பட்ட உறையை உடன் வைத்து அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

(த. 45)

---

தமிழ்நாடு மருத்துவ சர்வீஸில், 463 உதவி மருத்துவர்கள் பணிக்கு நேரடி நியமனம் செய்ய, 18-3-1972 மாலை 5 மணி வரை மனுக்கள் வரவேற்கப்படுகின்றன.

(மொத்தம் 463 பதவிகளில் 74 பதவிகள், குறிப்பிட்ட சிறப்புப் பட்ட மேற் படிப்புத் தகுதி பெற்றிருப்பவர்கள், சிறப்புத் துறையில் எந்த கிராமப்புற மருத்துவ மனைகளிலும், குறைந்தது 5 வருட காலம் பணிபுரிய விரும்புபவர்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது).

மாநில அரசின் கீழ் தற்காலிகமாகப் பணிபுரிபவர்கள், மக்கள் நல்வாழ்வுப் பணி மற்றும் குடும்ப நலத்திட்ட இயக்குநர், மருத்துவக் கல்வி இயக்குநர், சென்னை அவர்களுக்கு தங்கள் மனுக்களை 2-3-1972 அன்று அல்லது அதற்கு முன்னர் வந்து சேருமாறு அனுப்பவேண்டும்.

சம்பளம் : 525—25—600—30—690—35—900 மாதம் ஒன்றுக்குப் பட்டதாரிகளுக்கு. எந்த மருத்துவப் பாடத்திலாவது அங்கீகரிக்கப்பட்ட பட்ட மேற்படிப்புத் தகுதி பெற்றிருப்பவர்களுக்கு, சம்பள விகிதத்தில் இரண்டு சிறப்பு இன்கிரிமெண்ட் பெற அனுமதிக்கப்படுவார்கள்.

வயது : 1-7-1972 அன்று 35 வயதுக்குக் குறைவாக.

குறிப்பு : 1. தமிழ்நாடு மருத்துவத் துறையில், தற்காலிகத் துணை மருத்துவர்களாகப் பணிபுரிபவர்கள் வயதைப் பற்றிக் கருதாமல் மனுச் செய்துகொள்ளலாம். 2. மருத்துவப் பட்டதாரிப் பெண்கள், மருத்துவக் கல்லூரிகளில் கிளினிகல் போதனைத் துறைகள் அல்லாதவற்றில் பணியாற்ற விரும்புகிறவர்களின் வயது விசயத்தில் சலுகை உண்டு.

தகுதி 1.—சென்னை மருத்துவப் பதிவுச் சட்டம், 1914-க்கு உட்பட்டு, பதிவு செய்யப்பட்ட மருத்துவப் பயிற்சி பெற்றதாக இருத்தல் வேண்டும்.

2. எந்தப் பல்கலைக் கழகத்திலாவது எம். பி. பி. எஸ். பட்டம் பெற்றிருக்க வேண்டும் அல்லது பல்கலைக் கழக மானியக் குழுவினல் அங்கீகாரம் பெற்ற நிறுவனம் அல்லது தமிழ் நாடு அரசு டி.எம் & எஸ். அல்லது அதற்குச் சமமான தகுதி பெற்றிருக்க வேண்டும்.

தாழ்த்தப்பட்ட வகுப்பினர், தாழ்த்தப்பட்ட மலைச்சாதி வகுப்பினர், குறைந்தபட்சப் பொதுக் கல்வித் தகுதிக்கு மேலான பொதுக் கல்வித் தகுதி பெற்றுள்ள பிற்பட்ட வகுப்பினர் ஆகியோர் விசயத்தில் வயது வரம்பு கிடையாது. அங்கனைமுற்றவர்கள் விசயத்தில் வயது வரம்பு 10 ஆண்டு வரை தளர்த்தப்படும். தங்கக் கட்டுப்பாடு சட்டத்தினல் பாதிக்கப்பட்டப் பொற்கொல்லரின் மகன்கள், மணமாகாத மகள்கள், 1-1-1961-ல் அல்லது அதற்குப் பிறகு முழுநேர அடிப்படையில் அண்டர் ஆபீசர் இன்ஸ்ட்ரக்டராகப் பணிபுரிந்த முன்னாள் தேசிய மாணவர் படையைச் சேர்ந்தவராக இருந்தால் வயது விசயத்தில் சலுகை உண்டு. இராணுவம், கடற்படை, விமானப்படை ஆகியவற்றிலிருந்து கலைக்கப்பட்டதால் வந்தவர்கள் 1-4-1972 அன்று 40 வயதிற்குக் குறைவானவர்கள் 1-1-1964-ல் அல்லது அதற்குப்பிறகு கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து குடிபெயர்ந்து வந்தவர்கள் விசயத்திலும், இலங்கை, பர்மா முதலிய நாடுகளிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டவர்கள் விசயத்திலும் வயது வரம்பு உட்பட தகுதிகள் தளர்த்தப்படும்.

மனுவடிவங்களையும், இதர விவரங்களையும், செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம், சென்னை-2 என்ற முகவரிக்குப் பதவிப் பெயரைக் குறிப்பிட்டுக் கடிதம் எழுதி, 23 செ.மீ. உள்ள தன் முகவரி எழுதிய (0·35 காசு நூல் அஞ்சல் வில்லை 0·05 காசு அகதிகள் நிவாரண அஞ்சல் வில்லை) ஒட்டப்பட்டு நூல் அஞ்சல் என்று குறிப்பிடப்பட்ட உறையை உடன் வைத்து அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

(த. 47)

## பொதுப்பணித் துறை

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும், கீழ்க் கூறப்பட்ட வேலைக்காக 10—2—1972 மாலை 3.00 மணிவரை, மேற்பார்வைப் பொறியாளர், பொதுப் பணித்துறை, கோயம்புத்தூர், நீலகிரி வட்டம் கோயம்புத்தூர் அவர் தம் அலுவலகத்தில், மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்படும்.

வேலையின் பெயர்:—கோயம்புத்தூர், வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில், சிறு பாசனப் பயிற்சிபெறும் மாணவர்களுக்கு மேலும் ஒரு தளம் கட்டுதல்.

ஒப்பந்த வடிவம்:—மொத்தத் தொகை
கட்டுத் தொகை:—ரூ. 4,100

ஒப்பந்தப் புள்ளி பத்திரங்கள் விலை வரைபடத்துடன் விற்பனைவரி உட்பட: ரூ. 10.35.

வேலை முடிக்க வேண்டிய காலம்:—6 மாதங்கள்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள், மேலாளர், நிர்வாகப் பொறியாளர் அலுவலகம், கட்டடக்கோட்டம், கோயம்புத்தூரில் மேற்குறிப்பிடப் பட்ட தொகையைச் செலுத்தி 24—1—1972 முதல் எல்லா வேலை நாட்களிலும், அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். தொகை திருப்பித் தரப்படமாட்டாது.

எம். எஸ். கோபாலகிருஷ்ணன்,
மேற்பார்வைப் பொறியாளர்,
பொதுப்பணித்துறை.

5—1—1972.
(த.14)

## அரசினர் ஸ்டான்லி மருத்துவ மனை

1-4-1972 முதல் 31-3-1973 வரையிலான காலத்திற்குச் சென்னை, அரசினர் ஸ்டான்லி மருத்துவ மனை செவிலியர் (நர்ஸ்) களுக்கான பொது உணவு விடுதியை (மெஸ்) நடத்துவதற்குரிய அரக்கு ஒப்ப உறைகள் அடியில் கையொப்ப மிட்டுள்ளவரால் 1972 பிப்ரவரி மாதம் 17-ஆம் தேதி வியாழக்கிழமை பிற்பகல் 2 மணி வரையில் பெற்றுக் கொள்ளப்படும். ஒப்ப விவரத்தினுடைய நிபந்தனைகள், ஒப்ப விவர நமூனக்கள், வழங்கும் பொருட்களுடைய விவரங்கள் ஆகியவைகளை ஸ்டான்லி மருத்துவ மனை அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம். இவ்விவரங்களைப் பெறுவதற்கு ரூபாய் ஐந்தை(XXIII Medical-J Miscellaneuos) தலைப்பின் கீழும் மூன்றரை சதவிகித விற்பனை வரி 18 புதிய காசுகளை அதற்குரிய 5 சத விகிதம் விற்பனை மேல்வரி ("XII—Sales Tax, Receipts under the Sales Tax Act—General Sales Tax" என்ற தலைப்பின் கீழும் ரிசர்வ் வங்கியிலோ அல்லது ஏதாவதொரு ஸ்டேட்பேங்கிலோ வங்கியிலோ அல்லது அரசாங்கத்தின் ஏதாவதொரு கருவூலத்திலோ செல்லுச்சீட்டு மூலம் செலுத்தி அந்த செல்லுச்சீட்டை அலுவலகத்திற்கு அனுப்பவேண்டும். இப்பணம் எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

டாக்டர் எம். ஜி. பிரபு,
எம்.டி.,எப்.சி.கி.பி. (யு.எஸ்.ஏ.),
முதல்வர்.

சென்னை-1,
10-1-1972.

(த. 11)

## பொள்ளாச்சி நகர மன்ற மின் துறை

பொள்ளாச்சி நகர மன்ற மின் துறைக்கு ஏ.சி.எஸ். ஆர் மின் கடத்திகள்வழங்க மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் நகர மன்ற ஆணையர் அவர்களால் 14—2—1972 மாலை 4 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளி நிபந்தனைகள், பொருள்களின் விவரங்கள் வேண்டுவோர் நகர மன்ற மின் பொறியர் அவர்களுக்கு விண்ணப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

ஆணையர்.

(த. 53)

## பொள்ளாச்சி நகராட்சி மின் துறை

கீழ்கண்ட வேலைக்கான மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் ரூ. 1,500 காப்புத் தொகையுடன் நகராட்சி ஆணையர் அவர்களால் 25—2—1972-ம் தேதி மாலை 4 மணிவரை பெற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளி நிபந்தனைகள், வரைப்படங்களுடன் கூடிய வேலை விவரங்கள் வேண்டுவோர் நகரமன்ற மின் பொறியர் அவர்களுக்கு விண்ணப்பித்து இலவசமாக பெற்றுக்கொள்ளலாம்.

வேலை விவரம்

நகர எல்லைக்குள் மார்க்கட் ரோட்டில் திருவள்ளுவர் திடலிலிருந்து ரயில்வே பாலம் வரை சாலையின் இரு பக்கங்களிலும் பாதரஸ விளக்குகள் அமைத்தல்.

ஆணையர்.

(த. 54)

## தொழில் நுட்பக் கல்வி இயக்கம்

(கட்டுமானப் பிரிவு),

கிண்டி, சென்னை-25.

வேலையின் பெயர்.—மதுரை, ஜூனியர் தொழில் நுட்பக் கல்விப் பள்ளிக்குக் கட்டடங்கள் கட்டுதல்.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும், மேற்கூறப்பட்ட வேலையை மேற்கொள்வதற்காக, உரிய பிரிவைச் சார்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து, தொழில் நுட்பக் கல்விக் கோட்டத்தில் வேலையை மேற்கொள்வதற்குப் பதிவு செய்துள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்து, தொழில் நுட்பக் கல்வி இயக்குநர், சென்னை-25 அவர்களால், மேற் கூறப்பட்ட அலுவலகத்திற்கு, 7—2—1972 அன்று மாலை 3.00 மணி வரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தப் புள்ளிகள், தொழில் நுட்பக் கல்வி இயக்குநர், சென்னை-25 அவர்களால் மேற்கூறப்பட்ட அலுவலகத்தில் அதே நாள் மாலை 3.30 மணிக்கு அச்சமயம் வந்துள்ள ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும்.

1. ஒப்பந்த வடிவம்.—மொத்தத் தொகை.
2. கட்டுத் தொகை.—ரூ. 5,375.
3. ஒப்பந்தப் பத்திரங்கள் விலை வரை படங்களுடன்.—ரூ. 20.00 விற்பனை வரி உட்பட.
4. வேலை முடிக்க வேண்டிய காலம்.—8 மாதங்கள்.
5. ஒப்பந்தப் பத்திரங்கள், மேற்கூறப்பட்ட அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் கிடைக்கும் நாள்.—27—1—1972 முதல் 5—2—1972 வரை.

ஒப்பந்தப் பத்திரங்கள் விலை (எந்தச் சூழ்நிலையிலும் திருப்பித் தரப்படமாட்டாது). கருவூலத்திலோ அல்லது ரிசர்வ் பேங் ஆப் இந்தியாவிலோ, "P.W. Remittances III Other Remittances" நிருவாகப் பொறியாளர், வட்டாரப் பொறியியல் கல்லூரிக் கோட்டம், திருச்சி அவர்தம் கணக்கில் செலுத்த வேண்டும். விற்பனை வரி தனிச் சலானில் கருவூலம் அல்லது ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியாவிலோ, "XI Sales tax-(b) Receipts under State Sales Tax Act General Sales Tax" என்றதலைப்பில் செலுத்த வேண்டும். ஒப்பந்தப் பத்திரங்கள் சலான்கள் கொடுக்கப்பட்ட பின்னரே வழங்கப்படும். ஒப்பந்தப் பத்திரங்கள் சென்னை, தொழிற் நுட்பக்கல்வி இயக்கம், கட்டுமான பிரிவின் உரிய பிரிவில் பதிவு செய்யப்படாத ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப் படமாட்டாது.

கட்டுத் தொகை சலான் வடிவிலோ, செட்யூல்டு வங்கியின் "கால் டிபாசிட்" ரசீது வடிவிலோ ஏற்றுக் கொள்ளப்படும். மாநில அரசுக் கடன் பத்திரங்களும், தமிழ்நாடு மின் வாரியப் பத்திரங்களும், தேசிய சேமிப்புப் பத்திரங்களும் விற்பனை மதிப்பில் 5 சதவிகிதம் குறைத்துக் கட்டுத் தொகையாக ஏற்றுக்கொள்ளப்படும். நாட்டுடமையாக்கப்பட்ட எந்த வங்கியினுடைய காரண்டியும் கூட கட்டுத் தொகையாக ஏற்றுக் கொள்ளப்படும். வேறு எந்த வகையிலும் கட்டுத் தொகைச் செலுத்தப் படுமானல் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஒப்பந்தப் புள்ளி அளிக்க விரும்புகின்றவர்கள் பெரிய கட்டடம் கட்டும் வேலையில் குறைந்தது மூன்று ஆண்டுகள் அனுபவம் பெற்றிருக்க வேண்டும். தொழில் நுட்பக் கல்வி இயக்குநர், சென்னை-25 அவர்கள், ஒன்று அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையும், எக்காரணமும் கூறுமல் நிராகரிக்க உரிமை பெற்றவராவார்.

இயக்குநர்,
தொழில் நுட்பக் கல்வி,
சென்னை.

(த. 42)

SPIC

பெருமிதமிக்க வெற்றியை ஈட்டிய தீரமிகு வீரர்களுக்கு, வீர வணக்கம் செலுத்துவதில் இந்நாட்டு மக்களுடன் சேர்ந்து கொள்கிறது.

உணவு உற்பத்தியைப் பெருக்க உழவர் பெருமக்களுக்கு துணை நிற்க உறுதி பூணுவதன்மூலம், நாட்டுப் பாதுகாப்பின் இரண்டாவது அணியை வலுப்படுத்த வீர சபதம் ஏற்கிறது.

தென்னிந்தியாவின் இரசாயன உரத் தேவையில் சுமார் 25 சதவிகிதத்தை ஈடுகட்டக்கூடிய வகையில் போதுமான அளவு இரசாயன உரத்தை குறித்தக் காலத்திற்குள் உற்பத்தி செய்யும்.

கட்டுப்பாடற்ற அடிப்படையில் (Non Turnkey Basis) அந்நிய நிர்வாக மேற்பார்வை அல்லது தொழில் நுணுக்க அல்லது இதரக் கூட்டுறவு இன்றி ஆசியா மற்றும் ஐரோப்பாவிலேயே இத்துறையில் மிகப் பெரிய திட்டங்களில் ஒன்றாக வடிவமைப்பு, கொள்முதல், உருவாக்கப் பணிகளையும், மேற்கொண்டு நிறைவேற்றி வருகிறது.

**"SPIC GROWS TO SPAN THE NATION"**

# Southern Petrochemical Industries Corporation Limited

**MADRAS-14**

## நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை

சென்னை வட்டம், சென்னை-25.

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை), சென்னை வட்டம், அவர்களால் கீழ்க்கண்ட வேலைகளுக்கு அரக்கு முத்திரையிட்ட இனவாரி ஒப்பந்தப் புள்ளிகள் இன்டி, சென்னை-25-ல் உள்ள மேற்படியார் அலுவலகத்தில் 9-2-1972 அன்று மாலை 3·00 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும்.

| வரிசை எண்ணும், வேலை விவரமும். | முன்வைப்புத் தொகை. ரூ. |
|---|---|
| 1 திருவொற்றியூர்—பொன்னேரி—பஞ்செட்டி சாலையில் கி.மீ. 6·5 முதல் 8·0 வரையில் தார் சாலையை அகலப் படுத்துதல். | 3,595 |
| 2 திருவொற்றியூர்—பொன்னேரி—பஞ்செட்டி சாலையில் கி. மீ. 8·0 முதல் 9·6 வரையில் தார் சாலையை அகலப் படுத்துதல். | 3,170 |
| 3 திருவொற்றியூர்—பொன்னேரி—பஞ்செட்டி சாலையில் கி.மீ. 9·6 முதல் 11·4 வரையில் தார் சாலையை அகலப் படுத்துதல். | 4,470 |

ஒப்பந்தங்கள் 9-2-1972 அன்றே மாலை 3·15 மணிக்குத்திறக்கப்படும்.

ஒப்பந்தத்திற்கான நிபந்தனைப் பத்திரங்கள், நமூனக்கள், வரை படங்கள் முதலியவைற்றைக் கோட்டப்பொறியாளர், சைதை அவர்கள் அலுவலகத்தில் விற்பனை வரியுட்பட ஒவ்வொரு வேலைக்கும் ரூ. 25·88 கட்டி 31-1-1972 முதல் 8-2-1972 வரை அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித்தரப்படமாட்டாது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள முன்வைப்புத் தொகைகளைக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை), சைதை அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பின் கீழ் கோட்டப்பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை) சைதை பெயரில் செலுத்திச் செல்லுச்சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

முன்வைப்புத் தொகையை அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளின் உறுதிப் பத்திரங்களாக அனுப்பினால் அதற்கான ரிசர்வ் வங்கியின் ஒப்புதலையும் சேர்த்து அனுப்ப வேண்டும்.

குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா.

மேற்பார்வைப் பொறியாளர்,
(நெடுஞ்சாலை)
சென்னை வட்டம்,
சென்னை-25.

12-1-1972.

(த. 68)

## நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை

தேசிய நெடுஞ்சாலை வட்டம் சென்னை-1.

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் தேசியநெடுஞ்சாலை வட்டமேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் அரக்கு முத்திரையிட்ட இனவாரி ஒப்பந்தப்புள்ளிகள் 9-2-1972 மாலை 3 மணி வரை கீழ்க்கண்ட வேலைக்குப் பெற்றுக் கொள்ளப்படும் :—

| வரிசை எண். | வேலையின் விவரம் | கோட்டம். | முன்வைப்புத் தொகை. ரூ. |
|---|---|---|---|
| 1 | தேசிய நெடுஞ்சாலை எண் 7, சேலம், திண்டுக்கல் பிரிவில் கி.மீ. 255/0 முதல் 278/6 வரையில் சாலையில் ஜியோமிதி மேம்பாடு செய்தல். | சேலம் .. | 6,925 |

ஒப்பந்தப் புள்ளிகள் 9-2-1972 அன்றே 3-15 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் திறக்கப்படும்.

ஒப்பந்தத்திற்கான நமூனக்கள், வரை படங்கள் முதலியவற்றை சேலம் கோட்டப் பொறியாளர் (நெ.), தேசிய நெடுஞ்சாலைக் கோட்டம் (சிறப்புக்கோட்டம்), சேலம் அலுவலகத்தில் 3-2-1972 முதல் 8-2-1972 முடிய விற்பனைவரியுட்பட ரூ. 25.88 கட்டிப் பெற்றுக்கொள்ளலாம். இப் பணம் எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பிக் கொடுக்கப்படமாட்டா.

மேற்குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையைக் கோட்டப் பொறியாளர் (நெ.), தேசிய நெடுஞ்சாலைக்கோட்டம், சேலம் அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும், ரெவின்யூ டெபாசிட் என்ற தலைப்பின் கீழ் கோட்டப் பொறியாளர் (நெ.), தேசிய நெடுஞ்சாலைக் கோட்டம், சேலம் பெயரில் செலுத்திச் செல்லுச்சீட்டையாவது அல்லது வங்கி பொறுப்புறுதியையாவது ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா.

தி. மு. ஆ. ஜெயராமன்,
மேற்பார்வைப் பொறியாளர் (நெ.)

(த. 69)

## செங்கை மாவட்டம்

பல துறைமுகங்களிலிருந்தும், பாக்ட் ( FACT ) உத்தியோக மண்டல், கேரளாவிலிருந்தும் செங்கற்பட்டு ஜில்லாவிற்கு சாலையின் மூலம் 31-3-1972 வரை இரசாயன உரங்கள் ஏற்றிச் செல்ல முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. நல்ல பொருளாதார நிலையில் மற்றும் பல ஆண்டுகளாக இத்துறையில் பணியாற்று கின்ற போக்குவரத்துத் துறை ஒப்பந்ததாரர்கள் ஒரு மெட்ரிக் டன்னுக்கு ஒரு கிலோ மீட்டருக்கு எவ்வளவு கட்டணம் என்று குறிப்பிட்டு அனுப்பவும்.

இதனைப் பற்றிய முழு விவரங்களை செங்கற்பட்டு மாவட்ட வளர்ச்சி அலுவலர் (வடக்கு), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், காஞ்சிபுரம்-1 அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் காஞ்சிபுரத்தில் உள்ள செங்கற்பட்டு மாவட்ட ஆட்சியாளருக்கு 21-2-1972 அன்று மாலை 3 மணிக்கு அல்லது அதற்கு முன்பு வந்து சேரவேண்டும். முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளி உறையின் மேல் "Tenders-Road Movement of Chemical fertilisers" என்று குறிப்பிட்டிருக்க வேண்டும்.

ஆர். ஏ. சீதாராமதாஸ்,
மாவட்ட ஆட்சித் தலைவர்

(த.71)

## ஈரோடு நகராட்சி

ஈரோடு நகராட்சி பொது நலத்துறை உந்து எம்.டி.இ. 9041-க்கு தகுதிச் சான்றிதழ் பெற வேண்டிய புதிய கருவிகள் பொருத்தி பழுதுபார்த்துக் கொடுக்க 11-2-1972-ஆம் தேதி மாலை 4-00 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப் படும்.

பழுதுபார்க்க வேண்டிய உந்துவை அலுவலக நேரங்களில் அலுவலகத்தில் நேரில் காணலாம். இதர விவரங்களுக்கு நகராட்சி நல அலுவலர் அவர்களுக்கு விண்ணப்பிக்கவும்.

க. ஜனார்தனம்,
ஆணையர்.

11-1-1972.

(த.64)

## உதகை நகராட்சி

1972-ஆம் வருடம் பிப்ரவரி மாதம் 14-ஆம் தேதி மாலை 3-30 மணிக்குள் காந்திநகரிலுள்ள பொதுக் குழாய்களைப் பழுதுபார்ப்பதற்கும் மாற்றுவதற்கும் ஜி.ஐ. பைப்புகளும் உபகரணங்களும் விநியோகம் செய்வதற்குறிய ஒப்பந்தப் புள்ளிகளை உதகை நகராட்சி ஆணையர் அவர்களால் வாங்கப்படும். ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களும், நிபந்தனைகளும், 11-2-1972-ஆம் தேதி மாலை 4-00 மணிக்குள் ஒவ்வொரு பத்திரத்திற்கும் ரூ. 4-12 நகராட்சி கஜானாவில் செலுத்தி அன்று மாலைக்குள் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களை நகராட்சி பொறியர் அலுவலகத்தில் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

ஆணையர்,
உதக மண்டலம் நகராட்சி.

நகராட்சி அலுவலகம்,
உதகமண்டலம்,
10-1-1972.

(த.65)

## நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் துறை

தேசிய நெடுஞ்சாலை வேலைகள்.

கீழே குறிப்பிட்டுள்ள வேலைக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளை மேற்பார்வைப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை), மதுரை அவர்கள் நெ. 11, ஔவையார் தெரு, நரிமேடு, மதுரை-2 விலாசத்திலுள்ள அவருடைய அலுவலகத்தில் 9—2—1972 புதன் கிழமை அன்று பிற்பகல் 3-30 மணிவரை (அலுவலக கடிகாரப்படி) தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவருடைய சார்பிலும் பெற்றுக் கொள்வார். இந்த ஒப்பந்தப் புள்ளிகள் அதே தேதியன்று பிற்பகல் 3-35 மணிக்குத் திறக்கப்படும்.

| எண்ணும், வேலையின் பெயரும். | பிணைவைப்புத் தொகை. | ஒப்பந்த நமூனா கிடைக்கும் இடம். |
|---|---|---|
| | ரூபாம். | |
| 1 தேசிய நெடுஞ்சாலை எண் 7-ல் கி.மீ 278/6 முதல் கி.மீ. 345 வரை சாலையை அகலப் படுத்திப் பலப்படுத்தும் வேலை. | 82,300 | கோட்டப் பொறியாளர் தேசிய நெடுஞ்சாலை, திருச்சி-II கோட்டம். |
| 2 தேசிய நெடுஞ்சாலை எண் 45-ல் கி.மீ. 284/6 (மைல் 175/8-ல் உள்ள பாலத்தைப் புதுப்பித்துக் கட்டுதல். | 6,000 | ஷை |
| 3 தொண்டி—சுந்தரபாண்டியபட்டினம் சாலையில் கி.மீ. 14/8-ல் பாலம் ஒன்று கட்டுதல் .. | 9,400 | கோட்டப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை), திருச்சி-1, கோட்டம். |
| 4 மதுரை—கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலை 7 கி.மீ. 37/6—55/0 சாலையை அகலப் படுத்திப் பலப்படுத்துதல். | 32,100 | கோட்டப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை), மதுரை-2. |
| 5 மதுரை—கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலை 7 கி.மீ. 55/0—65/0 சாலையை அகலப் படுத்திப் பலப்படுத்துதல். | 24,800 | ஷை |
| 6 மதுரை—கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலை 7 கி.மீ. 65/0 77/0 சாலையை அகலப் படுத்திப் பலப்படுத்துதல். | 31,500 | ஷை |
| 7 மதுரை—கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலை 7 கி.மீ. 77/0—88/4 சாலையை அகலப் படுத்திப் பலப்படுத்துதல். | 29,100 | ஷை |
| 8 மதுரை—கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலை 7 கி.மீ.95/0—105/0 சாலையை அகலப் படுத்திப் பலப்படுத்துதல். | 25,900 | ஷை |
| 9 மதுரை—கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலை 7 கி.மீ. 105/0—115/0 சாலையை அகலப் படுத்திப் பலப்படுத்துதல். | 30,600 | ஷை |
| 10 மதுரை—கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலை 7 கி.மீ. 115/0—125/0 சாலையை அகலப் படுத்திப் பலப்படுத்துதல். | 27,800 | ஷை |
| 11 மதுரை—கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலை 7 கி.மீ. 125/0—134/0 சாலையை அகலப்படுத்திப் பலப்படுத்துதல். | 19,000 | ஷை |
| 12 மதுரை—கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலை 7 கி.மீ. 134/0—146/0 சாலையை அகலப்படுத்திப் பலப்படுத்துதல். | 31,300 | ஷை |
| 13 மதுரை—கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலை 7 கி.மீ. 170/0—183/0 சாலையை அகலப் படுத்திப் பலப்படுத்துதல். | 26,600 | ஷை |
| 14 மதுரை—கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலை 7 கி.மீ. 183/0—195/0 சாலையை அகலப்படுத்திப் பலப்படுத்துதல். | 36,200 | ஷை |
| 15 மதுரை—கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலை 7 கி.மீ. 195/0—203/0 சாலையை அகலப்படுத்திப் பலப்படுத்துதல். | 21,400 | ஷை |
| 16 மதுரை—கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலை 7 கி.மீ. 203/0—213/0 சாலையை அகலப்படுத்திப் பலப்படுத்துதல். | 20,200 | ஷை |
| 17 மதுரை—கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலை 7 கி.மீ. 213/0—224/0 சாலையை அகலப்படுத்திப் பலப்படுத்துதல். | 31,700 | ஷை |
| 18 மதுரை—கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலை 7 கி.மீ. 224/0—231/6 சாலையை அகலப்படுத்திப் பலப்படுத்துதல். | 21,700 | ஷை |
| 19 சேலம்-திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலை 7 கி.மீ. 345/0—355/0 சாலையை அகலப்படுத்திப் பலப்படுத்துதல். | 31,000 | கோட்டப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை) திருச்சி-2. |

| | | | |
|---|---|---|---|
| 20 | தேசிய நெடுஞ்சாலை எண் 45 இ.மீ. 403/0—417/250 சாலையை அகலப்படுத்தி விரிவு படுத்துதல். | 33,700 | கோட்டப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை), திருச்சி-2 |

ஒவ்வொரு செட்டுக்கும் விற்பனை வரி உட்பட ரூ. 20.70 வீதம் தொகை செலுத்தி எழுத்து மூலம் வேண்டிக்கொள்வதன் மூலம், கோட்டப் பொறியாளர் அலுவலகம் (தேசிய நெடுஞ்சாலை), மதுரை-2, கோட்டப்பொறியாளர் அலுவலகம் (தேசிய நெடுஞ்சாலை), திருச்சி-1, மேலும் கோட்டப்பொறியாளர் அலுவலகம் (தேசிய நெடுஞ்சாலை), திருச்சி கோட்ட எண் 2 விலாசத்திலிருந்து 2—2—1972 முதல் 8—2—1972 வரையிலான வேலை நாட்களில் அலுவல் நேரங்களில் ஒப்பந்த நிபந்தனை விவரங்கள், நிர்ணயபாரங்கள், ஷெட்யூல்கள், பிளான்கள் முதலியவற்றைப் பெறலாம். இந்தத் தொகை திருப்பித் தரப்படமாட்டாது.

மாற்றிய வடிவமைப்புக் கொண்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

மேலே குறிப்பிட்டுள்ள கட்டுத்தொகை டெபாசிட்டை மேற்கண்ட தனி கோட்டப் பொறியாளர்கள் (தேசிய நெடுஞ்சாலை) அதிகார எல்லைக்குள் உள்ள அரசினர் கருவூலங்கள் எதிலும் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பில் செலுத்தியதற்கான செலானை ஒப்பந்தப் புள்ளியுடன் இணைத்து அனுப்ப வேண்டும். இது தவிர 10 வருட தற்காப்பு டெபாசிட் அத்தாட்சிகளும், 12 வருட தேசிய தற்காப்பு அத்தாட்சிகளும், மாநில அரசு ஈட்டுப் பத்திரங்களும், தமிழ்நாடு மாநில மின் வாரியப் பத்திரங்களும், ஷெட்யூல் பாங்குகளால் வழங்கப்படும் பாங்கு காரண்டிகளும், டிமாண்டு டிராப்டுகளும், டெபாசிட் அழைப்பு ரசீதுகளும் கட்டுத் தொகைக்காக ஏற்றுக் கொள்ளப்படும்.

பாங்கு கியாரண்டிகளைச் சமர்ப்பிக்கும் பொழுது ரிசர்வ் பாங்கு ஒப்புதல் பெற்று ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். அப்படி அனுப்பப்படாத ஒப்பந்தங்கள் நிராகரிக்கப்படும்.

முன்பண வைப்புத் தொகைக்கான ரசீது இல்லாத ஒப்பந்தப் புள்ளிகள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

பி. ஜெயராமன்,
மேற்பார்வைப் பொறியாளர்,
(தேசிய நெடுஞ்சாலை),
மதுரை-2.

(த. 57)

---

## ஒப்பந்தப் புள்ளி

---

## குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும், கீழ்க்கண்ட வேலைக்காக, 15—2—1972 அன்று மாலை 3.00 மணிவரை, மேற்பார்வைப் பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், அவர்களால் 25—1, 3-வது தெரு, டாடாபாத், கோயம்புத்தூர்-12 என்ற மூகவரியிலுள்ள அவர்தம் அலுவலகத்திற்கு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 4.00 மணிக்கு, அச்சமயத்தில் வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில், மேற்பார்வைப் பொறியாளர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் திறக்கப்படும்.

| எண். | வடிவம். | வேலையின் விவரம். | கட்டுத் தொகை. | வேலை முடிக்க வேண்டிய காலம். | ஒப்பந்தப் பத்திரங்கள் விலை. | ஒப்பந்தப் பத்திரங்கள் விற்கப்படும் காலம். |
|---|---|---|---|---|---|---|
| | | | ரூ. | | ரூ. | |
| 1 | மொத்தத் தொகை. | பெருந்துறை, கே. சி. பாளையம் ஊராட்சிகளுக்கு சி. டபள்யூ எஸ். எஸ்.–5ஆம் கட்டடம் கே. சி. பாளையம் எல். எல். பகுதிக்காக எல். டபள்யூ. எல்.எம்.டபல்யூ. எல், சராசரி ஜி. எல்.(பிளஸ்) ஆகியவைகள் முறையே 290·36 (பிளஸ்) 292·80 (பிளஸ்) 281·21 மீட்டர்களில் 2 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள ஆர். சி. சி. உயர் மட்ட நீர்த் தேக்கம் கட்டுதல் மற்றும் குழாய் இணைப்புக் கொடுத்தல். | 1,250 | 6 மாதங்கள் | 10·35 (விற்பனை வரி உட்பட) | 12—1—1972 முதல் 14—2—1972 வரை. |
| 2 | மொத்தத் தொகை | பெருந்துறை, கே. சி. பாளையம் ஊராட்சிகளுக்கு சி. டபள்யூ. எஸ். எஸ்.–5ஆம் கட்டம் பெருந்துறை எல். எல். பகுதிக்காக, எல். டபள்யூ. எல். எம். டபள்யூ. எல். சராசரி ஜி. எல். (பிளஸ்) 290·36, (பிளஸ்) 292·80, (பிளஸ்) 281·21 மீட்டர்களில் 1·50 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள ஆர். சி. சி. உயர்மட்ட நீர்த் தேக்கம் கட்டுதல் மற்றும் குழாய் இணைப்புக் கொடுத்தல். | 940 | 6 மாதங்கள் | 10·35 (விற்பனை வரி உட்பட) | 12—1—1972 முதல் 14—2—1972 வரை. |
| 3 | மொத்தத் தெகை. | பெருந்துறை, கே. சி. பாளையம் ஊராட்சிகளுக்காக சி. டபள்யூ. எஸ். எஸ். 5-ஆம் கட்டடம் பெருந்துறை எச். எஸ். பகுதிக்காக, எல். டபள்யூ. எல். எம். டபள்யூ.எல். (பிளஸ்) 300.43 (பிளஸ்) 302.87 (பிளஸ்)286.00 மீட்டர்களில் 1.50 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள ஆர். சி.சி. உயர்மட்ட நீர்த்தேக்கம் கட்டுதல் மற்றும் குழாய் இணைப்புக் கொடுத்தல். | 1,000 | 6 மாதங்கள் | 10.35 (விற்பனை வரி உட்பட) | 12—1—1972 முதல் 14—2—1972 வரை |
| 4 | மொத்தத் தொகை. | பெருந்துறை, கே. சி. பாளையம் ஊராட்சிகளுக்காக சி. டபள்யூ. எஸ். எஸ். 5-ஆம் கட்டடம், கே. சி. பாளையத்திற்காக, எல். டபள்யூ. எல். எம். டபள்யூ. எல். (பிளஸ்) 300.43 (பிளஸ்) 302.87 (பிளஸ்) 286.00 மீட்டர்களில் 1.50 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள ஆர். சி. சி. உயர் மட்ட நீர்த் தேக்கம் கட்டுதல் மற்றும் குழாய் இணைப்புக் கொடுத்தல். | 1,000 | 6 மாதங்கள் | 10.35 (விற்பனை வரி உட்பட) | 12—1—1972 முதல் 14-2-1972 வரை. |

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களை, நிருவாகப் பொறியாளர், மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் கோட்டம், 18, சாமியப்ப கவுண்டர் தெரு, திருநகர் காலனி, அவர்தம் அலுவலகத்தில், ஒப்பந்தப் பத்திரங்களின் விலையை நேரில் பணமாகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

கட்டுத் தொகை டி. டி. வடிவத்தில் இருக்கவேண்டும் - நாட்டுடமையாக்கப்பட்ட எந்த வங்கியின் காரண்டியும், நிருவாகப்பொறியாளர், மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் கோட்டம், ஈரோடு - 3, அவர்கள் பெறும் வகையில் அனுப்பினால் ஏற்றுக் கொள்ளப்படும். கட்டுத் தொகைக் கருவூலத்தில் " P. W. III O. R. Charges adjusted to the credit of Executive Engineer, P. H. Engg. division, Erode" என்ற தலைப்பில் செலுத்தலாம். கட்டுத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் நிராகரிக்கப்படும்.

மேற்பார்வைப் பொறியாளர், மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் வட்டம், கோயம்புத்தூர் அவர்கள், ஒன்று அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையும், எக்காரணமும் கூறாமல் நிராகரிக்க உரிமை பெற்றவராவார்

எம். துரைராஜன்,
மேற்பார்வைப் பொறியாளர், (பி. எச்.).,
கோயம்புத்தூர்—12.

(த.16)

## ஒப்பந்தப் புள்ளி

### பொதுப்பணித் துறை

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும், கீழ்க்கூறப்பட்ட வேலைக்காக 9-2-1972 மாலை 3-00 மணி வரை, மேற்பார்வைப் பொறியாளர், பொதுப்பணித் துறை, மதுரை வட்டம், மதுரை-2 அவர்களால், மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. அதே நாள் மாலை 4-00 மணிக்குத் திறக்கப்படும். ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் 31-1-1972 முதல் 7-2-1972 வரை விற்பனைக்குக் கிடைக்கும்.

| வரிசை எண்ணும், வேலையின் பெயரும். | ஒப்பந்த வடிவம். | கட்டுத் தொகை. | வேலை முடிக்கவேண்டிய காலம். | ஒப்பந்தப் பத்திரங்கள் விலை விற்பனை வரி சர்ச்சார்ஜ் உள்பட. |
|---|---|---|---|---|
| | | ரூ. | | |
| 1. மதுரை, அரசு எர்ஸ்கின் மருத்துவ மனை கிளாகோமா மருந்தகத்திற்குக் கட்டடம் கட்டுதல். | மொத்தத் தொகை. | 2,300 | 6 மாதங்கள். | ரூ. 20·75 |
| 2. மதுரை, அரசு எர்ஸ்கின் மருத்துவ மனை ரன்னிங் ஆர்த்தோப்டிக் பிரிவிற்குக் கட்டடம் கட்டுதல். | மொத்தத் தொகை. | 2,000 | 6 மாதங்கள். | ரூ. 20·75 |

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை ஒவ்வொரு வேலைக்கும் ரூ. 20-ஐ (எக்காரணம் கொண்டும் திருப்பித்தரப்படமாட்டாது) அரசுக் கருவூலத்திலோ அல்லது ரிசர்வ் பேங் ஆப் இந்தியாவிலோ, 'P.W. Remittances III—O.R, என்ற தலைப்பில், நிர்வாகப் பொறியாளர், பொதுப்பணித்துறை, மதுரைக் கோட்டம், மதுரை அவர்கள் கணக்கிலும், ஒவ்வொரு வேலைக்கான ஒப்பந்தப் பத்திரங்களுக்கும் விற்பனை வரி சர்சார்ஜ் உட்பட ரூ. 0.75-ஐ "XII Sales Tax (d) Miscellaneous" என்ற தலைப்பிலும் ஒரே சலானில் செலுத்தி, செலுத்துச் சீட்டைக் கொடுத்த பின்னர் மட்டுமே ஒப்பந்தப் பத்திரங்கள் கொடுக்கப்படும்.

கட்டுத் தொகை சலான் வடிவிலோ, "கால் டெபாசிட்" ரசீது வடிவிலோ, அல்லது ஷெட்யூல்டு வங்கியின் டிமாண்டு டிராப்டாகவோ அரசு செக்குரிட்டீஸ், நாட்டுடைமையாக்கப்பட்ட 14 வங்கிகளின் காரண்டியும் கூட ஏற்றுக் கொள்ளப்படும். தமிழ்நாடு மின்வாரியப் பத்திரங்களும், தேசீய சேமிப்புப் பத்திரங்களும் விற்பனை மதிப்பில் 5 சதவிகிதம் குறைத்துக் கட்டுத் தொகையாக ஏற்றுக் கொள்ளப்படும். வேறு எந்த வகையிலும் கட்டுத் தொகை செலுத்தப்படுமானால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

சி. தேசிக சங்கர்,
மேற்பார்வைப் பொறியாளர்,
பொதுப்பணித்துறை,
மதுரை மாவட்டம்.

(த.9)

## வேலை வாய்ப்பு

### அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம்

நேரடி நியமனத்தின் மூலம், 14 மாவட்ட முன்சிப்கள் நியமனம் செய்ய, இந்திய உயர்நீதி மன்றம் ஒன்றில் பயிற்சி செய்யும் வழக்கறிஞர்களிடமிருந்து அல்லது இந்திய யூனியன் ஸ்டேட் பார் கவுன்சில் மற்றும் இந்திய அரசின் பணியில் இருப்பவர்கள் அல்லது இந்தியாவின் ஒரு மாநிலத்தில் பயிற்சியிலிருப்பவர்கள் அந்தப் பணிக்குத் தங்கள் முதல் நியமனத்திலிருந்து 4-12-1971 அன்று 5 வருட காலத்திற்கு மேற்படாத பணியில் (சர்வீஸ்) உள்ளவர், 24-2-1972 மாலை 5 மணி வரை மனுக்கள் வரவேற்கப்படுகின்றன.

சம்பளம்:—ரூ. 575-25-600-40-1000 மாதம் ஒன்றுக்கு.

தகுதி 1:—பாரில் 3 ஆண்டுகளுக்குக் குறையாத பயிற்சி பெற்றிருக்க வேண்டும்.

2. எந்தப் பல்கலைக் கழகத்திலாவது அல்லது பல்கலைக் கழக மானியக் குழுவினால் அங்கீகாரம் பெற்ற பல்கலைக் கழக அல்லது நிறுவனம் ஒன்றில் பி.ஏ., பி.எஸ்.சி., பி.காம். அல்லது ஆனர்ஸ் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

வயது:—1-7-1972 அன்று 32 வயதிற்குக் குறைவாக (தாழ்த்தப்பட்ட வகுப்பினர், தாழ்த்தப்பட்ட மலைச்சாதி வகுப்பினர், பிற்பட்ட வகுப்பினர் ஆகியோர் விசயத்தில் வயது வரம்பு கிடையாது.) இருக்கவேண்டும்.

